தொல்காப்பியம் உரைவளம்

பொருளதிகாரம்

செய்யுளியல் பகுதி - 2

யாதும் ஊரே யாவரும் கேளிர்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

தொகுப்பும் குறிப்பும்

ஆ. சிவலிங்கனார்

தொல்காப்பியம் உரைவளம்

பொருளதிகாரம்

செய்யுளியல் - பகுதி 2

தொகுப்பும் குறிப்பும்
ஆ. சிவலிங்கனார்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
டி.டி.டி.ஐ. (அஞ்சல்), தரமணி, சென்னை - 600 113

தொல்காப்பியம்-உரைவளம்
வெளியீட்டுத் திட்டம்

வெளியீடு

BIBLIOGRAPHICAL DATA

Title	:	Tolkappiyam - Uraivalam Ceyyuliyal - Part II
Subject	:	Compilation of the Commentaries of Tolkappiyam Ceyyuliyal - Part II
Editor	:	A. Sivalinganar
Publisher & ©	:	International Institute of Tamil Studies, C.I.T. Campus, Adyar, Chennai - 600 113
Publication No	:	280
Language	:	Tamil
Date of Publication	:	1998
Edition	:	First
Paper Used	:	16kg T.N.P.L. Super Printing
Size of the Book	:	21x 14 cms
No. of Copies	:	1000
No. of Pages	:	x+226
Price	:	Rs. 50/-
Printer	:	Annam Offset Printers 25, C.N.K. Salai, Chepauk, Chennai - 600 005. ☎ : 858 8466

டாக்டர் ச. சு. இராமர் இளங்கோ
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-600 113

அணிந்துரை

"திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும்
உடுக்க ளோடும்
மங்குல்கடல் இவற்றோடும் பிறந்ததமி ழுடன்பிறந்தோம்
நாங்கள்!"

என்று பாவேந்தர் பாரதிதாசன் தமிழினத்தின் பெருமையைப் பாடுவார்.

தமிழினத் தொன்மைக்குக் கட்டியங்கூறும் தொல்காப்பியம், எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டுமன்றிப் பொருளுக்கும் இலக்கணம் வகுத்த பெருமை உடையது. இதற்கு வெளிவந்த உரைகளே இதன் ஆழத்தையும், அகலத்தையும் வெளிக் கொணரும். எனவே, தொல்காப்பியத்தின் பெருமையை எடுத்தியம்பும் வகையில் உரைவளம் எழுதும் திட்டப்பணிக்காகப் பேராசிரியர் ஆ. சிவலிங்கனார் அவர்கள் இந் நிறுவனத்தில் 1980ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார். அவருடைய முதல் திட்டப்பணி நூலான 'தொல்காப்பியச் சிறப்புப் பாயிர உரைவளம்' 27-9-80-ல் அப்போதைய மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் வ. சுப. மாணிக்கம் அவர்களால் வெளியிடப்பெற்றது.

தொடர்ந்து எழுத்ததிகாரத்திற்கும், சொல்லதிகாரத்திற்கும் அவர் தொகுத்த உரைவளம் வெளிவந்தது. பொருளதிகாரத்தில் மரபியல் 1981-லும், அகத்திணையியல் 1991-லும், கற்பியல் 1993-லும், பொருளியல், களவியல் 1994-லும், புறத்திணையியல் பகுதி-1, பகுதி-2 1996-லும், செய்யுளியல் பகுதி-1 1997-லும் வெளிவந்தன.

தொல்காப்பிய உரைவளத் திட்டத்தின் 28 ஆவது வெளியீடாகச் செய்யுளியல் பகுதி - 2 எனும் இந் நூல் இப்போது வெளிவருகிறது.

பேராசிரியர் ஆ. சிவலிங்கனார் அவர்கள் நுண்மாண் நுழைபுலம் பெற்ற பெரும் புலவர்; பழம்பெரும் தொல்காப்பிய உரையாசிரியர்களான இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பேராசிரியர் ஆகியோரது உரைகளையும் தொகுத்து அவற்றுடன் தம்முடைய உரையினையும் இணைத்து இந் நூலினை அமைத்துள்ளார். தொல்காப்பியத்தில் ஆய்வினை மேற்கொண்டு முனைவர் பட்டம் பெற்ற முனைவர் சி. இலக்குவனார் அவர்களின் ஆங்கில மொழிபெயர்ப்பையும் மேற்கோள் காட்டியுள்ளார்.

இவரது தொல்காப்பியப் புலமையைப் பாராட்டும்முகத்தான் 4, 5, 6-8-97களில் நடைபெற்ற 'தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள்' தேசியக் கருத்தரங்கின்போது நிறுவனம் இவருக்குத் 'தொல்காப்பியச் செம்மல்' என்னும் விருது வழங்கிப் பாராட்டிச் சிறப்பித்தது.

இந் நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்ற நிறுவனத் தலைவர் மற்றும் தமிழ் ஆட்சிமொழி - பண்பாடு மற்றும் இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறைச் செயலாளர், திருமிகு த. இரா. சீனிவாசன், இ.ஆ.ப. அவர்களுக்கும் நிறுவனத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந் நூலின் படிகளை மெய்ப்புத் திருத்திய பெரும்புலவர் அ. நக்கீரர் அவர்களுக்கும், நூலின் முதலில் அமைந்துள்ள சூத்திர நுவல்பொருள், இறுதியில் அமைந்துள்ள சூத்திர முதற்குறிப்பு அகராதி, சொல்லகராதி ஆகியவற்றைச் செய்து தந்த திருமிகு கோ. உத்திராடம் அவர்களுக்கும், இந் நூலினைக் கவினுற அச்சடித்துத் தந்த அன்னம் மறுதோன்றி அச்சகத்திற்கும் எங்கள் நன்றி.

இயக்குநர்

SYSTEM OF TRANSLITERATION

உயிரெழுத்துகள் Vowels

அ	a	எ	e
ஆ	ā	ஏ	ē
இ	i	ஐ	ai
ஈ	ī	ஒ	o
உ	u	ஓ	ō
ஊ	ū	ஔ	au

மெய்யெழுத்துகள் - Consonants

க்	k	ங்	ṅ	ய்	y
ச்	s	ஞ்	ñ	ர்	r
ட்	t	ண்	ṇ	ல்	l
த்	th	ந்	n	வ்	v
ப்	p	ம்	m	ழ்	l̲
ற்	r̲	ன்	n̲	ள்	ḷ

சுருக்க விளக்கம்

அகம் - அகநானூறு
இ.வி - இலக்கண விளக்கம்
இ-ள் - இதன் பொருள்
இளம் - இளம்பூரணர்
உ-ம் - உதாரணம்
எ-டு - எடுத்துக் காட்டு
எ-று - என்றவாறு
என்-னின் - என்னுதலிற்றோவெனின்
ஐங்குறு - ஐங்குறுநூறு
ஐந்.ஐம் - ஐந்திணை ஐம்பது
கலி - கலித்தொகை
களவழி - களவழி நாற்பது
குறள் - திருக்குறள்
குறுந் - குறுந்தொகை
சிந்தா - சீவகசிந்தாமணி
சிறுபாண் - சிறுபாணாற்றுப்படை
சூ - சூத்திரம்
செய் - செய்யுளியல்
சொல் - சொல்லதிகாரம்
தொல் - தொல்காப்பியம்
தொன் - தொன்னூல் விளக்கம்
நச் - நச்சினார்க்கினியர்
நற் - நற்றிணை
நாலடி - நாலடியார்
நெடுநல் - நெடுநல்வாடை
பட்டினப் - பட்டினப்பாலை
பதிற் - பதிற்றுப்பத்து
பு. வெ. மா. - புறப்பொருள் வெண்பாமாலை
புறம் - புறநானூறு
பெரும்பாண் - பெரும்பாணாற்றுப்படை
பேரா - பேராசிரியர்
மதுரைக் - மதுரைக்காஞ்சி
மலைபடு - மலைபடுகடாம்
முருகு - திருமுருகாற்றுப்படை
மு.வீ. - முத்துவீரியம்
முத்தொள் - முத்தொள்ளாயிரம்
யா.கா - யாப்பருங்கலக் காரிகை
யா.வி - யாப்பருங்கல விருத்தி
வீர - வீரசோழியம்

சூத்திர நுவல்பொருள்

357. ஐவகையடியினையும் விரிக்கும் காலைப் பொருள்வகையமைந்த பதினேழ் நிலத்தும் எழுபதுவகைக் குற்றம் நீங்கி அறுநூற்றிரு பத்தைந்தாகும் எனக் கூறுகின்றது.

358. நன்கு உணர்ந்தவர்கள் அவ்வாறு ஆராயும்போது எல்லையற்றனவாக அவை முடியும் என்று கூறுகின்றது.

359. நாற்சீரடிக்கண் வகுக்கப்பட்ட ஐவகை அடியும் ஆசிரியப்பாட்டிற்கு உரியன என்கின்றது.

360. ஐந்தடியும் தனித்தனி ஆசிரியப்பாவிற்கு உரித்தாகி வருதலே யல்லாமற் கலந்துவரினும் நீக்கப்படமாட்டாது என்று கூறுகிறது.

361. ஓசைவகையான் ஒவ்வொரு பாவிலும் தன்சீர் வகையானும் தன்தளை வகையானும் குறள், சிந்து, அளவு, நெடில், கழிநெடில் எனும் ஐந்தடிக்கும் உரியன எனக் கூறுகின்றது.

362. சீரானது பொருந்துகிற இடத்தில் ஓசை ஒத்து வருமானால் அதனை ஆசிரியத்தளை யென்று அறிந்துகொள்ளுதல் வேண்டும் என்று கூறுகின்றது.

363. குறளடி முதலாக அளவடியளவும் வஞ்சியுரிச்சீர் வந்து உற ழு நிலையில் இவ்வடிகள் இயற்சீரும் ஆசிரியவுரிச்சீரும் ஆகும் எனக் கூறுகின்றது.

364. தளைவகை பொருந்தாத் தன்மைக்கண் அளவடியுஞ் சிந்தடியும் வெண்பாவும் உரியன என்று கூறுகின்றது.

365. அளவடி மிகுதியாகி பதின்மூன்றெழுத்து முதலாக நெடிலடியும் கழிநெடிலடியுமாகிய இருபதெழுத்தின் காறும் வரும் அடிகலிப்பா விற்கு உரியது எனக் கூறுகின்றது.

366. வெண்பாவுரிச்சீர் நிற்ப நிரைமுதல் வெண்சீர் வந்து நிரையாயத் தளைத்தல் கலிப்பாக்குரியது என்று கூறுகின்றது.

367. பிறவாகிக் கலந்த தளையும் நீக்கப்படுதல் இல்லை எனக் கூறுகின்றது.

368. இயற்சீர் வெண்டளையாள் ஆகிய வெண்பாவடி ஆசிரியப்பாவின் கண் நிற்றற்குரிய மரபோடு நிற்பன எனக் கூறுகின்றது.

369. இயற்சீர் வெண்டளை விரவியும் ஆசிரியத்தளை விரவியும் ஐஞ் சீரடியும் ஆசிரியப்பாவின்கண் வருவன எனக் கூறுகின்றது.

370. அறுசீரடி ஆசிரியத்தளையொடு பொருந்தி நேரடிக்கு முன்னாக ஆசிரியப்பாவின்கண் நடைபெற்று வரும் என்று கூறுகின்றது.

371. முடுகியலடி என்பது ஏழுசீர்களால் வரும் எனக் கூறுகின்றது.

372. ஐஞ்சீரடிக்கும் அறுசீரடிக்கும் முடுகியலை நீக்க மாட்டார்கள் எனக் கூறுகின்றது.

373. முடுக்கியலாகி வரும் மூவகை யடிவும் ஆசிரியப்பாவினும் வெண்பாவினும் நிற்றல் இல எனக் கூறுகின்றது.

374. நேரிசை ஆசிரியப்பாவின் ஈற்றயல் அடியில் தோற்றம் மூன்று சீராகவும் முடியும் எனக் கூறுகின்றது.

375. தொடுக்கப்படும் தொடையியலை உணர்ந்தோர், இடையடி முச்சீரடியாக வருதலையும் நீக்கமாட்டார்கள் என்று கூறுகின்றது.

376. ஈற்றயலடி முச்சீரெனக் கூறப்பட்டது கலிப்பாவின் கண் நாற் சீராகியும் வரும் எனக் கூறுகின்றது.

377. வஞ்சிப்பாவின் இறுதி ஆசிரியப்பாவின் தன்மையை உடையது என்று கூறுகின்றது.

378. வெண்பாவின் இறுதியடி மூன்றுசீர் உடையதாகும் அதன் கண் இறுதிச் சீர் அசைச்சீராக வரும் எனக் கூறுகின்றது.

379. நிரையும், நிரைபும் நேரீற்றியற்சீர்ப்பின்னே தளை கொண்டு முடியும் எனக் கூறுகின்றது.

380. வெண்பாவின் ஈற்றயற்சீர் நிரையீற்று இயற்சீராயின் நேரசையும் நேர்பசையும் முடியும் என்று கூறுகின்றது.

381. கலிப்பாவிற்கு ஈற்றயலடி முச்சீரான் வரும் ஆசிரிய முடிபாகும் எனக் கூறுகின்றது.

382. கலிப்பா, வெண்பாச் சுரிதகமாக முடியும் எனக் கூறுகின்றது.

383. எழுத்து முதலாக அசை, சீர், அடி என்று உரைக்கப்பட்ட அடியினால் தான் குறித்த பொருளை முடிவுபெற நிறுத்துதல் யாப்பாகும் எனக் கூறுகின்றது.

384. பாட்டு முதலாக முதுசொல்லீறாக சொல்லப்பட்ட ஏழிடத்தும் வளவிய புகழையுடைய சேரன், சோழ, பாண்டியன் என்னும் மூவரது தமிழ் நாட்டகத்தவர் வழங்கும் தொடர்மொழிக்கண் வரும் மொழி யாப்பு எனக் உணர்த்துகின்றது.

385. மரபாவது தான் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடச்சொல் என்னும் நாற்சொல்லின் இயற்கையானே யாப்பின் வழிப்பட்டது எனக் கூறுகின்றது.

386. அகவல் என்னும் ஓசை ஆசிரியத்துக்கு உரியதாகும் என்று கூறுகின்றது.

387. அகவலோசையன்றிச் செப்பிக்கூறும் ஓசையெல்லாம் வெண்பா எனப்படும் என்று கூறுகின்றது.

388. துள்ளலோசை கலிப்பாவிற்கு உரியது எனக் கூறுகின்றது.

389. தூங்கல் என்னும் ஓசை வஞ்சிப்பாவில் வரும் என்று கூறுகின்றது.

390. மருட்பாவிற்குரிய ஓசை வரையறைக் கூறுகின்றது.

391. மேற்கூறப்பட்ட ஓசை வகைகளைக் கொண்டல்லாமல் பாட்டியற்ற மாட்டார்கள் எனக் கூறுகின்றது.

392. தூக்கின் இயல்பைப் பற்றிக் கூறுகின்றது.

393. தொடையினது பாகுபாடு மோனை, எதுகை, முரண், இயைபு என்று நான்கு வகைபடும் எனக் கூறுகின்றது.

394. அளபெடைத் தொடையைச் சேர்க்க அது ஐந்து எனக் கூறுகின்றது.

395. மேற்கூறிய ஐந்துமேயன்றிப் பொழிப்புத் தொடையும், ஒரூஉத் தொடையும் செந்தொடையுமெனக் கூறுகின்றது.

396. வரிசையாக நிறுத்தி அமைத்துக் கொள்ளுதலும் இரட்டைத் தொடையும் முற்கூறிய வழியினால் முடியவும் பெறும் எனக் கூறுகின்றது.

397. அடிதோறும் தலையெழுத்து ஒத்து வருவது மோனைத்தொடை யாகும் எனக் கூறுகின்றது.

398. அடிதோறும் முதலெழுத்து ஒன்றாமல், இரண்டாம் எழுத்து ஒன்றி வருமானால் அஃது தொகையாகும் எனக் கூறுகின்றது.

399. முற்கூறிய மோனைக்கும் எதுகைக்கும் கிளையெழுத்து ஒன்றிவரப் பெறும் எனக் கூறுகின்றது.

400. சொல்லாலாதல் பொருளாலாதல் மாறுபடத் தொடுத்தல் அடிமுரண் தொடை எனக் கூறுகின்றது.

401. அடிதோறும் ஈற்றெழுத்து ஒன்றிவரின் அஃது இயைபுத்தொடை என்று கூறுகின்றது.

402. அடிதொறும் அளபெழுமாறு தொடுப்பின் அஃது அளபெடைத் தொடையாம் எனக் கூறுகின்றது.

403. ஒருசீரிடையிட்டு எதுகையாயிற் பொழிப்புத் தொடையாம் எனக் கூறுகின்றது.

404. இரண்டு சீர் இடையிட்டு மோனை முதலியன வரத்தொடுப்பதனை ஒரூஉத்தொடை எனக் கூறுகின்றது.

405. தொடையும் தொடைநிகற்பமும் போல் அல்லாமல் வேறுபடத் தொடுப்பது செந்தொடை எனக் கூறுகின்றது.

406. வடிவுபெற்ற மரபினையுடைய தொடையினது பாகுபாடு பதின்மூவா யிரத்துறுநூற்றுத் தொண்ணூற்றொன்பது எனக் கூறுகின்றது.

407. தொடையினை ஆராய்ந்து விரித்துரைக்கிறது

408. தொடைநிலைக்கு உரியதோர் மரபு உணர்த்துகிறது.

பொருளடக்கம்

		பக்கம்
அணிந்துரை	...	iii
System of Transliteration	...	v
சுருக்க விளக்கம்	...	vi
சூத்திர நுவல்பொருள்	...	vii
ஐவகையடியின் விரி	...	1
ஆசிரியப்பாவுக்குரிய அடி	...	20
தளைமரபு	...	26
ஆசிரியத்தளை	...	33
புறனடை	...	36
வெண்பாவடிகள்	...	46
கலிப்பாவடி	...	50
ஆசிரியப்பாவில் வெண்பாவடி	...	57
வஞ்சியடியில் விரவல்	...	61
அறுசீரடி	...	65
எழுசீரடி	...	69
சிறப்பு விதி	...	71
ஆசிரியத்துள் சிந்தடி	...	76
கலிப்பாவில் முச்சீரடி	...	79
வஞ்சிப்பாவின் இறுதி	...	82
வெண்பா வீற்றடி	...	85
புறனடை	...	89
கலிப்பாவின் இறுதி	...	95
6. யாப்பு-யாப்பாவது	...	98
யாப்பின் வகைகள்	...	101
7. மரபு	...	104
8. தூக்கு	...	111
வெண்பாத்தூக்கு	...	113
கலித்தூக்கு	...	114
வஞ்சித்தூக்கு	...	116
மருட்பாத் தூக்கிலை	...	117
முடிப்பு	...	119
9. தொடை	...	124
அடிச்சீர்களில் வரும் தொடைகள் (விகற்பம்)	...	128
எதுகைத் தொடை	...	140
மேலதற்குச் சிறப்பு	...	145
முரண் தொடை	...	155
இயைபுத் தொடை	...	160
அளபெடைத் தொடை	...	163
பொழிப்புத் தொடை	...	167
ஒரூஉத்தொடை	...	169
செந்தொடை	...	178
தொடைவிரி	...	182
சூத்திரமுதற் குறிப்பகராதி	...	223
சொல்லகராதி	...	238
பயன்படுத்தப் பெற்ற நூல்கள்	...	226

தொல்காப்பியம் - உரைவளம்

பொருளதிகாரம்

செய்யுளியல் பகுதி-2

ஐவகையடியின் விரி

357*. ஐவகை அடியும் விரிக்குங் காலை
மெய்வகை அமைந்த பதினேழ் நிலத்தும்[1]
எழுபது வகையின் வழுவில வாகி
அறுநூற் றிருபத் தைந்தா கும்மே. (48)*

இலக்குவனார்

362. When the five kinds of lines are expanded they come to six hundred and twenty five not having the seventy faults in the seventeen places formed in the true manner.

இளம்பூரணர்

357. ஐவகை அடியும் .... கும்மே.

என்-னின், மேற்சொல்லப்பட்ட அடிக்கெல்லாம் விரியுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஐவகை அடியும் விரிக்குங்காலை என்பது - நாற்சீரடியை எழுத்தளவுபற்றி வகுக்கப்பட்ட குறளடி முதலாகிய ஐந்தடியினையும் விரித்துணர்த்துங் காலத்து என்றவாறு.

மெய் என்பது - உடம்பு. அஃதாவது அசையுஞ் சீரும் தோற்றுதற் கிடமாகிய எழுத்து.

---

* சூத்திரத்தின் முன்னர் உள்ள எண் தொல்காப்பியப் பொருளதிகாரத் தொடர் எண். பின்னர் உள்ள எண் செய்யுளியல் தொடர் எண்.

1 நிலத்த - பேரா. நச். பாடம்

மெய்வகையமைந்த பதினேழ் நிலத்தும் என்பது - எழுத்து அமைந்த நாலெழுத்து முதலாக இருபதெழுத் தீறாகச் சொல்லப்பட்ட பதினேழ் நிலத்தும் என்றவாறு.

எழுபது வகையின் வழுவில வாகி என்பது - எழுபது வகைப்பட்ட உறழ்ச்சியின் வழுவுதலின்றி என்றவாறு.

எழுபது வகையாவது - இரண்டு சீர் தம்முட் புணரும் புணர்ச்சி எழுபது வகையாம் என்றவாறு.

மேற்சொல்லப்பட்ட எண்பத்துநான்கு சீரினும் (தொல்.பொருள். செய்.30 உரை) இயற்சீரான் வருவதனை இயற்சீரடி எனவும், ஆசிரியவுரிச் சீரான் வருவதனை ஆசிரிய வுரிச்சீரடி எனவும், இயற்சீர் விகற்பித்து வருவதனை இயற்சீர் வெள்ளடி எனவும், வெண்சீரான் வருவதனை வெண்சீரடி எனவும், நிரையீற்று வஞ்சிச்சீரான் வருவதனை நிரையீற்று வஞ்சியடி எனவும், உரியசையீற்றான் வருவதனை உரியசையீற்று வஞ்சியடி எனவும், ஓரசைச்சீரான் வருவதனை அசைச்சீரடி எனவும் வழங்கப்படும்.

அவற்றுள் இயற்சீரடி நேரீற் றியற்சீரடி எனவும் நிரையீற் றியற்சீரடி எனவும் இருவகைப்படும். நேரீற் றியற்சீரடியாவது நேரீறு நேர் முதலாகிய இயற்சீர் வருதலும், நேர்புமுத லாசிரிய வுரிச்சீர் வருதலும், நேர் முதல் வெண்பா வுரிச்சீர் வருதலும், நேர்முதல் வஞ்சியுரிச்சீர் வருதலும், நேர்முதல் ஓரசைச்சீர் வருதலும் என ஐந்து வகைப்படும். நிரையீற் றியற்சீரும் இவ்வாறே நிரைமுதலாகிய ஐந்து சீரொடும் உறழ ஐந்து வகைப்படும்.

ஆசிரிய வுரிச்சீரடியும் இருவகைப்படும் நேர்பு ஈறும் நிரைபு ஈறும் என. அவற்றுள், நேர்பீற்றுச் சீரை நேர்புநேரு முதலாகிய ஐந்து சீரொடும் உறழ ஐந்து வகைப்படும். நிரைபீற்றுச் சீரும் அவ்வாறே நிரைபு நிரையு முதலாகிய ஐந்து சீரொடும் உறழ ஐந்து வகைப்படும்..

இயற்சீர் வெள்ளடியும் நேரீறும் நிரையீறும் என இருவகைப்படும். அவற்றுள், நேரீறு நிரைபுநிரையு முதலாகிய ஐந்து சீரொடும் உறழ ஐவகையாம்.. நிரையீறும் அவ்வாறே நேர்புநேரு முதலாகிய ஐந்து சீரொடும் உறழ ஐவகையாம்.

வெண்சீர் நேர்முதலோடு உறழ்தலும் நிரைமுதலோடு உறழ்தலும் என இருவகைப்படும். அவற்றுள், நேர்புநேரு முதலாகிய சீர்களொடு உறழ்தல் ஐந்து வகைப்படும். நிரைபுநிரையு முதலாகிய சீர்களொடு உறழ்தலும் ஐந்து வகைப்படும்.

நிரையீற்று வஞ்சியுரிச்சீர் முதலசையோ டொன்றுவனவும் ஒன்றாதனவும் என இருவகைப்படும். அவற்றுள், ஒன்றி வருவது நிரைபுநிரையு முதலாகிய சீரொடும் உறழ ஐந்து வகைப்படும். ஒன்றாதது நேர்புநேரு முதலிய சீரோடு உறழ ஐவகைப்படும்.

உரியசையீற்று வஞ்சியடியும் அவ்வாறே உறழப் பத்து வகைப்படும்.

அசைச்சீரடியும் அவ்வாறே இருவகையாக்கி உறழப் பத்து வகைப்படும்..

இவ்வகையால் தளை ஏழு பாகுபட்டன: இவை நேரொன் றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை, இயற்சீர் வெண்டளை, வெண்சீர்வெண்டளை, கலித்தளை, ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாத வஞ்சித்தளை என ஏழு வகையாம்.. அவ்வழி ஓரசைச்சீர் இயற்சீர்ப் பாற்படும். ஆசிரிய வுரிச்சீரு மதுவேயாம். மூவசைச் சீருள் வெண்பா வுரிச்சீ ரொழிந்தனவெல்லாம் வஞ்சியுரிச்சீராம். அவ்வழி இயற்சீர் நிற்ப வருஞ்சீர் முதலசையொடு நேராய் ஒன்றுவது நேரொன் றாசிரியத்தளையாம்; நிரையாய் ஒன்றுவது நிரையொன்றாசிரியத் தளையாம்; மாறுபட்டு வருவது இயற்சீர் வெண்டளையாம்; வெண்சீர் நிற்ப வருஞ்சீர் முதலசையொடு ஒன்றுவது வெண்சீர் வெண்டளையாம்; நிரையா யொன்றிற் கலித்தளையாம். வஞ்சியுரிச்சீர் நிற்ப வருஞ்சீர் முதலசையோடு ஒன்றுவது ஒன்றிய வஞ்சித்தளையாம். ஒன்றாதது ஒன்றா வஞ்சித்தளையாம். இவ்வகையால் தளை ஏழாயின. இவ்வாறாகி வருதல் வருகின்ற சூத்திரங்களானுணர்க.

இனி அடி அறுநூற்றிருபத்தைந்தாமாறு: அசைச்சீர், இயற்சீர், ஆசிரியவுரிச்சீர், வெண்சீர், வஞ்சியுரிச்சீர் என்னும் ஐந்தினையும் நிறுத்தி இவ் வைந்து சீரும் வருஞ்சீராக வுறழும்வழி இருபத்தைந்து விகற்பமாம். அவ் விருபத்தைந்தின்கண்ணும் மூன்றாவது ஐந்துசீரையும் உறழ நூற்றிருபத்தைந்து விகற்பமாகும். அந் நூற்றிருபத்தைந்தின்கண்ணும் நான்காவது ஐந்துசீரையும் உறழ அறுநூற்றிருபத்தைந்தாம் என்றவாறு. (48)

பேராசிரியர்

362. ஐவகை யடியும் .... கும்மே..

இது, முன்னர்ச் சிறப்புடைத்தென வேண்டிய நாற்சீரடியினைக் குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடியென வகுத்தமை யாமாறு கூறினான் (348-352); இனி, அறுநூற்றிருபத்தைந்தென அவைபட்ட விகற்பமுங் கூறியவாறு.

(இ-ள்) மேற்கூறிய ஐவகையடியினையும் விரிக்குங் காலைப் பொருள்வகையமைந்த பதினேழ் நிலத்து எழுபதுவகைக் குற்ற நீங்கி அறுநூற்றிருபத்தைந்தாம் என்றவாறு.

எனவே, பதினேழ்நிலத்து ஏறினும், எழுபதுவகைக் குற்றம் விரவச் செயினும் அறுநூற்றிருபத்தைந் தெனப்படா தென்பதாம். பதினேழ் நிலனும் ஆசிரியம் பெறுமென்பதூஉம், வெண்பாவுங் கலிப்பாவும் ஒரோவொன்று எட்டு நிலம் பெறுமென்பதூஉம் முன்னர்ச் சொல்லுதும். அவை மூன்றுந் தொகுப்ப முப்பத்துமூன்று நிலனாயின.

வெள்ளை நிலம் பத்தென்பார்க்கு முப்பத்தைந்து நிலனாம். எழுபது கூற்று வழுவெனப்பட்டன தளைவழு. தளைவழுவாவன: ஆசிரிய நிலம் பதினேழனுள் வெண்டளையும் கலித்தளையுமாகி வேற்றுத்தளை தட்ப முப்பத்துநான்கு தளை வழுவாம். வெள்ளை நிலம் பத்தினும் ஆசிரியத்தளை பத்துங் கலித்தளை பத்துந் தட்ப இருபது தளைவழுவாம். இனி, கலிநில மெட்டனுள் ஆசிரியத்தளை எட்டும் கலித்தளை எட்டுந் தட்பப் பதினாறு தளைவழுவாம். இவையெல்லாந் தொகுப்ப முப்பத் தைந்து நிலத்தும் ஒன்றிரண்டு செய்து, எழுபது தளைவழுவாயினவாறு. இது வெள்ளை நிலம் பத்தென்பாருரை.

அது பொருந்தாது. என்னை? ஆசிரியத்து நாலெழுத்தடியுள் இரண்டு தளைவழுவுங் காட்டுகவெனின் அவர்க்கு அவை காட்டலரிய. குறிப்பசை செய்து காட்டின் அது கூறப்பட்ட உறுப்பினுள் இன்று என்றவாறு. எடுத்தோதிய எழுத்து முதல் உறுப்பினான் வந்த அடிக் கண்ணே காட்டா தொழிதலின் அது நூன்மாறுகோளாம்; அல்லதூஉம், அவ்வாறு தளைகொள்ளின் முழுவதுங் குறிப்பசையானே வரும் அடியும், ஒரெழுத்தடிமுதன் மூன்று நிலனுங் கொள்ளல் வேண்டும்; கொள்ளவே, நிலம் இருபத்தொன்றாகலும், காட்டுந் தளைவழுத் தொண்ணூற்று நான்காகலும் பெற்று,

ஞாயிறு வரகு வண்டு வண்டு வண்டு

என்பது கலித்தளை தட்ப ஆசிரியவடி அன்றாவான் செல்லுமெனவும் கூறி மறுக்க.

இனி, ஆசிரியத்துட் கலித்தளை தட்குங்கால் அவர் தாந்தளை வேண்டுமாற்றான் வெண்சீர் நிற்ப இறுதி நிரைவர வேண்டுமாகலானும், கட்டளையடிக்கண் வெண்சீர் வருமென் நிலனாகலானும்,

"வெண்சீ ரீற்றசை நிரையசை யியற்றே" **(341)**

என்பதனான் இயற்சீரை வெண்சீராக்கிக் கொள்ளினும் அச் சூத்திரத்துக்கு அவ்வாறு பொருளுரைப்பிற் படுங்குற்றம் ஆண்டுக் கூறினா மாகலானும் அது நிரம்பாதென்பது. அற்றன்றியும் ஒரெழுத்து முதலிய நிலங்கள் ஒரோநிலத்து இரண்டும் மூன்றும் தளைவழுக் காட்டலா மாகலின் எழுபது வகையின் வழுவெனலுமாகாது என்பது. இனி,

"அளவுஞ் சிந்தும் வெள்ளைக் குரிய" **(370)**

என்னும் எடுத்தோத்துக் கிடப்ப, இலேசினான் இரண்டு நிலனேற்றி வெள்ளைநிலம் பத்தெனலுமாகாது, என்னை?

"அளவடி மிகுதி யுளப்படத் தோன்றி
யிருநெடி லடியுங் கலியிற் குரிய" **(371)**

என ஓதினான்; இதனினுஞ் சிறந்த வெண்பாவிற்கும் அங்ஙனம் ஓதுவான்மன் ஆசிரியன் அதுவே கருத்தாயினென்பது. அல்லதூஉங்

கலிப்பாவினுள் வெண்சீரொன்றினுங் கலியோசை பிறக்குமென்று பதினேழெழுத்தடியான் வந்த வெண்பாவடியினைத் தாமுங் களைப வாகலானும் அது கூறி நிரம்பாதென்பது.

மற்றென்னை தளைகொள்ளுமாறெனின், ஆசிரியத்துள் இயற்சீர் பத்தொன்பதும், ஆசிரியவுரிச்சீர் நான்கும், அசைச்சீர் நான்குமென இருபத்தேழாகி,

"எழுத்தள வெஞ்சினுஞ் சீர்நிலை தானே
குன்றலு மிகுதலும்" (355)

இன்றி வரும்.

வெண்பாவினுள், ஆசிரியவுரிச்சீர் நான்கும், அசைச்சீர் நான்கும் ஒழித்து, ஒழிந்தசீர் இருபத்துமூன்றும் வெண்சீர் நான்கினோடுந் தலைப்பெய்ய அவையும் அவ்வாறே இருபத்தேழாம்.

கலிப்பாவிற்கு, நேரீற்றியற்சீர் மூன்றொழித்து ஒழிந்த இயற்சீர் பதினாறும், ஆசிரியவுரிச்சீர் நான்கும், வெண்சீர் நான்கும் என இருபத்து நான்காம். இவை மூன்று பகுதியுந் தொகுப்ப எழுபத்தெட்டாயின. அவற்றுள், ஆசிரியத்துள் வந்த அசைச்சீர் நான்கினையும் வெண்பா வினுள் வந்த அசைச்சீர் நான்கினையும் ஈண்டுத் தளை கொள்ளுங்கால், இயற்சீர்ப் பாற்படுத்து அடக்குகவென்று ஆண்டுக் (340) கூறினமையின், ஈண்டு அவற்றை இயற்சீர்ப்பாற்படுத்து அடக்கின் எழுபதாகக் கொள்ளப்படும். அங்ஙனங் கொள்ளப்பட்ட சீர் ஒன்றொன்றனோடு தட்குங்கால் அவ் வெழுபதுவகையானு மன்றித் தட்குமாறில்லை. அதுநோக்கி 'எழுபது வகைமையின் வழுவில வாகி' என்றானென்பது. அவை தட்குமாறு முன்னர்ச் (340) சொல்லுதும்.

அங்ஙனந் தளைசிதையா அடி, அறுநூற்றிருபத்தைந்தும் மூன்று பாவிற்கும் முப்பகுதியவாம்; யாங்ஙனம்? ஆசிரியவடி முந்நூற்றிருபத்து நான்கும், வெண்பாவடி நூற்றெண்பத்தொன்றும், கலியடி நூற்றிருபது மென அறுநூற்றிருபத்தைந்தாம். 'மெய்வகை யமைந்த' என்றதனான் நான்குசீருள்ளும் உறழ்கின்ற சீரினை அடிமுதற்கண்ணே வெளிப்பட வைத்து அச் சீரின் அடியாக்கி உறழப்படுமென்பது கொள்க. அல்லாக்கால் இடையும் இறுதியும் வைத்து உறழ்தன் முதற்கணின்றதோர் சீர் இரண்டாம் அடியாகியும் அவ்வடி மயங்குமாகலான் அது மயங்கக்கூற (663) லென்னுங் குற்றமாமென மறுக்க.

"எள்ளற்ற முந்நூற் றிருபத்து நான்ககவல்
வெள்ளைக்கு நூற்றெண்பத் தொன்றாகுந் - துள்ள
னவையறு நூற்றிருப தாமடி நாடி
னவையறு நூற்றிருபத் தைந்து."

ஆசிரியத்துள் வருமெனப்பட்ட சீர் இருபத்தேழும் ஒரோவொன்று பன்னிரண்டா யுறழ அகவலடி முந்நூற்றிருபத்து நான்காம். இது பயனில் வெளி.

"நால்வே றுரியசைச்சீர் நால்வே றகவற்சீர்
பால்வேறு பட்டியற்சீர் பத்தொன்ப தாக
விருபஃதேழ் சீரகவற் கீரிரண் டாதி
யிருப தெழுத்தளவு மேற்று."

"ஆசிரியப் பாவினான் கைந்தாறே ழெட்டொன்ப
தாதி நிலமாறா மைஞ்சீரா னீறு
நிரையாஞ்சீர் நேரசைச் சீர்க்கொன்றொன் றேற்ற
வரையாதொன் றேறிற்றே வந்து."

ஓரெழுத்துச் சீரும், ஓரெழுத் தசைச்சீருஞ் சுருக்கத்திற் கெல்லையாகிய சீராகலான் அவை சுருக்கத்திற்கு எல்லையாகிய நாலெழுத்தடிமுதற் பதினைந்தெழுத்தடியளவும் உயரும். அவை:

நுந்தை வண்டு வண்டு வண்டு

எனவும்,

நுந்தை காருருமு நனிமுழவு நனிமுழவு

எனவும், ஓரெழுத்துத் தேமாவடி பன்னிரண்டற்கும் முதலடியும் முடிந்தவடியுங் கண்டுகொள்க.

வண்டு வண்டு வண்டு வண்டு

எனவும்,

வண்டு காருருமு நனிமுழவு நனிமுழவு

எனவும், இவை வண்டு முதலும் முடிவுங் காட்டிய அடி.

இனி, நேரீற்று ஈரெழுத்துச்சீர் ஒன்றும் ஐந்தெழுத்தடி முதலாகவும், பதினாறெழுத்தடி யிறுதியாகவும் வரும் அது,

தேமா வண்டு வண்டு வண்டு

எனவும்,

தேமா காருருமு நனிமுழவு நனிமுழவு

எனவும் வரும்.

மின்னு வரகு என்னும் ஈரெழுத்து அசைச்சீரிரண்டும் அவ்வாறே யுறழும்; நிரையீற் றீரெழுத்துச்சீர் மூன்றும் ஆறெழுத்தடிமுதற் பதினேழுத்தடியளவும் உயரும்; அவை:

ஞாயிறு போதுபூ போரேறு

என்பனவற்றை முதனிறீஇ,

வரகு வண்டு வண்டு

எனவும்,

நனிமுழவு நனிமுழவு நனிமுழவு

எனவுப் நந்து இங்ஙனமாயினவாறு கண்டுகொள்க.

இனி, மூன்றெழுத்தான் வருவன ஒன்பது சீரும் அசைச் சீருமெனப் பத்து. அவை:

புளிமா பாதிரி வலியது மேவுசீர் நன்னாணு
பூமருது கடியாறு விறகுதீ நீடுகொடி அரவு

என்பன.

இவற்றுட் புளிமாவும் அரவும் ஆறெழுத்தடி முதலாகப் பதினேழெழுத்தடியளவும் உறழ்ந்து ஓரொன்று பன்னிரண்டு நிலம் பெறும்.

ஒழிந்த சீர் எட்டும் நிரையீறாகலின் ஏழெழுத்தாதி பதினெட்டெழுத்தடியளவும் உறழும்; அவை:

புளிமா வண்டு வண்டு வண்டு

எனவும்,

புளிமா காருருமு நனிமுழவு நனிமுழவு

எனவும்

பாதிரி வரகு வண்டு வண்டு

எனவும்,

பாதிரி நனிமுழவு நனிமுழவு நனிமுழவு

எனவும் உறழ்ந்தவழிப் புளிமா ஆறெழுத்துமுதற் பதினேழன்காறும் உயர்ந்தவாறும், பாதிரி ஏழெழுத்துமுதற் பதினெட்டன்காறும் உயர்ந்த வாறுங் கண்டுகொள்க. ஒழிந்தனவும் அன்ன.

இனி, நாலெழுத்துச்சீர் எழு வகைய; அவை:

கணவிரி காருருமு பெருநாணு
உருமுத்தீ மழகளிறு நாணுத்தளை உரறுபுலி

என்பன. இவையெல்லாம் எட்டெழுத்தடிமுதற் பத்தொன்பதளவும் உயர்ந்தே ஓரோவொன்று பன்னிரண்டடி பெறும்; அவை:

கணவிரி வரகு வண்டு வண்டு

எனவும்,

கணவிரி நரையுருமு நரையுருமு நரையுருமு

எனவும் வரும்; ஒழிந்தனவும் இவ்வாறே ஒட்டிக்கொள்க.

ஐந்தெழுத்துச்சீர்,

நரையுருமு விரவுகொடி

என இரண்டு. அவை ஒன்பதுமுதல் இருபதின்காறும் உயரும்; அவை:

நரையுருமு வரகு வண்டு வண்டு

எனவும்,

கலனளவு கலனளவு கலனளவு கலனளவு (ப. 998)

எனவும் வரும்; விரவுகொடிக்கும் இஃதொக்கும்.

இவ்வாற்றான் ஓரெழுத்துச் சீரிரண்டும், ஈரெழுத்துச் சீர் ஆறும், மூவெழுத்துச்சீர் பத்தும், நாலெழுத்துச்சீர் ஏழும், ஐயெழுத்துச்சீர் இரண்டுமாகச் சீர் இருபத்தேழினையும் பன்னிரண்டிற் பெருக்கிப் பெற்ற ஆசிரியவடி முந்நூற்றிருபத்து நான்கும் பாட்டினுந் தொகையினும் வருமாறு கண்டுகொள்க.

இனி, வெண்பாவடி நூற்றெண்பத்தொன்றும் உறழுங்கால், ஏழெழுத்தடியும், எட்டெழுத்தடியும், ஒன்பதெழுத்தடியும், பத்தெழுத் தடியும் முதலாய் நிற்பப் பதினான்கெழுத்தடியளவும் ஏறி ஓரோசீர் எட்டடி பெறுவனவும், ஏழடி பெறுவனவும், ஆறடி பெறுவனவும், ஐந்தடி பெறுவனவுமாகி முறையானே வருமென்பது.

"இயற்சீ ரசைச்சீ ரிருபத்து மூன்றோ
டுரிச்சீர்நான் கேற்றச்சீ ரொன்பதிற்று மூன்று
மயக்கறு வெள்ளைக்க ணேழ்தொடங்கி மாதே
யுயர்ச்சி பதினான்கென் றொட்டு"

"நாலெழுத்துச் சீரெல்லா மேழெழுத்தா னாசிரியத்
தாதிபெறா தொன்றேறிற் றாங்கதுபோ - னாலெழுத்தான்
வந்தசீர் வெண்பாவிற் பத்தெழுத்தான் வாராவா
யைஞ்சீர்க்கு நான்கா முதல்."

நுந்தை வண்டு ஞாயிறு போதுபூ போரேறு

என ஐந்தும் ஏழெழுத்தடிமுதற் பதினான்கெழுத்தடியளவும் உயர்ந்து ஒரோவொன்று எட்டடியுறழப் பெற்ற அடி நாற்பதாம்.

"ஞாயிறு போதுபூ போரேறு நுந்தைவண்
டேழாதி யெட்டா மடி"

தேமா மின்னு வரகு பாதிரி வலியது மேவுசீர்
நன்னாணு பூமருது கடியாறு விறகுதீ மாசெல்வாய்

எனப் பதினொன்றும் எட்டெழுத்தடிமுதற் பதினான்கெழுத்தடியளவும் ஒரொன்று ஏழடியுறழப் பெற்ற அடி எழுபத்தேழாம்.

"மின்னு வரகு வலியது மேவுசீர்
நன்னாணு பாதிரிப் பூமருதே யாறுதீ
மன்னாத மாசெல்வாய் தேமா வெனப்பதினோ
ரெண்ணாகு மெட்டாதி யேழ்"

புளிமா அரவு கணவிரி காருருமு பெருவேணு
உருமுத்தீ மழகளிறு மாவருவாய் புலிசெல்வாய்

என இவை ஒன்பது சீரும் ஒன்பதெழுத்தடி முதற் பதினான்கெழுத்தடி யளவும் உயர்ந்து ஒரொவொன்று ஆறடியுறழப் பெற்ற அடி ஐம்பத்து நான்காம்.

"அரவு புளிமா கணவிரி பெருவேணு
புலிசெல்வாய் காருருமுப் பேருருமுத் தீயே
மழகளிறு மாவருவா யொன்பது மொன்ப
தெழுவா யிருமூன் றெனல்"

நனிமுழவு புலிவருவாய்

என்னும் இரண்டு சீரும் பத்தெழுத்தடி முதற் பதினான்கெழுத்தடியளவும் உயர்ந்து ஒரோவொன்று ஐந்தடி யுறழப் பெற்ற அடி பத்தாயின.

"புலிவரு வாயு நனிமுழவு மென்னுமிவை
யீரைந்தீ ரேழுற்றீ ரைந்து"

இவை யெல்லாந் தொகுப்ப வெண்பாவடி நூற்றெண்பத்தொன் றாயின.

அவற்றுட் சில வருமாறு:

நுந்தை வரகு வரகு வரகு

எனவும்,

நுந்தை நனிமுழவு காருருமு காருருமு

எனவும் இவை ஏழெழுத்தடிமுதற் பதினான்கெழுத்தளவும் நுந்தை வந்தவாறு. வண்டெடன்பதற்கும் இஃதொக்கும்.

ஞாயிறு வண்டு வரகு வரகு

எனவும்,

ஞாயிறு காருருமு மாவருவாய் காருருமு

எனவும், இவை ஏழெழுத்தடியும் பதினான்கெழுத்தடியு மாயினவாறு.

போதுபூ போரேறு

என்பனவற்றிற்கும் இஃதொக்கும்.

தேமா வரகு வரகு வரகு

எனவும்,

தேமா நனிமுழவு காருருமு பாதிரி

எனவும் எட்டெழுத்தடி முதலாகப் பதினான்கெழுத்தடியளவும் உயர்ந்து தேமா ஏழடி பெற்றது. ஒழிந்த பத்துச் சீர்க்கும் இஃதொக்கும்.

புளிமா வரகு வரகு வரகு

எனவும்,

புளிமா புலிவருவாய் காருருமு தேமா

எனவும் இவை ஒன்பதெழுத்தடி முதலாகப் பதினான்கெழுத்தடியளவும் உயர்ந்து ஆறடி பெற்றது; ஒழிந்த எட்டுச் சீர்க்கும் இஃதொக்கும்.

நனிமுழவு வண்டு வரகு வரகு

எனவும்,

நனிமுழவு காருருமு பாதிரி தேமா

எனவும் இவை பத்தெழுத்தடிமுதற் பதினான்கெழுத்தளவும் ஏறி ஐயெழுத்து நனிமுழவு ஐந்தடி பெற்றது; புலிவருவாய்க்கும் இஃதொக்கும்.

இவற்றுக்கெல்லாம் பதினான்கெழுத்தின் ஏறியக்காற் செப்பலோசை திரிபுடைய வென்பது வல்லார்வாய்க் கேட்டு உணர்க; என்னை,

"அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி
வகுத்தன ருணர்த்தலும், வல்லோ ராறே" (323)

என்றமையின்.

"அடியி னுட்ப மறிவருங் குரைத்தே"

எனப் பிறருஞ் சொல்லுப.

இனி, கலியடிக்குரியசீர் இருபத்துநான்கும் ஒரோவொன்று ஐந்தடியுறழ அதன் அடித்தொகை நூற்றிருபதாம்.

"அளவடி மிகுதி யுளப்படத் தோன்றி
யிருநெடி லடியுங் கலியிற் குரிய" (371)

என்பதனான், பதின்மூன்றெழுத்தும் பதினான்கெழுத்தும் பதினைந்தெழுத்தும் பதினாறெழுத்தும் முதலாக ஒரொவொன்று ஐந்தடி உறழ்ந்து கலியடியளவு பதினேழெழுத்து முதல் இருபதின்காறும் உயருமென்றது.

"நிரையீற் றியற்சீர் பதினாறு மேனை
நிரையீற் றகவற்சீர் நான்கு மொருநான்கு
வெண்சீருந் துள்ளற்கு வெவ்வே றொருசீரா
னைந்தா முறழ்ந்த வடி."

"ஈரெழுத்துச் சீர்பதின்மூன் றாகி யிருபதின்கா
றோதியசீர் நாள்கற் குயர்வு."

ஞாயிறு போதுபூ போரேறு

என்னும் ஈரெழுத்துச்சீர் மூன்றும், பதின்மூன்றெழுத்து முதற் பதினேழு எழுத்துவரை ஒரோவொன்று ஐந்தடியுறமும்.

பாதிரி வலியது மேவுசீர் நன்னாணு பூமருது
கடியாறு விறகுதீ மாசெல்வாய் நீடுகொடி

என மூவெழுத்துச்சீர் ஒன்பதும், பதினான்கெழுத்து முதற் பதினெட் டளவும் ஒரோவொன்று ஐந்தடியுறமும்.

கணவிரி காருருமு பெருநாணு உருமுத்தீ மழகளிறு
மாவருவாய் புலிசெல்வாய் நாணுத்தளை உரறுபுலி

என நாலெழுத்துச்சீர் ஒன்பதும், பதினைந்தெழுத்து முதற் பத்தொன்பதளவும் ஒரோவொன்று ஐந்தடியுறமும்.

நரையுருமு புலிவருவாய் விரவுகொடி

என்னும் ஐந்தெழுத்துச்சீர் மூன்றும், பதினாறெழுத்தடி முதல் இருப தெழுத்தடியளவும் உயர்ந்து ஒரோவொன்று ஐந்தடி பெறும்.

இவ்வாற்றாற் கட்டளைக் கலியடி நூற்றிருபதாமென்பது.

அவற்றுட் சில வருமாறு:

ஞாயிறு புலிசெல்வாய் மாசெல்வாய் புலிசெல்வாய்

எனவும்,

ஞாயிறு புலிவருவாய் புலிவருவாய் புலிவருவாய்

எனவும் முதலும் முடிவும் பதின்மூன்றும் பதினேழுமாகி ஈரெழுத்துப் பாதிரி ஐந்தடி யுறழ்ந்தவாறு.

ஞாயிறு புலிவருவாய்

என முதற்கண் ஆசிரியத்தளை தட்டதென்னாமோ வெனின், என்னாம்;

"நிரைமுதல் வெண்சீர் வந்துநிரை தட்டல்
வரைநிலை யின்றே யவ்வடிக் கென்ப" (372)

என்புழி அதனைக் கலித்தளை யென்னுமாகலின்.

புலிசெல்வாய் மாசெல்வாய்

என ஈற்றுக்கண் வெண்டளை வந்தது என்னாமோ வெனின், என்னாம்;

"வெண்சீ ரீற்றிசை நிரையசை யியற்றே" (341)

என்றானாகலின்.

ஒழிந்த மூவெழுத்துச்சீரும், நாலெழுத்துச்சீரும், ஐயெழுத்துச்சீரும் அவ்வாறே உறழ்ந்துகொள்க. (50)

நச்சினார்க்கினியார்

50. ஐவகை யடியும் விரிக்குங் .... கும்மே.

மேல் நாற்சீரடியினை ஐவகையாகக் கூறி இதனானே அறுநூற் றிருபத்தைந்தாகுமென அவற்றின் விகற்பமுங் கூறினார்.

(இ-ள்) ஐவகை அடியும் விரிக்குங் காலை - மேற்கூறிய ஐவகை அடியும் விரிக்குமிடத்து, மெய்வகை அமைந்த பதினேழ் நிலத்த பொருள்வகை அமைந்த பதினேழ் நிலத்தவாய், எழுபது வகையின் வழுவிலவாகி - எழுபது வகைக் குற்றம் நீங்கி, அறுநூற்று இருபத்தைந் தாகும்மே - அறுநூற்றிருபத்தைந்தாம் எ-று.

எனவே, பதினேழ்நிலத்தேறினும் எழுபதுவகைக் குற்றம் விரவினும் அறுநூற்றிருபத்தைந்து என்ற கட்டளையாகாவாயிற்று.

அகவற்கு இயற்சீர் பத்தொன்பதும் உரிச்சீர் நான்கும் அசைச்சீர் நான்கும் ஆக இருபத்தேழும், வெள்ளைக்கு இயற்சீர் பத்தொன்பதும் வெண்சீர் நான்கும் அசைச்சீர் நான்கும் ஆக இருபத்தேழும், கலிக்கு நேரீற்றியற்சீர் மூன்றொழிந்த இயற்சீர் பதினாறும் உரிச்சீர் நான்கும் வெண்சீர் நான்கும் ஆக இருபத்து நான்கும் ஆக எழுபத்தெட்டுச் சீர்களும் அகவற்கும் வெள்ளைக்கும் அசைச்சீர் எட்டும் இயற்சீர்ப் பாற் படுத்துத் தளைகோடலின் அவற்றை இயற்சீர்க்கண் அடக்க எழுபதாம்.

சீர்கள் ஒன்று ஒன்றனோடு தட்குங்கால் அவை பொருளானன்றி ஓசையைக் கடக்குமாறின்மையின் அவ் வோசை கெடாது வருதற்கு எழுபது தளை வழுவின்றி வரல் வேண்டும் என்பார் 'எழுபது வகையின் வழுவில' என்றார்.

இவ்வண்ணம் தளைகொண்டாரேனுந் தளைக்குக் கழித்த அசைச்சீரெட்டும் சீராய் நின்று அடியுறழுமென வுணர்க.

அகவற்கு ஆசிரியத்தளையும், வெள்ளைக்கு இயற்சீர் வெண்டளையும், இயற்சீரொடு தட்ட வெண்சீர் வெண்டளையும், துள்ளற்குக் கலித்தளையும் ஆக அறுநூற்றிருபத்தைந்து தளையும் மூன்று பாவிற்கும் பகுக்குங்கால் அகவற்கு முந்நூற்றிருபத்துநான்கும், வெள்ளைக்கு நூற்றெண்பத்தொன்றும், கலிக்கு நூற்றிருபதுமாம்.

'மெய்வகை யமைந்த' என்றதனான் நான்கு சீரினும் உறழ்கின்ற சீரினை அடிமுதற்கண்ணே வெளிப்படவைத்து அவ்வச் சீரி னடியாக்கிப் பெயருங் கொடுத்து அகவற்கு ஒரோவொன்று பன்னீரடியாகவும் ஒழிந்த இரண்டற்கும் பிறவாறாகவும் உறழப்படும்.

இனி அகவற்கு உறழுமாறு:

“இயற்சீ ருரிச்சீ ரசைச்சீர் கூடி
யிரண்டுதலை யிட்ட வையைந்து சீரா
யகவற்கு ஒரோவொன் றுறழு மடித்தொகை
யீரா றென்ப வியல்புணர்ந் தோரே.”

“அகவற் குரியசீ ரிருபத் தேழனுள்
நுந்தையும் வண்டும் முதல்வரு மடிக்கண்
நந்நான் கெழுத்து முதலாய்க் கொண்டு
பதினைந் தளவு மேறிப் பெருந்தொகை
யீராறீரா றாகு மென்ப.” (24)

(எ-டு) நுந்தை வண்டு வண்டு

எனவும்,

நுந்தை காருருமு நளிமுழவு நளிமுழவு

எனவும் ஓரெழுத்துத் தேமாவடி நான்குமுதற் பன்னிரண்டளவும் உயர்வனவற்றிற்கு முதலடியும் முடிவிலடியுங் காட்டினாம்.

இதற்கு மேல்வருவனவற்றிற்கும் இடைநின்றனவற்றையு மிவ்வாறே சீர்தளைப் பெய்து ஒட்டிக் கொள்க.

வண்டு வண்டு வண்டு வண்டு

எனவும்,

வண்டு காருருமு நளிமுழவு நளிமுழவு

எனவும் வண்டு என்னும் ஓரெழுத்துச் சீரடி பன்னிரண்டற்கும் முதலும் முடிவுங் காட்டினாம்.

“தேமா மின்னு வரகுமுதல் வருமடி
யைந்துமுத லீரெட் டளவு முயர்ந்து
வந்த தொகைமூ வொருபத் தாறே.” (36)

தேமா வண்டு வண்டு வண்டு எனவும்; தேமா காருருமு நளிமுழவு நளிமுழவு எனவும்; தேமாஅடி பன்னிரண்டற்கும் முதலும் முடிவும் காட்டினாம்; மின்னுவரகு என்னும் இரண்டற்கும் இஃதொக்கும்.

“ஞாயிறு போதுபூப் போரேறு புளிமா
அரவு முதலா வந்தவைந் தடியு
மாறு தொட்டுப் பதினே ழளவு
முயர்ந்த தொகையா றொருபஃ தாகும்.” (60)

ஞாயிறு வரகு வண்டு வண்டு எனவும்; ஞாயிறு நளிமுழவு நளி முழவு எனவும்; ஞாயிற்றடி பன்னிரண்டற்கும் முதலும் முடிவுங் காட்டி

னாம். போதுபூ போரேறு என்னும் இரண்டற்கும் ஈதொக்கும். புளிமா வண்டு வண்டு வண்டு எனவும்; புளிமா காருருமு நளிமுழவு நளிமுழவு எனவும் ஒட்டுக. அரவுக்கும் இவ்வாறே யொட்டுக. என்றைந்தடிக்கும் முதலும் முடிவும் காண்க.

"பாதிரி வலியது மேவுசீர் நன்னாணுப்
பூமருது கடியாறு விறகுதீ நீடுகொடி
யாதி யாகிய வடிகள் தாமே
யேழுமுதன் மூவா றளவு முயர்ந்த
தொகையாறு முடிவிட்ட தொண்ணூ றாகும்." (96)

பாதிரி வரகு வண்டு வண்டு எனவும்; பாதிரி நளிமுழவு நளிமுழவு நளிமுழவு எனவும் பாதிரியடி பன்னிரண்டற்கும் முதலும் முடிவுங் காட்டினாம்.

ஒழிந்த ஏழற்கும் இவ்வாறே யொட்டிக் காண்க.

"கணவிரி யுரறுபுலி காருருமுப் பெருநாணு
உருமுத்தீ மழகளிறு நாணுத்தளை முதலா
வந்த வடிக ளிருநான்கு தொட்டுப்
பத்தொன் பானள வும்முயர்ந் ததொகை
நான்குமுடி விட்ட எண்ணொரு பஃதாம்" (84)

கணவிரி வரகு வண்டு வண்டு எனவும், கணவிரி நரையுருமு நரையுருமு நரையுருமு எனவும் கணவிரியடி பன்னிரண்டற்கும் முதலும் முடிவும் காட்டினாம்.

ஒழிந்தவற்றிற்கும் இவ்வாறே யொட்டிக் கொள்க.

"விரவுகொடி நரையுருமு முதல்வரு மடிக
ளொன்றுதலை யிட்ட விருநான்கு தொட்டே
யைந்நான் களவு முயர்ந்த தொகைதா
மூவெட் டாக மொழிந்தனர் புலவர்." (24)

விரவுகொடி வரகு வண்டு வண்டு எனவும் விரவுகொடி நளிமுழவு நளிமுழவு நளிமுழவு எனவும் விரவுகொடியடி பன்னிரண்டற்கும் முதலும் முடிவுங் காட்டினாம்.

ஒழிந்ததற்கும் இவ்வாறே யொட்டிக் காண்க

"அகவற் குறழ்ந்த வடித்தொகை கூறின்
நான்குதலை யிட்ட நாலைந் தனோடு
மூவொரு நூறா மொழிந்தனர் புலவர்."

ஆக அடி முந்நூற்றிருபத்து நான்கு. (324)

இனி வெள்ளைக்கு உறழுங்கால் ஏழும் எட்டும் ஒன்பதும் பத்தும் ஆகிய எழுத்தானாய வடிகள் முதலா வந்தவை பதினான்கெழுத் தளவும் உயருங்கால் ஓர்சீர் எட்டடியும் ஏழடியும் ஆறடியும் ஐந்தடியும் பெற்று நூற்றெண்பத்தொன்றாம்.

"இயற்சீர் ரசைச்சீர் வெண்சீர் கூடி
யிரண்டுதலை யிட்ட வையைந்து சீராய்
வெள்ளை யுறமு மாறு கூறி
னெட்டு மேழு மாறு மைந்துமென்
றொட்டு மடிகளைப் பெறுமவை தாமே."

"வெள்ளைக் குரியசீ ரிருபத் தேழனுள்
நுந்தை வண்டு ஞாயிறு போதுபூப்
போரேறு முதலா வந்த வடிக
ளேழு தொட்டே யீரே ழளவு
முயர்ந்த தொகைநா லொருபஃ தாகும்." (40)

(எ-டு) நுந்தை நளிமுழவு வரகு வரகு எனவும்; நுந்தை மழகளிறு காருருமு காருருமு எனவும் நுந்தையடிக்கு முதலுங் முடிவுங் காட்டினாம். வண்டிற்கும் இஃதொக்கும்.

ஞாயிறு வண்டு வரகு வரகு எனவும்; ஞாயிறு காருருமு மாவருவாய் காருருமு எனவும் ஞாயிற்றடிக்கு முதலும் முடிவுங் காட்டினாம். போதுபூ போரேறு என்னும் இரண்டற்கும் இஃதொக்கும்.

"தேமா மின்னு வரகு வலியது
பாதிரி மேவுசீர் நன்னாணுப் பூமருது
கடியாறு விறகுதீ மாசெல் வாய்முதல்
வந்த வடிக ளிருநான்கு தொட்டே
யீரே ழளவு முயர்ந்து பெறுந்தொகை
யேழுமுடி விட்டவே ழொருபஃ தாகும்." (77)

தேமா வரகு வரகு வரகு எனவும்; தேமா நளிமுழவு காருருமு பாதிரி எனவும் தேமாவடிக்கு முதலும் முடிவுங் காட்டினாம். மின்னு வரகு என்னுமிரண்டற்கும் இஃதொக்கும். வலியது வண்டு வரகு வரகு எனவும்; வலியது காருருமு காருருமு பாதிரி எனவும் ஒட்டுக.

ஒழிந்தவற்றையும் இவ்வாறே யொட்டுக.

"கணவிரி பெருவேணுக் காருருமு புலிசெல்வாய்
மழகளி றுருமுத்தீ மாவரு வாய்புளிமா
வரவுத் தீமுத லாக வந்த
வடிக ளொன்பது மீரே ழளவு
முயர்ந்து பெறுந்தொகை யுணரக் கூறி
னான்குதலை யிட்ட வையொரு பஃதாம்." (54)

கணவிரி வண்டு வரகு வரகு எனவும்; கணவிரி காருருமு காருருமு தேமா எனவும் கணவிரியடிக்கு முதலும் முடிவுங் காட்டினாம். காருருமு வண்டு வரகு வரகு எனவும்; காருருமு காருருமு காருருமு ஞாயிறு எனவும் ஒட்டுக. புளிமா வரகு வரகு வரகு எனவும்; புளிமா புலிவருவாய் காருருமு தேமா எனவும் ஒட்டுக.

ஒழிந்தவற்றிற்கும் ஏற்குமாறறிந் தொட்டுக.

"நரையுருமு புலிவருவாய் முதலா மடிக
ளீரைந்து தொட்டே யீரே ழளவு
முயர்ந்து பெறுந்தொகை யீரைந் தாகும்." (10)

நரையுருமு வண்டு வரகு வரகு எனவும்; நரையுருமு காருருமு பாதிரி தேமா எனவும் நரையுருமு அடிக்கு முதலும் முடிவுங் காட்டினாம். புலிவருவாய்க்கும் இஃதொக்கும்.

பதினான்கெழுத்தி னேறியக்காற் செப்பலோசை திரிபுடைய கட்டளைக்கென்பது இசையொடு சேர்த்தி யுணர்க.

"வெள்ளைக் குறழ்ந்த வடித்தொகை கூறி
னொன்றுமுடி விட்டவெண் ணொருபது நூறாம்." (181)

இனிக் கலிக்கு உறழுமாறு:

"நேரீ றொழிந்த வியற்சீ ரெட்டும்
வெண்சீ ரிருசீர் தம்மொடு கூட்டி
நான்குதலை யிட்ட நாலைந் தாதி
யொரோவொன் றைந்தடி யுறழப் பெறுமே."

"கலிக்குற முஞ்சீ ரிருபத்து நான்கனுண்
ஞாயிறு போதுபூப் போரேறு முதலா
வந்த வடிகள் பதின்மூன்று தொட்டே
யொன்றுதலை யிட்ட வீரெட் டளவு
முயர்ந்து பெறுந்தொகை மூவைந் தாகும்." (15)

ஞாயிறு புலிசெல்வாய் புலிசெல்வாய் மாசெல்வாய் எனவும்; ஞாயிறு புலிவருவாய் மாசெல்வாய் எனவும் ஞாயிற்றடிக்கு முதலும் முடிவுங் காட்டினாம். ஒழிந்தவற்றிற்கும் இஃதொக்கும்.

இவற்றிற்கு முதலே ஆசிரியத்தளையும் ஈற்றிலே வெண்சீர் வெண்டளையும் தட்குமா லெனின், 'நிரைமுதல் வெண்சீர்' (செய்.60) என்னுஞ் சூத்திரத்தானும் 'வெண்சீ ரீற்றசை' (மேற்படி.29) என்னும் சூத்திரத்தானும் அவை கலித்தளையாமாறு காண்க.

"பாதிரி வலியது மேவுசீர் நன்னாணுப்
பூமருது கடியாறு விறகுதீ மாசெல்வாய்
நீடுகொடி முதலா வந்த வடிக
ளீரேழ் தொட்டே மூவா றளவும்
வந்து பெறுந்தொகை யுரைப்பி னதுவென
வைந்துமுடி விட்டநா லொருபஃ தாகும்." (45)

பாதிரி புலிசெல்வாய் மாசெல்வாய் எனவும்; பாதிரி புலிவருவாய் புலிவருவாய் மாவருவாய் எனவும்; பாதிரி புலிவருவாய் புலிவருவாய் மாவருவாய் எனவும் பாதிரியடிக்கு முதலும் முடிவுங் காட்டினாம். ஒழிந்தவற்றிற்கும் இஃதொக்கும்.

"கணவிரி யுரறுபுலி காருருமுப் பெருநா
ணுருமுத்தீ மழகளிறு நாணுத்தளை புலிசெல்வாய்
மாவருவாய் முதலா வந்த வடிகள்
மூவைந்து தொட்டுப் பத்தொன்பா னளவு
முயர்ந்து பெறுந்தொகை முன்ன ரஃதே." (45)

கணவிரி புலிசெல்வாய் புலிசெல்வாய் மாசெல்வாய் எனவும்; கணவிரி புலிவருவாய் புலிவருவாய் மாவருவாய் எனவும் கணவிரியடிக்கு முதலும் முடிவுங் காட்டினாம். ஒழிந்தவற்றிற்கும் இஃதொக்கும்.

"விரவுகொடி நரையுருமு புலிவருவாய் முதலா
வந்த வடிகளீ ரெட்டுத் தொட்டே
யைந்நான் களவு முயர்ந்து பெறுந்தொகை
மூவைந் தாக மொழிந்தனர் புலவர்." (15)

விரவுகொடி புலிசெல்வாய் புலிசெல்வாய் மாசெல்வாய் எனவும்; விரவுகொடி புலிவருவாய் புலிவருவாய் புலிவருவாய் எனவும் விரவுகொடியடிக்கு முதலும் முடிவுங் காட்டினாம். ஒழிந்தவற்றிற்கும் இஃதொக்கும்.

"கலிக்குரித் தாக வுறழ்ந்த வடித்தொகை
யீரைம் பதனொடு நாலைந் தாகும்" (120)

"மூவ கைப்பா விற்கு முறழ்ந்த தொகை
யறுநூற் றிருபத் தைந்தா கும்மே"

ஆக அடி (625).

இவற்றுள் அகவற்கு நாற்பத்தொன்றும் வெள்ளைக்குப் பதினெட்டும் ஆக ஐம்பத்தொன்பதடிக்குத் தளை வழுப்படுதலின் அவை களைந்து தொடை கொள்ளுமாறு 'மெய்பெறு மரபின்' (செய்.101) என்னுஞ் சூத்திரத்துட் காட்டுதும். (50)

சிவலிங்கனார்

ஐவகையடி .... கும்மே.

(இ-ள்) குறளடி முதலான ஐந்து அடிகளையும் விரித்துச் சொல்லுமிடத்து, எழுத்து வகையான் நாலெழுத்து முதலாக அமைந்த பதினேழு நிலத்திலும் எழுபது வகையான இருசீர் புணரும் புணர்ச்சி வகை எழுபதும் குற்றமிலவாய் அறுநூற்றிருபத்தைந்தடியாம், எ-று.

இதன் விரிவை உரையாசிரியர்களின் உரைகளிற் காண்க.

**358. ஆங்ஙனம்[1] விரிப்பின் அளவிறந் தனவே
பாங்குற உணர்ந்தோர் பன்னுங் காலை. (49)**

இலக்குவனார்

363. If others are expanded thus there is no limit when they, who have learned correctly, explain.

இளம்பூரணர்

358. ஆங்ஙனம் விரிப்பின் .... காலை.

என்-னின். அடி விரியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஈண்டுறழ்ந்த முறையானே அஞ்சடி முதலாக மேன்மேலும் உறழ வரம்பிலவாம் என்றவாறு.

அஃதாவது அறுநூற்றிருபத்தைந்தினோடும் ஐந்தாவது வரும் ஐஞ்சீரையும் உறழ மூவாயிரத் தொருநூற் றிருபத்தைந்து விகற்பமாம். அதன்கண் ஆறாவது இவ்வகை யைந்துசீரையும் உறழப் பதினையாயிரத்து அறுநூற்றிருபத்தைந்து விகற்பமாம். அதன்கண் ஏழாவது வரும் சீரைந்தினையும் உறழ எழுபத்தெண்ணாயிரத் தொருநூற் றிருபத்தைந்து விகற்பமாம். இவ்வகையினா னுறழ வரம்பிலவாய் விரியும். அன்றியும் இச் சொல்லப்பட்ட அடியினை அசையானும் எழுத்தானும் விரிக்க வரம்பிலவாம். (49)

பேராசிரியர்

363. ஆங்ஙனம் விரிப்பின் .... காலை.

இஃது, ஒழிந்த அடி இந் நாற்சீரடிபோல உறழ்க வென்றார்க்கு அவை யுறழாவென உறழாமைக்குக் காரணமுங் கூறுகின்றது.

(இ-ள்) அந் நாற்சீரடிபோல் மற்றையடிகளையும் விரிப்பின், அஃது இலக்கணக் கட்டளையின் இகந்துபட்டதாம், அப் பகுதி யெல்லாம் அறிந்தோர் விரிக்குங் காலத்து என்றவாறு.

அளவிறந்தன - எண்ணிறந்தன, அஃது இலக்கணங்கூறுமாறு அன்றென்றவாறு; அஃது எற்றாற் பெறுதுமெனின், இதன் முதனூல் செய்த ஆசிரியன் அகத்தியனார் சொல்லுமாற்றாற் பெறுது மென்றவாறு.

---

1. ஆங்கனம் - பேரா. பாடம்

எனவே, என்சொல்லப்பட்டதாம்? அங்ஙனம் வரையாது சிறப்புடையனவற்றுக்குஞ் சிறப்பில்லனவற்றுக்கும் ஒருங்கு இலக்கணங் கூறின் அவையெல்லாம் எடுத்தோதப்பெறாத இலக்கணத்தவாம்; அதனால் வரையறையுடையனவற்றுக்கு அன்றி, வாளாதே பரந்துபட்ட வகையான் இலக்கணங் கூறல் பயனில் கூற்றாமெனவும், அது கருதி இதன் முதனூல் செய்த ஆசிரியருங் கூறிற்றிலரெனவுங் கூறியவாறு.

வடநூலாசிரியர்[1] ஆறுவகைப் பிரத்தியங்களான எழுத்துகளைக் குருவும் இலகுவுமென இரு கூறு செய்து உறழ்ந்து பெருக்கிக் காட்டுவதோ ராறுமுண்டு. அவரும் இருபத்தாறெழுத்தளவும் உறழ்ந்து காட்டி, ஒழிந்தன ஞெகிழ்ந்து போவர். அவ்வாறே சீர்களையும், குருவும் இலகுவும்போல் இருசீரடி இத்துணையெனப் பெருக்கவும், ஒழிந்தனவும் இவ்வாறே பெருக்கவுஞ் சிதைந்ததில்லை. அங்ஙனம் பெருக்குங்காலும் ஓரடிக்குரிய சீர் பத்தும் நூறும் ஆயிரமுமாக வைத்து உறழ்ந்தக்காலும் வருவதொன்றில்லை; அங்ஙனம் உறழினும் இத்துணைச் சீரான் வந்த அடிக்கே உறழ்ச்சி கூறுவதென்று ஓரெல்லை கூறிக் கொள்ளல் வேண்டும்; கொள்ளவே எத்துணையிடஞ் சென்றக்காலும், இத்துணையென வரை யறைப்பாடு உடையனவல்ல. அவ் வரையறை இன்மையின் அதனை அளவில வென்பதற்கோர் காரணங் கூறல்வேண்டு மாதலான் அதுநோக்கி நாற்சீரடி சிறப்புடைத்தென வேறுபல காரணங்கூறி, அவற்றுக்கே வரையறை கூறி, அல்லனவற்றுக்கட் சொல்லப்படாதென்றான் இச் சூத்திரத்தானென்பது. அஃதேல், அவை சிறப்புடையவற்றுக்குக் காரணங் கூறியவாற்றாற் சான்றோர் செய்யுளுட் பயின்றுவரல் வேண்டும் பிறவெனின், இந் நூல் செய்த காலத்துத் தலைச்சங்கத்தாரும் இடைச்சங்கத்தாரும் அவ்வாறு கட்டளையடியாற் பயின்றுவரச் செய்யுள் செய்தாரென்பது இச் சூத்திரங்களாற் பெறுதுமென்பது. இதன் முதனூல் செய்த ஆசிரியனாற் செய்யப்பட்ட யாழ்நூலுள்ளுஞ் சாதியும் உவமத் துருவும் திருவிரியிசையுமெனக் கூறப்பட்டவற்றுட் கட்டளைப்பட்டுச் சிறப்படைவன சாதிப்பாட்டுகளே; அவை இக்காலத்துப் பயின்றில வெனினும் மற்றையவற்றோடு ஒக்குமெனப்படாவென்பது.

அல்லதூஉம், உலகத்து மக்கட்பிறவி பலவாயினும் நால்வகை வருண மென்ப, அவர் வரையறை யிலக்கணத்தா ராகலினென்பது; இனி அவருள்ளும் அந்தணரும் வேளாளரும் போல இடையிரு வகையோரும் பயின்றிலரெனினும் சிறப்பிலராகாரென்பது.

இனி, கடைச்சங்கத்தார் அறுநூற்றிருபத்தைந்தடியும் பயின்று வரச் செய்யுள் செய்திலராலெனின், கட்டளையடியாற் செய்த வல்லன வேண்டாவென்பதோர் ஆணையுடைமையினரல்லர், உடையவரும் இவ் வாசிரியனாற் சிறப்புடைத்தென்று சொல்லப்பட்ட அளவடியாற் செய்யுள்

1. வடநூலாசிரியர் கருத்து இங்கு வேண்டுவதில்லை.

செய்தாரென்பது. இனி, பிற்காலத்தார் அளவடியாற் பயின்று வரச் செய்யுள் செய்திலரென்று கடைச்சங்கத்தார் செய்யுள் செய்த அடியுஞ் சிறப்பிலவாமோ வென்பது. வஞ்சியடிக்கும் இங்ஙனம் வரையறை யின்மையதொக்கும். அது முன்னர்ச் சொல்லுதும். (51)

நச்சினார்க்கினியர்

51. ஆங்ஙனம் .... காலை.

இஃது, ஒழிந்த நான்கடியையும் நாற்சீரடிபோல வுறழ்க என்பார்க்கு அவை யுறழாமைக்குக் காரணங் கூறுகின்றது.

(இ-ள்) ஆங்ஙனம் விரிப்பின் அளவிறந்தனவே - அந் நாற்சீரடி போல மற்றை நான்கடியினையும் விரிப்பின் அவை இலக்கணம் கூறுதற்கு வரையறைப்படாது எண்ணிறந்தனவாம்; பாங்குற உணர்ந்தோர் பன்னுங்காலை - பகுதியுற அறிந்தோர் விரிக்கும் காலத்து எ-று.

முதனூலாசிரியர் சிறப்புடையனவற்றிற்கும் சிறப்பில்லனவற்றிற்கும் ஒருங்கிலக்கணம் கூறின் அவை யொத்த விலக்கணத்தவாமென்று கருதி வரையறைப்படுவனவற்றிற்கே இலக்கணங் கூறி வரையறையின்றிப் பரந்தனவற்றிற்கு இலக்கணங் கூறிற்றிலர். அவர் கருத்து நோக்கி இவ் வாசிரியரும் யாமும் அவ்வாறே கூறினேமென்று கூறியதாயிற்று இதன் கருத்து: ஆயின் சிறப்புடைய கட்டளையடி சான்றோர் செய்யுளுட் பயின்று வரல் வேண்டும் பிறவெனின்; இந் நூல் செய்த காலத்தில் தலைச் சங்கத்தாரும் இடைச்சங்கத்தாருங் கட்டளையடி பயின்று வரச் செய்யுள் செய்தார் என்பது இச் சூத்திரங்களாற் பெறுதும். பின்பு கடைச் சங்கத்தார்க்கு அஃதரிதாதலிற் சீர்வகையடி பயிலச் செய்யுள் செய்தாரென் றுணர்க. இக்காலத்தார் அளவடியாற் செய்யுள் செய்திலரென்று கடைச் சங்கத்தார் செய்த அளவடி சிறப்பின்றாகாததுபோல அதுவும் கொள்க.

வஞ்சிக்கு வரையறைப்படும்படி 'குறளடி முதலா' (செய். 57) என்பதனுட் கூறுதும். (51)

சிவலிங்கனார்

ஆங்ஙனம் .... காலை.

(இ-ள்) நெடிலடியும் கழிநெடிலடிகளும் அளவடியைப் போல எண்ணி விரிப்பின் அளவுகடந்தனவாம்; இலக்கணம் உணர்ந்தோர் விவரிக்குமிடத்து, எ-று.

ஆசிரியப்பாவுக்குரிய அடி

359. ஐவகை அடியும் ஆசிரியக் குரிய. (50)

இலக்குவனார்

364. The five kinds of lines belong to *asiriyam*.

இளம்பூரணர்

359. ஐவகை அடியும் .... குரிய.

என்-னின், ஆசிரியப்பா நாற்சீரான் வரும் என்பதூஉம் அதன்கண் விரிக்கப்பட்ட ஐவகையடியும் உரித்தென்பதூஉம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) நாற்சீரடிக்கண் வகுக்கப்பட்ட ஐவகையடியும் ஆசிரியப் பாவிற் குரிய என்றவாறு.

ஐவகை யடியு முரியவென, அவற்றிற்கு முதலாகிய நாற்சீரடியும் உரித்தாயிற்று.

(உ-ம்)"தேர்ந்து தேர்ந்து சார்ந்து சார்ந்து
நேர்ந்து வாமனை நினையின்
சேர்ந்த வல்வினை தேய்ந்தக லும்மே."

இதன்கண் முதலடி நாலெழுத்தான் வந்தவாறு காண்க.

"குன்று கொண்டு நின்ற மாடு
பொன்ற வந்த மாரி
சென்று காத்த திறலடி தொழுமே.

இதன்கண் முதலடி ஐந்தெழுத்தான் வந்தது.

"ஆறு சூடி நீறு பூசி
ஏறும் ஏறும் இறைவனைக்
கூறு நெஞ்சே குறையிலை நினக்கே."

இதன்கண் முதலடி ஆறெழுத்தான் வந்தது.[1]

"போது சாந்தம் பொற்ப வேந்தி
யாதி நாதர்ச் சேர்வோர்
சோதி வானந் துன்னு வோரே" **(யா.வி. 49)**

என்பது முதலடி ஏழெழுத்தான் வந்தது.

"தன்தோள் நான்கின் ஒன்று கைம்மிகூஉங்
களிறுவளர் பெருங்கா டாயினும்
ஒளிபெரிது சிறந்தன் றளியஎன் நெஞ்சே."

இது முதலடி எட்டெழுத்தான் வந்தது.

---

1. இதுவரை குறளடி (4, 5, 6 எழுத்துடையன)

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி" (குறுந். 2)

என்பது ஒன்பதெழுத்தான் வந்தது.[1]

"காமம் செப்பாது கண்டன மொழிமோ" (குறுந். 2)

என்பது பத்தெழுத்தான் வந்தது.

"தாமரை புரையுங் காமர் சேவடி" (குறுந்.கடவுள்வாழ்த்து)

என்பது பதினோ ரெழுத்தான் வந்தது.

"நாயுடை முதுநீர்க் கலித்த தாமரை" (அகம். 61)

என்பது பன்னிரண்டெழுத்தான் வந்தது.

"அகலிரு விசும்பிற் பாயிருள் பருகி" (பெருபாண். 1)

என்பது பதின்மூன்றெழுத்தான் வந்தது.

"யாவரும் விழையும் பொலந்தொடிப் புதல்வனை" (அகம். 16)

என்பது பதினாலெழுத்தான் வந்தது.[2]

"ஏற்றுவலன் உயரிய எரிமருள் அவிர்சடை" (புறம். 16)

என்பது பதினைந்தெழுத்தான் வந்தது.

"விரிதிரைப் பெருங்கடல் வளைஇய உலகமும்" (குறுந். 101)

என்பது பதினாறெழுத்தான் வந்தது.

"தேன்தூங்கும் உயர்சிமைய மலைநாறிய வியன்ஞாலம்" (மதுரைக். 3)

என்பது பதினேழெழுத்தான் வந்தது.[3]

"கடுஞ்சினத்த கொல்களிறும் கதழ்பரிய கலிமாவும்" (புறம். 55)

என்பது பதினெட்டெழுத்தான் வந்தது.

"நெடுங்கொடி நிமிர்தேரும் நெஞ்சுடைய புகல்மறவரும்" (புறம். 55)

என்பது பத்தொன்பதெழுத்தான் வந்தது.

"அமர்காணின் அமர்கடந்தவர் படைவிலக்கி எதிர்நிற்றலின்" (புறம். 167)

என்பது இருபதெழுத்தான் வந்தது.[4] (50)

---

1. இதுவரை சிந்தடி (7, 8, 9 எழுத்துகள்)
2. இதுவரை அளவடி (10, 11, 12, 13, 14 எழுத்துகள்)
3. இதுவரை நெடிலடி (15,16,17 எழுத்துகள்)
4. இதுவரை கழிநெடிலடி (18,19,20 எழுத்துகள்)

பேராசிரியர்

364. ஐவகை யடியு .... குரிய.

இஃது, எய்தாதது எய்துவித்தது, மேல் வகுக்கப்பட்ட அடியினை இன்ன பாவிற்குரிய அடி இவையென்று கூறாதான் அது கூறினமையின்.

(இ-ள்) நாலெழுத்து முதலாக இருபதெழுத்தின்காறும் உயர்ந்த பதினேழ்நிலனும் ஆசிரியத்திற்குரிய என்றவாறு.

"மெய்வகை யமைந்த பதினேழ் நிலத்த..........
அறுநூற் றிருபத் தைந்தா கும்மே" **(362)**

என்றான், அதனை ஈண்டுப் போதந்து ஆசிரியத்திற்கு எய்துவித்தவாறு. அவற்றுக்குச் செய்யுள் ஐந்தடியும் கூறியவழிக் காட்டப்பட்டது. மற்று,

"மெய்வகை யமைந்த பதினேழ் நிலத்தும்" **(362)**

எனவே இதுவும் அடங்காதோவெனின், அடங்காது; பாத் தோன்றும் அந் நிலங்கள் பகுத்துக்கொள்ளப் பொதுவகையால் ஆண்டோதினா னென்பது. மற்று ஐவகையடியும் ஓராசிரியத்துக்கண் வரல் வேண்டுமோ வெனின், அன்னதோர் வரையறையுண்டே? வரையாது கூறினமையின் அவை யெல்லாவற்றானும் வருக; வருங்கால் ஐந்தும் ஆசிரியத்துக்கு உரியவென்பதே கருத்து. ஒழிந்த பாவிற்கு நிலங் கூறாரோவெனின், ஆசிரியம் பதினேழ் நிலனுமுடைமையின் அக் கூறிய பதினேழ் நிலனுந் தளை விரவுதலின் தளை அதற்குப் பின் கூறித் தளையதிகாரம் பட்டமையின் அவற்றுப்பின் ஒழிந்த பாவிற்கு நிலனுங் கூறுமென்பது.

மற்று ஆசிரியமென்பது மகரவீறாதலின்,

"மஃகான் புள்ளிமுன் னத்தே சாரியை" **(தொல்.எழுத்து.185)**

என்பதனான், அத்துச்சாரியை பெறல் வேண்டுமெனின், அது செய்யுள் விகார மென்பாருமுளர்; அற்றன்று; ஆண்டு நின்றது நான்காமுருபாயி னன்றே அது கடாவாவது; அதனை ஏழாவதன் பொருண்மைக்கண் அக்குச்சாரியை ஈறு திரியாது வந்ததென்று கொள்ளப்படும். (52)

நச்சினார்க்கினியர்

52. ஐவகை யடியும் .... குரிய.

இது, முன்னர்க் கூறிய கட்டளையடி இன்ன பாவிற்கு உரிய என்கிறது.

(இ-ள்) நாலெழுத்து முதல் இருபதெழுத்தின்காறும் உயர்ந்த பதினேழ் நிலனும் ஆசிரியப்பாவிற்குரித்து எ-று..

எனவே, தளைவழுவின்றி இருபத்தேழ் சீரான் வந்த முந்நூற் றிருபத்து நான்கடியும் ஆசிரியத்திற்கு உரித்து எ-று.

முன்னர்ப் பொதுவாக வோதியதனை யீண்டுப் பகுத்தார்.

(எ-டு)'பேர்ந்து பேர்ந்து சென்று சென்று'

என்பது.

இவ்வாறு ஓராசிரியத்துக்கண் ஐந்தடியுங் கூறின முறையே நிற்க வேண்டுமென வோதினமையின் எவ்வாற்றானும் அவ் வைந்தும் ஆசிரியத்துக்கண் வருதற்குரிய வென்பதே ஆசிரியர்க்குக் கருத்தாயிற்று. இக் கருத்தானன்றே 'பேர்ந்து சென்று' என்ற உதாரணத்து ஈரடிக் கூட்டத்துத் தளைவழுப் பலவும் வருவதாயிற்று. (52)

சிவலிங்கனார்

ஐவகை யடியு .... குரிய.

(இ-ள்) குறளடி முதலாக நெடிலடி யிறுதியாகவுள்ள ஐவகை யடியும் ஆசிரியப்பாவுக்குரியன, எ-று.

360. விராஅய் வரினும் ஒரூஉநிலை இலவே. (51)

இலக்குவனார்

365. Even if it occurs in mixed form it is not avoided.

இளம்பூரணர்

360. விராஅய் வரினும் .... இலவே.

என்-னின், மேற்சொல்லப்பட்ட அடி விரவி வருமாறு வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட ஐந்தடியுந் தனித்தனி ஆசிரியப்பாவிற் குரித்தாகி வருதலே யன்றி விரவிவரினும் நீக்கப்படாது என்றவாறு.

'ஒரூஉநிலை' என்றதனால் தனித்தனி வரினும் விரவிவரினும் ஒக்கும் என்று கொள்க.

(உ-ம்)"செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பின் செங்கோட் டியானைக்
கழறொடிச் சேய குன்றங்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே." (குறுந். 1)

இதனுட் பலவடியும் வந்தவாறு காண்க.[1] (51)

முதலடி பதினோரெழுத்து வந்த அளவடி,
இரண்டாமடி ஒன்பதெழுத்து வந்த சிந்தடி,
நான்காமடி பத்தெழுத்து வந்த அளவடி

பேராசிரியர்

365. விராஅய் வரினும் .... இலவே.

இஃது, எய்தியது இகந்துபடாமைக் காக்கின்றது: 'மெய்வகை யமைந்த பதினேழ் நிலம்' எனவும், 'எழுபது வகையின் வழு' எனவும் மேனிறுத்த (362) முறையானே ஆசிரியத்திற்குப் பதினேழ் நிலமாமாறு கூறினான். இனி, எழுபது வகையின் வழுவாயின அப் பதினேழ்நிலத்து யாண்டுமாகாதென்பது பட்டதனை இகந்துபடாமைக் கூறினமையின்.

(இ-ள்) தளை விரவிவரினும் ஒருவப்படா(து) என்றவாறு.

மற்றிதனைத் தளை விரவிவரினுங் கட்டளையடியாமெனப் புறனடுத்தானென்று கோடுமோ, தளைவிரவிற் கட்டளையடி யாகாதென்று கோடுமோவெனின், தளை மயங்காதனவே தளைவகை யடியெனவும் அல்லன கட்டளையடி யாகாவெனவும் கோடுமென்பது. அஃதேல், தளை மயங்கின அடிக்கும் பதினேழ் நிலனுங் கோடுமோவெனின், கோடுமன்றே? 'விராய்வரினும்' என்ற உம்மை, இறந்தது தழீஇயிற் றாகலினென்பது. (53)

நச்சினார்க்கினியர்

53. விராஅய் வரினும் .... யிலவே.

இஃது, எய்தியது இகந்துபடாமைக் காத்தது, தளைவழுவியதியாது மாகாதோவென்று கருதி யதனைச் சீர்வகையடியாமென்றலின்.

(இ-ள்) ஆசிரியம் இருபத்துமூன்று தளையிற் சில வழுவினும் முற்கூறிய பதினேழ் நிலத்தினொன்று குறைந்து பதினாறு நிலத்தினீங்கி வாரா எ-று.

உம்மை இறந்தது தழீஇயிற்றாகலான் ஓரடிக்கட்டளை வழுப்பட வரினும் அவை கட்டளையாகாமற் சீர்வகையடியாய் ஐந்தெழுத்து முதல் இருபதெழுத்தளவும் வரும் என்றவாறு. அது சான்றோர் செய்யுளில் வந்துழிக் காண்க. (53)

சிவலிங்கனார்

விராஅய் .... யிலவே.

(இ-ள்) மேற்கூறப்பட்ட குறளடி முதலியன ஆசிரியப்பாவில் பிற தளை விரவிவரினும் நீக்கும் நிலைமையில்லை, எ-று.

தளைமரபு

361. *தன்சீர் வகையினுந் தளைநிலை வகையினும்
இன்சீர் வகையின் ஐந்தடிக்கும் உரிய
தன்சீ ருள்வழித் தளைவகை வேண்டா. (52)

இலக்குவனார்

366. In its feet and *thaḷai,* it belongs to all five lines of sweet feet.

367. When its own feet occur, the nature of *thaḷai* is not taken into account.

இளம்பூரணர்

361. தன்சீர் வகையினுந் .... வேண்டா.

என்-னின், இத்துணையும் அடியும் அடிக்குரிய எழுத்துகளும் ஓதினார்; இனி அவ் வடிக்கண் ஓசை வேறுபாடுந் தளையிலக்கணமு முணர்த்துவார் அத் தளைக்கண் வருவதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தத்தஞ் சீர்நிலை வகையானுந் தளைநிலை வகையானும் இனிய ஓசைவேறுபாட்டினையுடைய ஐந்தடிக்குமுரிய தன் சீருள்வழித் தளைவேறுபாடு கோடல் வேண்டா என்றவாறு.

எனவே சீர்தானே ஓசையைத் தரும் என்றவாறாம்.

உரிய தன்சீர் என்றது ஐந்தடியினும் ஏற்றவழி நிலைபெறுந் தன் சீரென்று கொள்க. அஃதாவது குறளடியாகிய ஐந்தெழுத்தினும் ஆறெழுத்தினும் ஓரசைச்சீரும் ஈரசைச்சீரும் வருதலன்றி மூவசைச்சீர் வாராமை. பிறவாசிரியர் கொண்ட நேரொன்றாசிரியத்தளை, நிரையொன் றாசிரியத்தளை, இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, **கலித் தளை,** ஒன்றியவஞ்சித்தளை, ஒன்றாவஞ்சித்தளை என எழுவகையினும் **வஞ்சித்**தளை நிலைமொழி வஞ்சியுரிச்சீராக வருஞ்சீர்க்கு முதலசையோடு **ஒன்றியது** ஒன்றியவஞ்சித்தளை எனவும் ஒன்றாதது ஒன்றாவஞ்சித்தளை எனவும் வழங்குபவாதலின் அவ் விருவாற்றானும் தளையாற் பயனின்றி நிலைமொழியாகிய வஞ்சியுரிச்சீர் தானே ஓசையுணர்த்துதலின், வஞ்சித்தளை கோடல் வேண்டாராயினார். இனி, வெண்சீர் வெண்டளையும் வெண்சீர் நிற்ப வருஞ்சீர் வெள்ளையும் வெண்சீராதல் இயற்சீராதல் வந்து வெண்டளையாக வேண்டுதலின் நிலைமொழியாகிய வெண்சீரை

---

* முதல் இரண்டடியும் ஒரு சூத்திரமாகவும் மூன்றாமடி ஒரு சூத்திரமாகவும் கொள்வர் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும்

"வெண்சீ ரீற்றசை நிரையசை யியற்றே" (செய்.28) என ஓதுதலின், அதனை நிரையீற் றியற்சீர் ஆக்கினால் வருஞ்சீர் நேர்முத லியற்சீராயின் அதுவும் இயற்சீர் வெண்டளையாம்.

அவ்வாறன்றி வருமொழியும் வெண்சீராயின் 'தன்சீருள் வழித் தளைவகை வேண்டா' என்பதனான் அடங்கும். அதனான் இருவாற்றானும் வெண்சீர் வெண்டளை கொள்ளாராயினார். இனி ஒழிந்த நான்கு தளையுங் கூறுகின்றாராயின் ஆசிரியத்தளையுங் கூறல் வேண்டா அதுவும் இயற்சீரான் வருதலின் எனின், அதன்கண்ணே இயற்சீர் வெண்டளை கூற வேண்டுதலின் ஆசிரியத்தளையுங் கூறவேண்டு மென்க. (52)

பேராசிரியர்

366. தன்சீர் வகையினுந் .... முரிய.

இஃது, எய்தாதது எய்துவித்தது, என்னை? இயற்சீராற் கட்டளை யடியாமாறெல்லாம்,

"ஐவகை யடியு மாசிரியக் குரிய" (364)

என்னுந் துணையுங் கூறிப் பின்னும்,

"விராய் வரினு மொரூஉநிலை யிலவே" (365)

எனக் கட்டளையடியன்றியும் அளவடி வருமெனவும் அவை பதினேழ் நிலத்தவெனவுங் கூறி, இனி, உரிச்சீரானுஞ் சீர்வகையடி உளவென்பதூஉம், அவையும் பதினேழ் நிலத்தின் இகந்து வாராவென்பதூஉங் கூறுகின்றமையின்.

(இ-ள்) தன்சீர் வகையினும் - ஆசிரிய வுரிச்சீரானும்; அதனை அதிகாரத்தாற்[1] கொள்ளப்படும்; தளைநிலை வகையினும் - அவ் வாசிரிய வுரிச்சீரானாகிய தளைநிலைமைப் பகுதியானும்; இன்சீர் வகையினும்- இன்சீர்ப் பகுதியானும், ஐந்தடிக்குமுரிய - அவையும் மேற்கூறிய ஐவகையடிக்கும் உரியவாம் என்றவாறு.

'ஐந்தடிக்கு முரிய' எனவே பதினேழ் நிலத்தின் இகந்து வாரா வென்பதாம். தன்சீரென்னாது 'வகை' என்றது அவற்றை இருபகுதியானே,

"முன்னிரை யுறினு மன்ன வாகும்" (326)

என்றதும்,

"வெண்பா வுரிச்சீ ராசிரிய வுரிச்சீர்" (335)

என்புழி உடன்கூறாது கூறிய வேறுபாடு நோக்கி யென்பது. அதனது பயம்: வருகின்ற தளைவகைக்காயின் ஆசிரிய வுரிச்சீராறுந் தளை

1. முன் சூத்திரம் ஆசிரியம்பற்றியதாதலின் அவ் வதிகாரத் தொடர்பால்.

கொள்ளப்படா, முன்னிரையீற்ற இரண்டு மல்லதென்றவாறு. தளைநிலை வகை சிறப்புடைமையின் அது முற்கூறுகவெனின், அங்ஙனமாயினும் அறுவகைச் சீரானுஞ் சீர்வகை யடிவருதல் பெரும்பான்மையாகலானும், அவற்றுள்ளும் நீடுகொடி குளிறுபுலி என்னும் இரண்டுமேபற்றித் தளைகோடல் சிறுபான்மை நோக்கியுந் 'தன்சீர்வகை' முற்கூறப்பட்டது. அல்லதூஉந் 'தளைநிலை வகை' முற்கூறின் மேற்கூறிய வியற்சீர்த் தளைமேற் செல்லும். அவ்வாறன்றித் தன்சீர்த் தளையே கோடற்கும் அது பிற்கூறினா னென்பது. மற்றுத் தன்சீரானாவதனை இன்சீர் வகையொடு ஐந்தடிக்கு முரித்தென்ற தென்னையெனின், ஆசிரியவுரிச்சீர் நான்கும் நிரலே நின்றுழி அகவலோசை பிறவாதென்பது அறிவித்தற் கென்பது. எனவே, ஒன்றிடையிட்டும் இரண்டிடையிட்டும் இன்சீர் வரல் வேண்டுவதாம்.

'இன்சீர் வகையின்' என இயற்சீர்களான் உரிச்சீர்களை வகுத்து நிறீஇக் கொள்ளப்படும்.

(உ-ம்) "ஓங்குகோட்டுத்[1] தொடுத்த பாம்புபுரை யருவி"

எனவும்,

"நிவந்துதோன்று களிற்றி னிலங்குகோடு புரைய"

எனவும் இவை இயற்சீரொன்று இடையிட்ட ஆசிரியவுரிச்சீரான் வந்த நேரடி.

"பாம்புமணி யுமிழும் பானா[2] ளீங்குவரல்"

என்பது, இயற்சீரிரண்டு இடையிட்டு வந்தது. இதுவும்,

"அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி (323)

என்பதனான் அகவலோசை வழுவினவாறு அறிந்துகொள்க.

இனி, தன்சீரால் தளைநிலையடி வருமாறு:

"ஓங்குமலைப் பெருவிற் பாம்புஞாண் கொளீஇ" (புறம்.55)

எனவும்,

"உவவுமதி யுருவி னோங்ககால் வெண்குடை" (புறம்.3)

எனவும் வரும்.

---

1. ஓங்குகோட்டு, பாம்புபுரை - ஆசிரியவுரிச்சீர்கள் தொடுத்த இயற்சீர். நிவந்துதோன்று, இலங்குகோடு - ஆசிரிய உரிச்சீர். களிற்றின் - இயற்சீர்

2. உமிழும், பானாள் - இயற்சீர்கள்

3. மாமுன் நேரும் விளமுன் நிரையும் வாராமல் மாமுன் நிரையும் விளமுன் நேரும் வந்தமையின் அகவல் ஓசை வழுவியது.

தளைவகை யென்னாது 'நிலை' என்றதனான் அவற்று இரண்டு ஆசிரியவுரிச்சீரும் அடிமுதற்கணின்று சீராவதன்றி இடைவாரா வென்பது கொள்க. தளைநிலை யென்னாது 'வகை' என்ற தென்னையெனின், உரிச்சீரால் தளைவழங்கின் ஓரடிக்கண் இரண்டுவரின் ஓசையுண்ணா தென்பது உணர்வித்தற்கென்பது. இவையும் இன்சீர் வகையொடு வருமெனவே தன்சீர் இயற்சீரொடு தட்குமென்பதாகும்; அஃதேல்,

"தன்சீ ருள்வழித் தளைவகை வேண்டா" **(367)**

என வருகின்ற சூத்திரத்தானே தன்சீர் பெறுதுமாகலின், ஈண்டுத் தளைநிலை வகையே கூறுகவெனின், இஃது ஆசிரியத்திற்குக் கூறினான்; அது வெண்பாவிற்குக் கூறினான், அல்லாக்கால், அது மிகையாமென்பது. எனவே, தன்சீர் வகை நாலெழுத்திற்கு உரித்தன்றென்றூஉம், தளைவகை யடி, குறளடி முதன் மூன்று நிலத்திற்கும் உரித்தென்பதூஉம் உரையிற் கொள்க.

"ஓங்கு கோட்டுமீது பாய்ந்து பாய்ந்து
முசுக்கலை யாடு நாடற்
குரைப்பதை யெவன்கொனந் தோளே தோழீஇ"

என்பது, ஐந்தெழுத்தால் தன்சீரடி வந்தது.

"ஆடுகொடி நுடங்கு காடு போந்து
விளங்கிழை கோயிற் சேர்ந்தனம்
முழங்குக வானந் தழங்குகுரல் சிறந்தே"

என்பது, ஏழெழுத்தால் தளைநிலையடி வந்தது. பிறவும் அன்ன.

இன்சீ ரென்னாது 'வகை' என்றதனான் இயற்சீர்ப்பாற்படுத்து இயற்றிக்கொள்ளப்பட்ட அசைச்சீரும் (340) இன்சீரேயாம்; தன்சீர் வகையினுந் தளைநிலைவகையினும் இடையிட்டு வந்ததென்பது. இவை மேற்காட்டியவற்றுட் காணப்படும். (54)

367. தன்சீ ருள்வழித் .... வேண்டா.

இது, மேல் ஆசிரியத்திற்குத் தன்சீர்வகையுந் தன்றளை வகையுங் கூறிய வழியானே வெண்பாவிற்குச் சீர்வகையுந் தளைவகையுங் கூறுகின்றது.

(இ-ள்) தன்சீர் - வெண்சீர்; உள்வழி - வெண்சீரே வருஞ்சீராகியும் வந்தவழி; என்னை? தளைவகைக்கு இரண்டுசீர் வேண்டுதலானுந் தளை வகை வேண்டாத நிலம் இது வென்கின்றானாகலானு மென்பது; தளை வகை வேண்டா - தளைவகை நிலைமை கொள்ளப்படா மற்றவ்வடிக் கண் என்றவாறு.

எனவே, வெண்சீர் நிற்ப இயற்சீர் வந்தொன்றின் வெண்டளையா மென்பதே கருத்தாயிற்று. இஃது உய்த்துக்கொண்டுணர்தலென்னும் உத்திவகை. இதனானே வெண்சீர்க்கு வெண்சீரே வந்தொன்றுவது கட்டளையடியெனப்படாது சீர்வகையடியா மென்பது பெற்றாம்.

"வெண்சீ ரொன்றின் வெண்டளை கொளாஅல்"

"வெண்சீ ரொன்றினும் வெண்டளை யாகு
மின்சீர் விரவிய காலை யான"

என்றார் காக்கைபாடினியாரும்.

வெண்சீ ரொன்றியது வெண்டளையாகாதென்றற்குக் காரண மென்னையெனின்,

"அளவுஞ் சிந்தும் வெள்ளைக் குரிய
தளைவகை யொன்றாத் தன்மை யான" **(370)**

என்புழி, அளவுஞ் சிந்தும் அல்லாத வேறிய நிலமெல்லாம் வெண்பாவுங் கலிப்பாவுந் தம்மில் தளைவகை யொக்கு மென்றானாகலினென்பது. எனவே, வெண்சீர் நான்கும் ஒன்றிவரின் அது கலிப்பாவிற்குஞ் சீர்வகையடியாவதாயிற்று.

மற்றும், வஞ்சியுரிச்சீருந் தன்சீராகலின் இன்னவாறு தளை கொள்ளு மென்றானோவெனின், அவை தன் சீருள்வழி ஒன்றினும் ஒன்றாவாயினும், பிறசீர் வந்துழி ஒன்றினும் ஒன்றாவாயினும் வஞ்சித் தளையாகி வரையறையின்மையானும் வஞ்சியடி அறுநூற்றிருபத்தைந் தடியுட் படாமையானும் அவை கூறானாயினான் ஆசிரியனென்பது. (55)

நச்சினார்க்கினியர்

54. தன்சீர் வகையினுந் .... உரிய.

இஃது, எய்தாத தெய்துவித்தது; உரிச்சீராற் சீர்வகையடியும் உரிச்சீராற் றளைவகையடியும் உள, அவையும் முற்கூறிய ஐவகை நிலனும் பெறுமென்றலின். தன்சீரெனவே அதிகாரத்தான் ஆசிரிய வுரிச்சீராயிற்று.

(இ-ள்) தன்சீர் வகையினும் - ஆசிரிய உரிச்சீரின் கூற்றானும், தளைநிலை வகையினும் - அச் சீரானாய தளைநிலைக் கூற்றானும், இன்சீர் வகையின் ஐந்தடிக்கும் உரிய - இன்சீர்ப் பகுதியோடே அவ் வாசிரியம் முற்கூறிய ஐவகை அடியான் வந்து பதினேழ் நிலத்தின் இகந்து வாரா எ-று.

தன்சீரென்னாது வகையென்றது முன் னிரையீற்ற விரண்டினையுந் தளைகொள்ளுமென்றற்கும், ஏனை நான்குரிச்சீருந் தளைகொள்ளா வென்றற்கும். தளைநிலவகை யென்றது உரிச்சீரால் தளைவருங்கால் ஓரடியின் இரண்டு வரின் ஓசையுண்ணாதென்றற்கு. இன்சீர் வகையின் என்றது ஆசிரியவுரிச்சீர் நான்கு நிரலே நின்றுழித் தூங்கலோசை பிறத்தலின் இயற்சீர்கள் ஒன்றிடையிட்டு வரவேண்டும் சீர்வகைக் கென்பதூஉம், அதற்கும் இன்னோசை மிகவு மின்றென்பதூஉம் முன் னிரையீற்ற விரண்டும் இடையில் வாராது அடி முதற்கண்ணே வந்து

இயற்சீரோடு தட்டு இன்னோசைத்தா மென்பதூஉம், அசை யோரடிக் கிரண்டு வந்து தட்டாலும் இன்னோசைத்தாமென்பதூஉம் அறிவித்தற்கு.

(எ-டு)"ஓங்குகோட்டுத் தொடுத்த பாம்புபுரை யருவி
நிவந்துதோன்று களிற்றி னிலங்குகோடு புரைய"

இவை இயற்சீரொன் றிடையிட்டு உரிச்சீரான் வந்தன.

"பாம்புமணி யுமிழும் பானாள் ஈங்குவரல்"

இஃது இரண்டிடையிட்டது.

"ஓங்குமலைப் பெருவிற் பாம்புநாண் கொளீஇ" (புறம்.55)

"உவவுமதி யுருவின் ஓங்கல் வெண்குடை" (புறம்.3)

இவை தளைநிலைவகையான் வருதலாற் கட்டளையாய் இன்னோசை பெற்றன.

இனி ஐந்தெழுத்து முதலாத் தன்சீர்வகை வருதலும் தளைவகை யேழெழுத்து முதலாக வருதலும் உரையிற் கொள்க.

அவை:
"ஓங்கு கோட்டுமீது பாய்ந்து பாய்ந்து
முசுக்கலை யாடு நாடற்
குரைப்பதை யெவன்கொனந் தோளே தோழி"

இஃது ஐந்தெழுத்தாற் றன்சீரடி வந்தது.

"ஆடுகொடி நுடங்கு காடு போந்து
விளங்கிழை நகர்வயிற் சேர்ந்தன
முழங்குக வானந் தழங்குகுரல் சிறந்தே"

இஃது ஏழெழுத்தாற் றளைநிலையடி வந்தது.

'வகை' யென்றதனான் இயற்சீர்ப் பாற்படுத்திய அசைச்சீர் இன்சீராய்த் தன்சீர்வகையினுந் தளைநிலை வகையினும் வரும். இஃது இருவகையடிக்கு மிலக்கணங் கூறிற்று. (54)

55. தன்சீர் உள்வழித் .... வேண்டா.

இது, முன் ஆசிரியத்திற்குச் சீர்வகையுந் தளைவகையுந் கூறிய முறையே வெண்பாவிற்கும் அவ் விரண்டுங் கூறுகின்றது.

(இ-ள்) வெண்சீர் நிற்ப வெண்சீர் வந்தொன்றிய வெண்டளை கட்டளை வெண்பாவிற்கு வேண்டா எ-று.

எனவே, வெண்சீர் நிற்ப வெண்சீர் வந்தொன்றிய வெண்டளை கட்டளைக்கலிக்கு ஈரடிக் கூட்டத்துத் தொடைகொள்வழி வேண்டும் என்று கொள்க. இது தொடை கொள்வழிக் காண்க.

தன்சீரென்றது வெண்சீரை; உள்வழியென்றது அவ் வெண்சீரே வருஞ்சீராயவழி யென்றவாறு; எனவே வெண்சீர் நிற்ப இயற்சீர் வந்தொன்றிய வெண்டளை வேண்டும் என்றவாறாயிற்று; இஃது நுதலிய தறிதற்பாற்படும்.

"வெண்சீ ரொன்றின் வெண்டளை கொளாஅல்"

"வெண்சீ ரொன்றினும் வெண்டளை யாகு
மின்சீர் விரவிய காலை யான"

என்றார் காக்கைபாடினியார்.

இது தளைகொள்ளாமைக்குக் காரணம் 'அளவுஞ் சிந்தும்' (செய்.58) என்னுஞ் சூத்திரத்துட் கூறுதும். (55)

சிவலிங்கனார்

தன்சீர் .... உரிய.

(இ-ள்) இனிய ஓசைவகையான் ஒவ்வொரு பாவிலும் தன்சீர் வகையானும் தன்தளைவகையானும் குறள், சிந்து, அளவு, நெடில், கழி நெடில் எனும் ஐந்தடிக்கும் உரியனவுரியவாம், எ-று.

அதாவது வெண்பா முதலிய நான்கு பாவிலும் வரும் ஐந்து வகையான அடிகளும் அவ்வப் பாவுக்குரிய தன்சீரும் தன்தளையும் உரியவாம் என்றவாறு.

தன்சீர் .... வேண்டா.

(இ-ள்) ஒவ்வொரு பாவுக்கும் தன்சீர் உள்வழித் தன்தளை வகை கூறவேண்டா என்றவாறு.

வெண்பாவுக்குத் தன்சீரான காய்ச்சீரே வரும்வழி அதற்கு வெண்டளை வகை கூற வேண்டா. வஞ்சிப்பாவுக்குக் கனிச்சீர் வருதலின் சீர் ஒன்றியதாயினும் ஒன்றாதாயினும் ஓசைகெடுதல் இல்லையாதலின் வஞ்சித்தளையும் கூற வேண்டா. எனவே வெண்சீர் வெண்டளையும் ஒன்றிய வஞ்சித்தளையும் ஒன்றா வஞ்சித்தளையும் சீர்களாலேயே ஓசை நிரப்பப்படுதலின் தளைவகை கூறவேண்டுவ தில்லை.

இனி, ஆசிரியத்தளையில் நேரொன்றிய நிலையாகவோ நிரை யொன்றிய நிலையாகவோ வரின் அவற்றானே ஆசிரிய ஓசை நிரப்பப் படலின் அதற்கும் தளை கூற வேண்டுவதில்லை. ஆனால் மாமுன்

நிரையும் விளமுன் நேருமாக ஆசிரியச்சீர் சேர்ந்துவரின் தளை வெண்டளையாகிவிடுமாதலின் ஆசிரியப்பாவுக்குத் தளைவகை கூறியாக வேண்டும். இவ்வகையில் சீர் மாறிவருவது வெண்பாத்தளை என ஒதுக்க வேண்டும்.

இனிக் காய்ச்சீர்முன் நிரைவரின் அது கலித்தளையாம். கலிப்பாவுக்குச் சீர் தனித்தில்லாவிடினும் வெண்சீரே தனக்குரியதாக வருதலின் அதற்குத் தளைவகை இன்னதென்று கூறியேயாக வேண்டும்.

இவ்வகையில் பார்க்கும்போது, வெண்பா ஒன்றுமட்டும் தன் காய்ச்சீரான் வரின் தளை கூற வேண்டுவதில்லை என்பதும், வஞ்சிப்பாவுக்கும் சிறப்பாகத் தளை கூற வேண்டுவதில்லை என்பதும், ஆசிரியத்துக்கும் கலிக்கும் தளைவகை கூறியாக வேண்டும் என்பதும் பெறப்படும்.

ஆசிரியத்துக்கும் கலிக்கும் கூறியாக வேண்டும் என்பதால் மற்றைப் பாக்களுக்கும் தளைவகை கூறவேண்டுவதுமாயிற்று.

இச் சூத்திரத்துக்கு இவ்வாறு கூறுவதே சிறக்கும்.

ஆசிரியத்தளை

362. சீரியல்[1] மருங்கின் ஓசை யொப்பின்
ஆசிரியத் தளையென் றறியல் வேண்டும். (53)

இலக்குவனார்

368. It must be understood that in the course of occuring of feet if the same syllable is joined, it is '*thaḷai* of '*āsiriyam*'.

இளம்பூரணர்

362. சீரியல் மருங்கின் .... வேண்டும்.

என்-னின், ஆசிரியத்தளையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) சீர்கள் தம்முட் பொருந்தும்வழி நிலைமொழியாகிய இயற்சீரினீறும் வருமொழியாகிய சீரின் முதலசையும் நேராய் ஒன்றின் நேரொன்றாசிரியத் தளையாம்; நிரையாய் ஒன்றின் நிரையொன்றாசிரியத் தளையாம் என்றவாறு.

இரண்டசையும் ஆசிரியத்தளை என வேண்டுதலின் பொதுப்படக் கூறினார். அவ்வழி வருஞ்சீர் இயற்சீராயிற் சிறப்பின்றெனவுங் கொள்க.[2] (53)

1. சீரியை - பேரா. நச். பாடம்;
2. இத் தொடர் ஏற்புடைத்தன்று.

பேராசிரியர்

368. சீரியை மருங்கி .... வேண்டும்.

இது, கட்டளையடிக்கண் இயற்சீர் தட்குமாறுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இயற்சீர் பத்தும் பிறிதொன்றனோடு இயையுங்கால் அவை தத்தம் ஈற்றசை ஒன்றி, வருஞ்சீரின் முதலசையோ டொப்ப நிற்பின் ஆசிரியவடிக்குந் தட்கும் முறைமையென் றறியப்படும் என்றவாறு.

'ஒப்பி னாசிரியத் தளை' எனவே ஒவ்வாதொழியின் வெண்டளை யென்று எதிர்மறுத்துக் கொள்ளப்படும்; என்னை?

'எடுத்த மொழியினஞ் செப்பலு முரித்தே' (தொல்.சொல்.61)

என்றமையின்.

'அகலிரு விசும்பிற் பாயிருள் பருகி' (பெரும்பாண்.1)

என்றவழி, நேரும் நிரையும் சீரியை மருங்கின் ஓரசையொன்றி ஆசிரியத் தளையாயின.

'மல்லர்க் கடந்தா னிறம்போ லிருண்டெழுந்து' (ஐந்.ஐம்.1)

என்புழி முதலடி இயற்சீர் ஒன்றாது வெண்டளையாயிற்று.

மற்றுச் சீரியை மருங்கின் ஓரசையே வரினென்னாது 'ஒப்பின்' என்ற தென்னையெனின், உரியசை முதலும் ஈறுமாகியவழி அவை இயலசை யோடு ஒப்புமை நோக்கித் தளை கொள்ளினல்லது தம்மொடு தாம் ஒன்றுதல் கொள்ளாரென்றற்கென்பது இதனானும் பெற்றாம். போதுபூ என்பது வருஞ்சீராயவழிப் போரேறு என்பது ஓரசையொன்றிற்றென்று ஆசிரியத்தளையென்னாமை யென்பது. இஃது, அவை நின்ற சீராயவழி நிரையீறாகல் 'அறியல் வேண்டும்' என்னும் மிகையானுங் கொள்ளப் படும்; இனி, 'ஈரசையொப்பின்' என்பது, பாடமாக உரைப்பின் நேரும் நிரையும் ஒன்றினென்றவாறுமாமெனக் கொள்க. (56)

நச்சினார்க்கினியர்

56. சீரியை மருங்கின் .... வேண்டும்.

இது, கட்டளையடிக்கட் பத்தியற்சீருந் தட்குமாறு கூறுகின்றது.

(இ-ள்) இயற்சீர் பத்தும் பிறசீரோ டியையுங்கால் தத்தம் ஈற்றசை வருஞ்சீரின் முதலசையோடொன்றின் அஃது ஆசிரிய வடிக்குத் தட்கு முறைமை யென்றறியல் வேண்டும் எ-று.

ஒப்பினெனவே ஒவ்வாதது இயற்சீர் வெண்டளை யென்றெதிர் மறுத்துக் கொள்ளப்படும்.

(எ-டு)"அகலிரு விசும்பிற் பாயிருள் பருகி" (பெரும்பாண். 1)

என்றவழி நேரும் நிரையும் ஒன்றி நேரொன்றாசிரியத்தளை நிரையொன் றாசிரியத் தளையாயிற்று.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக" (குறள். 391)

என நேரும் நிரையும் ஒன்றாது இயற்சீர் வெண்டளையாயிற்று.

"நீத்துநீர்ப் பரப்பி னிவந்துசென் மான்றேர்"

என்புழி நீத்துநீர் என்பது நேர்புநேர் பாதிரிபோல நின்று பரப்பின் என்பதனோடு நிரையொன் றாசிரியத்தளையாயிற்று.

"சேற்றுக்கா னீலம்."

இது நேர்புநேர் பாதிரி[1]போல நின்று ஒன்றாது[2] இயற்சீர் வெண் டளையாயிற்று.

இனிக்

'காரேறு பொருத கண்ணகன் செறுவின்'

என்புழிக் காரேறு என்னும் நேர்நேர்பு பாதிரிபோல நின்று பொருத என்பதனோடு நிரையொன்றாசிரியத் தளையாயிற்று.

'வானூடு போய'

என நேர் நேர்பு ஒன்றாது இயற்சீர் வெண்டளையாயிற்று.

'வானிரைத்து மணந்து'

என நேர்நிரைபு பாதிரிபோல நின்று மணந்து என்பதனோடு நிரையொன் றாசிரியத் தளையாயிற்று.

'யானிருந்து தூங்கும்'

என நேர்நிரைபு ஒன்றாது இயற்சீர் வெண்டளையாயிற்று.

'வெயிலாடு முசுவின்'

---

1. பாதிரி - கூவிளம்

2. விளமுன் நிரை வாராமல் நீலம் என நேர் வந்தது. ஒன்றாதது பிறவும் இப்படியே காண்க.

என நிரைநேர்பு கணவிரிபோல நின்று முசு என்பதனோடு நிரையொன்றாசிரியத்தளையாயிற்று.

'வரையாடு வன்பறழ்'

என நிரைநேர்பு ஒன்றாமையின் இயற்சீர் வெண்டளையாயிற்று.

'கடலுடுத்து விசும்புசூடி'

என நிரைநிரைபு ஒன்றி நிரையொன் றாசிரியத்தளையாயிற்று.

'சிலைவிலங்கு நீள்புருவம்'

என நிரைநிரைபு ஒன்றாமையின் இயற்சீர் வெண்டளையாயிற்று என உரியசை மயங்கிய இயற்சீராறும் ஒன்றியும் ஒன்றாதும் வந்தன.

ஓரசைச் சீரிரண்டும் இயற்சீருமாய்த் தட்குமாறு முற்கூறினாம். (56)

சிவலிங்கனார்

சீரியல் ---------------- வேண்டும்.

(இ-ள்) ஆசிரியச்சீர்களாகிய இயற்சீர்கள் சேர்ந்து வருமிடத்து இறுதியும் முதலும் ஆன அசைகள் ஒன்றாயிருப்பின் அஃது ஆசிரியத்தளை என்றறிதல் வேண்டும், எ-று.

அதாவது மாச்சீர் முன் நேரசையாய் வரின் நேரொன்றாசிரியத் தளையாம்; விளச்சீர்முன் நிரையசையாய் வரின் நிரையொன்றாசிரியத் தளையாம்.

"விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கண்"

இதில் விளங்கிழை - கருவிளம்; இதன் முன் 'பகிர்' என நிரை வந்தது நிரையொன்றாசிரியத்தளை. பகிர்ந்த - புளிமா; இதன்முன் 'மெய்' என நேர் வந்தது நேரொன்றாசிரியத்தளை.

புறனடை

363. குறளடி முதலா அளவடி காறும்
உறழ்நிலை யிலவே வஞ்சிக் கென்ப. (54)

இலக்குவனார்

369. They say that the *vanji* has no variations from short line to standard line.

இளம்பூரணர்

363. குறளடி முதலா .... கென்ப.

என்-னின், மேலதற்கோர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) குறளடி முதலாக அளவடியளவும் வஞ்சியுரிச்சீர் வந்து உறழுநிலையில், இவ் வடிகள் இயற்சீரும் ஆசிரிய வுரிச்சீருமாம் என்றவாறு.

எனவே, பதினைந்தெழுத்து முதலாக நெடிலடியினுங் கழிநெடிலடியினு மெய் யுறழப்பெறுவ தென்றவாறாம். எடுத்தோத்துப் பெரும்பான்மை. அளவடிக்கண் வஞ்சியுரிச்சீர் மயங்குப வுளவேல் மேற்கொள்க. (54)

பேராசிரியர்

369. குறளடி முதலா வளவடி .... கென்ப.

இது, வஞ்சியடி யுறழுமாறும் அது பெறும் நிலனும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) நாலெழுத்து முதலாகப் பதினான்கெழுத்தளவும் உறழும் நிலையில வஞ்சியடிக்கு என்றவாறு.

இனி, முதலும் ஈறும் யாதெனப்படுமோவெனின்,

'தன்சீ ரெழுத்தின் சின்மை மூன்றே' (358)

என்றதனான் ஆறெழுத்தடி முதலாகவும்,

''நேர்நிலை வஞ்சிக் காறு மாகும்' (354)

என்றதனாற் பன்னிரண்டெழுத்தடி யீறாகவும் உறழுமென்றவாறு. எனவே, வஞ்சியடிக்கு நிலன் ஏழென்பது சொல்லியவாறு. அதுவே கருத்தெனின் இச் சூத்திரம் மிகையாம் பிறவெனின், அற்றன்று; வஞ்சியுரிச் சீர் மூன்றெழுத்திற் சுருங்கா, ஆறெழுத்தின் ஏறாவெனவே நேர்நிலை வஞ்சிக்கு மூவெழுத்துச்சீர் இரண்டு வந்த இருசீரடிக்கு· ஆறெழுத்து முதலாமென்பதூஉம், ஆறெழுத்துச்சீர் இரண்டுவரிற் பன்னிரண்டெழுத் தடி ஈறாமென்பதூஉம் பெறுதுமால் அவ்வச் சூத்திரங்களானேயெனின், ஆண்டு வஞ்சியுரிச்சீர்க்கு எழுத்துவரையறை கூறினான்; அவ்வடி இத் துணை நிலம் பெறுமென்றற்கு இது கூறல் வேண்டுமென்பது. அல்லதூஉம், அங்ஙனங் கொள்ளின் உய்த்துணர்ச்சியாம். இஃது எடுத்தோத்தாகலின் எடுத்தோத்துக் களைந்து உய்த்துணராரென்பது. இனி, இது கூறாக்காற் கட்டளையடிக்கண் இயற்சீர் வாராதென்பதூஉம் பெறலாகாதாம். ஆகவே, ஞாயிறு புலிசெல்சுரம் என்பது கட்டளையடியாகிய செல்லும். வஞ்சித் தூக்கின் அது கொள்ளாமையின் அது விலக்கல் வேண்டி இது கூறினான்; என்னை? இயற்சீர் கொள்ளின் ஓரெழுத்தானாகிய இயற்சீரும்

ஆண்டே கோடல் வேண்டும், அது கொள்ளின் இச் சூத்திரத்திற்கு ஏலாமையினென்பது.

இனி, வஞ்சியுரிச்சீர் அறுபதும் இருநிலைமைப்படுவன இருபத்து நான்கும், நான்கு நிலைமைப்படுவன இருபத்தெட்டும், எட்டு நிலைமைப்படுவன எட்டுச் சீருமாகி இருநூற்றிருபத்து நான்காய் விரியும்.

"இரண்டுநான் கெட்டு நிலைமைய வாகித்
திரண்ட நிலைவஞ்சிச் சீர்க - ளொருங்கே
யிருபத்து நான்கிருபத் தெட்டுட னெட்டா
யிருநூற் றிருபத்து நான்கு."

அவ் வஞ்சியுரிச்சீர் இருநூற்றிருபத்து நான்கினுள்ளும் ஒன்ப தெழுத்துச் சீரொன்றும், எட்டெழுத்துச் சீரொன்பதும், ஏழெழுத்துச் சீர் முப்பத்து மூன்றுமாக நாற்பத்து மூன்று வகையான் உறழும்நிலம் இல இச் சூத்திரத்தின் ஓதியவாற்றா னென்பது.

"நாலாதி யீற்றன நான்கு பதினாற
னாதிய வெண்சீ ரகப்பட்ட மூவைந்து
பொய்ப்பினவ் வஞ்சி யடியுற ழாமோனை
மூவைந்து மூன்றுமூன் றொன்று"

"இரண்டெட்டு மூவெட்டு நாலேழா றைந்தொன்
றகன்றநாற் பஃதுநான் காறேழைம் பத்திரண்டு
நான்கைந்தெட் டொன்பா னறுபஃ தொன்றுநான்
காறேழு பெற்றனமூ வைந்து"

"நாலெட்டே யேழெட் டறுபத் திரண்டிவற்றா
னேழெழுத்தா றெட்டெழு பத்துமூன் றேழா
மேழெழு மும்மூன்றா யெட்டெழுத்தா னோரொன்றா
மாறெட் டறுபஃது மூன்று"

"எழுத்தள வெஞ்சினுஞ் சீர்நிலை யொக்கு
மசைக்கு வரையறை யின்மை யான"

"வஞ்சி யுரிச்சீர் நிரையுரி யுறழ்ந்து
மெல்லாங் குறைத்து மிகுத்துக் கொளாஅல்"

எனவே, இவ்வாற்றான் வஞ்சியுரிச்சீர் ஏழெழுத்தும் எட்டெழுத்தும், ஒன்பதெழுத்துமாகி வரும். அவை யறிந்து மாற்றுக. அவையாவன:

களிறுபோகுவாய் களிறுவழங்குவாய் புலிவழங்குசுரம்
மாவழங்குசுரம் களிறுவருசுரம் களிறுபோகுசுரம்
புலிவழங்குகாடு பாம்புவழங்குகாடு களிறுவருகாடு
களிறுபோகுகாடு மாவழங்குகடறு புலிபோகுகடறு
பாம்புவருகடறு பாம்புபோகுகடறு களிறுசெல்கடறு

என இவை பதினைந்தும் ஏழெழுத்தாங்கால் உறழ்நிலை இலவெனப் படும். 'களிறுவழங்குவாய்' என்பது அரவுவிரவுவாயென ஏழெழுத்துச்

சீராம். ஒழிந்தனவும் அவ்வாறே கொள்க. இவை பதினைந்தும் ஏழெழுத்தின் இகவாதன.

இனி, ஏழெழுத்துச் சீரின் இவ்விரண்டும் எட்டெழுத்துச்சீர் ஒரோவொன்றுமாகி வருவன மூன்று சீர் உள; அவை:

களிறு வழங்குசுரம், புலிவழங்குகடறு, களிறுவருகடறு என்பன. இவற்றைக் களிறுவிரவுசுரம், அரவுவழங்குசுரம், அரவுவிரவுசுரம் என்றாற் போல வாய்பாடு படுத்து ஒட்டிக் காணவே ஏழெழுத்துச் சீராறும் எட்டெழுத்துச்சீர் மூன்றுமென ஒன்பதாம்.

களிறுவழங்குகாடு, பாம்புவழங்குகடறு, களிறுபோகுகடறு என இவை மூன்று சீரும் ஒரோவொன்று ஏழெழுத்துச் சீர்மூன்றும் எட்டெழுத்துச் சீரொன்றுமாக முந்நான்கு பன்னிரண்டும் உறழ்நிலையில எனப்படும். அவை.

களிறுவிரவுகாவு, களிறுவழங்குகுரவு, அரவுவிரவுகாடு, அரவுவிரவுகாவு என ஏழெழுத்துச் சீர் மூன்றும் எட்டெழுத்துச் சீரொன்று மாயினவாறு கண்டுகொள்க. ஒழிந்தனவும் அவ்வாறே கொள்க.

இனி, களிறுவழங்குகடறு என்பது ஆறெழுத்துச்சீர் ஒன்றும், ஏழெழுத்துச்சீர் மூன்றும், எட்டெழுத்துச்சீர் மூன்றும், ஒன்பதெழுத்துச் சீரொன்றுமென அதுவும் எட்டு நிலைமைத்தாம். அவற்றுள், ஆறெழுத்துச் சீரொன்றும் ஒழித்து, ஒழிந்த வஞ்சியுரிச்சீ ரேழும் உறழ்நிலையில வஞ்சிக் கெனப்பட்டன. அவை:

களிறுவழங்குகுரவு, களிறுவிரவுகடறு, அரவுவழங்குகடறு என மூன்றும் ஏழெழுத்துச்சீர்.

களிறுவிரவுகுரவு, அரவுவழங்குகுரவு, அரவுவிரவுகடறு என மூன்றும் எட்டெழுத்துச்சீர்.

அரவுவிரவுகுரவு என்பது ஒன்பதெழுத்துசீர்; இவையெல்லாம் தொகுப்ப ஏழெழுத்துச்சீர் முப்பத்து மூன்றும் எட்டெழுத்துச் சீரொன்பதும் ஒன்பதெழுத்துச் சீரொன்றும் ஒழித்து, ஒழிந்த வஞ்சியுரிச்சீர் நூற்றெண்பத்தொன்றும் உறழ்நிலை யுடையவெனக் கொள்க.

ஏழெழுத்துச்சீரும் எட்டெழுத்துச்சீரும் ஒன்பதெழுத்துச்சீரும் அடியுறழ்வன்வாக்கி மேன் மூன்று சீரானும் மூன்று நிலனேற்றிப் பதினைந்தெழுத்தடியளவும் உறழும் வஞ்சியடி என்பாருமுளர். அங்ஙனம் ஒன்பதெழுத்துச்சீர் இரண்டு வந்த குறளடி பதினெட்டெனப்படுதலின், வஞ்சிநிலம் பதின்மூன்றாதல் வேண்டும், ஓசை நோக்காது சீர் நோக்கி உறழ்ச்சி கொள்ளினென மறுக்க.

அவை அளவடியோடு ஒத்த சிறப்பினவன்மையானும், அவற்றுக்குத் தளைவகை யின்மையானும் எடுத்தோதித் தொகை கூறிற்றிலனாயினும், நாம் அவற்றை எண்ணி உணர்ந்து கூறுங்கால் ஒரு சீர்க்கு அடி நான்காக வஞ்சியடி எழுநூற்றிருபத்து நான்காமெனக் கொள்க. அவையுறழுங்கான் மூன்றெழுத்துச்சீர் ஆறாதி ஒன்பது உயர்வும், நாலெழுத்துச் சீர் ஏழாதி பத்தெழுத்துயர்வும், ஐயெழுத்துச் சீர் எட்டாதி பதினொன்றுயர்வும், ஆறெழுத்துச்சீர் ஒன்பதுமுதல் பன்னிரண்டுயர்வும் பெற்று நின்ற சீரோடு மூன்றெழுத்துச் சீரும் நாலெழுத்துச் சீரும் ஐயெழுத்துச் சீரும் ஆறெழுத்துச் சீருந் தந்துறழ்க வென்பது. அவை:

'கால்காய்ந்தது காம்புநீடி'

என்பது ஆறெழுத்தடி.

'நல்கூர்ந்தது வில்லோர்சுரம்'

என்பது ஏழெழுத்தடி.

'வான்பெய்தது மண்குளிர்ப்புற'

என்பது எட்டெழுத்தடி

'தேன்பெய்தது செழுநகர்தொறும்'

என்பது ஒன்பதெழுத்தடி.

இவை மூவெழுத்து மாசெல்காடு நின்றுறழ்ந்த நான்கடியும் வந்தவாறு. ஒழிந்தனவும் அன்ன.

'மண்மாய்ந்தென வுள்வீழ்ந்தது'

என்பது ஏழெழுத்தடி.

'விண்பாய்ந்தென மேற்றொடுத்தது'

என்பது எட்டெழுத்தடி.

'காடோங்கிய கல்கெழுசுரம்'

என்பது ஒன்பதெழுத்தடி.

'கோடோங்கிய குறும்பொறை மருங்கு'

என்பது பத்தெழுத்தடி.

இவை நான்கடியும் நாலெழுத்து மாசெல்சுரம் நின்று உறழ்ந்த அடி.

'மழைபெய்தென வான்வெள்ளென்று'

என்பது எட்டெழுத்தடி.

'தழைபச்சேனுந் தண்ணென்காவு'

என்பது ஒன்பதெழுத்தடி.

'கமழ்பூந்துணர் கள்ளவிழ்தோறும்'

என்பது பத்தெழுத்தடி.

'இமிழ்தூங்கிசை யிசைசுரும்புவர'

என்பது பதினோரெழுத்தடி.

இவை நான்கும் ஐயெழுத்துப் புலிசேர்சுரம் நின்றுறழ்ந்த அடி.

இனி, ஒன்பதெழுத்துமுதல் பன்னிரண்டளவும் உயர மற்றையன போல நான்கடி பெறும்.

'அமைவிடுகொடி யஞ்சியோர்ந்து'

என்பது ஒன்பதெழுத்தடி.

'கனைகுரலன கானத்தளகு'

என்பது பத்தெழுத்தடி

'தினைப்புனத்தித ணயற்பிரியாது'

என்பது பதினோரெழுத்தடி.

'மனைக்குறமகள் கடைப்புறந்தரும்'

என்பது பன்னிரண்டெழுத்தடி.

இவ்வாறே ஒழிந்தனவும் உறழ்ந்துகொள்க.

மூன்றுபாவின்றுணைச் சிறப்பின்மையின் வஞ்சியடி ஈண்டும் போதந்து கூறினானென்பது. ஒழிந்த முச்சீரடி சிறுவரவிற்றாகலின் அதற்குக் கூறியதிலனென்பது. (57)

நச்சினார்க்கினியர்

57. குறளடி முதலா .... கென்ப.

இது, வஞ்சியடி யுறழுமாறு அது பெறுநிலனு முணர்த்திற்று.

(இ-ள்) நாலெழுத்து முதலாகப் பதினான்கெழுத்தளவும் உறழு நிலையில வஞ்சியடிக்கு எ-று.

முற்கூறிய அறுபது வஞ்சியுரிச்சீருள்ளும் இருபத்துநான்கு சீர் ஒரோவொன்று இருநிலைமையவாகவும் இருபத்தெட்டுச் சீர் ஒரோ வொன்று நான்கு நிலைமையவாகவும் எட்டுச்சீர் ஒரோவொன்று எட்டு நிலைமையவாகவும் கொள்ளப்படும். அங்ஙனம் கொள்ளவே இரு நூற்றிருபத்து நான்காம்.

அவற்றுள் இருநிலைமைப்படும் இருபத்துநான்கும் நேரீறெட்டும், நிரையீறெட்டும், நேர்பீறு நான்கும், நிரைபீறு நான்குமாம்.

அவை மாபோகுவாய், மாவழங்குவாய், புலிபோகுவாய், புலிவழங்கு வாய், பாம்புசேர்வாய், பாம்புவருவாய், களிறுசேர்வாய், களிறு வருவாய் எனவும்; மாசேர்சுரம், மாவருசுரம், மாபோகுசுரம், மாவழங்கு சுரம், புலி சேர்சுரம், புலிவருசுரம், புலிபோகுசுரம், புலிவழங்குசுரம் எனவும்; மாசேர் காடு, மாவருகாடு, புலிசேர்காடு, புலிவருகாடு எனவும்; மாசேர்கடறு, மாவருகடறு, புலிசேர்கடறு, புலிவருகடறு எனவும் வரும்.

மாபோகுவாய் என்றதற்கு மாமேவுவாய் என முற்றுகரங்கொடுத்து இருநிலைமையாக்குக. ஒழிந்தனவற்றுட் குற்றுகரங்கட்கு மிவ்வாறே முற்றுகரம் பெய்தொட்டுக.

இவற்றுள் மாசேர்சுரத்திற்கு ஞாண்ஞாயிறு எனவும்; மாவரு சுரத்திற்கு மாவலியதெனவும் புலிசேர் சுரத்திற்கு வருஞாயிறு எனவும்; புலிவருசுரத்திற்குத் திருவலியது எனவும்; எழுத்துக் குறையுஞ் சொற் பெய்து இருநிலைமை பெய்க. இங்ஙனம் இருநிலைமையான் நாற்பத் தெட்டாயிற்று. இவற்றுள் ஏழெழுத்துச் சீர் இரண்டாம்.

இனி நான்கு நிலைமைப்படும் சீரிருபத்தெட்டும் நேரீறு நான்கும், நிரையீறெட்டும், நேர்பு ஈறெட்டும், நிரைபு ஈறெட்டுமாம்.

அவை பாம்புபோகுவாய், பாம்புவழங்குவாய், களிறுபோகுவாய், களிறுவழங்குவாய் எனவும்; பாம்புசேர்சுரம், பாம்புவருசுரம், பாம்பு போகுசுரம், பாம்புவழங்குசுரம், களிறுசேர்சுரம், களிறுவருசுரம், களிறு போகுசுரம், களிறுவழங்குசுரம் எனவும்; மாபோகுகாடு, மாவழங்குகாடு, புலிபோகுகாடு, புலிவழங்குகாடு, பாம்புசேர்காடு, பாம்புவருகாடு, களிறு சேர்காடு, களிறுவருகாடு எனவும்; மாபோகுகடறு, மாவழங்குகடறு, புலி போகுகடறு, புலிவழங்குகடறு, பாம்புசேர்கடறு, பாம்புவருகடறு, களிறு சேர்கடறு, களிறுவருகடறு எனவும் இவற்றைப் பாம்புபோகுவாய், மின்னுப்போகுவாய், பாம்புமேவுவாய், மின்னு மன்னுவாய் என ஒன்று நான்காக வாய்பாடுபடுத் தெல்லாவற்றொடு மொட்டுக.

இவ் விருபத்தெட்டனுட் பாம்புசேர்சுரத்திற்குப் பாம்புசேர்வது மின்னுச்சேர்சுரத்திற்கு மின்னுச்சேர்வது எனவும்; பாம்புவருசுரத்திற்குப் பாம்புவலியது, மின்னுவருசுரத்திற்கு மின்னுவலியது எனவும்; களிறுசேர் சுரத்திற்கு ஒளிறுஞாயிறு, அரவுசேர்சுரத்திற்குப் பரவுஞாயிறு எனவும்;

களிறுவருசுரத்திற்குக் களிறுவலியது, அரவுவருசுரத்திற்கு அரவுவலியது எனவுங் கொள்க. இங்ஙனம் நான்கு நிலைமை கொள்ளவே நூற்றொரு பத்திரண்டாயிற்று. இவ் விருபத்தெட்டனுள் முற்றுகரம் பெய்தால் ஏழெழுத்தாகுசீர் பதினாறும் எட்டெழுத்தாகுசீர் மூன்றுமாம்.

இனி எட்டு நிலைமைப்படுஞ் சீரெட்டும் நேர்பு ஈறு நான்கும் நிரைபு ஈறு நான்குமாம்.

அவை பாம்புபோகுகாடு, பாம்புவழங்குகாடு, களிறுபோகுகாடு, களிறுவழங்குகாடு எனவும்; பாம்புபோகுகடறு, பாம்புவழங்குகடறு, களிறுபோகுகடறு, களிறுவழங்குகடறு எனவும் வரும்.

இவற்றுள் ஒன்றற்கு மூன்றுரியசை யுண்மையின் முதற்க ணின்றவற்றை யுரியசை யிரண்டற்குந் தனித்தனி முற்றுகரம்பெய்து பின்னிரண்டற்கும் முற்றுகரம்பெய்து நான்கு நிலைமை யெய்துவித்துப் பின்னர் ஈற்றினிரையுரியசை யொன்றனையும் முற்றுகரமாக்கி யதனோடு முன்னர் நின்றவற்றை வேறுவேறு முற்றுகரம் பெய்து நான்கு நிலைமை யெய்துவிக்க எட்டாயிற்று. இவற்றுள் ஏழெழுத்தாஞ் சீர் பதினைந்தும் எட்டெழுத்தாஞ் சீர் ஆறும் ஒன்பதெழுத்தாஞ் சீர் ஒன்றுமாம்; ஆக இருநூற்றிருபத்து நான்காயிற்று.

"அறுபஃ தாக வகுத்த வஞ்சியுண்
மூவென். சீர்க ளிருநிலைமை யெய்தி
நாலேழ் சீராக நான்குநிலை யெய்தி
யிருநான் கிருசீ ரிருநான்கு நிலையெய்தி
யிருநூற் றிருபத்து நான்காய் விரியும்"

"அவற்றுளொன் பதெழுத் தாஞ்சீ ரொன்று
மிருநான் கெழுத்தா குஞ்சீ ரொன்பது
மேழெழுத் தெய்துவ முப்பத்து மூன்று
மாகநாற் பத்து மூன்று மாக
நூற்றெண் பத்தொன் றடியுற மும்மே."

இனி யடியுறழாத நாற்பத்துமூன்றும் உறழுமாறு:

எட்டு நிலைமை யெய்துவனவற்றில் அரவுவிரவுகுரவு என ஒன்பதெழுத்துச் சீரொன்று - 1

நான்குநிலை யெய்துவனவற்றில் அரவுவிரவுசுரம், புலிவிரவுகுரவு, அரவுவருகுரவு என எட்டெழுத்துச் சீர்மூன்று - 3

எட்டு நிலைமை யெய்துவனவற்றில் அரவுவிரவுகுரவு, மின்னுவிரவு குரவு, அரவுமேவுகுரவு, அரவுவிரவுகடறு, அரவுவழங்குகுரவு, களிறுவிரவு குரவு என எட்டெழுத்துச் சீராறு - 6

ஆக எட்டெழுத்துச் சீரொன்பது.

இரண்டு நிலைமை யெய்துவனவற்றில் புலிவிரவுசுரம், புலிவருகுரவு என ஏழெழுத்துச் சீரிரண்டு - 2

நான்கு நிலைமை யெய்துவனவற்றில் அரவுவிரவுவாய், மின்னு விரவுசுரம், அரவுவருசுரம், அரவுமேவுசுரம், அரவுவழங்குசுரம், களிறுவிரவு சுரம், புலிவிரவுகாவு, அரவுவருகாவு, மாவிரவுகுரவு, புலிமேவுகுரவு, புலி விரவுகடறு, புலிவழங்குகுரவு, மின்னுவருகுரவு, அரவுமேவுகுரவு, அரவுவரு கடறு, களிறுவருகுரவு என ஏழெழுத்துச்சீர் பதினாறு - 16

எட்டுநிலைமை யெய்துவனவற்றில் மின்னுவிரவுகாவு, அரவுமேவு காவு, அரவுவிரவுகாடு, அரவுவழங்குகாவு, களிறுவிரவுகாவு, மின்னுமேவு காவு, மின்னுவிரவுகடறு, மின்னுவழங்குகுரவு, பாம்புவிரவுகுரவு, அரவு மேவுகடறு, அரவுபோகுகுரவு, களிறுமேவுகுரவு, அரவுவழங்குகடறு, களிறு விரவுகடறு, களிறுவழங்குகுரவு என ஏழெழுத்துச்சீர் பதினைந்து - 15.

ஆக ஏழெழுத்துச் சீர் முப்பத்து மூன்று.

இனி ஒழிந்த நூற்றெண்பத்தொன்றும் அடியுறழுமாறு:

"மூவெழுத் துச்சீ ராறாதி யொன்பானு
நாலெழுத் துச்சீ ரேழாதி பத்து
மையெழுத் துச்சீ ரெட்டாதி பதினொன்று
மாறெழுத் துச்சீ ரொன்பது முதலீ
ராறு முயருங் காலை மேல்வருஞ்
சீர்களு மூன்று நான்கு மைந்து
மாறு மெழுத்தா னாகுஞ் சீர்வந்
தாங்கவ் வெண்களை யுறழ்ந்த வடித்தொகை
யெழுநூற் றிருபத்து நான்கென மொழிப"

இங்ஙனங் கூறியவாற்றான் இயற்சீர் கட்டளையடிக் குறழாவென் றுணர்க.

(எ-டு) "கால்காய்ந்தது காம்புநீடி"

என்பது ஆறெழுத்தடி.

"நல்கூர்ந்தது வில்லோர்சுரம்"

என்பது ஏழெழுத்தடி.

"வான்பெய்தது மண்குளிர்ப்புற"

என்பது எட்டெழுத்தடி.

"தேன்பெய்தது செழுநகர்தொறும்"

என்பது ஒன்பதெழுத்தடி.

இவை மூவெழுத்துச்சீர் மாசேர்காடு நான்கடியும் வந்தவாறு. ஒழிந்தனவுமென்ன.

"மண்மாய்ந்தென வுள்வீழ்ந்தது"

என்பது ஏழெழுத்தடி.

"விண்மாய்ந்தென மேற்றொடுத்தது"

என்பது எட்டெழுத்தடி.

"காடோங்கிய கல்கெழுசுரம்"

என்பது ஒன்பதெழுத்தடி.

"கோடோங்கிய குறும்பொறைமருங்கு"

என்பது பத்தெழுத்தடி.

இவை நான்கடி நாலெழுத்து மாசேர்சுரம் நின்றுறழ்ந்த வடி. ஒழிந்தனவும் அன்ன.

"மழைபெய்தென வான்வெள்ளென்று"

என்பது எட்டெழுத்தடி.

"தழைபச்செனத் தண்ணெனன்காவு"

என்பது ஒன்பதெழுத்தடி.

"கமழ்பூந்துணர் கள்ளவிழ்தொறும்"

என்பது பத்தெழுத்தடி.

"இமிழ்தூங்கிசை யினச்சுரும்புவர"

என்பது பதினோரெழுத்தடி.

இவை நான்கும் ஐயெழுத்துப் புலிசேர்சுரம் நின்றுறழ்ந்த வடி.

இனி ஆறெழுத்துச் சீர் வருமாறு:

"அமைவிடுநொடி யஞ்சியோர்த்து"

என்பது ஒன்பதெழுத்தடி.

"கனைகுரலென கானத்தளகு"

என்பது பத்தெழுத்தடி

"தினைப்புனத்தித ணயற்பிரியாது"

என்பது பதினோரெழுத்தடி.

"மனைக்குறமகள் கடைப்புறந்தரும்"

என்பது பன்னீரெழுத்தடி.

இவ்வாறே யொழிந்தனவு முறழ்ந்துகொள்க.

வஞ்சி மூன்று பாவும் போலச் சிறப்பின்மையின் ஈண்டுப் போதந்து கூறினார்.

ஒழிந்த முச்சீரடி சிறுவரவிற்றாகலின் அதற்குக் கட்டளையடிக்குக் கூறிற்றிலர். (57)

சிவலிங்கனார்

குறளடி .... கென்ப.

(இ-ள்) எழுத்தான் வரையறுக்கப்பட்ட குறளடி, சிந்தடி, அளவடி என்பனவற்றில் வஞ்சிச்சீர்வந்து கலக்கப்பெறா என்பர், எ-று.

பதினைந்தெழுத்து முதலாகவரும் நெடிலடி கழிநெடிலடிகளில் கலக்கப்பெறும் என்க.

வெண்பாவடிகள்

364. அளவுஞ் சிந்தும் வெள்ளைக் குரிய
தளைவகை ஒன்றாத் தன்மை யான. (55)

இலக்குவனார்

370. *Aḷavu* and *sindhu* belong to *veḷḷai* (*veṇbā*) without having mixture of *thaḷai*.

இளம்பூரணர்

364. அளவுஞ் சிந்தும் .... யான.

என்-னின், வெண்பாவிற்குரிய அடியுந் தளையும் வரையறுத் துணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அளவடியும் சிந்தடியும் வெண்பாவிற்குரிய தளைவகை ஒன்றாத்தன்மைக்கண் என்றவாறு.

எனவே, ஒன்றுந் தன்மைக்கண் நெடிலடியும் சில வரும் என்று கொள்க.

இச் சூத்திரத்தால் வெண்பாவிற்குரியதோர் தளை உணர்த்தினாராம். சிந்தடியாவது ஏழெழுத்து முதல் ஒன்பதெழுத்தீறாகிய அடி. அளவடியாவது பத்தெழுத்து முதலாகப் பதினான்கெழுத்தீறாகிய அடி. தளைவகை ஒன்றாமையாவது நிலைமொழியும் வருமொழியும் ஆகிய இயற்சீர் நேராயொன்றுவதும் நிரையாயொன்றுவதுமன்றி மாறுபடவருவது. அவ்வழி நிரையீற் றியற்சீர் நிற்ப நேர்வரினும் நேரீற் றியற்சீர் நிற்ப நிரைவரினும் இயற்சீர் வெண்டளையாம். இனி ஒன்றுந் தன்மையாவது வெண்சீர் நிற்க வருஞ்சீர் முதலசையோ டொன்றுவது வெண்டளையாம். இவ் விரண்டும் வெண்பாவிற்குத் தளையாமென்று கொள்க.

(உ-ம்) "மட்டுத்தா னுண்டு மணஞ்சேர்ந்து விட்டுக்
களியானை கொண்டுவா வென்றான் அளியார்முன்
யாரோ வெதிர்நிற் பவர்." (யா.வி.ப.463)

இஃது ஏழெழுத்தான் வந்த அடி.

"இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல் என்னாது" (நாலடி.36)

இஃது எட்டெழுத்தான் வந்த அடி.

"சென்று முகந்து நுதல்சுட்டி மாறோர்த்து
வென்று வியர்த்தா னென்கோ." (யா.வி.ப.464)

இஃது ஒன்பதெழுத்தான் வந்த அடி.

"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்கு" (குறள்.12)

இது பத்தெழுத்தான் வந்த அடி.

"ஏரி னுழாஅர் உழவர் புயலென்னும்" (குறள்.14)

இது பதினோரெழுத்தான் வந்த அடி.

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்" (குறள்.3)

இது பன்னிரண்டெழுத்தான் வந்த அடி.

"இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்" (குறள்.5)

இது பதின்மூன்றெழுத்தான் வந்த அடி.

"முகமறியார் மூதுணர்ந்தார் முள்ளெயிற்றார் காமம்
அகமறைந்தான் வாழுமென் றார - மகமறையாம்
மன்னைநீ வார்குழை வையெயிற்றா யென்றோமற்
றென்னையும் வாழு மெனின்." (யா.வி.ப.415)

இது பதினைந்தெழுத்தான் வந்த அடி.

"படியுடையார் பற்றமைந்தக் கண்ணு மடியுடையார்" (குறள்.606)

இது பதினாறெழுத்தான் வந்த அடி. இவையிரண்டும் நெடிலடி. (55)

பேராசிரியர்

370. அளவுஞ் சிந்தும் .... யான.

இஃது, ஆசிரியவடிக்கும் அதன் நடைத்தாகிய வஞ்சியடிக்கும் உரிய நிலங்கூறி வெண்பாவிற்குரிய நிலங் கூறுகின்றது.

(இ-ள்) அளவடி ஐந்துஞ் சிந்தடி மூன்றுமென எட்டுநிலம் பெறுந் தளைவிரவாதவாற்றான் வெண்பாவடி என்றவாறு.

அளவடி முற்கூறியதென்னையெனின், மேல் நிறுத்தமுறையாற் கொள்ளாது ஈண்டுச் சொல்லும் முறைமையாற் கூறினானென்பது.

'நின்று நினைந்து நெடிது பெயர்ந்து'

என்பது ஏழெழுத்தடி.

'அறிவறிந்தார்த் தேற்றியக்கா லஞ்சுவ தில்லை'

என்பது பதினான்கெழுத்தடி.

இதனும்பர்[1] நெடிலடியானும் வெண்பாவடி வருவன உள. அவை கட்டளையடி யெனப்படா, செப்பிக்கூறும்[2] பாவாகாது செய்கை[3] தோன்றியே நிற்குமாகலினென்பது; பிறிது காரணம் உண்டாயினும் அறிந்துகொள்க. தளைவகை ஒன்றாமையென்பது, வெண்பாவும் வெண்பா நடைத்தாகிய கலிப்பாவும் மயங்காமை காரணத்தானென்ற வாறு. கலியோசை மயங்கி வருவனவும் வெண்பாவடியுளுள. அவை நெடிலடி மூன்றானும் வருமெனக் கொள்க. ஒரோவடியே வெண்பா வடியுமாய்த் துள்ளிக் கலியடியுமாகித் தளைவகை ஒன்றுமாகலான் அம் மயக்கந் தீராதென,

'அளவுஞ் சிந்தும் வெள்ளைக் குரிய'

என்றானென்பது.

'மாவருவாய் மாவருவாய் மாவருவாய் மாவருவாய்' (ப. 947)

என்றக்கால் இதனை,

---

1. இதனும்பர் - இதற்குமேல்
2. செப்பிக்கூறல் - செப்பலோசையிற் கூறல்
3. செய்கை - தளைகோடற் செய்கை

'அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி' **(323)**

என்றதனாற் கலியோசை பிறப்பவுஞ் சொல்லிக் கண்டுகொள்க.

'மாவருவாய் மாவருவாய் மாவருவாய் மாவருவாய்
மாவருவாய் தேமா வரகு'

என்றிதனையே ஓசையூட்ட வெண்பாவாயிற்று. இது,

'மாவருவாய் மாவருவாய் மாவருவாய் மாற்றினரே'

எனக் கலியோசை யாயினவாறறிக. (58)

நச்சினார்க்கினியர்

58. அளவுஞ் சிந்தும் .... யான.

இஃது, ஆசிரியவடிக்கும் அதனடைத்தாகிய வஞ்சியடிக்கும் உரிய நிலங்கூறி வெண்பாவிற்குரிய நிலங் கூறுகின்றது.

(இ-ள்) அளவடி யைந்தும் சிந்தடி மூன்றும் என்ற எட்டு நிலனும் வெண்பாவிற்குரிய, தளைவகை யொன்றாத தன்மையான் எ-று.

'ஒன்றாத் தன்மை யான' என்றதனானே ஒன்றியவாகாவாயிற்று. அஃது இயற்சீரொன்றிய வாசிரியத்தளை வாராமையும், வெண்சீர் நிற்ப வெண்சீர் வந்தொன்றிய வெண்டளை செப்பலோசைக்குந் துள்ளலோசைக்கு மொப்ப வுரியவாகலின் அது வாராவென்றலும் கூறிற்றாம்.

ஒன்றாதென்றதனானே கலித்தளை யொன்றுமென்று பொருள் தருமேனும் அஃதிலக்கணமன்மை யுணர்க. எனவே முற்கூறிய இயற்சீர் வெண்டளையையும் வெண்சீ ரியற்சீரோடு தட்ட வெண்சீர் வெண் டளையையும் விலக்காமை யுணர்க.

(எ-டு) 'நின்று நினைந்து நெடிது பெயர்ந்து'

என்பது ஏழெழுத்தடியா யிசைநிலை நிறையநின்ற அசைச்சீ ரியற்சீராய்த் தட்டது.

'கற்றவரைச் சேர்வர் கலைநிறையுங் காட்சியார்
பெற்றன மென்றே பெயர்ந்து.'

இது பதினான்கெழுத்தடி.

'அறிவறிந்தார்த் தேற்றியக்கா லஞ்சுவ தில்லை'

இது பதினான்கெழுத் தென்னுஞ் சீர்வகை யொன்றலிற் கட்டளை யாகா.

இதனும்பர் நெடிலடியான் வந்தன சீர்வகையடியாம்.

"வானவரு நான்முகனும் வாசவனு மாமுனிவ
ரானவருங் காணா வரன்"

எனப் பதினாறெழுத்தான் வந்த வெண்சீரொன்றிய சீர்வகையடி.

'வானவரு நான்முகனும் வாசவனுங் காணாரே'

என்பது துள்ளலோசைக் குணர்க.

இவ் வெண்பாவை ஏந்திசைச் செப்பலெனப் பின்னுள்ளோர் கூறுவர். அவர் கூறும் ஒழுகிசையுந் தூங்கிசையும் பெரும்பான்மை பதினான்கெழுத்தினிகந்து வாராவென் றுணர்க.

முச்சீரான் வரும் ஈற்றடியும் முதலிய மூன்று நிலத்தினிகந்து வாராமை யுரையிற் கொள்க.

"மாவருவாய் மாவருவாய் மாவருவாய் மாவருவாய்
மாவருவாய் தேமா வரகு."

இது 'மாவருவாய் மாவருவாய் மாவருவாய் மாற்றினரே'

என இரண்டற்கும் ஒப்ப நின்றவாறுங் காண்க.

இதனானே மேலீரடிக் கூட்டத்துத் தொடை கொள்ளுங்காற் கலிக்கு வெண்சீரோடு தட்ட வெண்சீர் வெண்டளை கொள்ளுமாறுணர்க. (58)

சிவலிங்கனார்

அளவும் .... தன்மை யான.

(இ-ள்) பத்தெழுத்து முதல் பதினான்கெழுத்தாக வரும் அளவடியும் 'ஏழெழுத்து முதல் ஒன்பது எழுத்தாக வரும் சிந்தடியும் சீரால் அமையும் தளை ஒன்றாவிடத்து வெண்பாவுக்குரியவாம்' எ-று.

ஒன்றாமையாவது மாச்சீர் முன் நேர்வாராமல் நிரை வருவதும், விளச்சீர் முன் நிரை வாராமல் நேர் வருவதும் ஆம். இவ் வொன்றாத் தளையை இயற்சீர் வெண்டளை என்பர்.

கலிப்பாவடி

**365. அளவடி மிகுதி யுளப்படத் தோன்றி
இருநெடில் அடியுங் கலியிற் குரிய. (56)**

இலக்குவனார்

371. *Alavu* line of maximum limit and two kinds of *nedil* lines belong to *kali*.

இளம்பூரணர்

365. அளவடி மிகுதி .... குரிய.

என்-னின், இது கலிப்பாவிற்கு அடியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அளவடியின் மிக்க பதின்மூன்றெழுத்து முதலாக நெடிலடியுங் கழிநெடிலடியுமாகிய இருபதெழுத்தின்காறும் வரும் அடி கலிப்பாவிற்கு அடியாம் என்றவாறு.

இவ் விலக்கணங் கலித்தளை வருமிடத்தே கொள்க. கலியடி யென்னாது கலித்தளையடி என்றதூஉம் இவ் வேறுபாடு குறித்தென்க.

"மரல்சாய மலைவெம்ப மந்தி உயங்க" (கலி.13)

இது பதின்மூன்றெழுத்தான் வந்தது.

"வீங்குநீர் அவிழ்நீலம் பகர்பவர் வயற்கொண்ட" (கலி.66)

இது பதினான்கெழுத்தான் வந்த அடி.

"அடிதாங்கும் அளவின்றி அழலன்ன வெம்மையால்" (கலி.11)

இது பதினைந்தெழுத்தான் வந்த அடி.

"அரிதாய அறனெய்தி அருளியோர்க் களித்தலும்" (கலி.11)

இது பதினாறெழுத்தான் வந்த அடி.

"முதிர்கோங்கின் முகையென முகஞ்செய்த குரும்பையென"
(கலி. 56)

இது பதினேழெழுத்தான் வந்த அடி.

"அறனின்ற விதையொழியா னவலங்கொண் டதுநினையான்"
(யா.வி.ப.468)

இது பதினெட்டெழுத்தான் வந்த அடி.

"உகுபனிகண் உறைப்பவுநீ ஒழிபொல்லாய் செலவலித்தல்"
(யா.வி.ப.468)

இது பத்தொன்பதெழுத்தான் வந்த அடி.

"நிலங்கிளையா நெடிதுயிரா நிறைதளரா நிரைதொடியாள்"
(யா.வி.ப.468)

இஃது இருபதெழுத்தான் வந்த அடி. (56)

பேராசிரியர்

371. அளவடி மிகுதி .... குரிய.

இது, முறையானே கலிக்குரிய நிலமுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஐவகையடியினும் அளவடி மிகுதியாகிய பதின்மூன் றெழுத்தும் பதினான்கெழுத்தும் நெடிலடியுங் கழிநெடிலடியுங் கலியடிக்குரிய என்றவாறு.

எனவே, அதுவுந் தன் முதற்கட் பாவாகிய வெண்பாப் போல எட்டுநிலம் பெறுவதாயிற்று. ஒழிந்த அடி மூன்றனோடும் ஒவ்வாது மிக்கநிலம் இரண்டனையும் மிகுதியென்றானென்பது. இனி,

"ஒத்த நாலெழுத் தொற்றலங் கடையே" (350)

என்பதே கொண்டு பதினோரெழுத்து முதல் நான்கு நிலனும் அளவடி மிகுதியெனப்படும் எனவும், அவை கலிக்குரிய எனவுங் கொள்வாருமுளர்; அங்ஙனங் கொள்வார்க்கு,

"ஞாயிறு கடியாறு கடியாறு கடியாறு"

என்றதனைப் பதினோரெழுத்தடியென்று காட்டல் வேண்டும்; அஃது ஆசிரியவடியாம்; ஆகலான், அற்றன்றென்பது. இனி,

"ஞாயிறு மாசேர்வாய் மாசேர்வாய் மாசேர்வாய்"

என்பதோவெனின், அது கலிப்பாவோடு தளைவகை யொன்றிய வெண்பாவடியாகலானும், நிரைமுதல் வெண்சீர் வந்து நிரைதட்பினன்றி ஞாயிறு என நின்ற நிரையீற்று இயற்சீர்ப்பின்னர் நேர்வந்தாற் கலித்தளை யாகாது வெண்டளை யாமாகலானுங் கட்டளையடிக்கு அவ்வாறு கோடல் குற்றமென்பது. அல்லதூஉம், கலிப்பாவிற்குப் பத்துநிலங் கொள்ளிற் கட்டளையடி அறுநூற்றிருபத்தைந்தன்றிப் பல்குமென்பது. (59)

நச்சினார்க்கினியர்

59. அளவடி மிகுதி .... குரிய.

இது, முறையானே கலிக்குரிய நிலங் கூறுகின்றது.

(இ-ள்) இருநெடிலடியும் - நெடிலடியும் கழிநெடிலடியும், அளவடி மிகுதி உளப்படத் தோன்றி - அளவடிக்கு உரித்தென ஐவகை யடியின் மிகுதியாகிய பதின்மூன்றும் பதினான்குமாகிய எழுத்துகளோடு தோற்றப்பட்டு, கலியிற்கு உரிய - கலிப்பாவிற்கு உரியவாம் எ-று.

அளவடி யைந்தனுள் மிகுதியெனவே பதின்மூன்றும் பதினான்கு மென்பது பெறுதும். இனிச் சீர்வகையடியாய் இந் நிலங்களைத் தப்பி வருவனவுங் கொள்க.

(எ-டு)"ஐயிரு தலையி னரக்கர் கோமான்"

"சுற்றமை வில்லர் சுரிவளர் பித்தையர்" (பாலைக்கலி. 3)

எனப் பதினொன்றும் பன்னிரண்டும் எழுத்தான் வந்தன. (59)

சிவலிங்கனார்

அளவடி மிகுதி .... குரிய.

(இ-ள்) பதினைந்து முதல் இருபது எழுத்தின்காறும் வரும் அளவடியும், நெடிலடியும், கழிநெடிலடியும் கலிப்பாவுக்குரிய, எ-று.

உதாரணம் இளம்பூரணத்திற் காண்க.

"மரல்சாய மலைவெம்ப மந்தி யுயங்க" (கலி.13)

இதில் பதின்மூன்றெழுத்தான் வந்தது. அளவடி. பிறவும் கொள்க.

366. நிரைமுதல் வெண்சீர் வந்துநிரை தட்டல்[1]
வரைநிலை இன்றே அவ்வடிக் கென்ப. (57)

இலக்குவனார்

372. When the foot of *'veṇbā'* having *'nirai'* syllable at the beginning, follows *'nirai'* syllable, this joining is not prevented in that line.

இளம்பூரணர்

366. நிரைமுதல் வெண்சீர் .... கென்ப.

என்-னின், கலித்தளையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட அடி கலித்தளை தட்ட வழியே கொள்ளப்படுவது என உணர்த்தியவாறாம். வெண்பாவுரிச்சீர் நிற்ப நிரைமுதல் வெண்சீர் வந்து அதன்கண் நிரையாய்த் தளைத்தல் கலியடிக்கு வரைநிலையில்லை என்றவாறு.

'நிரைதட்டல்' என்றதனால் பிறிதாகிவருஞ் சீர் முதலாகிய நிரையோடு தளைப்பினுங் கலித்தளையாம் என்று கொள்க.

நிரைமுதல் வெண்சீர் என்பது உய்த்துணர்ந்து கொள்ளப்பட்டது. உதாரணம் மேற்காட்டிய அடிகளுட் காண்க. (57)

---

1. தட்பினும் - பேரா. நச். பாடம்

பேராசிரியர்

372. நிரைமுதல் வெண்சீர் .... கென்ப.

இதுவும், கலித்தளை விகற்பங் கூறுகின்றது.

(இ-ள்) நிரையீற்று இயற்சீரும் நிரையீற்று ஆசிரிய வுரிச்சீரும் நிற்ப நிரைமுதல் வெண்சீர் வந்து நிரையொன்றியக்காலுங் கலித்தளையாம் என்றவாறு.

"மணிபுரை திருமார்பின் மறுத்தயங்கத் தோன்றுங்கால்"

என்புழி, 'திருமார்பின்' என நிரைமுதல் வெண்சீர் வந்து 'மணிபுரை' என்னுஞ்சீர் இறுதி நிரையொடு தட்டுக் கலித்தளையாயிற்று. எனவே நிரைமுதல் இயற்சீர் வந்து நிரை தட்பினும், நேர்முதல் வெண்சீர் வந்து ஒன்றாதொழியினும், அது கட்டளைவகையாற் கலியடியாகாதென்றவாறு என்னை? துள்ளாத இயற்சீர்ப் பின் நிரைமுதல் வெண்சீர் வந்து துள்ளுவிக்கல் வேண்டுமாதலானும், ஞாயிறு மாசேர்வாயென்பது வெண்பாவடியுமாம் ஆகலானுமென்பது. 'அடிக்கென்ப' என்றதனான் இதுவுங் கட்டளையடிக்கே யென்பது கொள்க; மற்று நிரைமுதல் வெண்சீர் வருவது முதனின்ற இயற்சீர்ப் பின்னர் இடைநின்ற இயற்சீர்ப் பின்னரென்ப தறியுமா றென்னையெனின், அங்ஙனம் வரையாது கூறினமையின் முதற்கண்ணதே இவ் விதியென்பதாம். அல்லதூஉம் அவ்வாறு இயற்சீரினை இடையும் வருமென்று கொள்ளிற் பதின் மூன்றெழுத்திற் சுருங்கிய நிலனும் அது பெறுவான் செல்லும்; செல்லவே கலியோசை இனிது பெறலாகாவென மறுக்க வென்றார்க்குப் பின்வருஞ் சீர் மூன்றும் நிரைமுதல் வெண்சீர் வருவதென்றிலனாதலின் மூன்றாஞ்சீர் நேர்முதல் வெண்சீர் வந்தும்,

"வெண்சீ ரீற்றசை நிரையசை யியற்றே" **(341)**

என்றதனாலும் இடைநிற்பன வெண்சீரென்பது பெறுதுமாகலானும் அது கட்டளையன்றென்பது. இனி, முதனின்றது நிரையீற் றியற்சீராகலான் துள்ளலோசை பிறவாமையின் அவற்றோசை குறைதீரக் கலித்தளை பலவாகி வரல் வேண்டுமென்பது. இவ்வாற்றான் ஓசைச் சுருக்கம் பெருக்கம் உணர்தற்கு அருமைநோக்கி,

"அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி
வகுத்தன ருணர்த்தலும் வல்லோ ராறே" **(323)**

என்பானாயிற்றென வுணர்க. இக் கருத்தினானன்றே நிரைமுதல் வெண்சீர் வருக வெனவும் நிரையீற்று இயற்சீர்ப் பின்னர் மாசெல்வாய் மூன்று வரினுஞ் சிறிது கலியோசை பிறக்குமாயினும் அதனைக் கட்டளையடி யென நேரானாயிற்றுமென்பது . (60)

நச்சினார்க்கினியர்

60. நிரைமுதல் வெண்சீர் .... கென்ப.

இதுவும் அவ்வடிக் கெய்தியதோர் தளைவிகற்பங் கூறுகின்றது.

(இ-ள்) நிரைமுதல் வெண்சீர் வந்து நிரை தட்பினும் - நிரையீற்று இயற்சீரும் நிரையீற்று ஆசிரிய உரிச்சீரும் நிற்ப நிரை முதல் வெண்சீர் வந்து நிரையாய் ஒன்றியக்காலும், வரைநிலை இன்றே அவ்வடிக்கு என்ப- கட்டளையடிக்கு நீக்கும் நிலையின்று, எனவே கலித்தளையாம் எ-று.

(எ-டு)"மணிபுரை திருமார்பின் மறுத்தயங்கத் தோன்றுங்கால்"

என்புழித் திருமார்பின் என்னும் நிரைமுதல் வெண்சீர் வந்து மணிபுரை யென்னும் நிரையீற் றியற்சீரோடு தட்டுக் கலித்தளையாயிற்று.

"ஓங்குநிலை யகன்மார்பி னொளிதிகழு மாமேனி"

இது நிரையீற் றாசிரிய வுரிச்சீரோடு அவ்வாறு தட்டது.

எனவே, நிரைமுதலியற்சீர் வந்து நிரைதட்பினும் அதனோடு நேர் முதல் வெண்சீர் வந்து ஒன்றாதொழியினுந் துள்ளலோசை பிறவாமையிற் கட்டளையடியாகா என்றவாறு.

அவ் வடிக்கெனவே இவ் விதி கட்டளையடிக்குக் கூறியது. இதனானே நிரையீற் றியற்சீர்ப் பின்னர் நிரைமுதல் வெண்சீரும் நேர் முதல் வெண்சீரும் வந்து பின்னர் வெண்சீர் அடுக்கிய வெண்டளை வரினுஞ் சிறிது துள்ளலோசை பிறத்தலின் அதனைச் சீர்வகையடி யென்றுணர்க.

"அணிமுக மதியேய்ப்ப வம்மதியை நனியேய்க்கு
மணிதிகழ் மாமழைநின் பின்னொப்பப் பின்னின்கண்"
(குறிஞ்சிக்கலி. 28)

என வருவனவும் பிறவுமாம். **(60)**

சிவலிங்கனார்

நிரைமுதல் .... கென்ப.

(இ-ள்) வெண்பாவுரிச்சீர் நிற்ப நிரைமுதல் வெண்சீர் வந்து நிரையாய்த் தளைத்தல் கலிப்பாவுக்குரியது என்பர், எ-று.

காய்ச்சீர்முன் நிரை வருவது கலித்தளையாம் என்றபடி.

(உ-ம்) 'அரிதாய அறனெய்தி'

367. விராஅய தளையு மொரூஉநிலை யிலவே.[1] (58)

இலக்குவனார்

373. The mixture of *thaḷai* is not forbidden.

இளம்பூரணர்

367. விராஅய தளையு .... யிலவே.

என்-னின், இதுவுங் கலியடிக் குரியதோர் தளை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) பிறவாகி விரவிய தளையும் நீக்குதலில்லை என்றவாறு.

அஃதாவது வெண்டளையும் ஆசிரியத்தளையும் விரவுதல்.

"இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமையமர்ந் துயர்மலை இருந்தனன் ஆக
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்" (கலி. 38)

இதன்கண் முந்துற்ற இரண்டுசீரும் வெண்சீர் வெண்டளை; இரண்டாஞ் சீரோடு மூன்றாஞ்சீர் இயற்சீர் வெண்டளை; நாலாஞ்சீரோடு மற்றையடி முதற்சீர் நிரையொன்றாசிரியர்தளை; 'அரக்கர் கோமான்' நேரொன்றாசிரியத் தளை. அஃதேல், நேரீற்றியற்சீர் கலிக்கண் வரப்பெறா தென்றதென்னை? ஈண்டுக் கோமான் வந்ததால் எனின், அவ் விலக்கணங் கலித்தளையான் வரும் அடிக்கென்க. சிறுபான்மை வஞ்சித்தளை வருதலுங் கொள்க. (58)

பேராசிரியர்

373. விராஅய தளையு .... யின்றே.

இது, சீர்வகையான்வருங் கலியடித் தளைவிரவினுங் கடியப்படா தென்கின்றது; யாதனோடு விரவியோவெனின், வெண்பாவினோடு விராய்த் தட்பினுமென்றவாறு; என்னை?

"**தளைவகை** யொன்றாத் தன்மை யான" (370)

என வெண்பாவிற்குங் கூறினமையின்.

(இ-ள்) வெண்சீர் ஒன்றிவருதலுங் கடியப்படா கலிக்கு என்றவாறு.

'சீர்வகை யடிக்கண்' என்பது என்னை பெறுமாறெனின், விராஅய தளை என்றமையிற் பெறுதுமென்பது;

(உ-ம்)'தளைவகை யொன்றாத் தன்மை யான' (370)

என்புழிக் காட்டப்பட்டது. (61)

---

1. இன்றே - பேரா, நச். பாடம்

நச்சினார்க்கினியர்

61. விராஅய தளையும் .... யின்றே.

இதுவும் அவ்வடி சீர்வகையான் வருவதற்கோர் விதி.

(இ-ள்) சீர்வகையான் வருங் கலியடி தளைவிரவினுங் கடியப்படா எ-று.

(எ-டு)"மடியிலான் செல்வம்போல் மரனந்த வச்செல்வம்"
(பாலைக்கலி. 34)

எனவும்,
"வயக்குறு மண்டிலம் வடமொழிப் பெயர்பெற்ற"
(பாலைக்கலி. 24)

எனவும் பிறவாறும் வரும். (61)

சிவலிங்கனார்

விராஅய .... யின்றே.

(இ-ள்) எழுத்தெண்ணாமல் சீர் எண்ணிக் கூறப்படும் கலியடிக்குக் கலித்தளையோடு பிற பாத்தளையும் விரவிவருதலும் உண்டு, எ-று.

(உ-ம்) கலித்தொகைப் பாக்களிற் காண்க.

ஆசிரியப்பாவில் வெண்பாவடி

368. இயற்சீர் வெள்ளடி ஆசிரிய மருங்கின்
நிலைக்குரி மரபின்[1] நிற்பவும் உளவே. (59)

இலக்குவனார்

374. The line of *veṉbā* having *iyal* foot may occur in the *āsiriyam.*

பி.இ.நா.

யா.வி. 29

இயற்சீர் வெள்ளடி வஞ்சி யடியிவை
அகப்பட வரூஉம் அகவலும் உளவே.

யா.கா. 41

இயற்றளை வெள்ளடி வஞ்சியின் பாதம் அகவலுள்ளால்
மயக்கப்படா அல்ல.

---

1. நிற்கவும் பெறுமே - பேரா. நச். - பாடம்

இ.வி. 745

இயற்சீர் வெள்ளடி வஞ்சி யடியிவை
மயக்கப் படுதலும்.

மு.வீ.யா.ஒ. 13.

இயற்றளை வெள்ளடி வஞ்சியின் பாதம்
அகவற் பாவினுள் அடையப் பெறுமே.

இளம்பூரணர்

368. இயற்சீர் வெள்ளடி .... உளவே.

என்-னின், இஃது ஆசிரியப்பாவின்கண் வெண்பாவடி மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இயற்சீர் வெண்டளையா னாகிய வெண்பாவடி ஆசிரியப் பாவின்கண் நிற்றற்குரிய மரபினான் நிற்பனவுமுள என்றவாறு.

'உள' என்றதனாற் பலவடியும் வரப்பெறும் என்று கொள்க. வெண்டளை என்னாது 'அடி' என்றதனால், தளைவிரவுதல் பெரும் பான்மை அடிவிரவுதல் சிறுபான்மை என்று கொள்க.

(உ-ம் "நெடுங்கயிறு வலந்த"

என்னும் பாட்டினுள்,

"கடல்பா டொழிய இனமீன் முகந்து"[1] (அகம்.30)

என்றது இயற்சீர் வெண்டளையடி. பிறவுமன்ன. (59)

பேராசிரியர்

374. இயற்சீர் வெள்ளடி .... பெறுமே.

இது, வெண்சீரொன்றிவரும் அடி கலிப்பாவிற்கும் உரித்தென்ற முறையானே, இயற்சீர் வெள்ளடியான் வரும் அடி ஆசிரியத்திற்கு மயங்கியல் வகையான் நிலைக்குரித்தாகி நிற்கவும் பெறுமென்கின்றது.

(இ-ள்) அம் மயங்கியல்வகைதான் அப் பாவிற்கு உரிமை பூண்டு நிற்கும்; ஆசிரிய அடியோடு கூடிய கூட்டத்துக்கண் என்றவாறு.

வெண்பாவினுளாயின் ஆசிரியவடி முழுவதுந் தன்றளையோடு வாராது;[2] என்னை?

---

1. கடல்பா டொழிய - மாமுன் நிரை, டொழிய இனமீன் - மாமுன் நிரை, இனமீன் முகந்து - மாமுன் நிரை

2. வெண்பாவில் ஆசிரிய அடி வருமிடத்து ஆசிரியத்தளையான் வாராமல் இயற்சீர் வெண்டளையான் வரும் என்க.

"தூஉத் தீம்புகை தொல்விசும்பு போர்த்ததுகொல்
பாஅய்ப் பகல்செய்வான் பாம்பின்வாய்ப் பட்டான்கொன்
மாஅ மிசையான்கொ னன்ன னறுநுதலார்
மாஅமை யெல்லாம் பசப்பு" (மலைபடு.)

என்பதன் முதலடியுள்ளே 'தூஉத் தீம்புகை' என ஓர் ஆசிரியத் தளை வர, மற்றையன வெண்டளையாகி வந்தமையின்.[1] அற்றன்றி முழுவதூஉம் ஆசிரியத்தளைவரின் வெண்பா சிதையுமாகலின் இதனையே[2] சொல்லின் முடிவிலக்கணத்தான்[3] வெண்பாவென்றான்; எனவே, வேறோசை விராய வழித் தன்னோசை அழிதல் இதற்குப் பெரும்பான்மையாயிற்று; ஆசிரிய மாயின் அவ்வாறு அழியாதென்பது கருத்து. என்போலவோ வெனின், பளிங்குடன் அடுத்த பஞ்சி வேற்றுமையால், பளிங்கு வேறுபடுமல்லது பஞ்சி வேறுபடாததுபோல் வென்பது. இதனானே வெள்ளையென்பது ஒப்பினான் ஆகிய பெயரென்பதூஉம்[4] பெற்றாம்.

"எறும்பி யளையிற் குறும்பல் சுனைய
வுலைக்க லன்ன பாறை யேறிக்
கொடுவி லெயினர் பகழி மாய்க்கும்" (குறுந்.12)

இவ் வாசிரியத்துள், எல்லாவடியும் பாவேறுபட்டு இசையாமையின்[5] முதற்கணின்ற இயற்சீர் வெள்ளடி நிலைக்குரி மரபின் நின்றதாயிற்று.

"கொலைநவில் வேட்டுவன் கோள்வேட் டெழுந்த
புகர்முக யானை நுதன்மீ தழுத்திய
செங்கோற் கொடுங்கணை போலு மெனாஅது
நெஞ்சங் கவர்ந்தோ ணிரையிதழ்க் கண்ணே"

என்பது, செய்யுள் முழுவதும் இயற்சீர் வெள்ளடியான் வந்தது.

மற்று இயற்சீர் வெள்ளடியல்லது பிறவடி ஆசிரியத்துண் மயங்கப் பெறாதோவெனின், அது நிலைக்குரி மரபின் நில்லாமையின் உம்மையால் தழீஇக்கொள்ளப்படுஞ் சிறுபான்மையென்பது.

"பாஅல்புளிப்பினும் பகலிருளினும்" (புறம்.2)

என்றாற் போல்வன.

"மாவழங்கு பெருங்காட்டு மழகளிறு காணாது" (யா.வி.30)

---

1. தூஉய்த் தீம்புகை - இது மாமுன் நேர் வந்த நேரொன்றாசிரியத்தளை. இது வந்த தாயினும் மற்றையனவெல்லாம் வெண்டளையாதலின் இப் பாடல் வெண்பா எனப்பட்டது.
2. இதனையே - இப்படி வந்த மேற்பாடலையே
3. சொல்லின் முடிவிலக்கணத்தால்-பசப்பு என்ற சொல் முடிந்த இலக்கணத்தால்
4. ஒப்பினான் ஆகிய பெயர் - வெண்சீர் வெண்டளை வெண்பாவுக்குரியதாதல் போல இயற்சீர் வெண்டளையும் உரியதாகும் ஒப்புமை நோக்கி அதனையும் வெண்டளை என்றது ஒப்பினானாகிய பெயராம்.
5. பாவேறுபட்டு இசையாமையாவது ஆசிரிய ஓசையின் மாறி வேறு பாவோசை பட்டு இசையாமை.

என்னும் ஆசிரியவடியினைக் கலிப்பா மயங்கிற்றென்பாரும் உளர். அது துள்ளச் செல்லுங்கால் அளபெடுக்க வேண்டுமெனக் கூறி மறுக்க. (62)

நச்சினார்க்கினியர்

62. இயற்சீர் வெள்ளடி --------------- பெறுமே.

இது, வெள்ளடி ஆசிரியத்துள் வருமாறு கூறுகின்றது.

(இ-ள்) இயற்சீர் வெள்ளடி - இயற்சீர் வெண்டளை ஆசிரியச் சீரான் வரும் வெள்ளடி, ஆசிரிய மருங்கின் நிலைக்குரி மரபின் நிற்கவும் பெறுமே - ஆசிரியப்பாவின்கண் நிற்றற்குரிய மரபிலே நிற்கப்பெறும் எ-று.

உம்மை எதிர்மறை.

ஆசிரியவடியோடு மயங்கி அதற்குரிமைபூண்டு நிற்குமென்பார் நிலைக்குரி மரபினென்றார். இதனானே மயங்காமல் இயற்சீர் வெள்ளடி முழுதும் வரவும் பெறுமென்றுங் கொள்வாருமுளர்.

(எ-டு)"எறும்பி யளையிற் குறும்பல் சுனைய
வுலைக்கல் லன்ன பாறை யேறிக்
கொடுவி லெயினர் பகழி மாய்க்கும்" (குறுந்.12)

என இயற்சீர் வெள்ளடி பின்வருகின்ற ஆசிரியவடியோடு மயங்கி வந்தது.

இனி,

"கொலைநவில் வேட்டுவன் கோள்வேட் டெழுந்த
புகர்முக யானை நுதன்மீ தழுத்திய
செங்கோற் கடுங்கணை போலு மெனாஅது
நெஞ்சங் கவர்ந்தோள் நிரையிதழ்க் கண்ணே."

இது வெள்ளடி முழுதும் வந்ததென்று பேராசிரியர் காட்டினார்.

இதனை அகவலோசை பிறக்குமென்று கொள்ளின் இயற்சீர் வெண்டளையான் வருமென்ற கட்டளைவெண்பா வின்றாமென **மறுக்க.**

இனி, ஆசிரியத்துள் இங்ஙனம் வருமெனவே வெண்பாவினுள் ஆசிரிய வடி முழுவதூஉந் தன்றளையோடு வாரா சிறிது வருமென்று கொள்க. அது கலிக்கும் பரிபாடற்கும் உறுப்பாய் வரும். வெண்பாக்களில் ஆசிரியத் தளை வருமேனும் அவை வெள்ளைக் கொச்சகமாமாறு முணர்க. (62)

சிவலிங்கனார்

இயற்சீர் வெள் .... உளவே.

(இ-ள்) ஆசிரியப்பாவில் இயற்சீரான் வரும் இயற்சீர் வெண்டளை வருவதும் **உண்டு,** எ-று.

(உ-ம்)'நெடுங்கயிறு வலந்த'

என்னும் அகப்பாட்டில் (30),

"கடல்பா டொழிய இனமீன் முகந்து"

என இயற்சீர் வெண்டளையே வந்த அடி வந்தது.

வஞ்சியடியில் விரவல்

369. வெண்டளை விரவியும் ஆசிரியம் விரவியும்
ஐஞ்சீர் அடியும் உளவென மொழிப. (60)

இலக்குவனார்

375. The *thalai* of *venbā* and *āsiriyam* being mixed may occur with the line of five feet (in *kali* verse).

பி.இ.நா.

யா.வி. 30, 31

வெள்ளடி கலியினுள் விரவவும் பெறுமே.
வஞ்சியுள் அகவல் மயங்கினும் வரையார்.

யா.கா.41

வஞ்சி மருங்கின் எஞ்சா அகவல்.

இ.வி.745

ஐஞ்சீரடி கலி அகவலொடு அருகிவந் தடுத்தலும்

மு.வீ.யா.ஒ.14,16

வஞ்சியுள் அகவலடி கலியடியும்
விரவி வரப்பெறும்

கலியினும் அகவலினும் ஐஞ்சீரடி
வருவதும் உள.

இளம்பூரணர்

369. வெண்டளை விரவியும் .... மொழிப.

என்-னின், இதுவும் ஆசிரியப்பாவிற்குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இயற்சீர் வெண்டளை விரவியும் ஆசிரியத்தளை விரவியும் ஐஞ்சீரடியும் ஆசிரியப்பாவின்கண் வருவன உள என்றவாறு.

'உண்டு' என்னாது 'உள' என்றதனான் ஒருபாட்டிற் பல வருதலுங் கொள்க. ஆசிரியமென்பது அதிகாரத்தான் வந்தது. உதாரணம் முன்னர்க் காட்டுதும். (60)

பேராசிரியர்

375. வெண்டளை விரவியு .... மொழிப.

இஃது, ஐஞ்சீரடியும் வருமாறு கூறுகின்றது.

(இ-ள்) மேனின்ற அதிகாரத்தாற் கலிப்பாவிற்கு ஐஞ்சீரடியும் உள என்றவாறு.

"வெண்டளை விரவுயு மாசிரியம் விரவியும்"

என்றது என்னையெனின், அவ் வைஞ்சீரடி வெண்பாவோடு விராயும் ஆசிரியப்பாவோடு விராயும் வருமென்றவாறு. ஈண்டுத் தளை யென்றது அப் பாக்களை யாதலான் அப் பாக்களோடு விரவுமெனவே, அப் பாக்களை உறுப்பாகக் கொண்டு வரும் பிற செய்யுட்கண்ணும் அவ் வைஞ்சீரடி வருமென்பது பெற்றாம். வெண்டளையோடு விரவுமெனவே ஐஞ்சீரடி அவற்றுக்கு உரியவல்ல வென்பதாம்; எனவே, கலிப்பாவின் கண் வரும் ஐஞ்சீரடியாயின் அக் கலியோசைக்கு உரிமையுடைத்தென்ப தாகும்.

'உள' எனவே, ஐஞ்சீரடி கலியினுட் பயின்றுவரு மென்பதூஉம், அல்லனவற்றுட் பயிலாவெனவுங் கொள்க.

"விராய தளையு மொரூஉநிலை யின்று" **(373)**

எனப்பட்ட கலிப்பாவினோடு இயைபுபட்ட வெண்பாவடியும், அதனோடு இயைபுபட்ட ஆசிரியவடியுங் கூறி, அம் மூன்றனையும் உடன் கூறினா னாயினும், ஆண்டுச் சிறந்தவாறே ஈண்டும் அவ் வதிகாரத்ததாக நாட்டி, ஐஞ்சீரடியும் உளவென்று ஆண்டு நின்ற கலிக்குக் கூறிய, அவ்வடி வெண்டளை விரவியும் ஆசிரியம் விரவியும் வருமெனப் பிறவற்றுக்குங் கூறினானென்பது.

'ஐஞ்சீரடியும்' அளவடி மூன்று பாவிற்கும் உரித்தென்றால் அளவடியை அவ்வப் பாவிற்கு வேறுவேறு கொண்டாற்போல, ஐஞ்சீரடியையும் பாத்தோறும் வேறுபடுத்துக் கொள்க.

(உ-ம்) "தகைமிகு தொகைவகை யறியுஞ் சான்றவ ரினமாக" **(கலி.39)**

எனக் கலிப்பாவினுள் ஐஞ்சீரடி வந்தது.

"அரவணிந்த கொடிவெய்யோ னகம்புக்கா னரசவையன்
றகற்றியே"

எனக் கலியடி வெண்சீரான் வந்தது.

"கண்டகம் பற்றிக் கடக மணிதுளங்க
வொண்செங் குருதியி னோஒ கிடப்பதே - கெண்டிக்
கெழுதகைமை யில்லேன் கிடந்தூடப் பன்னா
ளழுதகண் ணீர்துடைத்த கை" (யா.வி.93)

என்னும் வெண்பாவினுள் இரண்டாமடி ஐஞ்சீரான் வந்தது.

"சிறுசோற் றானு நனிபல கலத்தன் மன்னே
பெருஞ்சோற் றானு நனிபல கலத்தன் மன்னே" (புறம்.235)

என்பன ஐஞ்சீரான் வந்த ஆசிரியவடி. ஆசிரியத்துள் இவ்வாறு இரண்டடி ஒருங்கு நிற்குமென்பது அறிவித்தற்கு ஐஞ்சீரடிக்குச் சிறந்த கலிப்பா வோடு வைத்தான் அதனை முறைபிறழ்[1] வென்பது. எனவே, வெண்பா விற்கு ஐஞ்சீரடி ஒன்றல்லது வாராதாயிற்று; இக் கருத்தேபற்றி,

"ஐஞ்சீ ரடுக்கலு மண்டில மாக்கலும்
வெண்பா யாப்பிற் குரிய வல்ல"

என்றார் பிறருமென்க. உம்மையான், இருசீரடியுங் கலியடியாம்.

"மன்று பார்த்து,
நின்று தாயைத்
கன்று பார்க்கு
மின்றும் வாரா" (467-பேரா.)

எனக் கொச்சகக்கலியுள் இருசீர் வந்தது.

மூன்று பாவிற்கும் முச்சீரடி உரித்தென்பது முன்னர்ச் சொல்லுதும், வரையாது கூறினமையின் கலிப்பாவிற்காயின் ஐஞ்சீரடி வருங்கால் தளை விரவியும் விரவாதும் வேண்டியவாறு வரப்பெறுமென்பது. (63)

நச்சினார்க்கினியர்

63. வெண்டளை விரவியும் .... மொழிப.

இது, மூன்று பாவிற்கும் ஐஞ்சீரடியும் வருமாறு கூறுகின்றது.

(இ-ள்) வெண்பாவோடுங் கலிப்பாவோடும் விராஅயும் ஆசிரியப்பா வோடு விராஅயும் வரும் ஐஞ்சீரடிகளும் உளவென்று கூறுவர் புலவர் எ-று.

ஈண்டுத் தளையென்றது அப் பாக்களை. வெண்டளையெனவே இரண்டு வெண்டளையும் அடங்கலின் அவற்றுள் வெண்சீர் வெண் டளையான் வருஞ் சீர்வகை வெண்பாவுஞ் சீர்வகைக் கலியும் அடங்கிற்று.

1. முறைபிறழ்ச்சியாவது ஐஞ்சீரடி ஆசிரியத்துள் வரும் என முன்னர்க் கூறாமல் கலிப் பாவில் வரும் எனப் பின்னர்க் கூறிப் பெற வைத்ததாம்.

இனி, 'நிரைமுதல் வெண்சீர்' (60) என்னுஞ் சூத்திரம் இதற்கதிகார மாதலின் கட்டளைக்கலிக்கும் ஐஞ்சீரடி கொள்க. தளை யென்றதனாற் கட்டளை வெண்பாவிற்குங் கொள்க.

'அடியும்' என்ற உம்மையான் வெண்பாவினுள் மிகவுஞ் சிறு பான்மை வருதல் கொள்க.

'உள'வென்றதனாற் கலிப்பாவினுள்ளும் அதற்குறுப்பாய் வரும் பாக்களுள்ளும் பெரும்பான்மை வருதலும் ஆசிரியத்துள் அடுக்கி வருதலுங் கொள்க.

(எ-டு)"கண்டகம் பற்றிக் கடக மணிதுளங்க
வொண்செங் குருதியு ளோஒ கிடப்பதே - கெண்டிக்
கெழுதகை யில்லேன் கிடந்தூடப் பன்னா
ளழுதகண் ணீர்துடைத்த கை"

எனவும்,

"கிடங்கிற் கிடங்கிற் கிடந்த கயலைத்
தடங்கண் தடங்கண் தளிரியல் கொள்ளாள் கிடங்கில்
வளையாற் பொலிந்தகை வையெயிற்றுச் செவ்வா
யிளையாடன் கண்ணொக்கு மென்று"

எனவும் இவற்றுள் இரண்டாமடி ஐஞ்சீரடி வந்தவாறு காண்க.

"அரவணிந்த கொடிவெய்யோ னகம்புக்கான் அரசவையன்
றகற்றியே"

எனவும்,

"அணிகிள ரவிர்பொறித் துத்திமா நாகத் தெருத்தேறித்
துணியிரும் பனிமுந்நீர்த் தொட்டுழந்து மலைந்தனையே"

எனவும், இவை கலியுள் ஐஞ்சீரடி வந்தன.

"தகைமிகு தொகைவகை யறியுஞ் சான்றவ ரினமாக"
(குறிஞ்சிக்கலி.3)

என்று கலிக்குறுப்பாகிய ஆசிரியத்துள் ஐஞ்சீரடி வந்தது.

பிறவுறுப்புகளிலுங் கலித்தொகையுள் ஐஞ்சீரடி வருமாறு காண்க.

"சிறுசோற் றானு நனிபல கலத்தன் மன்னே" **(புறம். 235)**

என்பது முதலாக நான்கடி ஆசிரியத்துள் ஐஞ்சீரடுக்கி வந்தன.

தன்னினமுடித்தல் என்பதனாற் கட்டளை யாசிரியத்திற்கு வருமேனு முணர்க.

இன்னும் ஐஞ்சீரடியும் என்ற உம்மையாற் கொச்சகக் கலிக்கு ஐஞ்சீரடியும் வருமாறு கொள்க.

"மன்றுபார்த்து நின்றுதாயைக் கன்றுபார்க்கு மின்னும் தாரார்"

என வரும்.

இதனை இன[1] மென்பாருமுளர் பின்னுள்ளோர். (63)

சிவலிங்கனார்

வெண்டளை விர .... மொழிப.

(இ-ள்) இயற்சீர் வெண்டளை கலந்தும் ஆசிரியத்தளை கலந்தும் வந்த ஐஞ்சீரடி ஆசிரியப்பாவில் வருவனவுள, எ-று.

(உ-ம்)" சிறியகட் பெறினே எமக்கீயு மன்னே"

என்னும் பாட்டில் (135),

"சிறுசோற் றானும் நனிபல கலத்தன் மன்னே"

என வருவது காண்க. சிறுசோற் றானும் - ஆசிரியத்தளை. றானும் நனி பல - இயற்சீர் வெண்டளை.

அறுசீரடி

370. அறுசீர் அடியே ஆசிரியத் தளையொடு நெறிபெற்று வரூஉம் நேரடி முன்னே. (61)

இலக்குவனார்

376. The line of six feet having *thaḷai* of *āsiriyam'* occurs in usage before the line of *nēr*.

இளம்பூரணர்

370. அறுசீர் அடியே .... முன்னே.

என்-னின், இதுவுமது.

(இ-ள்) அறுசீரடி யாசிரியத்தளையொடு பொருந்தி நடைபெற்று வரூஉம், நேரடிக்கு முன்னாக ஆசிரியப்பாவின்கண் என்றவாறு.

ஆசிரியப்பா என்ப ததிகாரத்தான் வந்தது.

---

1. இனம் என்றது பாவினத்தை

"சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே"
(புறம்.235)

என்பதன்கண் முதலடி நாற்சீரான் வந்தது; இரண்டாமடி ஆசிரியத் தளையொடு பொருந்தி யறுசீரடியாகி வந்தது.

'பொருந்தி'[1] என்றதனான் அத் தளை சில வருதல்[2] கொள்க ஏனையவை[3] புணருஞ் சீரான் வந்தன. (61)

பேராசிரியர்

376. அறுசீ ரடியே .... முன்னே.

இது, முறையானே அறுசீரடியுங் கலிப்பாவிற்கு உரித்தென்கின்றது.

(இ-ள்) நாற்சீரடிக்கு முன்னும் பின்னும் அறுசீரடியும் வருதலு முண்டு; அன்னது வருங்கால் தனக்குரிய வெண்டளையேயன்றி ஆசிரியத் தளையொடும் வழக்குப் பெற்று நடக்குங் கலிப்பாவினுள் என்றவாறு.

'நெறிபெற்று வரூஉம்' என்றதனாற் சிறுபான்மை நேரடி இடை யிட்டன்றி ஒரு செய்யுள் முழுவதூஉந் தானே வருதலுங் கொள்க.

'ஆசிரியத் தளையொடும்' என்ற உம்மையாற் கலி தனக்குரிய வெண்டளையான்[4] வருதலும் மயங்கி வருதலும் உரியவாம்..

"முன்னைத்தஞ் சிற்றின் முழங்கு கடலோத மூழ்கிப் பேர
வன்னைக் குரைப்ப னறிவாய் கடலேயென் றலறிப் பேருந்
தன்மை மடவார் தளர்ந்துகுத்த வெண்முத்தம்
புன்னையரும் பென்னப் போவாரைப் பேதுறுக்கும் புகாரே யெம்மூர்"

என்பது, மூன்றாம் அடி நேரடியாக[5] முன்னும் பின்னும் அறுசீர் வந்தது; பிறவுமன்ன.

"கரைபொரு கான்யாற்றங் கல்லதர் ரெம்முள்ளி வருதி ராயி
னரையிருள் யாமத் தடுபுலியோ நும்மஞ்சி யகன்று போக
நரையுருமே றுங்கைவே லஞ்சுக நும்மை
வரையர மங்கையர் வவ்வுத லஞ்சுதும் வாரலையோ" (ப.513)

என்பதன் முதலடியுள், 'வருதி ராயின்' என்பது ஆசிரியத்தளை; ஒழிந்தன வெண்டளை. 'முன்' என்றதனான் இடமுன்னுங் காலமுன்னுங் கொள்ளப்படும்.

---

1. பொருந்தி' என்றது சூத்திரத்தில் 'நெறி பெற்று' என்பதன் பொருள் நெறி பெற்று என்றதனான் எனக் கொள்க.
2. சில வருதல் என்றது நாற்சீருக்கு மேலும் சில எனக் கொள்க.
3. ஏனையவை - முதலடி மூன்றாமடி முதலியனவும்.
4. வெண்சீரான் என்பது பொருள்.
5. நேரடியாக - நாற்சீரடியாக.

"தொக்குத் துறைபடியுந் தொண்டையஞ்செவ் வாய்மகளிர்
தோண்மேற் பெய்வான்
கைக்கொண்ட நீருட் கருங்கண் பிறழ்வ
கயலென் றெண்ணி
மெய்க்கண்ணும் பெய்கல்லார் மீண்டுகரைக் கேசொரிந்து
மிளிர்வ காணா
ரெக்கர் மணற்கிளைக்கு மேழை மகளிர்த்தே
யெறிநீர்க் கொற்கை"

எனச் செய்யுள் முழுவதும் அறுசீரடியே வந்தது.

"வரைபுரை திரைபோழ்ந்து மணநாறு
நறுநுதல் பொருட்டு வந்தோய்"

என ஆசிரியத்தளையானும் அறுசீரடி வந்தது.

மற்றுத் தளையென்றோதுவது கட்டளையடிக் கென்றீரால், ஈண்டுத் தளையென்ற தென்னையெனின், அவ் வரையறை ஒருவன் சொல்லுவது; அறுசீரடி வருங்கான் முதற்கண் நேரடி தூக்கிப் பின் இருசீரோடு தொடுத்தல் வேண்டும் என்னும் அஃது இச் சூத்திரத்திற்கு ஏலாது; நேரடிமுன் அறுசீர் வரினென்பது பதின்சீரடியாமாகலின்; அல்லதூஉம் குறளடி தூங்கியுஞ் சிந்தடி தூங்கியும் அறுசீரடி வருதலின் அஃது அமையாதென்பது;[1] என்னை?

"வாராது நீத்தகன்றார்
வருமாறு பார்த்திருந்தார்
வடிக்கண் போல"

என்ற வழி, இருசீரான் யாத்தமைப்பின் அது தூக்கெனப்படாது.[2]

"செங்காந்தள் கைகாட்டுங் காலஞ்
சேட்சென்றார் வாரார்கொல் பாவம்"

என முச்சீரான் யாத்தமையின் அதுவுந் தூக்கெனப் படாது; அறுசீரடியே தூக்காகக் கொண்டமையின், நேரடி முன் இருசீரடி வந்த தென்றதூஉம் பிழைக்கு[3]மென்பது. (64)

நச்சினார்க்கினியர்

64. அறுசீ ரடியே .... முன்னே.

---

1. நேரடி முன் ஆசிரியத்தளையொடு அறுசீர்வரும் எனக் கொண்டு முன்னர் நேரடி யமைத்துத் தொடர்ந்து ஆசிரியத் தளையமைய இருசீர் சேர்த்து அறுசீர் அடிவரும் என்பான் ஒருவன். அஃது இங்கு ஏலாது. நேரடிமுன் அறுசீர் வரின் என்றால் நேரடிச் சீர் நான்கும் பின்னர் அறுசீரும் எனப்பட்டுப் பத்துச்சீர் கூறியவாறாகும். குறளடிகள் சேர்ந்து அறுசீரடியாகவும் இரண்டு சிந்தடிகள் சேர்ந்து அறுசீரடியாகவும் வரும். அப்படி வரின் அவை செய்யுள் எனப்படா.

2 செய்யுள் எனப்படாது

3. பிழைக்கும் - பிழைபடும்.

இஃது, எய்தியதன்மேற் சிறப்பு விதி; கலிக்கு ஐஞ்சீரடி யெய்தியதன் மேலே அறுசீரடியும் எய்துவித்தான்.

(இ-ள்) நேரடி முன்னே - நாற்சீரடிக்கு முன்னும் பின்னும், அறு சீரடியே ஆசிரியத்தளையொடு நெறிபெற்று வருஉம். அறுசீரடி தனக்குரிய வெண்டளையோடன்றி ஆசிரியத் தளையோடு வழங்கப் பெற்று நடக்கும் கலியினுள் எ-று.

முன் என்றதனை இடமுன்னாகவும் காலமுன்னாகவுங் கொள்க. தளையொடும் என்ற உம்மையாற் றனக்குரிய வெண்சீர் வெண்டளை யான் வருதலும் மயங்கி வருதலும் பெற்றாம்.

(எ-டு)"முன்னைத்தஞ் சிற்றின் முழங்கு கடலோத மூழ்கிப் பெயர
அன்னைக் குரைப்பல் அறிவாய் கடலேயென் றலறிப் பெயருந்
தன்மை மடவார் தணந்துகுத்த வெண்முத்தம்
புன்னையரும் பேயென்னப் போவாரைப் பேதுறுக்கும்
புகாரே யெம்மூர்"

"கரையொரு கான்யாற்றங் கல்லதர் ரெம்முள்ளி வருதி ராயின்
அரையிருள் யாமத் தடுபுலியோ நும்மஞ்சி யகன்று போக
நரையுருமே றுங்கைவே லஞ்சுக நும்மை
வரையர மங்கையர் வவ்வுதல் அஞ்சுதும் வாரலையோ."

இவை மூன்றாமடி நேரடியாக முன்னும் பின்னும் அறுசீரடி வந்தன.

இவற்றுக்கு ஆறாஞ் சீர்க்கு ஆசிரியத்தளையான் வந்தன. நெறி பெற்று என்றதனாற் பாக்கட்டளை விட்டன்றி யொரு செய்யுள் முழுவதூஉந் தானே வருதலுங் கொள்க.

"தொக்குத் துறைபடியுந் தொண்டையஞ்செவ்
வாய்மகளிர் தோண்மேற் பெய்வான்
கைக்கொண்ட நீருட் கருங்கண்
பிறழ்வ கயலென் றெண்ணி
மெய்க்கண்ணும் பெய்கல்லார் மீண்டுங்கரைக்
கேசொரிந்து மிளிர்வ காணா
ரெக்கர் மணற்கிளைக்கு மேழை
மகளிர்க்கே யெறிநீர்க் கொற்கை"

என வரும்.

இவை கொச்சகக்கலி.

"வரைபுரை திரைபோழ்ந்து மணநாறு
நறுநுதல் பொருட்டு வந்தோய்"

என ஆசிரியத்தளையானும் அறுசீரடி வந்தது.

கட்டளையன்றேற் றளையென்றதனை நாற்சீரடிக்குத் தளை கோடலின்றென்றார்; இவற்றிற்குத் தளை வரையறையின்று. இவற்றைப் பின்னுள்ளோர் இனமென்பர். (64)

சிவலிங்கனார்

அறுசீ ரடியே .... முன்னே.

(இ-ள்) ஆசிரியத் தளையோடு கூடிய அறுசீரடி நேரடிக்கு முன்னாக வரப்பெறும், எ-று.

(உ-ம்)"சிறியகட் பெறினே எமக்கீயு மன்னே" **(புறம்.135)**

என்னும் நேரடியின் பின்னர்,

"பெரியகட் பெறினே யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே"

என அறுசீரடி வந்தது. இது ஆசிரியப்பாவில் வந்தது.

"தன்மை மடவார் தளர்ந்துகுத்த வெண்முத்தம்
புன்னை யரும்பேய்ப்பப் போவாரைப் பேதுறுக்கும் புகாரே எம்மூர்"

இதில் முன்னடி நேரடியாகப் பின்னடி அறுசீரடி வந்தது காண்க. இது கலிப்பாவில் வந்தது.

எழுசீரடி

371. எழுசீ ரடியே முடுகியல் நடக்கும். (62)

இலக்குவனார்

377. The line of seven feet occurs in *mudukiyal*.

இளம்பூரணர்

371. எழுசீ ரடியே .... நடக்கும்.

என்-னின், எழுசீரடிக்குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) எழுசீரான் வரும் முடுகியலடி[1] என்றவாறு. உதாரணம் முன்னர்க் காட்டுதும். (62)

பேராசிரியர்

377. எழுசீ ரடியே .... னடக்கும்.

இஃது, எழுசீரான் வரும் அடி கூறுகின்றது.

(இ-ள்) எழுசீரான் வருமளவும் அடியுள, அவை பயின்று நடப்பது முடுகியற்கண்[2] என்றவாறு.

---

1. முடுகியலடி - சந்தவியலடி அராகவடி; 2. முடுகியற்கண் - அராக (உறுப்பு) அடிக்கண்

எனவே, முடுகாதவழி அத்துணை நடையாட்டம் இல எழுசீரடி என்பதாம். பாவென்னும் உறுப்பு இடனாகும். ஏகாரம் பிரிநிலை.

"தாதுறு முறிசெறி தடமல ரிடையிடை
தழலென விரிவன பொழில்" (யா.வி. 229)

எனவும்,

"கவிரிதழ் கதுவிய துவரித ழரிவையர்
கலிமயிற் கணத்தொடு விளையாட."

எனவும் எழுசீரடி முடுகிவந்தது. இவை பரிபாடலுள்ளுங் கலியுள்ளுங் காணப்படும். முடுகாது வரும் எழுசீரடி வந்தவழிக் கண்டுகொள்க. (65)

நச்சினார்க்கினியர்

65. எழுசீர் அடியே .... நடக்கும்.

இது, முறையானே கலிக்கு எழுசீரடியாமாறு கூறுகின்றது.

(இ-ள்) எழுசீரான் வரும் அடியே முடுகியற்கண்ணே பயின்று நடக்கும், எ-று.

ஏகாரம் பிரிநிலை.

(எ-டு) "கவிரிதழ் கதுவிய துவரிதழ் அரிவையர்
கலிமயிற் கணத்தொடு விளையாட"

என எழுசீரடி முடுகிவந்தது.

இவை கலிக்கும் பரிபாடற்கும் உரிய. முடுகாத எழுசீரடி வந்துழிக் காண்க. (65)

சிவலிங்கனார்

எழுசீரடி --------------------- நடக்கும்.

(இ-ள்) கலிப்பாவுக்குரிய சந்த அடியாகிய அராகவுறுப்படி எழு சீரடியால் வரும், எ-று.

(உ-ம்) "தாதுறு முறிசெறி தடமல ரிடையிடை
தழலென விரிவன பொழில்"

இஃது எழுசீர் அராகவுறுப்பு.

"உலகு குளிர எமது மதியில் ஒழுகும் அமுத கிரணமே"
(முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் - வருகைப்பருவம்)

என ஆசிரியப்பாவிலும் உறுப்பு என்பதின்றி எழுசீர் முடுகியல் வருவதுண்டு.

சிறப்பு விதி

372. முடுகியல் வரையார் முதலிரண் டடிக்கும்.[1] (63)

இலக்குவனார்

378. *Mudukiyal* is not prevented from having first two lines (lines of five feet and six feet).

இளம்பூரணர்

372. முடுகியல் வரையார் .... டடிக்கும்.

என்-னின், எய்தியதன்மேற் சிறப்பு விதி உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட ஐஞ்சீரடிக்கும், அறுசீரடிக்கும் முடுகியல் நீக்கப்படாதென்றவாறு.

உதாரணம் முன்னர்க் காட்டுதும். (63)

பேராசிரியர்

378. முடுகியல் வரையார் .... ரடிக்கும்.

இஃது, எய்தாதது எய்துவித்தது; எழுசீரடியேயன்றி ஐஞ்சீரடியும், அறுசீரடியும் அராகந் தொடுக்குமென்றமையின்.

(இ-ள்) எழுசீரடிக்கு முன்னர் இடைநின்ற ஐஞ்சீரடியும், அறுசீரடியும் முடுகியல் நீக்கார் என்றவாறு.

அவற்றுக்குச் செய்யுள்:

"காரெதிர் கலியொலி கடியடி யுருமி னியங்கறங்க
நேரிதழ் நிரைநிரை நெறிவெறிக் கோதைய ரணிநிற்ப" **(கலி.105)**

என்பன ஐஞ்சீரடி முடுகிவந்தன.

"மலர்மலி புகலெழ வலர்மலிர் மணிபுரை நிமிர்தோள் பிணைஇ"
(கலி.102)

என்பது அறுசீரடி முடுகிற்று.

'முதல் ஈரடிக்கும்' என்ற உம்மை, எச்சவும்மை; அவ் வும்மையால் நாற்சீரடியும் இத்துணைப் பயிலாது முடுகு என்பது.

"புரிபு புரிபு புக்க பொதுவரைத்
தெரிபு தெரிபு குத்தின வேறு" **(கலி.103)**

என வரும்.

---

1. முதலீரடிக்கும் - பேரா., நச். பாடம்

“இரிபெழு பதிர்பதிர் பிகழ்ந்துடன் பலர்நீங்க
வரிபரி பிறுபிறுபு குடர்சோரக் குத்தித்தன்
கோடழியக் கொண்டானை யாட்டித் திரிபுழக்கும்
வாடில் வெகுளி யெழிலேறு கண்டை யிஃதொன்று” (கலி.104)

என்பதனுண் முடுகியலடி இரண்டும்[1] வந்தன.

மற்றிவற்றை அராகமென்னாமோவெனின், அதனைப் பரிபாடற்கு உறுப்பென்றமையாற் பிறவடியொடு தொடராவுற்று வரவேண்டும், இஃது அன்னது அன்று என்பது. எழுசீரடியிற் சிறுவரவினவாகலான் ஐஞ்சீரடி யினையும் அறுசீரடியினையும் வரையாரென்றான். அவற்றினுஞ் சிறுவர விற்றாகலின் இதனை உம்மையாற் கொண்டான். முற்றும்மை யாகாதோ வெனின், அதுவும் எச்சப்படுதலின்[2] அமையுமென்பது. அல்லதூஉம் முதலடியிரண்டே அன்மையின்[3] முற்றாகாதென்பது. (66)

நச்சினார்க்கினியர்

66. முடுகியல் வரையார் .... ரடிக்கும்.

இஃது, எய்தாதது எய்துவித்தது; எழுசீரடியே யன்றி அறுசீரடியும் ஐஞ்சீரடியும் முடுகு மென்றலின்.

(இ-ள்) எழுசீரடிக்கும் ஐஞ்சீரடிக்கு முன்னின்ற அறுசீரடிக்கும்[1] ஐஞ்சீரடிக்கும் இம் முடுகியல் நீக்கார் எ-று.

‘முதலீ ரடிக்கும்’ என்ற வும்மை எச்சவும்மை யாதலின் நாற்சீரடியும் இத்துணைப் பயிலாது முடுகுமென்க.

உதாரணம் மேலைச் சூத்திரத்துட் காட்டுதும். (66)

சிவலிங்கனார்

முடுகியல் .... அடிக்கும்.

(இ-ள்) எழுசீரில் வரும் முடுகியல் ஓசையானது ஐஞ்சீரடிக்கும் அறுசீரடிக்கும் வருதலை நீக்கார் எ-று.

373. ஆசிரிய மருங்கினும் வெண்பா மருங்கினும் மூவகை யடியு முன்னுதல் இலவே. (64)

---

1. முதல்மூன்று அடிகளும் நாற்சீர் முடுகியலடிகள். நான்காமடி ஐஞ்சீர் முடுகியலடி.

2. முற்றும்மையும் ஒரோவழி எச்சமாகும் ஆதலின்.

3. முதலில் உள்ள அடிகள் இரண்டின்றி மூன்றாக உண்மையின்.

இலக்குவனார்

379. In the *āsiriyam* and *veṇbā* the three kinds of lines (mudukiyal) are not thought of.

இளம்பூரணர்

373. ஆசிரிய மருங்கினும் .... இலவே.

என்-னின், எய்தியது விலக்குதல் நுதலிற்று.

(இ-ள்) முடுகியலாகி வரு மூவகை யடியும் ஆசிரியப்பாவினும் வெண்பாவினும் நிற்றல் இல என்றவாறு.

எனவே, கலிப்பாவினுள் நிற்கப்பெறும் என்றவாறாயிற்று.

உதாரணம் முன்னர்க் காட்டுதும்.

'நாற்சீர் கொண்டதடி' எனவோதிப் பின்னும் இருசீரடி வஞ்சிக்கண் உரித்தென ஓதி ஐஞ்சீரடியும், அறுசீரடியும், எழுசீரடியும் உள என ஓதி னமையான், அடியாவது இரண்டு முதலாக வருமெனவும் அவற்றுள் இருசீரடி குறளடி எனவும், முச்சீரடி சிந்தடி எனவும், நாற்சீரடி அளவடி எனவும், ஐஞ்சீரடி நெடிலடி எனவும், அறுசீர் முதலாக வரும் அடியெல் லாங் கழிநெடிலடியா மெனவும் பிற நூலாசிரியர் கூறிய இலக்கணமும் இவ்வாசிரியர்க்கு உடம்பாடென்று கொள்க. அறுசீர் முதலான அடிகளுள் எழுசீர், எண்சீர் சிறப்புடையன எனவும் எண்சீரின் மிக்கன சிறப்பில்லன எனவும் அவ் வாசிரிய ருரைப்ப. இவ் வாசிரியரும் அடிக்குச் சீர் வரை யறையின்மை "ஆங்கனம் விரிப்ப வளவிறந் தனவே பாங்குற வுணர்ந் தோர் பன்னுங் காலை" (செய்யுளியல், 49) என்றதனான் உணர்த்தினார் என்று கொள்க. ஈண்டு நாற்சீரடியை எடுத்தோதியது வெண்பாவும் ஆசிரியப் பாவுங் கலிப்பாவும் அவ் வடியினால் வருதலின் என்று கொள்க. (64)

பேராசிரியர்

379. ஆசிரிய மருங்கினும் .... லிலவே.

இது, முடுகியல் இன்ன பாவிற்கு உரித்தென்கின்றது; எய்தியது இகந்துபடாமற் காக்கின்றதூஉமாம்; என்னை? நாற்சீரடி முதன் மூன்றும் அகவலோசைக்கும் செப்பலோசைக்கும் உரியவெனவே, அவை முடுகி ஆண்டுஞ் சேறலெய்தியதனைக் கலிப்பாவிற்கல்லது ஆகாதென்றமையின்.

(இ-ள்) ஆசிரியம் வெண்பா என்னும் இரண்டு பாவினும் முடுகியலடி மூன்றும் புகா என்றவாறு.

---

1. அறுசீரடி ஐஞ்சீரடிக்கு முன்னிற்றல் இடமுன்; எழுசீரடிக்குமுன் நிற்றல் காலமுன்.

உம்மை, முற்றும்மை. மற்றை முச்சீரடியோடு நான்கென்னானோ வெனின், அஃது இவற்றுக்கு ஈண்டு ஒவ்வாது. முடுகிவருதல் பெரும் பான்மைத்தாகலின் 'மூவகையடி' என அடையடுத்துக் கூறினானென்பது. அல்லதூஉம் எழுசீரடி விலக்கானன்றே, அதனை ஆசிரிய மருங்கினும் வெண்பா மருங்கினும் மயங்குமென்ப தின்மையி னென்பது.

இனி, அறுசீரடி ஆசிரியத்தளையொடும் வருமென்றது (376) அகவ லோசைக்கு உரித்தென்றமையானும்,

"வெண்டளை விரவியு மாசிரியம் விரவியும், ஐஞ்சீரடியும் வரும்"
(375)

என்றமையானும் அவற்றை அளவடியுடன் எடுத்தோதி விலக்கினான். மூவகை அடியுமென்றது ஐஞ்சீரடி முதன் மூன்றுமெனப்படுமென்பார். அளவடி முடுகுதல் ஆசிரியத்திற்கும் உரிமையின் அது வரையறை யின்றென்றலும் ஒன்று; அது,

'திருமழை தலைஇய விருணிற விசும்பின்' (மலைபடு.1)

என வரும். அதற்கு முடுகியற்றன்மை இன்றென்பது கருத்து.. வஞ்சிப் பாவிற்குக் குறளுஞ் சிந்தும் அல்லது இன்மையின் இவ் வாராய்ச்சி இன்றென்பது.

எனவே, ஆசிரியத்தளையொடு முடுகிய லடியினைக் கலியடியென் றும் முடுகாத அறுசீரடி ஆசிரியத்தளையோடு நெறிபெற்று வருதற்கும் கலிப்பாவிற்குச் சிறுபான்மையான் வருமென்பதூஉஞ் சொல்லப்பட்டது. அல்லாதார் ஐஞ்சீரடி முதலிய மூன்றுங் கலிக்குரிய, பிற பாவிற்கு உரிய வல்ல என்றற்கு வந்தது இச் சூத்திரமென்ப; அற்றன்று; அங்ஙனங் கூறில் தாம் வேண்டும் ஐஞ்சீரடி ஆசிரியத்துள்ளும் புகாதென்று மறுக்க. 'முன்னுதலில' என்றது, யாண்டுமாகாதென்றவாறு. இவ் விலக்கண மெல்லாம் மேற்காட்டிய செய்யுளுட்[1] கண்டுகொள்க. (67)

நச்சினார்க்கினியர்

67. ஆசிரிய மருங்கினும் .... இலவே.

இது, முடுகியல் இன்ன பாவிற்கு உரித்தென்கின்றது.

(இ-ள்) தனியே வரும் ஆசிரியப்பாவினும் வெண்பாவினும் முடுகியலடி மூன்றும் வரப்பெறா எ-று.

மூன்றென்றது நாற்சீரடியும், ஐஞ்சீரடியும், அறுசீரடியுமான அடிகளை. எழுசீரடி முன்னுதலின்று என்றதனால் முற்கூறிய மூன்றடி யானும் வரும் முடுகியலோடு விராஅய்த் தொடர்ந்து ஒன்றாய்க் கலிக் குறுப்பாய் வரும் ஆசிரியமும் வெண்பாவுமுள என்று கொள்க.

1. செய்யுளுள்

(எ-டு) "நெறியறி செறிகுறி புரிபிரி பறியா வறிவனை முந்துறீஇத்
தகைமிகு தொகைவகை யறியுஞ் சான்றவ ரினமாக
வேய்புரை மென்றோட் பசலையும் அம்பலு
மாயப் புணர்ச்சியு மெல்லாமுட னீங்கச்
சேயுயர் வெற்பனும் வந்தனன்
பூவெழி லுண்கணும் பொலிகமா வினியே" (குறிஞ்சிக்கலி.3)

இஃது, அறுசீரடியும் ஐஞ்சீரடியும் முடுகி ஒரு தொடராய் வந்த ஆசிரியம்.

"தகைவகை மிசைமிசைப் பாய்மா ரார்த்துட
னெதிரெதிர் சென்றார் பலர்" (முல்லைக்கலி.2)

எனவும்,

"இரிபெழு பதிர்பதிர் பிகந்துடன் பலர்நீங்க
வரிபரி பிறுபிறுபு குடர்சோரக் குத்தித்தன்
கோடழியக் கொண்டானை யாட்டித் திரிபுழக்கும்
வாடில் வெகுளி யெழிலேறு கண்டை யிஃதொன்று
வெருவரு தூம மெடுப்ப வெகுண்டு
திரிதருங் கொல்களிறும் போன்ம்" (முல்லைக்கலி.3)

எனவும் இவை நாற்சீரடி முடுகியலோடொன்றாய் வந்த வெண்பா. இதனுள் ஐஞ்சீரடியும் வந்தது.

"மேனிலை மிடைகழி பிழிபுமேற் சென்று
வேனுதி புரைவிறற் றிறனுதி மருப்பின் மாறஞ்சான்
பானிற வெள்ளை யெருத்தத்துப் பாய்ந்தானைக்
கோணாது குத்து மிளங்காரித் தோற்றங்காண்
பான்மதி சேர்ந்த வரவினைக் கோள்விடுக்கு
நீனிற வண்ணனும் போன்ம்" (முல்லைக்கலி.3)

என ஐஞ்சீரடி முடுகியலோ டொன்றாய் வந்த வெண்பா.

"மலர்மலி புகலெழ வலர்மலிர் மணிபுரை நிமிர்தோள் பிணைஇ
யெருத்தோ டிமிலிடைத் தோன்றினன் தோன்றி
வருத்தினான் மன்றிலிவ் வேறு" (முல்லைக்கலி.2)

இஃது அறுசீரடி முடுகியலோ டொன்றாய் வந்த வெண்பா.

இவற்றை அராக மென்னாமோ வெனின்; என்னாம்; அராகமாவது பிறிதொன்றனோடு கூட்டி ஆற்றுவியாமல் தானே போய் அற்று நிற்பதாம்.. அது பரிபாடற் செய்யுளுறுப்பென்பர்; இது பிறிதொன்றனோடு கூட்டி ஆற்றுவித்துக் கோடற்குரித்தாம்; இவ் வேறுபாடு அறிக. (67)

சிவலிங்கனார்

ஆசிரிய மருங் .... இலவே.

(இ-ள்) ஆசிரியப்பாவிலும் வெண்பாவிலும் ஐஞ்சீர் அறுசீர் எழுசீர் முடுகியலடிகள் வருதல் இல்லை, எ-று.

ஆசிரியத்துள் சிந்தடி

374. ஈற்றயல் அடியே ஆசிரிய மருங்கில்
தோற்ற முச்சீர்த் தாகு மென்ப. (65)

இலக்குவனார்

380. They say that the last but one line of *āsiriyam* appears with three feet.

375. இடையும் வரையார் தொடையுணர்ந் தோரே. (66)

இலக்குவனார்

381. The persons well versed in rhyming will not avoid (the line of three feet) even in the middle.

இளம்பூரணர்

374. ஈற்றயல் அடியே .... மென்ப.

என்-னின், இதுவும் ஆசிரியப்பாவிற் குரியதோர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஆசிரியப்பாவின் ஈற்றயலடி தோன்றுமிடத்து முச்சீர்த் தாகவும் பெறும் என்றவாறு.

(உ-ம்) "முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே
மலையன் ஒள்வேற் கண்ணி
முலையும் வாரா முதுக்குறைந் தனளே."

இதனுள் ஈற்றயலடி முச்சீரான் வந்தது. (65)

375. இடையும் வரையார் .... தோரே.

என்-னின், இதுவுமது.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட முச்சீரடி ஆசிரியப்பாவினுள் இடையும் வரப்பெறும் என்றவாறு.

"நீரின் தண்மையுந் தீயின் வெம்மையுஞ்
சாரச் சார்ந்து தீரத் தீருஞ்
சாரல் நாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாவே."

இதனுள் மூன்றாமடியும் நான்காமடியும் முச்சீரான் வந்தவாறு கண்டு கொள்க. (66)

பேராசிரியர்

380. ஈற்றய லடியே .... மென்ப.

381. இடையும் வரையார் .... வோரே.

இவை இரண்டு சூத்திரமும் உரையியைபு நோக்கி உடனெழுதப் பட்டன. இவை ஆசிரியத்துட் சிந்தடி இன்னுழி வருமென்றமையின் எய்தாதது எய்துவித்தனவாம்.

(இ-ள்) ஆசிரியத்துள் எருத்தடி யொன்றும் இடையடி யிரண்டு மாகி முச்சீரடி வரும் என்றவாறு.

'முச்சீர்த்து' என்று ஒருமை கூறினமையின் அஃது ஒன்றாகலும், 'தொடையுணர்வோர்' என்றமையின் இடை வருவன இரண்டாகலுங் கூறினானென்பது.

'இடையும் வரையார்' என்றமையான் ஈற்றயன் முச்சீர்த்தாதல் பெரும்பான்மை.

(உ-ம்)"கண்ணி கார்நறுங் கொன்றை காமர்

....

நீரற வறியாக் கரகத்துத்
தாழ்சடைப் பொலிந்த வருந்தவத் தோற்கே" (புறம்.1)

என அப் பாட்டினை முழுவதூஉங் கொள்ள ஈற்றயலடி முச்சீர்த்தாயிற்று.

"நீரின் றண்மையுந் தீயின் வெம்மையுஞ்
சாரச் சார்ந்து தீரத் தீருஞ்
சாரல் நாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாதே" (யா.வி.257)

என்பதனுள்,

"சார னாடன் கேண்மை"

எனவும்,

"சாரச் சாரச் சார்ந்து"

எனவும், முச்சீரடி இரண்டு வந்தன. ஏகாரம் பிரிநிலை. மற்று,

"நரந்த நாறுந் தன்கையாற்
புலவுநாறு மென்றலை தைவரு மன்னே" (புறம். 235)

என முச்சீரடி இடையும் ஒன்று வந்ததாலெனின், 'தோற்றம்' என்றதனான் எருத்தடி முச்சீராய காலத்துக் குட்டம்பட்டு இனிது விளங்கும். இடையிடை ஒன்று வருதலும் உண்டாயினும் அத்துணை இனிதன்று அதுவென்பது கொள்க.

"பெரியகட் பெறினே" (புறம். 235)

என இருசீரடி வந்ததாலெனின், அதனைச் சொற்சீரடியென்று களைக.

"உப்பிலாஅ வவிப்புழுக்கல்
கைக்கொண்டு பிறக்குநோக்காது" (புறம். 363)

எனவுங் காட்டுப; இவை வஞ்சியடியெனப்படுமென்பது. வெண்சீரான் வஞ்சியடி வருமோவெனின், வாரா; வஞ்சிச்சீர் விரவினல்லதென்பது.

"உப்பிலாஅ வவிப்புழுக்கல்"

என்பதோவெனின், அது மற்றை இருசீரடியொடு கூட்டத்துக் காட்டலானும் வஞ்சியடி போன்றது. (69)

நச்சினார்க்கினியர்

68. ஈற்றய லடியே .... என்ப.

69. இடையும் .... வோரே.

இரண்டு சூத்திரமும் உரையியைபு நோக்கி உடன் கூறிற்று. இவை ஆசிரியத்துட் சிந்தடி வருமென எய்தாததெய்துவித்தது.

(இ-ள்) ஆசிரிய மருங்கி னீற்றயலடியே தன் தோற்றரவு முச்சீரை யுடைத்தாய் வரத்தோன்றும்; தொடையுணர்வோர் இடையிலும் வருதலும் நீக்கார் எ-று.

ஏகாரம் பிரிநிலை.

முச்சீர்த்து என ஒருமை கூறியவதனால் ஈற்றயலடிக்கண் ஒன்றே வருதல் பெரும்பான்மையென்றும். தொடையுணர்வோர் என்றதனால் இடையொன்று வருதலும் கொள்க.

(எ-டு) "நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே" (குறுந்.3)

இஃது ஈற்றயலடி முச்சீர்த்தாயிற்று.

"நீரின் றண்மையுந் தீயின் வெம்மையுஞ்
சாரச் சார்ந்து தீரத் தீருஞ்
சார னாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாவே."

இஃது இடையிரண்டிணைந்து வந்தது.

"சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே
சிறுசோற் றானு நனிபல கலத்தன் மன்னே
பெருஞ்சோற் றானு நனிபல கலத்தன் மன்னே
என்பொடு தடிபடு வழியெல்லாம் எமக்கீயு மன்னே
அம்பொடு வேல்நுழை வழியெல்லாந் தானிற்கு மன்னே
நரந்த நாறுந் தன்கையாற்
புலவுநாறு மென்தலை தைவரு மன்னே
அருந்தலை யிரும்பாணர் அகன்மண்டைத் துளையுரீஇ
இரப்போர் கையுளும் போகிப் புரப்போர்
புன்கண் பாவை சோர வஞ்சொல் நுண்தேர்ச்சிப்
புலவர் நாவிற் சென்றுவீழ்ந் தன்றவன்
அருநிறத் தியங்கிய வேலே
ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ?
இனிப், பாடுநரு மில்லைப் பாடுநர்க்கொன் றீகுநரு மில்லைப்
பனித்துறைப் பகன்றை நறைக்கொண் மாமலர்
சூடாது வைகி யாங்குப் பிறர்க்கொன்று
ஈயாது வீயு முயிர்தவப் பலவே." (புறம்.235)

இதனுள் 'நரந்த நாறுந் தன்கையால்' எனவும், 'அருநிறத் தியங்கிய வேலே' எனவும் தனித்து வந்தன. 'பெரியகட் பெறினே' என்பது சொற்சீரடி. இதனைக் குறளடியாக்கிக் குறளடியும் வருமென்பர் பின்பு நூல் செய்த வாசிரியர். 'உப்பிலாஅ வவிப்புழுக்கல்' (புறம்.363) முதலிய வஞ்சியடி. (68, 69)

சிவலிங்கனார்

ஈற்றயல் .... என்ப.

(இ-ள்) ஆசிரியப்பாவின் ஈற்றயலடி முச்சீருடையதாகும் என்ப எ-று.

இடையும் .... தோரே.

(இ-ள்) ஆசிரியப்பாவின் இடையிலும் முச்சீரடி நீக்கார், எ-று.

(உ-ம்) "சிறியகட் பெறினே" என்னும் புறப்பாட்டில் காண்க.

கலிப்பாவில் முச்சீரடி

376. முச்சீர் முரற்கையுள் நிறையவும் நிற்கும். (67)

இலக்குவனார்

382. The three feet (line) stands fully in *kali*.

இளம்பூரணர்

376. முச்சீர் முரற்கையுள் .... நிற்கும்.

என்-னின், கலிப்பாவிற்கு ஈற்றுவேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஈற்றயலடி முச்சீரென வோதப்பட்டது கலிப்பாவின்கண் நாற்சீர் ஆகியும் வரும் என்றவாறு.

இச் சூத்திரம் எதிரது நோக்கிக் கூறப்பட்டது; 'எழுசீ ரிறுதி யாசிரியங் கலியே' (செய்யுளியல், 72) என ஓதுகின்றாராதலின்.

(உ-ம்) " அரிமான் இடித்தன்ன"

என்னும் பாலைக்கலியுள், சுரிதகம்

"முளைநிரை முறுவல் ஆயத்துள் எடுத்தாய்ந்த
இளமையுந் தருவதோ இறந்த பின்னே" **(கலி. 15)**

என ஈற்றயலடி நாற்சீரான் வந்தது. (67)

பேராசிரியர்

382. முச்சீர் முரற்கையு .... நிற்கும்.

இது, கலிப்பாவிற்கு அளவடியும், நெடிலடியும் அதனினிறந்த அடியும் உரிமைகூறி, இனிச் சிந்தடியும் உரித்தென்கின்றது.

(இ-ள்) கலிப்பாவினுண் முச்சீரடி நிரம்பவும் நிற்கும் என்றவாறு.

'நிறைய நிற்றல்' என்பது, அச் செய்யுள் முழுவதும் அவ்வடியே வருதலாம். உம்மையான் ஒரு செய்யுள் நிறைய வாராது ஒன்றும் இரண்டும் பலவுமாகி அம் முச்சீரடி வருதல் பெருவரவிற்றென்பது. தாம் குறைந்த அடியாதலிற் கலிப்பாவிற்கு உறுப்பாகிய சின்னத்திற் குறைய நிற்கும் இயல்பினவாயினும், நிறைய நிற்றலுடைய கொச்சகத்து ளென்றவாறு.

"செய்தானக் கள்வன் மகன்" **(கலி.51)**

எனவே, வெண்கலியுள் இறுதிக்கணல்லது வாராது.

"நின்கண்ணாற் காண்பென்மன் யான்" (கலி.39)

என்பது, இடை வந்தது. எண் உறுப்பின்கண் இரண்டும் நான்கும் வருமாறு கண்டுகொள்க.

"நீர்வரக் கண்கலுழ்ந் தாங்குக்
கார்வரக் கண்டனங் காதலர்

தேர்வரக் கண்டில மன்னோ
பீர்வரக் கண்டனந் தோளே"

என மூச்சீரடி ஒருசெய்யுள் நிறையவும் வந்தவாறு. (70)

நச்சினார்க்கினியர்

70. முச்சீர் முரற்கையுள் .... நிற்கும்.

இது, கலிக்குச் சிந்தடியும் வருமென எய்தாத தெய்துவித்தது.

(இ-ள்) முரற்கையுள் - கலிப்பாவினுள், முச்சீர் நிறையவும் நிற்கும் - முச்சீரடி ஒரு செய்யுள் முழுதும் நிறையவும் நிற்கும் எ-று.

உம்மையான் முதலிடைகடை என்னும் மூன்றிடத்தும் ஓரோவடி யாயும் இரண்டும் பலவுமாய வடியாயும் நிற்கும் என்றவாறு.

(எ-டு) "நீர்வரக் கண்கலுழ்ந் தாங்குக்
கார்வரக் கண்டனங் காதலர்
தேர்வரக் கண்டில மன்னோ
பீர்வரக் கண்டனந் தோளே."

முச்சீரடி முழுதும் வந்தது.

"அரிபரி பறுப்பன சுற்றி
யெரிதிகழ் கணிச்சியோன் சூடிய பிறைக்க
ணுருவ மாலை போலக்
குருதிக் கோட்டொடு குடர்வ லந்தன" **(முல்லைக்கலி.3)**

இது முடுகியலான் முதலடியும் மூன்றாமடியும் முச்சீராய் வந்தது.

"நின்கண்ணாற் காண்பென்மன் யான்" **(குறிஞ்சிக்கலி.3)**

இதுவும் இடையில் வந்தது.

"செய்தானக் கள்வன் மகன்" **(குறிஞ்சிக்கலி.15)**

இஃது ஈற்றில் வந்தது.

பலவும் வந்தன வந்துழிக் காண்க. (70)

சிவலிங்கனார்

முச்சீர் .... நிற்கும்.

(இ-ள்) முச்சீரடி கலிப்பாவில் பயிலவும் நிற்கும், எ-று.

முரற்கை என்றது கலிப்பாவை. கலிப்பாவின் முதல் இடை கடை எனும் மூன்றிடத்தும் முச்சீரடி வரப்பெறும்.

உதாரணம் பேராசிரியத்துக் காண்க.

இளம்பூரணர் நிறையவும் என்பதற்கு அதிகப்படவும் எனக் கொண்டு முச்சீர் நாற்சீராக நிறைந்து கலியுள்வரும் என்று கொண்டார். உதாரணமாக,

"அரிமான் இடித்தன்ன"

என்னும் பாலைக் கலியுள் (15) சுரிதகம்,

"முளைநிரை முறுவல் ஆயத்துள் எடுத்தாய்ந்த
இளமையும் தருவதோ இறந்த பின்னே"

என ஈற்றடி நாற்சீரான் வந்ததைக் காட்டுவர்.

வஞ்சிப்பாவின் இறுதி

377. வஞ்சித் தூக்கே செந்தூக் கியற்றே. (68)

இலக்குவனார்

383. The *vanji* (verse) is in the nature of *asiriyam*. The last line of *vanji* verse is like that of *asiriyam* (verse).

இளம்பூரணர்

377. வஞ்சித் தூக்கே .... இயற்றே.

என்-னின், வஞ்சிப்பாவிற்கு ஈறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வஞ்சிப்பாவின் இறுதி ஆசிரியப்பாவின் இயல்பிற்று என்றவாறு.

தூக்கெனினும் இறுதியெனினும் ஒக்கும். செந்தூக்கெனினும் ஆசிரிய வீறு எனினும் ஒக்கும். 'செந்தூக் கியற்று' என்றமையால் ஈற்றயலடி முச்சீரான் வருதலும் நாற்சீரான் வருதலுங் கொள்க.

(உ-ம்)" தொடியுடைய தோள்மணந்தனன்"

என்னும் பாட்டுள்,

"இடுக ஒன்றோ சுடுக ஒன்றோ
படுவழிப் படுகவிப் புகழ்வெய்யோன் தலையே" (புறம். 239)

இதனுள் ஈற்றயலடி நாற்சீரான் வந்தது.

"பூந்தாமரைப் போதலமர"

என்னும் பாட்டுள்,

"மகிழ மகிழ்தூங் கூரன்
புகழ்த லானாப் பெருவண் மையனே" (யா.வி.ப.74)

இதனுள் ஈற்றயலடி முச்சீரான் வந்தது. (68)

பேராசிரியர்

383. வஞ்சித் தூக்கே .... கியற்றே.

இது, முறையானே அடியுரிமை கூறியவாற்றான் வஞ்சிப் பாவிற்குக் கூறியதிலன்; எற்றுக்கு? அது,

"வஞ்சி யடியே யிருசீர்த் தாகும்" (357)

எனவும்,

"முச்சீ ரானும் வருமிட னுடைத்து" (359)

எனவும் மேற்கூறப்பட்டமையின் அது நோக்கி அடியுரிமை கூறப்படாத வஞ்சிப்பாவிற்கு (வஞ்சியினது) ஈற்றடியும் அவ்விருசீரடியும் முச்சீரடியுமாவான் சென்றதனை விலக்கி இன்ன அடியான் முடியுமென்கின்றது.

(இ-ள்) வஞ்சிப்பாவினது இறுதியடி ஆசிரியவடி இறுதி போன்று இறுக என்றவாறு.

எனவே, ஆசிரியத்திற்கு ஓதிய சீரானுந் தளையானும் இறுமென்றவாறு.

(உ-ம்)"மாக்கட னிவந்தெழுதரு
செஞ்ஞாயிற்றுக் கவினைமாதோ
வனையை யாகன் மாறே
தாயி றூவாக் குழவி போல
வோவாது கூஉநின் னுடற்றியோர் நாடே." (புறம். 4)

என மண்டிலவாசிரியத்தா[1] னிற்றது.

"செந்தூக் கியற்றே"

என்ற மாட்டேற்றானே,

"ஈற்றய லடியே யாசிரிய மருங்கிற்
றோற்ற முச்சீர்த் தாகு மென்ப" (380)

எனவும்,

"இடையும் வரையார் தொடையுணர் வோரே" (381)

எனவும் எய்திய விதி ஈண்டும் எய்துவிக்க.

---

1. நிலைமண்டில ஆசிரியம் - எல்லாவடியும் நாற்சீரான் வரும் ஆசிரியம், மண்டில ஆசிரியம்- பின்னிரண்டடியும் மண்டில ஆசிரியவடிகள்.

"அனையை யாகன் மாறே" (புறம். 4)

என முச்சீரடி இடைவந்தது.

"இழைபெற்ற பாடினிக்குக்
குரல்புணர்சீர்க் கொளைவல் பாணமக னும்மே யெனவாங்
கொள்ளழற் புரிந்த தாமரை
வெள்ளி நாராற் பூப்பெற் றிசினே." (புறம். 11)

இஃது, ஈற்றயலடி முச்சீர்த்தாகி வந்த செந்தூக்கியற்றாகி யிற்ற வஞ்சிப்பா. பிறவும் அன்ன. ஈண்டுத் தனிச்சொல் வேண்டுமென்று பிற் காலத்து நூல் செய்தாரும் உளர். அது சான்றோர் செய்யுள் எல்லாவற் றோடும் பொருந்தாமையானும், பிற்காலத்திற்செய்த நூல்பற்றி முற்காலத்துச் செய்யுட்கெல்லாம் இலக்கணஞ் சேர்த்துதல் பயமின்றாதலானும் அஃதமை யாதென்பது. வஞ்சிப்பாவின் ஈற்றடி வரைந்தோதவே இடையாயின எல்லா அடியும் வரப்பெறு மென்பதாம்.

"நேரிழை மகளி ருணங்குணாக் கவருங்
கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை"[1] (பட்டினப். 23-4)

என ஆசிரியவடியும் வெண்பாவடியும் இடை வந்தன. (71)

நச்சினார்க்கினியர்

71. வஞ்சித் தூக்கே ---------------- கியற்றே.

இது, வஞ்சிக்கும் சிந்தடி வரும் என்கின்றது.

(இ-ள்) வஞ்சிப்பாவி னிறுதி ஆசிரியப்பாவி னிறுதி போன்று இறுக எ-று.

'செந்தூக் கியற்று' என்ற மாட்டேற்றானே, ஆசிரியத்திற்கோதிய சீரானும் தளையானும் ஈற்றயலடி முச்சீரடியாய் வருதலும், இடைக்கண் முச்சீரடி வருதலும் பெறப்பட்டது.

(எ-டு) "வாள், வலந்தர மறுப்பட்டன
செவ்வா னத்து வனப்புப் போன்றன
தாள், களங்கொளக் கழல்பறைந்தன
கொல்ல் லேற்றின் மருப்புப் போன்றன
தோல், துவைத்தம்பிற் றுளைதோன்றுவ
நிலைக்கொராஅ விலக்கம் போன்றன
மாவே, யெறிபதத்தா னிடங்காட்டக்
கறுழ்பொருத செவ்வாயான்
எருத்து வவ்விய புலிபோன்றன
களிறே, கதவெறியாச் சிவந்துராஅய்
நுதிமழுங்கிய வெண்கோட்டா
னுயிருண்ணுங் கூற்றுப்போன்றன
நீயே, யலங்குளைப் பரீஇயிவுளிப்

1. பட்டினப்பாலைப்பாட்டு வஞ்சிப்பாட்டாம்.

பொலந்தேர்மிசைப் பொலிவுதோன்றி
மாக்கட னிவந்தெழுதருஞ்
செஞ்ஞாயிற்றுக் கவினைமாதோ
அனையை யாகன் மாறே
தாயில் தூவாக் குழவிபோல
ஓவாது கூஉநின் னுடற்றியோர் நாடே" (புறம். 4)

என முச்சீரடி யிடைவந்து மண்டலவாசிரியத்தா னிற்றது.

"அரிமயிர்த் திரண்முன்கை"

என்னும் பாட்டினுள்,

"இழைபெற்ற பாடினிக்குக்
குரல்புணர்சீர்க் கொளைவல்பாண் மகனும்மே எனவாங்
கொள்ளழற் புரிந்த தாமரை
வெள்ளி நாராற் பூப்பெற் றிசினே." (புறம். 11)

இஃது ஈற்றயலடி முச்சீர்த்தாகிச் செந்தூக்கியற்றா யிற்ற வஞ்சிப்பா.

தனிச்சொற் பெறுமென்று பின்னுள்ளோர் கூறிய நூல்கள் சான்றோர் செய்யுட் காகாவென்று கொள்க.

ஈற்றடி வரைந்தோதவே, இடையி னெல்லா வடியும் வரப்பெறு மாயிற்று.

"நேரிழை மகளிர் உணங்குணாக் கவருங்
கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை" (பட்டினப்.23-4)

என ஆசிரியவடியும், வெள்ளடியும் இடைவந்தன. (71)

சிவலிங்கனார்

வஞ்சி .... இயற்றே.

(இ-ள்) வஞ்சிப்பாவின் இறுதியடி ஆசிரியப்பாவின் இறுதியடி போன்றது, எ-று. அதாவது ஆசிரியச் சீரானும் தளையானும் வந்து ஈற்றயலடி முச்சீராகவோ, நாற்சீராகவோ முடிவது என்பதாம். உதாரணம் உரையாசிரியர்கள் காட்டியவற்றுட் காண்க.

வெண்பா வீற்றடி

378. வெண்பா[1] ஈற்றடி முச்சீர்த் தாகும்
அசைச்சீர்த்[2] தாகும் அவ்வழி[3] யான. (69)

1. வெண்பாட் டீற்றடி - பேரா, நச். பாடம்
2. அசைச் சீராகும் - பாடம்
3. அவ்வயி னான - பேரா, நச். பாடம்.

இலக்குவனார்

384. The last line of *veṇbā* is of three feet.

385. The (single) syllable will form a foot there.

பி.இ.நூ.

யா.வி. 57

செப்பல் இசையன வெண்பா; மற்றவை
அந்தடி சிந்தடி ஆகலும், அவ்வடி
அந்தம் அசைச்சீர் ஆகவும் பெறுமே.

இ.வி. 728

யா.வி. 57 சூத்திரமே.

வீர. 113

என்றும் அளவடி யீற்றடி யல்லன; ஈற்றடியும்
நன்று மலர்காசு நாள்பிறப்பு என்றிற்ற சிந்தடியே.

தொன். 220

வெள்ளைக்கு .... ஏற்கும் அளவடி:
ஈற்றடி சிந்தடி ஈற்றுச்சீர் அசைச்சீர்

இளம்பூரணர்

378. வெண்பா ஈற்றடி --------------- யான.

என்-னின், வெண்பாவிற்கு இறுதியடியும் இறுதிச்சீரும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வெண்பாவினீற்றடி மூன்று சீரையுடைத்தாகும். அதன்கண் இறுதிச்சீர் அசைச்சீரான் வரும் என்றவாறு

உதாரணம் முன்னர்க் காட்டுதும். (69)

பேராசிரியர்

384. வெண்பாட் .... தாகும்.

இது, வெண்பாவிற்கு ஈறு உணர்த்துகின்றது. ஆசிரியத்துக்கோ வெனின், தனக்கோதிய அளவடியானே இறுதலின் வேறுபாடு கூற வேண்டா. எருத்தடியும் இடையடியும் முச்சீரான் வருமென வேறு பட்டவழிக் கூறி, அல்லாதன அளவடியாதல் கொள்ள வைத்தானென்பது.

(இ-ள்) வெண்பாவின் இறுதியடி யொன்றும் முச்சீரான் அன்றி வாராது என்றவாறு. அவை முன்னர்க் காட்டுதும்; அஃதேல்,

"அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவளாய்
நட்டாலு நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலு மேன்மக்கள் மேன்மக்க ளேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும்" (மூதுரை, 4)

என முச்சீரடி இடையும் வந்ததால் வெண்பாவினுளெனின், முச்சீர்த்தென்னாது 'ஆகும்' என்று ஆக்கங் கொடுத்துக் கூறிய அத்துணை ஆக்கமின்றி இடையுஞ் சிறுபான்மை வருமெனக் கொள்க. அல்லாதார் அதனை வெண்பா வன்றென்ப. (72)

385. அசைச்சீர்த் .... னான.

இது, மேலதற்கு எய்தியதோர் விதி.

(இ-ள்) வெண்பாவின் இறுதிவரும் முச்சீரடியின் ஈற்றுச்சீர் வரப்பெறாது அசைச்சீரல்லாது என்றவாறு.

மேல்,

"அசைநிலை வரையார் சீர்நிலை பெறல்" **(339)**

என்றான், அவற்றுள் உரியசைச்சீர் முதலும் இடையும் இறுதியும் வருமென்பான்,

"இயற்சீர்ப் பாற்படுத்து" **(340)**

இயற்றுக என்றான். அவ்வாறே இயலசைச்சீரும் முச்சீரடி இறுதிவருமென்பது ஈண்டுக் கூறியவாறு. (73)

நச்சினார்க்கினியர்

72. வெண்பாட்(டு) -------------- தாகும்.

இது, வெண்பாவிற்கு முச்சீர் வருமாறு கூறுகின்றது.

(இ-ள்) வெண்பாவி னிறுதியடி முச்சீரான் வருதலை உடைத்தாகும் எ-று.

உதாரணம் மேற்காட்டுதும்.

சீர்த்தென்னாது 'ஆகும்' என ஆக்கங் கொடுத்தமையான் அத்துணை யாக்கமின்றி நாற்சீரான் மண்டலித்து வருதலும் இடையினும் முதலினுஞ் சிறுபான்மை முச்சீரான் வருதலுங் கொள்க.

(எ-டு) "அறையருவி யாடாள் தினைப்புனமுங் காவாள்
பொறையுயர் தன்சிலம்பிற் பூந்தழையுங் கொய்யாள்
உறைகவுள் வேழமொன் றுண்டென்றா ளன்னை
மறையறநீர் வாழிய மையிருங் குன்று"

என மண்டலித்து வந்தது.[1]

"அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவளாய்
நட்டாலு நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலு மேன்மக்கள் மேன்மக்க ளேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும்." (மூதுரை, 4)

இது மூதுரை.

"நாளுமொன் றீயாப் பகலும்
பகாஅஅ நண்புடைக் கேளிர்ப் பிரிவுந்
தகாஅன் இவனென்னுஞ் சொல்லுமிந் நான்கும்
வகாஅ தொழிக வெமக்கு."

இது சான்றோரெல்லாரும் பிறைதொழுததேனும்[2], பாட்டாய் வருதலின் மந்திரமாகாது.

இனி,

"வஞ்சி வெளிய குருகெல்லாம் பஞ்சவன்
நான்மாடக் கூடலிற் கல்வலிது
சோழ னுறந்தைக் கரும்பினிது தொண்டைமான்
கச்சியுட் காக்கை கரிது."

"கறைப்பற் பெருமோட்டுக் காடு கிழவோட்கு
அரைத்திருந்த சாந்துதொட் டப்பே
மறைக்குமா மாட்டாது மற்றுந்தன் கையைக்
குறைக்குமாங் கூர்ங்கத்தி கொண்டு."

இவை ஔவையுங் காரைக்காலம்மையுங் கூறியன.

"உலகு பசிப்பப் பசிக்கு முலகு
துயர்தீரத் தீரு நிலவு
நிறுத்திவாழ் வஞ்சி யுடையாழ்வி யென்னு
மொருத்தியா லுண்டிவ் வுலகு."

அங்ஙனம் செய்யுள் செய்த முன்னோரைக் கண்டு பின்னுள்ளோர், இதனைச் செய்யுளாகச் செய்தலின் இவற்றை ஆரிட[3] மென்பார் இவ் விதி யறியாதார். (72)

73. அசைச்சீர்த் .... னான.

இது, மேலதற்கு எய்தியதோர் விதி.

(இ-ள்) அவ் வெண்பாவின் ஈற்றில் வரும் முச்சீரடியின் இறுதிச்சீர் அசைச்சீராய் நிற்கும் எ-று.

"இயற்சீர்ப் பாற்படுத் தியற்றினர் கொளலே" (செய். 28)

---

1. மண்டலித்து வருதல் - அடியொத்து வருதல் 2. பிறைதொழுதல் விளக்கமில்லை.
3. ஆரிடம் - செய்யுட் குற்றம்

என்பதனுள் வெண்பாவின் முதலுமிடையும் இயலசைச் சீரிரண்டும் வாரா; உரியசைச் சீரிரண்டும் வரும்; என்றதனை ஈண்டு இறுதிக்கண் இயலசைச் சீரும் உரியசைச் சீரும் வருமென்றவாறு. (73)

சிவலிங்கனார்

வெண்பா .... யான.

(இ-ள்) வெண்பாவின் ஈற்றடி முச்சீருடையதாகும்; அதன் இறுதிச்சீர் அசைச்சீரான் வரும்.

உதாரணம் பின்னர்.

புறனடை

379. நேரீற் றியற்சீர் நிரையும் நிரைபும்
சீரேற் றிறூஉம் இயற்கைய என்ப. (70)

இலக்குவனார்

386. It is the nature of ending to *nirai* and *niraipu* succeeding *nēr* ending of *iyal sīr*.

இளம்பூரணர்

379. நேரீற் றியற்சீர் .... என்ப.

என்-னின், மேலதற்கோர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வெண்பாவி **னிறுதி**ச்சீரின் அயற்சீர் நேரீற் றியற்சீராயின் நிரையசையும் நிரைபு **அசையுஞ்** சீராந்தன்மையைப் பெற்று முடியும் இயற்கையை யுடைய **என்றவாறு.**

(உ-ம்) "கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை". (குறள். 9)

"தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது." (குறள். 7)

என வரும். (70)

பேராசிரியர்

386. நேரீற் றியற்சீர் -------------------------- வென்ப.

இது, மேற்கூறப்பட்ட இயற்சீர் நான்கும் வருங்கால் இன்னுழி நின்று இன்னவாறு கொள்ளப்படுமென்பது உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) நேரிறுதி வந்த நிரையும் நிரைபுமே இறுதிச்சீராய் நிற்பன என்றவாறு.

எனவே, தனிவந்த நிரையும் நிரைபும் நிரைமுதற்சீர் போலத் தளை கொள்ளப்படுமென்பதாம். 'ஏற்றிறூஉம்' என்ற இலேசினான் இடைவந்த நிரைபசையும் அவ்வாறு கொள்க; அஃது,

"இயற்சீர்ப் பாற்படுத் தியற்றினார் கொளின்" (340)

என்பதனான் அடங்காதோவெனின், - அடங்காது, என்னை? அசைச்சீர்தான் அடங்குமாற்றுக்கு ஆண்டுக் கூறினான், அது பிறிதுசீர் அசைச்சீரொடு தட்கு மாற்றுக்குங் கூறல் வேண்டுமென்பது.[1] அல்லதூஉம் ஆண்டு அளவடிக்குக் கூறினான் இது சிந்தடிக்கென்பது. வரலாறு :

"வாரிய பெண்ணை வருகுரும்பை வாய்ந்தனபோ
லேரிய வாயினு மென்செய்வ - கூரிய
கோட்டியானைத் தென்னன் குளிர்சாந் தணியகலங்
கோட்டுமண் கொள்ளா முலை" (முத்தொள். 71)

எனவும்,

"அயிற்கதவம் பாய்ந்துழக்கி யாழித்தேர் குத்தி
யெயிற்கதவங் கோத்தெடுத்த கோட்டாற் பனிக்கடலுட்
பாய்செய்த நாவாய்போற் றோன்றுமே யெங்கோமான்
காய்சினவேற் கோதை களிறு." (முத்தொள். 17)

எனவும் இவற்றினுட் 'கொள்ளா' எனவும் 'கோதை' எனவும் நின்ற நேரீற்றியற்சீர் முன்னர் முலையெனவும் களிறெனவும் நிரையும் நிரைபுஞ் சீரேற்றவாறும் வெண்பாட்டீற்றடி முச்சீர்த்தாயவாறும் ஆண்டு அசைச் சீராய் வந்தவாறுங் கண்டுகொள்க வென்றார்க்கு, முச்சீரடியின் முதற்சீர்க்குத் தளை கூறாரோவெனின், ஆண்டுத் தளைவகையின்றியும் வருதலின், அதனை வரைந்து கூறாரென்பது, என்னை?

"கோட்டுமண் கொள்ளா முலை" (முத்தொள். 71)

எனவும்,

"காய்சினவேற் கோதை களிறு" (முத்தொள். 17)

எனவும், தளைவகையான் வந்தன.

"உறாஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்
செறாஅய் வாழியென் னெஞ்சு" (குறள். 1200)

எனவும்,

1. அசைச்சீராகவும் அடங்கும் என்பதற்கு ஆண்டுக் கூறினார். ஈண்டு அவ் வசையுடன் மேல்வந்த சீர் இயைந்து தளைகொள்ளும் என்பதற்குக் கூறல் வேண்டும். நச்.விளக்கம் தெளிவுடையது; காண்க.

"கலாஅற் கிளிகடியுங் கானக நாட
விலாஅர்க் கில்லை தமர்" (நாலடி. 283)

எனவும் தளைவகையின்றி வந்தன.[1] (74)

நச்சினார்க்கினியர்

74. நேரீற் றியற்சீர் .... என்ப.

இஃது, அவ்வகைச்சீர் நான்கனுள் நிரையும் நிரைபும் இன்னுழி நின்று இன்னவாறு தட்கும் என்கின்றது.

(இ-ள்) நிரையும் நிரைபும் நேரீற் றியற்சீர்ப்பின்னே தளை கொண்டு இறும் இயல்பின எ-று.

'இயற்சீர்ப் பாற்படுத் தியற்றுக' (செய். 28) என்றவைதாம் வருஞ் சீரோடு தட்குமாறு கூறி, ஈண்டு அவை முன்னின்ற சீரோடு தட்குமாறு கூறுகின்றது.

(எ-டு) "கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
யெடுப்பதூஉ மெல்லா மழை" (குறள். 15)

"நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்" (குறள்.1072)

"தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது" (குறள். 7)

"அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு" (குறள். 1)

இவை தேமா புளிமா என்னும் நேரீற்றியற்சீர் நிரையசைச்சீரோடும் நிரைபசைச் சீரோடுந்[2] தட்டன. (74)

சிவலிங்கனார்

நேரீற் றியற்சீர் .... என்ப.

(இ-ள்) வெண்பாவின் ஈற்றயற்சீர் நேரீற்று இயற்சீராயின் அது இறுதிச்சீராக நிரையையும் நிரைபையும் கொண்டு முடியும் இயல்பினது என்பர், எ-று.

---

1. செறாஅய், விலாஅர்க் என்பன அளபெடையாதலின் அளபெடை எழுத்தை விலக்க நிரைநிலையில் நின்றன. அடுத்த சீருடன் தளைவகையில் சேரவில்லை அன்றியும் செறாஅய் என்பது புளிமா எனப்பட்டு வாழிய என்பதன் முதலசை நேருடன் வெண்பாத்தளையின்றி ஆசிரியத்தளையாக மாறுபட்டு வந்தது. அவ்வாறே 'விலாஅர்க் கில்லை' என்பதிலும் மாமுன் நேர் என ஆசிரியத்தளை வெண்பாவில் வந்து தளை வகையின்றி முடிந்தது காண்க.
செறாஅஅய் எனவும் விலாஅஅர் எனவும் அளபெடையை மிகுதிப்படுத்தி மூவசைச் சீர்க்குத் தளைவகை சிதையாமற் கொள்வாரும் உண்டு.

2. மழை, இலர் - நிரையசைச்சீர், அரிது, உலகு - நிரையசைச்சீர்

(உ-ம்) "வேண்டுதல்வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை யில." (குறள். 4)

"அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு." (குறள். 1)

380. நிரையவண் நிற்பின் நேரு நேர்பும்
வரையின் றென்ப வாய்மொழிப் புலவர். (71)

இலக்குவனார்

387. The poets of true learning say that the occurrence of *nēr* and *niraipu* after *nirai* is not prevented.

இளம்பூரணர்

380. நிரையவண் நிற்பின் .... புலவர்.

என்-னின். இதுவுமது.

(இ-ள்) வெண்பாவி னீற்றயற்சீர் நிரையீற் றியற்சீராயின் நேரசையும் நேர்பசையும் முடிபாம் என்றவாறு.

(உ-ம்)"பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்" (குறள். 1021)

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று" (குறள். 108)

என வரும்.

"வெண்சீ ரீற்றசை நிரையசை யியற்றே" (செய்யுளியல், 28)

என்பதனான் ஈற்றயற்சீர் மூவசையான் வரினும் நேரும் நேர்பு முடிபாகக் கொள்ளப்படும்.

(உ-ம்) "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்" (குறள். 10)

"இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. (குறள். 5)

என வரும்.. (71)

பேராசிரியர்

387. நிரையவ ணிற்பி .... புலவர்.

இஃது, ஒழிந்த அசைச்சீர் நிரையீற்றுப் பின்னன்றி வாராவென்கின்றது.

(இ-ள்) நேரீற்றியற்சீர் நின்றவழி நிரையீற்றியற்சீர் நிற்பினென்பான் 'நிரையவண் நிற்பின்' என்றான், ஆண்டு நிரையும் நிரைபும் வரின் தளைவழுவாமாதலான். நேரும் நேர்புமே வந்து சீரேற்று முடிதல் வரைவின்று என்றவாறு.

"கொழுநனை மைந்தன் கொணர்ந்ததற் காக
முழுமுலை பாய்ந்தன பால்"

எனவும்,

"வண்டொன்று வந்தது வாரற் பனிவாடாய்
பண்டன்று பட்டினங் காப்பு" (முத்தொள். 97)

எனவும் இவற்றுட் பாய்ந்தன வெனவும் பட்டினமெனவும் வந்த நிரையீற் றியற்சீர்ப் பின்னர் நேரும் நேர்பும் வந்தன. முன்னர்,

"நேரீற் றியற்சீர் நிரையு நிரைபும்" (386)

எனக் கூறி ஈண்டு நிரையவண் நிற்பினெனச் சுட்டிக் கூறியவதனானே அதுவுங் நிரையீற் றியற்சீ ரென்பதும் அஃதிரண்டாஞ் சீரென்பதூஉங் கொள்க; அல்லாதார் அதனை வெண்சீர்க்கும் பொதுவெனக் கூறி,

"வெண்சீ ரீற்றசை நிரையசை யியற்றே" (341)

என்றதனான் வெண்சீரிறுதி நிரையாக இயற்றி அதன் அடிப்பின் நேர்பசை கொடுப்ப.

"எய்போற் கிடந்தானென் னேறு" (பு.வெ.மா.வாகை. 22)

என்புழி,

"கிடந்தானென்"

என நின்ற புலிசெல்வாயினைக் கணவிரியாக இயற்றி,[1]

"நிரையவ ணிற்பின் நேரும் நேர்பும்"

என்றதனான் ஏறு என்னும் நேர்பசை கொடுப்பர்.

அஃது, ஈண்டு ஆராய்ச்சியின்றெனபது: என்னை? இது கட்டளை யடி யன்மையின். (75)

1. கிடந்தானென் - இது புளிமாங்காய் (புலிசெல்வாய்) எனப்படும். இதனைக் கருவிளம் (கணவிரி) என இரண்டசைச் சீராகக் கொண்டு ஏறு எனும் நேர்பசையுடன் முடிப்பர்.

நச்சினார்க்கினியர்

75. நிரையவண் .... புலவர்.

இஃது, ஒழிந்த நேருநேர்பும் இன்னுழி நின்று இன்னவாறு தட்குமென்கின்றது.

(இ-ள்) நேரீற்றியற்சீர் நின்ற விரண்டாஞ் சீரிடத்து நிரையீற்றியற்சீர் நின்றபின் அதன் பின்னொரு நேர்பும் வந்து தட்டல் நீக்கப்படா வென்பர் மெய்ம்மொழிப் புலவர் எ-று.

(எ-டு)"பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்" (குறள். 1121)

"அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்" (குறள். 64)

"இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று" (குறள். 100)

"படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு" (குறள். 381)

எனப் பாதிரி கணவிரி நிரையீற்றியற்சீரோடும் நேரசைச்சீரோடுந் தட்டன.

இனி, ஒன்றென முடித்தலான் வெண்பாவுரிச்சீர் நின்று நேரசைச் சீரோடும் நேர்பசைச்சீரோடும் தட்டலும், ஒழிந்தன விரண்டோடு[1] தளையாமையுங் கொள்க.

(எ-டு) "பிறவிப் பெருங்கட லீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்" (குறள். 10)

"இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" (குறள். 5)

எனத் தட்டன. (75)

சிவலிங்கனார்

நிரையவண் .... புலவர்.

(இ-ள்) வெண்பாவின் ஈற்றயற்சீர் நிரையீற்றியற்சீர் நேரசையும் நேர்பசையும் முடிபாதல் நீக்கும் நிலைமையின்று என்பர் வாய்மொழிப் புலவர் எ-று.

(உ-ம்"பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்." (குறள். 1021)

---

1. ஒழிந்தன இரண்டு - நிரையசையும் நிரைபசையும். இவ்விரண்டும் வரின் கலித்தளையாகித் தளையாது விடும்.

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று" (குறள். 108)

வெண்பாவின் ஈற்றயற்சீர் காய்ச்சீராயின் இறுதிச்சீர் நேரும் நேர்புமாக வரும்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்" (குறள். 10)

"இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" (குறள். 5)

கலிப்பாவின் இறுதி

38. எழுசீர் இறுதி யாசிரியங் கலியே. (72)

இலக்குவனார்

388. The seven feet *asiriyam* - ending belongs to *kali*.

382. வெண்பா இயலினும் பண்புற முடியும். (73)

இலக்குவனார்

389. It (kali) will end suitably in the nature of *veṇbā* also.

இளம்பூரணர்

381. எழுசீர் .... கலியே.

என்-னின், கலிப்பாவிற்கு முடிபுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) கலிப்பாவிற்கு ஈற்றயலடி முச்சீரான் வரும் ஆசிரிய முடிபாகும் என்றவாறு.

(உ-ம்) "தொடங்கற்கட் டோன்றிய"

என்னும் கலியுள் சுரிதகம்,

"தொல்கவின் தொலைதல் அஞ்சியென்
சொல்வரைத் தங்கினர் காத லோரே" (கலி. 2)

என வந்தது. ஈற்றயலடி நாற்சீரான் வருமென்பது மேற்கூறப்பட்டது.(72)

382. வெண்பா .... முடியும்.

(இ-ள்) கலிப்பா வெண்பாச் சுரிதமாக முடியும் என்றவாறு.

(உ-ம்)“அறனின்றி அயல்தூற்றும்”

என்னும் கலியுள் சுரிதகம்,

“யாநிற் கூறவும் எமகொள்ளாய் ஆயினை
ஆனா திவள்போல் அருள்வந் தவைகாட்டி
மேனின்று மெய்கூறுங் கேளிர்போல் நீசெல்லுங்
கானந் தகைப்ப செலவு” (கலி. 3)

என வெண்பாவி னியலான் இற்றவாறு காண்க. இத்துணையும் அடியிலக்கணம். (73)

பேராசிரியர்

388. எழுசீ ரிறுதி .... கலியே.

389. வெண்பா ....- முடியும்.

இவை, இரண்டு சூத்திரமும் முறையானே கலிப்பாவிற்கு அன்னதோர் அடி அதற்கு வகுத்தில்லாமையின், வகுக்கின்றது................ என்றார்க்கு, முதலது நேரடியும் ஈற்றது சிந்தடியுமாகக் கொள்ளல் அவ் வெழு நிலையுமெனின் அங்ஙனக் கொள்ளாமைக்கன்றே.

“ஈற்றய லடியே யாசிரிய மருங்கிற்
றோற்ற முச்சீர்த் தாகு மென்ப” (380)

எனவும்,

“இடையும் வரையார் தொடையுணர் வோரே” (381)

எனவும் கூறிற்றென்பது. ‘எழுசீரிறுதி யாசிரியம்’ (388) எனவே, ஆசிரியவடி பலவும் வந்து எருத்தடி முச்சீராக வருமென்பது கொள்க..

“அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்”

என்னும் (11) கலிப்பாவினுள்,

“இனைநல முடைய கானஞ் சென்றோர்”

என்பது[1], ஈற்றயன் முச்சீரிறுதி ஆசிரியத்தாற் கலிப்பா இற்றது.

“மணிநிற மலர்ப்பொய்கை”

என்னும் (70) கலிப்பாவினுள்,

“மெல்லியான் செவிமுதல் மேல்வந்தான் காலைபோ
லெல்லாந் துயிலோ வெடுப்புக நின்பெண்டி
ரில்லி னெழீஇய யாழ்தழீஇக் கல்லாவாய்ப்
பாணன் புகுதராக் கால்”

1. என்பது முதலாக வரும் அடிகள்.

என வெண்பா வியலினானும் பண்புற வந்தவாறு.

பண்புறவென்பது, விசேடம் மிகமுடியுமென்றவாறு. எனவே, ஈண்டுக் கூறாத இருசீரடியானும் நாற்சீரான் வந்த கலிப்பாவடியானும் ஐஞ்சீரடியானும் முடிவன கொச்சகக் கலியுள்; அவை இத்துணை விசேடமில வென்றவாறு ஈண்டு விதந்து ஓதியவெல்லாம் பெரும் பான்மையும் ஒத்தாழிசைக் கலிக்கென வுணர்க. 'இயல்' என்றதனாற் கட்டளை வெண்பாவே வரல் வேண்டுவதில்லை எனக் கொள்க. 'பண்புற' என்றதனான் மூன்றடியின் இழியிற் பண்புபட வாரா வெள்ளைச் சுரிதகமெனவுங் கொள்க.[1] (76, 77)

நச்சினார்க்கினியர்

76. எழுசீர் இறுதி .... கலியே.

77. வெண்பா .... முடியும்.

இரண்டும் உரையியைபு நோக்கி ஒன்றாகக் கூறிற்று. இது கலிக்குஞ் சிந்தடி கூறி ஈறுவருமாறு கூறுகின்றது.

(இ-ள்) கலிப்பா எழுசீரிறுதியாகி ஆசிரியத்தாலும் வெண்பாவின் இறுதியாலும் முடியும் எ-று.

'எழுசீ ரிறுதி யாசிரியம்' எனவே, ஆசிரியவடி பலவும் வந்து எருத்தடி[2] முச்சீராகவே வருமென்பதூஉம், 'வெண்பாவியல்' எனவே, கட்டளை வெண்பாவானும் சீர்வகை வெண்பாவானும் வந்து ஈற்றடி முச்சீரான் வருமென்பதூஉம் பெற்றாம்.

(எ-டு)"அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்" (பாலைக்கலி 1υ)

என்னுங் கலியிறுதியின் 'இனைநல முடைய' என்னும் ஆசிரியம் ஈற்றடி[3] நாற்சீரும் அயலடி முச்சீருமாக ஏழுசீரானிற்றது.

"மணிநிற மலர்ப்பொய்கை" (மருதக்கலி.5)

என்னுங் கலியிறுதி,

"மெல்லியான் செவிமுதன் மேல்வந்தான் காலைபோ
லெல்லாம் துயிலோ வெடுப்புக நின்பெண்டி
ரில்லி னெழீஇய யாழ்தழீஇக் கல்லாவாய்ப்
பாணன் புகுதராக் கால்"

என வெண்பாவியலா னிற்றது.

---

1. கலிப்பாவின் இறுதியில் வரும் சுரிதகம். வெள்ளைச் சுரிதகமாயின் குறளடியில் வாராது மூன்றடி முதலாக வரும்.

2. எருத்தடி - ஈற்றயலடி; 3. ஆசிரியப்பாட்டு

இது கலிக்கு உறுப்பாய் வருதலின் ஆசிரியத்தளையும் வந்தது. இஃது ஒத்தாழிசைக்கும் பெரும்பான்மை விதி.

'பண்புற' என்றது விசேடமிக முடியுமென்றவாறு; எனவே, இருசீரும் நாற்சீரும் ஐஞ்சீருமாய வடிகளான் முடிவனவெல்லாங் கொச்சகம்; அவை இத்துணை விசேடமின்று என்றவாறு.

'இயல்' என்றதனான் மூன்றடியிற் குறைந்த வெள்ளைச் சுரிதகம் வரிற் பண்புற முடியாவாம். (76, 77)

சிவலிங்கனார்

எழுசீர் .... கலியே.

வெண்பா .... முடியும்.

(இ-ள்) எழுசீரான் இற்ற அடியாலும் வெண்பாவின் இறுதியாலும் கலிப்பா முடியும், எ-று.

அதாவது கலிப்பா ஈற்றயலடி முச்சீரான் அமைந்த ஆசிரியத்தானும் இறுதியடி முச்சீரானமைந்த வெண்பாவினானும் முடியும் என்பது உணர்த்தியவாறு.

6. யாப்பு

383. எழுத்து முதலா ஈண்டிய அடியிற்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறி புலவர். (74)

இலக்குவனார்

390. The poets who know the nature of *yāppu* say that *yāppu* is the form which is used to express the conceived idea fully in the line, formed of letters and other elements.

இளம்பூரணர்

383. எழுத்து முதலா .... புலவர்.

என்-னின், யாப்பாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) எழுத்து முதலாக அசைச்சீர் அடி என ஈண்டோதப்பட்ட அடியினாற் றான் குறித்த பொருளை யிறுதியடியளவு முற்றுப்பெற நிறுத்துதல் யாப்பென்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

இது சொல்லவேண்டிய தென்னை? செய்யுட் பாடுவார்க்கு இயல்பன்றோ எனின், ஈண்டுச் செய்யுளுறுப்புள் ஓதுகின்றாராதலின் யாதானுமொரு பொருட்கட் பல சொற்றொடுத்து வழங்குங்கால் குறித்த பொருளை முடிக்க வேண்டுஞ் சொல்லே சேர்த்துக் கூறல் வேண்டும் எனவும், அது மிகாமற் குறையாமற் கூறல்வேண்டும் எனவும் இலக்கணங் கூறல் வேண்டும் என்க. அதன்வகை முன்னர்க் காட்டுதும். (74)

பேராசிரியர்

390. எழுத்து முதலா .... புலவர்.

இஃது,

"யாத்த சீரே யடியாப் பெனாஅ" (313)

என நிறுத்தமுறையானே அடியுணர்த்தி யாப்புணர்ந்துகின்றது.

(இ-ள்) எழுத்துமுதலா ஈண்டிய அடியிற் குறித்த பொருள்களை முடிய யாத்தல் யாப்பாவதென்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

அடிக்கண்ணே முடியுமெனவே, இருசீரும் முச்சீருங் கிடப்ப முடிய நாட்டினும் நாற்சீர் கொண்டு முடிய நாட்டினும் அமையுமென்பது. மாத்திரை முதலாக வென்னாது 'எழுத்து' என்ற தென்னையெனின், எழுத்தும் அசையுஞ் சீருங்கொண்டியன்ற ஒரோவடிக்கண்ணே இன்பஞ் செய்யும்; அது பொருட்காய் இன்றியமையாமையின் எழுத்து முதலாக வென்றானென்பது. 'ஈண்டிய வடி' என்பது, அவை மூன்றும் ஒன்றாகத் தொடர்ந்து ஈண்டிய அடியென்றவாறு. எனவே, இவற்றைப் பொருளின்றி வேறுவேறு செய்யாது. பொருட்டொடர்படச் செய்ய வேண்டு மென்பதூஉங் கூறி, ஓரடிக்கட் பொருளாற் செய்யாது, ஒழிந்த அடிக்கண் ஒரு சொல்லினைப் பகுத்து வாங்கிக் கொண்டு போய் வைத்தலா னென்பதூஉங் கூறியவாறாயிற்று. குறித்த பொருளென்றது, அவ் வடியில் தான் வைக்கக் கருதிய பொருளைப் பிறிதோர் அடியுங் கொண்டு கூட்டாது அமைந்து மாறச் செய்தல். 'யாப்பறி புலவர்' என்பது, அவ்வாறு செய்தல் வல்ல புலவர் அது கூறினாரென்றவாறு. அது, இதுபோலச் சீரும் பொருண்முடிய நிற்றலின் யாத்த சீரென்றா னென்பது.

"மாயோன் மார்பி லாரம் போல
மணிவரை யிழிதரு மணிகிள ரருவி
நன்பொன் வரன்று நாட
னன்புபெரி துடைய னின்சொல் லினனே" (பக்.878,996)

என இது குறித்த பொருளை நாற்சீரடிதோறும் முடிய நாட்டினவாறு.

"மண்டில மழுங்க மறுநிறங் கிளர
வண்டின மலர்பாய்ந் தூத மீமிசைக்
கண்டற் கானற் குருகின மொலிப்ப" (அகம். 260)

என்றவழி, இருசீரானும் முச்சீரானும் நாற்சீரானுங் குறித்த பொருளை முடிய நாட்டினவாறு கண்டு கொள்க.[1]

"முயற்கோடு சீவிச்சீவி முதுவிசும்பு போழ்ந்தான்"

என்றவழி, எழுத்தும் அசையுஞ் சீரும் பொருளிலவாகி வந்தமையின்[2] அஃதமையாது, யாப்பெனப்படாது; சொல்லிலக்கணத்தாற் சொற்றொறும் பொருளுடையவாயினு மென்பது.

"மணிவெண் ணகைவன முலைமதி முகமலர்
விழியிணைச் செவ்வாய் மென்னடைப் பேதை"

என்றவழியும், முதலடிக்கட் பொருட்டொடர்பினை அறுத்துங் குறைத்துஞ்[3] செய்தமையின் அதுவும் யாப்பறி புலவரான் யாப்பெனப்படாதென்றவாறு.(78)

நச்சினார்க்கினியர்

78. எழுத்து முதலா .... புலவர்.

இது, நிறுத்த முறையானே யாப்புணர்த்துகின்றது.

(இ-ள்) எழுத்து முதலா ஈண்டிய அடியில் - எழுத்து முதலாக அசையும் சீரும் ஒன்றாகத் தொடர்ந்து ஈண்டிய அடியிலே, குறித்த பொருளை முடிய நாட்டல் - தான் வைப்பக் கருதிய பொருளைப் பிறிதோரடியுங் கொண்டுகூட்டா தமைந்து மாறச் செய்தல், யாப்பென மொழிப யாப்பறி புலவர் - யாப்பென்று சொல்லுவர் அவ்வாறு யாத்தலை வல்ல புலவர் எ-று.

(எ-டு) "நீரின் தண்மையுந் தீயின் வெம்மையும்"

எனவும்,

"துகள்சீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டு" (நாலடி. 2)

எனவும்,

"அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்"
(பாலைக்கலி. 10)

எனவும்,

"வசையில்புகழ் வயங்குவெண்மீன்" **(பட்டினப்.)**

---

1. மண்டில மழுங்குதல் இருசீரான் முடிந்த பொருள் மறுநிறங் கிளர என்பதும் அது. வண்டினம் மலர்பாய்ந் தூத என முச்சீரான் ஒரு கருத்து முடிந்தது. இறுதியடியில் நாற்சீரான் ஒரு கருத்து முடிந்தது.

2. எழுத்தும் அசையும் சீரும் ஒழுங்காக அமையினும் பொருள் இல்லை. சொற்களுக்குப் பொருளுண்டே தவிரத் தொடர்ப்பொருள் இல்லை.

3. முகமலர் என்றதில் பொருள் முடியவில்லை. மலர்விழி என்பதை முதலடியின் இறுதியில் மலர் என அறுத்துக் கூறப்பட்டது. மணி(போலும்) நகை, மதிமுகம், மலர்விழியிணை என உவமை கூறியும் முலை, வாய், நடை என உவமையின்றிக் குறைத்துக் கூறியும் வந்தன.

எனவும் இந் நால்வகைச் செய்யுட்கண்[1] முடியுந் துணையும் அடிதோறுங் குறித்த பொருளை முடிய நாட்டியவாறு காண்க.

'யாப்பறி புலவர்' என்றதனான் இருசீரானும் குறித்த பொருளை முடிப்பனவும், அங்ஙன முடித்தொழிந்து அச் சீரை மேல் வருகின்ற வடியோடு பொருண்முடியச் செய்வனவும் சிறுபான்மை யாப்பென்று கொள்க.

(எ-டு) "மண்டில மழுங்க மலைநிறங் கிளர
வண்டின மலர்பாய்ந் தூத மீமிசைக்
கண்டற் கானற் குருகின மொலிப்ப"

என[2] முச்சீரானாட்டுவன வெண்பாவிற் பயின்று வருமாறு உரையிற் கொள்க (78)

சிவலிங்கனார்

எழுத்து .... புலவர்.

(இ-ள்) எழுத்தசை சீர்தளைகளைக் கொண்டு முடியும் அடிகளால் செய்யுள் செய்வோன் கருதிய பொருளை அமைத்து முடிப்பது யாப்பாம் என்று கூறுவர் யாப்பறிந்த புலவர், எ-று.

யாப்பின் வகைகள்

**384. பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொல்[3] அவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பே ரெல்லை[4] அகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர்.** (75)

இலக்குவனார்

391. The poetry, the systematic treatise, the book of morals (*vāymoḻi*), the book of riddles (*pisi*), the book of satire and the book of proverbs - these are the forms of compositions in vogue with in the four frontiers of the fertile Tamil Nadu ruled by the three kings of great renown - say the poets.

---

1. நீரின் தண்மை - இது ஆசிரியச் செய்யுள். துகள்தீர் - இது வெண்பாச் செய்யுள். அரிதாய - இது கலிப்பா. வசையில்புகழ் - இது வஞ்சிப்பா.
2. என வரும் என்றிருத்தல் வேண்டும்; 3. முதுசொலோ டவ்வேழ் - பேரா. பாடம்
4. நாற்பெய ரெல்லை - பேரா. நச். பாடம்

இளம்பூரணர்

384. பாட்டுரை நூலே .... புலவர்.

என்-னின், இதுவும் அதன் பகுதி உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) பாட்டுமுதலாக முதுசொல்லீறாகச் சொல்லப்பட்ட எழு நிலத்தினும், வளவிய புகழையுடைய சேரன், பாண்டியன், சோழன் என்னும் மூவரது தமிழ்நாட்டகத்தவர் வழங்கும் தொடர்மொழிக்கண் வரும் மொழி யாப்பாவது என்றவாறு.

எனவே யாப்பாவது: பாட்டியாப்பு, உரையாப்பு, நூலியாப்பு, மொழியாப்பு, பிசியாப்பு, அங்கதயாப்பு, பழமொழியாப்பு என எழுவகைப்படும். மேலைச் சூத்திரத்துள்,

"குறித்த பொருளை முடிய நாட்டல்"

என்றமையானும், இச் சூத்திரத்துள்,

"நாற்பே ரெல்லை யகத்தவர் வழங்கும் யாப்பின் வழியது"

என்று ஓதினமையானும்; குறித்த பொருள் முடியுமாறு சொற்றொடுத்தல் என்று கொள்ளப்படும்.

(உ-ம்)"தாமரை புரையுங் காமர் சேவடிப்
பவளத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி ஏய்க்கும் உடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேற்
சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைகல் எய்தின்றால் உலகே." **(குறுந். கடவுள் வாழ்த்து)**

இதனுட் குறித்தபொருள் முருகவேள் காப்ப உலகங் காவற்பட்டது என்னும் பொருள். இதனை முடித்தற்பொருட்டு எழுத்து முதலாகி வந்து ஈண்டிய அடிகளெல்லாவற்றானும் நாட்டியவாறு கண்டுகொள்க. (75)

பேராசிரியர்

391. பாட்டுரை நூலே .... புலவர்.

இச் சூத்திரம் அரிமாநோக்கு, மேற்கூறிய யாப்பிற்கும் வருகின்ற மரபிற்கும் அப் பகுதி யுரிமை கூறினமையின்.

(இ-ள்) பாட்டும், உரையும், நூலும், வாய்மொழியும், பிசியும், அங்கதமும், முதுசொல்லுமென்று சொல்லப்பட்ட அவ் வேழு நிலத்தும்,

"வடவேங்கடந் தென்குமரி யாயிடை" **(பாயிரம்)**

நாட்டார் நடாத்துகின்ற செய்யுளின் பெயரே தனக்குப் பெயராகவு முடைத்து மேற்கூறிய யாப்பு என்றவாறு.

எனவே, மேற்குறித்த பொருளை அடிக்கண் முடிய நாட்டல் யாப்பென்றான். அதுவேயன்றி இப் பகுதிப்படச் செய்தலும் யாப்புறுப்பே யென்றானாம். இவ் வேழு வகையானுஞ் செய்தன் மரபென எதிரது நோக்கிற்று.[1] பாட்டு, உரை, நூல் என்பவற் றிலக்கணம் முன்னர்ச் சொல்லுதும். யாப்பின் வழியதென்பது இவ் வேழு வகைப்பட்ட யாப்பின் பெயரது மரபாகும் யாப்பாகிய உறுப்பென்றவாறு. இதனை 'நூல் யாப்புப்' போற் கொள்க.[2] இப் பகுதிதாந் தமிழ்நாட்டு மரபா.கலின் மரபென்னும் உறுப்பு மரபென எதிரது நோக்கிற்று. 'வண்புகழ் மூவர்' என்பது, வளனுடைமையாற் புகழ்பெற்றா ரென்றவாறு; அஃதாவது, கொடுத்துப் பெறும் புகழெனக் கொள்க. மூவரெனப்படுவார், தமிழ்நாட்டு மூவேந்தருமாயினார். 'தண்பொழில் வரைப்பு' என்பது நிலத்துக்கு நிழல்செய்யும் நாவலம்பொழிலுள் வரைந்து கொள்ளப்படும் வரைப்பினையுடைய வென்றவாறு. தண்பொழி லுடைமையின் நாவலந் தண்பொழிலெனப்பட்டது. நாற்பேரெல்லையகமென்பது, தமிழ்நாடென்ற வாறு. வடவேங்கடந் தென்குமரியன்றிக் கிழக்கும் மேற்குங் கடலெல்லை கூறினானோவெனின், அறியாது கடாயினாய் வரையறையிலவென்று கூறாதனவெல்லாங் களைந்து கொள்ளப்படுவன வல்ல; வகை கூறாமையுந் தமிழ் கொள்ளப்படுங் கண்டாய்; அவர் வழங்கும் யாப்பின் வழியதென்பது அந் நாட்டார் வழங்கும் யாப்புப் பகுதி அவை என்றவாறு. தமிழ்நாட்டார் வழங்கும் மரபு பகுதி அவையெனவே யாப்பும் மரபுங் கருதியதாயிற்று இச் சூத்திரமென்பது இதனாற் பெற்றாம்.

"வடவேங்கடந் தென்குமரி யாயிடை."

என்புழி நான்கெல்லையுங் கூறினானென்பது. (79)

நச்சினார்க்கினியர்

79. பாட்டுரை நூலே .... புலவர்.

இது, முற்கூறிய யாப்பிற்கோர் வேறுபாடு கூறுகின்றது.

(இ-ள்) பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே அங்கதம் முதுசொல் அவ்வேழ் நிலத்தும் - பாட்டுகளும் உரைகளும் நூல்களும் மந்திரங்களும் பிசிகளும் அங்கதமும் முதுசொல்லும் எனப்பட்ட அவ் வேழு பொருளி டத்தும், வண்புகழ் மூவர் - கொடையாற் பெற்ற புகழினையுடைய சேர சோழ பாண்டியருடைய, தண்பொழில் வரைப்பின் - குளிர்ச்சியையுடைய நாவலம்பொழிலுள் தமக்கு வரைந்து கொண்ட வடவேங்கடந் தென்குமரி யிடத்து, நாற்பெயர் எல்லை அகத்தவர் வழங்கும் - மலைமண்டலம் சோழமண்டலம் பாண்டியமண்டலம் தொண்டைமண்டலம் என்னும் நான்கு பெயரை உடைய தமிழ்நாட்டார் நடாத்தும், யாப்பின் வழியது

---

1. எதிரது நோக்கியது மரபியலை நோக்கியதாம்.

2. நூல்யாப்புப் போலப் பாட்டியாப்பு உரையாப்பு முதலியவாகப் பெயர் கொள்க.

என்மனார் புலவர் - செய்யுளின் பெயர் தனக்குப் பெயராகவும் உடைத்து மேற்கூறிய யாப்பு எ-று.

என்றது, குறித்த பொருளை அடிக்கண் முடிய நாட்டுதலே யன்றி இப் பகுதிப்படச் செய்தலும் யாப்புறுப் பென்றதாம். பாட்டுச்செய்யுள் உரைச்செய்யுள் நூற்செய்யுள் எனத் தமிழ்நாட்டார் வழங்கியவாறே பெயர் பெறுமென்றவாறு. எனவே அந் நாட்டார் வழங்கும் யாப்புப் பகுதி கூறினாராயிற்று. (79)

சிவலிங்கனார்

பாட்டுரை .... புலவர்.

(இ-ள்) யாப்பு என்பது, சேர சோழ பாண்டியரின் எல்லையாகிய நான்கு பெரிய திக்குகளின் அகத்தவாகிய தமிழர் வழங்கும் யாப்புகள் பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுமொழி என்னும் ஏழ்வகையிலும் அமையும் யாப்புகளின் வழிவருவது என்பார் புலவர், எ-று.

யாப்புவகை ஏழ் என்பதாயிற்று அவை பாட்டியாப்பு, உரையாப்பு, நூல்யாப்பு, வாய்மொழியாப்பு, பிசியாப்பு, அங்கதயாப்பு, முதுமொழியாப்பு என்னும் பெயரின.

7. மரபு

**385. மரபே தானும்
நாற்சொல் வியலான் யாப்புவழிப் பட்டன்று.[1] (76)**

இலக்குவனார்

392. The technique of composition is the form composed by means of four kinds of words.

இளம்பூரணர்

382. மரபே தானும் .... பட்டன்று.

என்-னின், மரபு ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மரபாவதுதான் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும் நாற்சொல்லின் இயற்கையானே யாப்பின்வழிப் பட்டது என்றவாறு.

குறித்த ஒரு பொருளை முடியச் சொற்றொடுக்குங்கால் இயற்சொல் லாகிய பெயர் வினை யிடை யுரியானும், ஏனைத் திரிசொல் திசைச்சொல் வடசொல்லானும், எழுவகை வழுவும் படாமல் புணர்ப்பது என்றவாறாம்.

அவற்றுள் இயற்சொல் மரபாவது சொல்லதிகார இலக்கணத்தோடு பொருந்துதல்.

திரிசொல் மரபாவது தமிழ்நாட்டகத்தும் பலவகை நாட்டினும் தத்தமக்குரித்தாக வழங்கும் மரபு.

திசைச்சொல் மரபாவது செந்தமிழ் சூழ்ந்த பன்னிரு நிலத்தினும் வழங்கும் மரபு.

வடசொல் மரபாவது திரிந்தவகையாகிய சொல்மரபு.

யாதானும் ஒருசெய்யுட் செய்யுங் காலத்துப் பொருளுணர்த்துஞ் சொற்கள் இவையாதலின் இவை ஒரு பொருட்குரித்தாகிய ஆண் பெயரும், பெண்பெயரும், குழவிப்பெயரும் முதலாயின பிறபொருட்கண் வாராமையான் அவற்றை அவ்வம் மரபினாற் கூறுதலும் ஒருமை பன்மை மயங்காமையும் பெயரும் வினையும் முடிவுபெறக் கூறுதலும் வேண்டுதலின் இவ் விலக்கணமுங் கூறல் வேண்டிற்று. (76)

பேராசிரியர்

392. மரபே தானு .... பட்டன.

இது, நிறுத்தமுறையானே மரபினை விளங்கக் கூறுகின்றது.

(இ-ள்) மரபேதானும் - அங்ஙனங் கூறப்பட்ட மரபுதானும்; ஏகாரம் பிரிநிலை: உம்மை இறந்ததுதழீஇயிற்று; மேல் எழுவகையான் யாக்கப் படுதன் மரபென்றமையின், மரபேதானு மென்றானென்பது. நாற்சொல்- பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்; இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல்லெனினும் அமையும். இயலான் நாற் சொல்லினையும் உலகத்தார் வழங்குகின்ற வழக்கு வடிவினான். யாப்பு வழிப் பட்டன - மேற்பகுத்த யாப்புவழிப் பொருத்தமுடைத்தாகிக் கிடப்பது என்றவாறு.

அஃதாவது, வழக்கெனவுஞ் செய்யுளெனவும் இடைதெரியாமல் ஒரு வாய்பாட்டான் வழக்குஞ் செய்யுளுமாகி ஒரு சொற்றொடரினைச் சொல்லியதுபோலச் செய்யுள் செய்த லென்றவாறு.

'சாத்தனுண்டான்; கொற்றனுண்டான்'

எனவும்,

'சாத்தனுறங்கினான் கொற்றனுறங்கினான்'

எனவும்,

'சாத்தனையறியாதார் ஒருவரையு மறியாதார்'

எனவும்,

'சாத்தனிற் கொற்றன் போமே'

எனவும் நின்ற வழக்கில்லை முறையானே ஆசிரியமும் வெண்பாவுங் கலிப் பாவும் வஞ்சியுமாகப் பரப்பப்பட்ட யாப்புவழிப்படுத்துக் கண்டுகொள்க.

'ஓதியு மோதா ருணர்விலார்' (நாலடி. 270)

என்னுஞ் செய்யுள் வழக்கிற்றாகவுஞ் சொல்லப்படும். வழக்கு வடிவினானெனவே சொன்மரபும் பொருண்மரபும் அடங்கக் கூறினான்; என்னை? பொருளன்றி நாற்சொல்லையும் வழங்காராகலின்; எனவே, சொல்லும் பொருளும் அவ்வக் காலத்தார் வழங்குமாற்றானே செய்யுள் செய்க என்பதாயிற்று. இதனது பயன், ஒரு காலத்து வழங்கப்பட்ட சொல் ஒரு காலத்திலவாகலும் பொருள் வேறுபடுதலும் உடைய. அவை: அதோளி இதோளி உதோளி[1] (கலி. 116) எனவுங் குயின்[2] எனவும் நின்ற இவை ஒருகாலத் துளவாகி இக்காலத் திலவாயின. அவை முற்காலத்துள வென்பதேகொண்டு வீழ்ந்த காலத்துஞ் செய்யுள் செய்யப்படா. அவை ஆசிரியர் நூல் செய்த காலத்துளவாயினுங்[3] கடைச்சங்கத்தார் காலத்து வீழ்ந்தமையிற் பாட்டினுந் தொகையினும் அவற்றை நாட்டிக்கொண்டு செய்யுள் செய்திலர்; அவற்றுக்கு இது மரபிலக்கண மாகலினென்பது.[4]

இனி, பாட்டினுந் தொகையினும் உள்ள சொல்லே மீட்டொரு காலத்துக்கு உரித்தன்றிப் போயினவும் உள; அவை முற்காலத்துள வென்பதே கொண்டு பிற்காலத்து நாட்டிச் செய்யுள் செய்யப்பெறா என்பது.

இனி, பொருளும் இவ்வாறே காலத்தானும் இடத்தானும் வேறுபடுதலுடைய. ஒருகாலத்து அணியுங் கோலமும் ஒருகாலத்து வழங்காதனவுள. ஓரிடத்து நிகழும் பொருண் மற்றோரிடத்து நிகழாதனவுமுள. அவ்வக் காலமும் இடனும்பற்றி ஏற்றவாற்றாற் செய்யுள் செய்யவேண்டுமென்பது. ஒருகாலத்துக் குழை பெய்தாரென்றும், ஒரு காலத்துக் குழல்பட முடித்தாரென்றும், ஆண்மக்களை ஒழிந்தகாலத்தும் அது கூறார். பதினெண் பாடைத் தேசிக மாக்கள் அணியினையுங் கோலத்தினையும் விரவிக் கூறாது அவ்வந் நாட்டாரே பூணுமாற்றானும் புனையுமாற்றானும் ஏற்பச் சொல்லுதல் மரபு.

இனி, நான்கு நிலத்தினும் ஓரிடத்துப் பொருளை ஓரிடத்தவாகச் சொல்லுதலும், உலகொடு மலைதலும், சமயங்களொடு மலைதலும், கலையொடு மலைதலும் பிறவுங் இன்னோரன்னவும் பொருண்மரபின்பாற்

---

1. அதோளி-அவ்விடம், இதோளி-இவ்விடம், உதோளி-உவ்விடம்
2. குயின்-மேகம்
3. ஆசிரியர் - தொல்காப்பியர். அவர் குயின் என்பதற்கு இலக்கணம் செய்தார். ஆனால் சங்கப்பாடலில் அச் சொல் இடம்பெறவில்லை. வழக்கு ஒழிந்ததாகலின்.
4. வழக்கொழிந்தனவற்றுக்கு இலக்கணம் உண்டெனினும் செய்யுள் செய்தற்கு மரபு இல்லை யாதலின் அவை விலக்கப்படும்.

பட் டடங்கும். இவை நாடக வழக்கின் ஆமென்பது முன்னர் அகத்திணை யியலுட் கூறினாம்.

"புலிப்பற் கோத்த புலம்புமணித் தாலி
யொலிக்குழைச் செயலை யுடைமா ணல்குல்" **(அகம். 7)**

என்பது, பருவத்துக்கேற்ற அணி கூறியது.

"கொல்வினைப் பொலிந்த கூர்ங்குறும் புழுகின்
வில்லோர் தூணி வீங்கப் பெய்த
வப்புநுனை யேய்ப்ப வரும்பிய விருப்பைச்
செப்பட ரன்ன செங்குழை யகந்தோ
றிழுதி னன்ன தீம்புழற் றுய்வா
யுழுதுகாண் டுளைய வாகி யார்கழல்
பாலி வானிற் காலொடு பாறித்
துப்பி னன்ன செங்கோட் டியவி
னெய்த்தோர் மீமிசை நிணத்திற் பரிக்கு
மத்த நண்ணிய வங்குடிச் சீறூர்க்
கொடுநுண் ணோக்கின் மகளி ரோச்சிய
தொடிமா ணுலக்கைத் தூண்டுரற் பாணி
நெடுமால் வரைய குடிஞையோ டிரட்டுங்
குன்றுபி னொழியப் போகி யுரந்துரந்து
ஞாயிறு படினு மூர்சேய்த் தெனாது
துனைபரி துரக்குந் துஞ்சாச் செலவி
னெம்மினும் விரைந்துவல் லெய்திப் பன்மா
ணோங்குயர் நல்லி லொருசிறை நிலைஇப்
பாங்கர்ப் பல்லி படுதொறும் பரவிக்
கன்றுபுகு மாலை நின்றோ ளெய்திக்
கைகவியாச் சென்று கண்புதையாக் குறுகிப்
பிடிக்கை யன்ன பின்னகந் தீண்டித்
தொடிக்கை தைவரத் தோய்ந்தன்று கொல்லோ
நாணுடை மிடைந்த கற்பின் வாணுத
லந்தீங் கிளவிக் குறுமகன்
மென்றோள் பெறனசைஇச் சென்றவெ னெஞ்சே" **(அகம்.9)**

என்றவழிக் குறிஞ்சிக்கும் முல்லைக்கும் ஏற்றபொருள் தத்தம் மரபிற்றாய் வந்தன பலவுங் கண்டு கொள்க.

மற்றும் நாற்சொல்லியலென்பது, வழக்காயின் அது செய்யுட்குரிய திரிசொற்கும் ஏற்றவா றென்னையெனின், அவையுஞ் சான்றோர் வழங்கினவாறன்றி வேறுபட நாட்டப்படாவெனவும் அவற்றுள்ளுங் காலம்பற்றித் திரிந்தனவும் உளவாயினும் அவை தவிர்த்துச் செய்யுள் செய்யப்படுமென்றற்கும் 'நாற்சொல் லியலான்' என அடங்கக் கூறினா

னென்பது. மலையென்றதனைப் பிறங்கலென்றாரென்று இக்காலத்துச் செய்யுள் செய்யுங்கால் அப் பொருண்மையானே உயரென்று செப்பவோவெனின் அது மரபன்று.[1]

இனிக் குடவாயிலென்பதனை,

"கொற்றச் சோழர் குடந்தை வைத்த" (அகம். 60)

எனவும், உறையூரென்பதனை,

"பிறங்குநிலை மாடத் துறந்தை போக்கி" (புறம். 69)

எனவும் மேலையார் திரித்தவகையானே இக்காலத்துந் திரித்துக் கொள்ளப்படுவன உள. அவை 'களந்தை'[2] என்றற்றொடக்கத்தன. பிறவும் இவ்வாறு வருவனவும் அறிந்துகொள்க.

"கடையாயார் நட்பிற் கமுகனையர்" (நாலடி. 216)

என இதனுள் ஓரினத்தவாகிய புல்லே கூறி ஒழிந்த மரங்களொப்பன உளவாயினும் உடன் கூறாராயினார். இன்னோரன்னவுஞ் செய்யுட்கு மரபெனப்படுமென்பது.

மற்று, 'பாட்டுரை நூலே' என எழுவகை வகுத்த பகுதியையுஞ் செய்யுட்கு மரபென மேற்கூறினான்; அதனானே இவ் வேழு வகையா னன்றி ஆசிரியர் வேண்டுமாற்றானும் பிற பாடை மாக்கள் வேண்டுங் கட்டளையானுந் தமிழ்ச்செய்யுள் செய்தல் மரபன்றென்றவாறு. (80)

நச்சினார்க்கினியர்

80. மரபே தானும் .... பட்டன.

இது, நிறுத்தமுறையானே மரபென்னும் உறுப்பு யாப்பின்கண் வருமாறு கூறுகின்றது.

(இ-ள்) மரபேதானும் - மரபென்ற வுறுப்புத்தானும்; நாற்சொல்லி யலான் - நான்கு சொல்லையும் உலகத்தோர் எழுவகை வழுவும்படாமல் வழங்குகின்ற வழக்கு வழுவாதன, யாப்புவழிப்பட்டன - முற்கூறிய யாப் பிலக்கிணத்தின் வழியிலே பொருத்தமுடையவாய்க் கிடப்பன எ-று.

இந் நூலிடத்து இதற்கு முன்னும் பின்னும் கூறப்படும் மரபுள தாகலின், இந் நூலுட் கூறிய இலக்கணங்களினின்றும் இதனைப் பிரித்துப் பிரிநிலை யேகாரத்தாற் கூறினார்.

நாற்சொல்லாவன : இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல்.

---

1. மலையைப் பிறங்கல் என்று பின்பு திரித்தாற்போல இக்காலத்தார் உயர் என்று மலையைக் கூறலாகாது - நச்.

2. களத்தூர் என்பது களந்தை எனத் திரிக்கப்பட்டது.

பெயர், வினை, இடை, யுரி என்பன இயற்சொல்லின் பாகுபாடாகலின், இயற்சொல் அந் நான்கு பாகுபாட்டானும் செய்யுட்குரித்தாயிற்று. இந் நான்கு சொல்லானுங் காலந்தோறும் இடந்தோறும் வழங்குகின்ற வழக்குஞ் செய்யுளு மிடைதெரியாமல்[1] தொடர்வுபடுத்தி முறைமை பிறழாமற் செய்யுட் செய்க என்றவாறு.

(எ-டு)"ஓதியு மோதார் உணர்விலார் ஓதாது
மோதி யனையர் உணர்வுடையார் - தூய்தாக
நல்கூர்ந்துஞ் செல்வ ரிரவாதார் செல்வரு
நல்கூர்ந்தார் ஈயா ரெனின்." (நாலடி. 270)

இது வழக்காகவுங் கூறப்படும். ஒருகாலத்து வழங்கிய சொற்களும் பொருள்களும் அணிகளும் கோலமும் முதலியன ஒருகாலத்து வழங்காதனவுமுள. ஓரிடத்து நிகழும் பொருண் மற்றோரிடத்து நிகழாதனவுமுள. அக் காலமும் இடமும்பற்றி ஏற்றவாற்றாற் செய்யுள் செய்க என்றவாறு.

அதோளி, இதோளி, உதோளி, குயின் என்றாற் போல்வன இடைச் சங்கத்திற்கு ஆகாவாயின.

"அட்டா னானே குட்டுவன்"[2] (பதிற். 5, 47)

"உச்சிக் கூப்பிய கையினர்"[3] (முருகு.)

என்றாற் போல்வன கடைச்சங்கத்திற்காயின சொற்கள், இக்காலத்திற்கு ஆகாவாயின.

"வரிமணல் ஞெமலக் கற்பக நடக்கும்
பெருமிதப் பகட்டிற்குத் துறையு முண்டோ" (புறம்.. 90)

"கீழ்மரத் தியாத்த சேமவச் சன்ன" (புறம். 102)

என்றாற் போலும் உவமப் பொருள்களும் இக்காலத்திற்கு ஆகாவாயின.[4]

இன்னும் அந் நான்கு நிலத்தும் ஓரிடத்துப் பொருள் ஓரிடத்து வரக் கூறலும், உலகொடு மலைதலும், சமய நூல்களோடு மலைதலும், கலைகளோடு மலைதலும், பிறவும் இன்னோரன்னவை பொருண்மரபில் தப்பாம். இவை நாடக வழக்கிற்கு ஆமாறு அகத்திணை யியலுட் கூறிற்று.

---

1. வேறுபாடு தெரியாமல்
2. குட்டுவன் பகைவரைக் கொன்றும் அமையானானான்.
3. தலையில் குவித்த கையினர். கூப்பிய கையினர் என்ற தொடர் இக்காலத்துக்கு ஆகாதாயிற்று என்பது பொருந்தாது.
4. மணல் பிதிர்ந்து நீங்கவும் கல்பிளக்கவும் நடக்கும் பகட்டுக்கு இன்னவழியிடம் என்னும் துறையும் உளவோ நடத்தற்கு? கீழ்மரத்திற் கட்டிவைத்துள்ள பாதுகாப்பு அச்சுப் போன்ற. இவை போலும் உவமை இக்காலத்துக்கு ஆகா என்பது பொருந்துமா எனக் காண்க.

"குண்டல மொருபுடை குலாவி வில்லிட
விண்டலர்ந் தொருபுடை தாதோடு மின்செய" (சிந்தா.குண.159)

"வண்காது நிறைந்த பிண்டி யொண்டளிர்
நுண்பூ ணாகந் திளைப்ப" (முருகு.)

"அம்மல ரடியுங் கையு மணிகிளர் பவள வாயுஞ்
செம்மலர் நுதலு நாவுந் திருந்தொளி யுகிரோ டங்கேழ்
விம்மிதப் பட்டு வீழ வலத்தக மெழுதி யிட்டாள்
அம்மலர்க் கண்ட முள்ளிட் டரிவையைத் தெரிவை தானே"
(சிந்தா. இலக். 69)

என்றாற்போலும் அணியுங் கோலமும் இக்காலத்திற்கு ஆகாவாயின.

"புலிப்பற் கோத்த புலம்புமணித் தாலி
யொலிக்குழைச் செயலை யுடைமா ணல்குல்" (அகம். 7)

இது பருவத்துக்கேற்ற அணி.

"கொல்வினைப் பொலிந்த" (அகம். 9)

என்னும் பாட்டுக் குறிஞ்சிக்கும் முல்லைக்கும் ஏற்ற பொருள் தத்தம் மரபிற்றாய் வந்தன. பிறவுமன்ன.

மலையைப் பிறங்கலென்று பின்பு திரித்தாற்போல, இக்காலத்தார் உயர் என்று மலையைக் கூறலாகாது.

இனிக் குடவாயிலைக்

"கொற்றச் சோழர் குடந்தை வைத்த" (அகம். 60)

எனவும்,

"பிறங்குநிலை மாடத் துறந்தை" (புறம். 69)

எனவும் முன்னோர் திரித்த வகையானே, இக்காலத்துக் களத்தூரைக் களந்தை யென்றாற்போலத் திரிப்பனவும் அறிக.

இனித் தமிழ்நூற்கண் வழுவமைத்தவாறன்றி ஆரியரும் பிறபாடை மாக்களும் வேண்டுமாற்றால் தமிழ்ச்செய்யுள் செய்தல் மரபன்றென் றுணர்க. (80)

சிவலிங்கனார்

மரபே தானும் .... பட்டன்று.

(இ-ள்) யாப்பு மரபு என்பது இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும் நால்வகைச் சொல்லின் இயல்பினவாகிய யாப்பின்வழி வருவதே யாப்பு மரபாகும்.

8. தூக்கு

ஆசிரியத் தூக்கு

386. அகவ லென்ப தாசிரி யம்மே. (77)

இலக்குவனார்

393. *Akaval* is said to be of *asiriyam.*

இளம்பூரணர்

386. அகவ லென்ப .... யம்மே.

என்-னின், இது தூக்காமாறு உணர்த்துவார் அவற்றுள் ஆசிரியத்திற்குரிய ஓசை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அகவல் என்னும் ஓசை ஆசிரியத்திற் கென்றவாறு.

தூக்கெனினும் ஓசையெனினு மொக்கும். அகவல் என்பது ஆசிரியன் இட்டதோர் குறி.[1] அது வருமாறு:

" செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோல் அம்பின் செங்கோட் டியானை
கழல்தொடிச் சேஎய் குன்றங்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே". (குறுந்.1)

இதனுள் எழுத்தளவு மிகாமற் குறையாமல் உச்சரிக்க அவ்வழி நின்ற ஓசையால் ஆசிரியம் வந்தவாறு காண்க. (77)

பேராசிரியர்

393. அகவ லென்ப .... யம்மே.

இது, நிறுத்த முறையானே தூக்கு உணர்த்துவானெழுந்தான், அஃதாவது பாவினைத் துணிக்கப் பெறப்படுவதாகலான் அப் பாவினை உணர்த்துகின்றானென்பது. நிறுக்கப்படுபொருள் பொன்னானும் வெள்ளியானும் ஒன்று பெற்றவழியன்றிக் கழஞ்சுந் தொடியுந் துலாமுமெனத் துலைக்கோலால் தூக்கி அளக்குமாறில்லை; அதுபோலப் பாவின்றித் தூக்கியளக்கப்படும் பொருள் இன்மையானும், பாவினை எழுநிலத்தெழுந்த செய்யுளடி (391) வரையறையுடைய பாட்டிற்கு இன்னவாறு வந்ததென்றறிவிப்பது தூக்காகலானும், எல்லாப் பாவினுக்குந் தூக்குப் பொதுவாகலானும் பாவொடு புணர்த்தே தூக்குணர்த்தப்பட்டது.

---

1. அகவல் என்பது ஆசிரியன் இட்ட இடுகுறி.

(இ-ள்) அகவல் என்பது ஆசிரியம்மே - வழக்கினுள் அகவலென்று வழங்கப்படும் பாவினை ஆசிரியத்திற்குரிய பாவென்ப என்றவாறு.

அகவிக் கூறுதலான் 'அகவல்' எனக் கூறப்பட்டது. அஃதாவது, கூற்றும் மாற்றமுமாகி[1] ஒருவன் கேட்ப அவற்கு ஒன்று செப்பிக் கூறாது தாங் கருதியவாறெல்லாம் வரையாது சொல்லுவதோராறும் உண்டு. அதனை வழக்கினுள்ளார் அழைத்தலென்றுஞ் சொல்லுப; அங்ஙனஞ் சொல்லுவார் சொல்லின்கண் எல்லாந் தொடர்ந்துகிடந்த ஓசை அகவலெனப்படும்; அவை: தச்சுவினை மாக்கள்கண்ணும், களம்பாடும் வினைநர்கண்ணும், கட்டுங் கழங்குமிட்டு உரைப்பார்கண்ணும், தம்மில் உறழ்ந்துரைப்பார் கண்ணும், பூசலிசைப்பார்கண்ணும் கேட்கப்படும். கழங்கிட்டுரைப்பார் அங்ஙனமே வழக்கினுள்ளதாய்க் கூறும் ஓசை ஆசிரியப்பாவெனப்படு மென்றவாறு. (81)

நச்சினார்க்கினியர்

81. அகவல் என்ப .... யம்மே.

இது, நிறுத்த முறையானே தூக்குணர்த்துகின்றது; நிறுக்கப்படும் பொன், வெள்ளி முதலிய பொருள்களைப் பெற்றுழியன்றிக் கழஞ்சு, தொடி, துலாம் எனத் துலைக்கோலாற் றூக்கி யளக்குமாறில்லை; அது போல அடிவரையறை யுடையவாய்ப் பரந்த பாவினை யடிகளால் துணித்துத் தூக்கி ஓசை வேறுபாடுணர்த்துதலின் தூக்கு எல்லாப் பாவிற்கும் பொதுவாயிற்று.

(இ-ள்) வழக்கினுள் அகவல் என்று வழங்கப்படும் ஓசையை ஆசிரியத்திற்குரிய என்ப எ-று.

அகவிக் கூறலின் அகவலாயிற்று. அஃதாவது கூற்றும்[1] மாற்றமும் ஆகி ஒருவன் கேட்ப அவற்கு ஒன்று செப்பிக் கூறாது தாங் கருதிய வாறெல்லாம் வரையாது கூறுவது. அதனை வழக்கினுள் அழைத்த லென்ப. அங்ஙனம் கூறுமிடத்துத் தொடர்ந்து கிடந்த வோசை அகவலாம்.

அவை களம்பாடு பொருநர்கண்ணும், கட்டுங் கழங்கும் இட்டுரைப்பார்கண்ணும், தம்மின் உறழ்ந்துரைப்பார்கண்ணும், பூசலிசைப்பார்கண்ணும் கேட்கப்படும். வழக்கின்கண் உள்ளதாய் அங்ஙனம் அழைத்துக் கூறும் ஓசை ஆசிரியப்பா என்றவாறு. (81)

சிவலிங்கனார்

அகவல் .... யம்மே.

(இ-ள்) அகவல் என்னும் ஓசை ஆசிரியப்பாவுக்குரியதாகும். எ-று. அகவுதல் - கூவுதல், அழைத்தல். ஆசிரியப்பாவின் ஓசை மயில் அகவுதல் போல் அற்றற் றொழுகும்.

---

1. கூற்று - ஒருவர் கூறுவது, மாற்றம் - அதற்கு மற்றொருவர் கூறும் மறுமொழி.

வெண்பாத்தூக்கு

387. அஃதன் றென்ப[1] வெண்பா யாப்பே. (78)

இலக்குவனார்

394. The *venbā* form is different from that.

இளம்பூரணர்

387. அஃதன் றென்ப .... யாப்பே.

என்-னின், வெண்பாவிற் குரிய ஓசை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வெண்பாவாக யாக்கப்பட்டது அகவலோசையன்று என்றவாறு.

எனவே, அகவுதலில்லாத ஓசையாம். இதனைப் பிற நூலாசிரியர் செப்பலோசை என்ப. அகவுதல் என்பது ஒரு தொழில். அத் தொழில் இதன்கண் இல்லாமையின் 'அஃதன்று' என்றார்.

(உ-ம்) "பொன்னார மார்பிற் புனைகழற்காற் கிள்ளிபேர்
உன்னேனென் றூழுலக்கை பற்றினேற் - கென்னோ
மனனோடு வாயெல்லாம் மல்குநீர்க் கோழிப்
புனல்நாடன் பேரே வரும்." (முத்தொள். 104)

இது மேற்சொல்லப்பட்டது போல இசைகுறித்து வருதலின்றிச் செப்புதலாகிய வாக்கியம் போன்ற ஓசைத்தாகி வந்தவாறு காண்க.[2] (78)

பேராசிரியர்

394. அதாஅன் .... யாப்பே.

இது, வெண்பாவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேற்கூறிய அகவலோசையன்றிச் செப்பிக் கூறும் ஓசையெல்லாம் வெண்பாவெனப்படும் என்றவாறு.

யாப்பென்றதனான் அப் பாக்கள் செய்யுண் முழுதும் ஒருங்கு தழீஇக் கிடக்குமென்பது கொள்க. அகவிக் கூறாது ஒருவற்கொருவன் இயல்புவகையானே ஒரு பொருண்மை கட்டுரைக்குங்கால் எழும் ஓசை செப்பலோசை யெனப்படும். இவ் விரண்டுமல்லது வழக்கினுள் இன்மையான் அதான்றெனவே அதனிலக்கணம் போல்வதாயிற்று.[3] (82)

---

1. அதாஅன்றென்ப - பேரா. நச். பாடம்
2. அகவுதல் போலும் ஓசையின்றி ஒருவனுக்குக் கூறும் செப்புப் (விடை) போல்வதோர் ஓசையுடையதாகி வந்தவாறு காண்க.
3. போல்வதாயிற்று - பெறலாயிற்று என்னும் பொருளுடையது. அழைத்துக் கூறுவது அகவல்; அதற்கு விடை கூறுவது செப்பல்; இருவகைக் கூற்றிலும் வரும் ஓசைகள் முறையே அகவல் ஓசை, செப்பல் ஓசை எனப்படும்.

நச்சினார்க்கினியர்

82. அதாஅன் .... யாப்பே.

இது, வெண்பாவிற்குரிய செப்பலோசை கூறுகின்றது.

(இ-ள்) மேற்கூறிய அகவிக் கூறும் ஓசையன்றிச் செப்பிக் கூறுமோசை யெல்லாம் வெண்பா எனப்படும் என்று சொல்லுவர் ஆசிரியர் எ-று.

யாப்பு என்றதனான் அவ் வோசை செய்யுண் முழுவதூஉம் ஒருங்கு தழீஇக் கிடக்கும் என்றவாறு.

அழைத்துக் கூறாது ஒருவற்கொருவன் இயல்பு வகையான் ஒரு பொருண்மையைக் கட்டுரைக்குங்கால் எழுந்த வோசை செப்பலோசை எனப்படும். அவ் விரண்டு மல்லது வழக்கினு ளின்மையின் 'அதாஅன்றென்ப' என அவைகளி னிலக்கணம் பெறலாயிற்று. (82)

சிவலிங்கனார்

அஃதன் .... யாப்பே.

(இ-ள்) அகவும் ஓசையுடையதன்று வெண்பாயாப்பு; எனவே செப்பும் ஓசையுடையதென்பதாம், எ-று. வெண்பா செப்பலோசையுடையது.

கலித்தூக்கு

388. துள்ளல் ஓசை கலியென மொழிப. (79)

இலக்குவனார்

395. The *thuḷḷal* melody is said to be of *kali*.

பி.இ.நூ.

யா.வி.78

துள்ளல் இசையன கலியே மற்றவை
வெள்ளையும் அகவலும் ஆய்விளைந் திறுமே.

இ.வி. 736

யா.வி. 78 சூத்திரமே

மு.வீ. யா. செ 34

அளவடி யாய்த்துளல் அமைந்து வருவது
கலியாம் என்மனார் கற்றுணர்ந் தோரே.

இளம்பூரணர்

388. துள்ளல் ஓசை .... மொழிப.

என்-னின், கலிப்பாவிற்கு ஓசையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) துள்ளலோசை கலிப்பாவிற்காம் என்றவாறு.

துள்ளுதலாவது ஒழுகுநடைத்தன்றி[1] இடையிடை யுயர்ந்து வருதல்; கன்று துள்ளிற்றென்றாற் போலக் கொள்க.

(உ-ம்)"அரிதாய அறனெய்தி அருளியோர்க் களித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்
புரிவமர் காதலிற் புணர்ச்சியுந் தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநங் காதலர்
வருவர்கொல் வயங்கிழாஅய் வலிப்பல்யான் கேளினி" (கலி.11)

என்றவழி 'அரிதாய வறன்' என நின்றவழிச் செப்பலோசைத்தாகிய வெண்சீர்ப் பின்னும் வெண்டளைக்கேற்ற சொல்லோடு புணராது ஆண்டெழுந்த ஓசை துள்ளி வந்தமையால் துள்ளலோசை யாயிற்று. (79)

பேராசிரியர்

395. துள்ள லோசை .... மொழிப.

இனி, துள்ளலுந் தூங்கலும் செய்யுட்கணன்றி வழக்கினுஞ் செய்யுளிலும் ஒப்ப வருவனவல்ல; அவற்றுள், துள்ளலோசை உணர்த்துகின்றது.

(இ-ள்) துள்ளலோசை யென்பது, வழக்கியலாற் சொல்லாது முரற்கை[2]ப்படுமாற்றால் துள்ளச் சொல்லும் ஓசை; அது கலிப்பா வெனப்படும் என்றவாறு. (83)

நச்சினார்க்கினியர்

83. துள்ள லோசை .... மொழிப.

இது, செய்யுட்கண் நிகழுதற்குரிய துள்ளலோசை கூறுகின்றது.

(இ-ள்) வழக்கியலாற் கூறாது முரற்கைப்படுமாற்றால் துள்ளச் சொல்லுமோசை கலிப்பா எனப்படும் எ-று. (83)

சிவலிங்கனார்

துள்ளல் .... மொழிப.

(இ-ள்) கலிப்பா, துள்ளல் ஓசையது எனக் கூறுவர், எ-று.

1. ஒழுகுநடை - நீர் ஒழுதல் போலும் ஓசை நடை; 2. முரற்கை - துள்ளுதல்

வஞ்சித்தூக்கு

389. தூங்கல் ஓசை வஞ்சி யாகும். (80)

இலக்குவனார்

396. The *thūngal* melody is said to be of *vañji*.

பி.இ.நூ.

யா.வி. 90

தூங்கல் இசையன வஞ்சி.

இ.வி. 740

யா.வி. 90 பார்க்க.

தொன். 237

வஞ்சிக்கு ஓசை வழங்கும் தூங்கலே.

மு.வீ.யா.செ. 52

தூங்கல் இசையன வஞ்சி.

இளம்பூரணர்

389. தூங்கல் ஓசை .... யாகும்.

என்-னின், வஞ்சிப்பாவிற்குரிய ஓசை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தூங்கலாவது அறுதியற்ற ஓசைத்தாகி வரும் வஞ்சி என்றவாறு.

"சுறமறிவன துறையெல்லாம்
இறைவீன்பன இல்லெல்லாம்
மீன்திரிவன கிடங்கெல்லாம்
தேன்தாழ்வன பொழிலெல்லாம், எனத்
தண்பணை தழீஇய இருக்கை
மண்கெழு நெடுமதில் மன்னன் ஊரே." **(யா.வி.ப.63)**

இதனுட் சீர்தோறும் ஓசை யற்றவாறு கண்டு கொள்க. (80)

பேராசிரியர்

396. தூங்க லோசை .... யாகும்.

இது, தூங்கலோசை யுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அடியிற்றூங்காது சீர்தொறுந் தூங்குமோசை தூங்கலோசை யெனப்படும். அதுபோலும் வஞ்சிப்பாவாவது என்றவாறு. (84)

நச்சினார்க்கினியர்

84. தூங்க லோசை .... யாகும்.

இஃது, அச் செய்யுட்கண் நிகழ்தற்குரிய தூங்கலோசை கூறுகின்றது.

(இ-ள்) அடியிறுதியிற் றூங்காது சீர்தொறுந் தூங்கப்படும் ஓசை வஞ்சிப்பாவாகும் எ-று.

துள்ளலுந் தூங்கலும் வழக்கின்கண் நிகழா வென்றுணர்க.[1] (84)

சிவலிங்கனார்

தூங்கல் .... யாகும்.

(இ-ள்) சீர்தொறும் தூங்கப்படும் ஓசை வஞ்சிப்பாவுக்குரியதாகும். எ-று.

மருட்பாத் தூக்கில்லை

390. மருட்பா ஏனை இருசார் அல்லது
தானிது என்னுந் தன்மை[1] யின்றே. (81)

இலக்குவனார்

397. *Marutpā* has no separate melody said to be of its own other than those two.

பி.இ.நூ.

யா.கா. 36

வெண்பா முதல்வந்து அகவல்பின் னாக விளையுமென்றால்
நன்பால் மொழிமடவாய் மருட்பா என்னும் வையகமே.

வீர. 119

வெள்ளை, முந்தி இறுதி அகவலதாகி முடியுமென்றால்
இந்து நுதல்மட வாய்மருட் பாவென் றியம்புவரே.

தொன். 238

மருட்பா வெண்டளை வந்தபின் அகவல்
ஈற்றின் மருளும் இயல்புடைத் தென்ப.

---

1. துள்ளல் ஓசைபடவும் தூங்கல் ஓசைபடவும் உலகவழக்கில் பேசுதல் இல்லை செய்யுளிலேயே வருவன.

மு.வீ.யா.செ. 61

வெண்பா முதல்வந்து அகவல்பின் வருவது
மருட்பா எனப்பெயர் வைக்கப் பெறுமே.

இளம்பூரணர்

390. மருட்பா ஏனை .... யின்றே.

என்-னின், மருட்பாவிற்கு ஓசை இதுவென உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மருட்பாவிற்கு ஓசை இதுவென்னுந் தன்மை இல்லை; அதற்கு வெண்பாவும் ஆசிரியப்பாவும் உறுப்பாக, இவ் விரண்டின் ஓசையே அதற்கு ஓசை என்றவாறு.

"திருநுதல் வேரரும்புந் தேங்கோதை வாடும்
இருநிலனுஞ் சேவடி யெய்தும் - அரிபரந்த
போகிதழ் உண்கண் இமைக்கும்
ஆகு மற்றிவள் அகலிடத் தணங்கே" (பு.வெ.மா.கைக்கிளை. 3)

என்பதனுட் கண்டுகொள்க. (81)

பேராசிரியர்

397. மருட்பா .... யின்றே.

இது, மருட்பாவிற்கு வேறுபாடு இல்லை என்பது உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மருட்பாவிற்கு உறுப்பாவது ஒழிந்த இருகூறு-மல்லது தானாக வேறுபடுத்து இதுவெனக் காட்டுந் தனிநிலையின்று என்றவாறு.

எனவே, இரண்டன் கூட்டத்துக்கண்ணது மருட்பாவாவ தென்றவாறு. பரிபாடற்கு இருசார் இன்மையின் ஈண்டுக் கூறிற்றிலர். அது மேற்கூறுப 'ஏனை இருசார்' என்ற தென்னையெனின் - இச் சூத்திரத்து முன்னர் அதிகாரப்பட்டு நின்ற துள்ளலோசையும் தூங்கலோசையுமல்லது அங்ஙனஞ் செய்யுட்கு உரியவன்றி[2] வழக்கிற்கு வருவனவாகி ஒழிந்து நின்ற செப்பலும் அகவலுமே யென்றற்கு அவ்வாறு கூறினானென்பது. அவை இரண்டுங் கொள்ளுங்கால் நிறுத்தமுறையாற் கொள்ளாது, எதிர் சென்று கொள்ளப்படும். கொள்ளவே, செப்பன் முன்னாகவும் அகவல் பின்னாகவும் வருவதாயிற்று மருட்பா. இனி நிறுத்த முறையானே கொள்வார் வெண்பாமுதல் வந்து அகவல் பின்னாக வருவது மருட்பாவன்றெனவும், வெண்பாவொழித்து ஒழிந்த பாத் தம்முன் மயங்குவனவே மருட்பாவெனவுங் கூறுப. கலிப்பாவும் வஞ்சிப்பாவும் ஆசிரியத்தோடும்

1. தனிநிலை - பேரா, நச். பாடம்; 2. செய்யுட்கு மட்டும் உரியவன்றி

வெண்பாவோடும் மயங்கிற்றினும் மருட்பாவெனப்படாமையின் அது பிழைக்குமென்பது. (85)

நச்சினார்க்கினியர்

85. மருட்பா வேனை .... யின்றே.

இது, மருட்பாவிற்கு வேறோசை யின்றென்கின்றது.

(இ-ள்) மருட்பா - மருட்பாவிற்கு ஓசையாவது, ஏனை இருசா ரல்லது தானிது என்னுந் தனிநிலை இன்றே - ஒழிந்த இருகூறுமல்லது தானாக வேறுபடுத்து இதுவென்று காட்டும் தனிநிலை இன்று எ-று.

எனவே, செப்பலும் அகவலுங் கூடியது மருட்பாவாயிற்று. அதிகாரப்பட்டுச் செய்யுட்குரியவாய் நின்ற துள்ளலுந் தூங்கலும் ஒழிந்தனவே வரும் என்றற்கு ஏனை யென்றார். சூத்திரங்களை நிறுத்த முறையாற் கொள்ளாது எதிர்சென்று கோடலிற் செப்பல் முன்னும் அகவல் பின்னுமாம்.[1] (85)

சிவலிங்கனார்

மருட்பா .... யின்றே.

(இ-ள்) மருட்பாவுக்கு வெண்பாவின் செப்பலோசையும் ஆசிரியப் பாவின் அகவல் ஓசையும் வருவதல்லது தனக்குரியது என ஓர் ஓசையையுடையதன்று, எ-று.

மருட்பா, வெண்பா முன்னும் ஆசிரியவடி பின்னும் சேர்ந்து வருதலின் தனக்கென ஓசையில்லாத தாயிற்று.

முடிப்பு

391. அவ்வியல்[2] பல்லது பாட்டாங்குக் கிளவார். (82)

இலக்குவனார்

398. Nobody will compose in forms other than these.

இளம்பூரணர்

391. அவ்வியல் .... கிளவார்.

---

1. அகவல்ஓசை, செப்பல்ஓசை, துள்ளல்ஓசை, தூங்கல்ஓசை என முறையாகக் கூறி வந்தமையின் ஏனை என இச் சூத்திரத்துக் கூறப்பட்டன எதிர்நிரல்நிறையாகக் கொண்டு தூங்கல், துள்ளல், செப்பல், அகவல் என நிறுத்தின் செப்பல் முன்னரும் அகவல் பின்னரும் வருதலின் மருட்பாவானது. செப்பலுக்குரிய வெண்பா முன்னரும் அகவலுக்குரிய ஆசிரியப்பாப் பின்னருமாக இணைந்து வருவதே மருட்பா எனப்படும் என்பதாம்.

2. அவ்விய லல்லது - பேரா. பாடம்

என்-னின், பாக்கள் எல்லாவற்றிற்கும் உரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட ஓசை வகையானல்லது பாட்டாங்குக் கூறார் என்றவாறு.

பாட்டாங்குக் கூறுதலாவது ஓசை ஒழித்துச் சீருந் தளையும் அடியும்படக் கூறுதல். அவ்வாறு படக்கூறுதலால் பாட்டாங்கு ஆகாதென் பதூஉம் அடியுந்தொடையும் பெற வந்ததாயினும் நூலின்பாற்படுதல் உரையின்பாற்படுதல் என்பதூஉம் கூறியவாறாம். அது வருமாறு:

"ஐவகை அடியும் விரிக்குங் காலை
மெய்வகை அமைந்த பதினேழ் நிலத்தும்
எழுபது வகையின் வழுவில வாகி
அறுநூற் றிருபத் தைந்தா கும்மே" **(செய். 48)**

என்பது ஆசிரியப்பாவிற்குரிய இலக்கணமுடைத்தாயினும் ஓசையின்மை யான் ஆசிரியம் எனப்படாது நூலெனப்படும் என்று கொள்க.[2] (82)

பேராசிரியர்

398. அவ்விய லல்லது .... கிளவார்.

இது, மேலவற்றிற்கு ஒரு வரையறை கூறுகின்றது.

"மருட்பா வேனை யிருசா ரல்லது
தானிது வென்னுந் தனிநிலை யின்று" **(397)**

எனவே, அவ் விரண்டன் கூட்டத்தின்கண்ணும் வேறொரு பாப் பிறக்குமென்று கொள்ளினுங் கொள்ளற்கவெனவும் பிற்காலத்து நூல் செய்யும் ஆசிரியர் பிறவகையாற் பாவுறுப்பினை, மயக்கம்பட வேண்டுவா ருளராயின் அவரை விலக்கியுங் கூறியவாறு. அல்லதூஉம் மாணாக்கன் இதன் முதனூல் செய்த ஆசிரியன் பண்ணுந் திறனும் பகுத்தானைக் கண்டு இவற்றையும் பாவும் இனமுமாகப் பகுத்தான்கொலென்று ஐயுறாமை விலக்கி இயனூலுள் அவ்வாறு கூறிற்றிலனெனச் சொல்லினா னென்பது. நான்கு பாவினையும்[3] நோக்கி ஆங்கு என்றான்; ஐந்து செய்யுளை[4] நோக்கி 'அவ்வியல்' என்றானென்பது. (86)

நச்சினார்க்கினியர்

86. அவ்வியல் பல்லது .... கிளவார்.

---

1. நூலின்பாற்படுதல் - நூற்பாவின் பாற்படுதல். நூற்பா என்பது இலக்கணம் கூறும் பாட்டு; அது சூத்திரம் எனப்படுவது.
2. ஆசிரியப்பா ஓசையில்லாமையின் நூற்பா எனப்படும்.
3. நான்கு பா - வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா
4. ஐந்து செய்யுள் - வெண்பாச் செய்யுள், ஆசிரியச் செய்யுள், கலிப்பாச் செய்யுள், வஞ்சிப்பாச் செய்யுள், மருட்பாச் செய்யுள்

இது, மேலனவற்றிற்கு ஓர் வரையறை கூறுகின்றது.

(இ-ள்) மேற்கூறிய நான்கு ஓசையானல்லது செய்யுளை முதனூற் கண் ஆசிரியர் கிளவார் எ-று.

எனவே, யானும் அதுவே கருதினேன் என்றார். ஆங்கு என்றது அகத்தியத்தினை.

இதன் பயன் முற்கூறிய பாக்களாற் பெயர்பெறாத பரிபாடல் முதலிய செய்யுள்கட்கும் ஓசை இவையொழிய வேறின்றெனபதூஉம், மருட்பாப்போல[1] வஞ்சியுங் கலியுந் தம்மிற் கலவா வென்பதூஉம், பிற் காலத்து நூல் செய்த ஆசிரியர் பாவுறுப்பினை மயக்கம்பட வேண்டுவா ருளராயின், அவரை விலக்குவதூஉம், முதலாசிரியர் இசைக்குப் பண்ணுந் திறமும் பகுத்தாற்போல, இயற்குப் பாவும் இனமும் பகுத்தார்கொல் என்னும் ஐயம் நீக்குவதூஉம் ஆம்.

இவர் கருத்தாற் சான்றோரும் இனங்கொள்ளாராயினார். (86)

சிவலிங்கனார்

அவ்வியல் .... கிளவார்.

(இ-ள்) செய்யுட்குரிய ஓசைகளை மேலே கூறப்பட்டவாறல்லது தாம் வேண்டியவாறு கூறார், எ-று.

அஃதாவது பாவென்பது தூக்கால் (ஓசையால்) அமைவது; செய்யுள் என்பது காத்தூக்கால் செய்யப்படுவது. அதனால் பாவகை வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி என நான்காம். பாவகையான அந் நான்கு செய்யுளோடு வெண்பா ஆசிரியம் கலி வஞ்சி என நான்காம். பாவகையான அந் நான்கு செய்யுளோடு வெண்பா ஆசிரியம் இரண்டாலும் செய்யப்படும் மருட்பாச் செய்யுள் ஒன்று சேர்ந்து செய்யுள்வகை ஐந்தாம். நான்கும் ஐந்துமான அவ் வியல்பினல்லது வேறுவகையில் பாவாகவோ செய்யுளாக வோ புனைதல் இல்லை என்பது. சீர் தளை முதலிய கொண்டு உரை, நூல் முதலிய யாப்புகள் செய்யப்படினும் அவையெல்லாம் உரைப்பா, நூற்பா முதலிய பெயரானே வழங்கப்படும். சிலப்பதிகாரத்தில் உரை உரைப்பாட்டு வருவதும், தொல்காப்பியச் சூத்திரங்கள் நூற்பா எனப் படுவதும் கண்டு தெளிக.

392. தூக்கியல் வகையே ஆங்கென மொழிப. (83)

இலக்குவனார்

399. The modes of *thūkku* (note) are said to be found in those.

1. மருட்பாவில் வெண்பாவும் ஆசிரியப்பாவும் கலந்தது போல

இளம்பூரணர்

392. தூக்கியல் வகையே .... மொழிப.

என்-னின், ஐயமறுத்தலை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேல் அதிகாரப்பட்ட தூக்கியலும் வகை சொல்லப்பட்ட நாலுமே என்றவாறு.

எனவே இன்னும் உளவோ எனக் கருதற்க வென ஐயந்தீர்த்தவாறு. ஈங்கு ஓதப்பட்ட தூக்குச் செவிப்புலனாதலின் அதனானே ஓர்ந்துணர்ந்து பாகுபாடறிக. (83)

பேராசிரியர்

399. தூக்கியல் .... மொழிப.

இது, தூக்காமா றுணர்த்துகின்றது.

(இ-ள்) தூக்கெனப்பட்ட உறுப்பு நடக்கும் இடவகை அச் சொல்லப்பட்ட நான்கிடமுமாம் என்றவாறு.

ஆங்கென்றது அப் பெற்றித்து என்றவாறாகக் கொள்ளற்க. அவ்விடந் தூக்கு இயலும் இடப்பகுதி யென்றவாறு; என்றார்க்குத் தூக்கினது இலக்கணம் ஈண்டுக் கூறியதிலனாலெனின், தூக்கென்பது சொல்லின் முடியு மிலக்கணத்திற்றது. தூக்கென்பது, நிறுத்தலும் அறுத்தலும் பாடலு மென்றின்னோரன்னவற்றுமேல் நிற்கும்; ஈண்டும் அவ்வாறே பாவினை இத்துணை யடியென நிறுத்திக் கூறுபாடறிதலும், அவ்வத் தூக்குள்வழிச் சொல்லுவாரது உறுப்பு விகாரப்பட்டு ஓடுவது போன்று அசையுமாறுங் கண்டுகொள்க. இனி, அதுதான் இன்ன பொருளை அறுத்து நிற்குமென் பான் பாக்கூறி, அப் பாவின்கண்ணது இவ் வறுதியென்றான்; எனவே, இனிக் கூறாது நின்றதில்லை தூக்கிற்கு வேண்டும் இலக்கணமென்பது. இக் கருத்தினானே தூக்கினைப் பாவெனினும் அமையும்.

"பாவென மொழியினுந் தூக்கினது பெயரே"

எனப் பிறருஞ் சொல்லுப.

அகவலோசைக்கண் தூக்கு வருங்கால் இருசீர் முதலா எண் சீர்காறும் பரந்துபட்ட அகவலோசையை நாற்சீர்க்கண்ணே துணித்துக் கொள்ள, அஃது ஆசிரியத் தூக்கா மென்றவாறு. இருசீரால் துணிப்ப ஆசிரியவோசையாகாது; முச்சீரால் துணிப்பினும் ஆசிரியவோசையாம்; என்னை? ஈற்றயலடி முச்சீர்த்தாமெனவும் இடையும் வரையாரெனவுங் கூறினமையின். அஃதேல், அடிவகையானே அறுதியுணர்த்து மாகலின் தூக்கு எவன் செய்யுமெனின், அவ் வடியினையுந் தூக்கானன்றி உணர்த்த லாகாது; என்னை? இருசீர் முதலாகப் பலசீர் தொடர்ந்தவழித் தூக்கு அறுப்புக் கொண்டன்றி இத்துணைச் சீர்கொண்ட அடி இஃதென்பது

அறியலாகாமையின்; அல்லதூஉம், ஆசிரியத்துள் எண்சீர் தொடர்ந்தும் பாச்சென்ற வழி அதற்கு வருமெனப்பட்ட முச்சீரடியும் ஐஞ்சீரடியுமாகாது நாற்சீரடி இரண்டென்று அறிதற்குக் கருவி தூக்கென்பது கொள்க; அல்லாக்கால்,

"உள்ளார் கொல்லோ தோழி முள்ளுடை
யலங்குகுலை யீந்தின் சிலம்பிபொதி செங்காய்" (ஐங்குறு.)

என்றவழி, 'உள்ளார்', 'முள்ளுடை' என்பன அடியெதுகையாக முச்சீரடியும் ஐஞ்சீரடியுமெனக் கொண்டு மயக்கமாமென்பது.

"நரந்த நாறுந் தன்கையாற்
புலவுநாறும் என்தலை தைவரு மன்னே" (புறம். 235)

என்றவழி, எண்சீரான் இரண்டு நாற்சீரடி வந்தனவென்று கோடுமன்றே தூக்கின்றாயினென்பது.[1]

தூங்கலோசை அவைபோல நாற்சீரடிக்கணன்றி இரு சீர்க்கண்ணும்[2] சிறுபான்மை முச்சீர்க்கண்ணும்.[3] தூக்குக் கொள்ளப்படும். அங்ஙனங் கொள்ளாக்கால் இருசீரடியெனவும் முச்சீரடியெனவுந் தூக்கின்றி இடைதெரியப்படாவென்பது.[4] (87)

நச்சினார்க்கினியர்

87. தூக்கியல் .... மொழிப.

இது, தூக்கிற்கு இலக்கணங் கூறுகின்றது.

(இ-ள்) தூக்கென்று சொல்லப்பட்ட உறுப்பு நடக்கும் இடவகை சொல்லப்பட்ட நான்கிடமும் எ-று.

தூக்கென்பது சொல்லின் முடியும் இலக்கணமாம். அது நிறுத்தலும் அறுத்தலும் பாடலும் என்றின்னோரன்னவற்றுமேல் நிற்கும். ஈண்டும் அவ்வாறே பாவென்னும் பொருளை இத்துணை யடியென நிறுத்துக் கூறுபாடறிதலும் அவ்வத் தூக்குள்வழிச் சொல்லுவார். அஃது உறுப்பு விகாரப்பட்டு ஓடுவது போன்று அசையுமாறு காண்க.

---

1. தூக்கு என்னும் அறுத்து இசைக்கும் ஓசையில்லையென்றால்.
"நரந்த நாறும் தன்கையால்
புலவுநாறும் என்தலை தைவரு மன்னே"
என முச்சீராகவும் நாற்சீராகவும் அறுக்காமல்,
"நரந்த நாறும் தன்கையால் புலவு
நாறும் என்தலை தைவரு மன்னே"
என நாற்சீரடி இரண்டாகக் கொள்ள வரும் அன்றோ? நச். விளக்கம் காண்க.

2. இருசீர் - இருசீரடி 3. முச்சீர் - முச்சீரடி .

4. இருசீரடி வஞ்சிப்பாவில் தூக்குக் கொள்ளவில்லை என்றால் இருசீரடி யிரண்டும் நாற்சீர் ஓரடியாகவும், முச்சீரடி இரண்டும் நாற்சீரடி ஒன்றும் குறைவுமாகக் கொள்ள நேரும்.

"பாவென மொழியினுந் தூக்கினது பெயரே"

என்றார் பிறராதலின் தூக்கினைப் பா என்றலுமாம்.

இருசீர்முதல் ஐஞ்சீர்காறும் பரந்துபட்ட அகவலோசையைப் 'பெரியகட் பெறினே' எனச் சொற்சீரடியாகவும் 'யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே' என அளவடியாகவும் 'நரந்த நாறுந் தன்கையால்' எனச் சிந்தடியாகவும் 'சிறுசோற் றானு நனிபல கலத்தன் மன்னே' என நெடிலடியாகவும் தூக்குத் துணித்தவாறு காண்க.

இங்ஙனம் தூக்கின்றென,

'நரந்த நாறுந் தன்கையாற் புலவு
நாறு மென்தலை தைவரு மன்னே'

என்றதனை இரண்டு நாற்சீரடியாக அலகிட அகவலோசை பிறவாமை யுணர்க.

'உள்ளார் கொல்லோ தோழி' என்பதற்கு முள்ளுடை என்பது அடியெதுகையாய்ச் சிந்தடியும் நெடிலடியுமாகக் கொள்ள நின்றதனையுந் தூக்குத்துணிந் திரண்டனையும் அளவடியாக்கியவாறுங் காண்க.

தூக்கின்றென மயக்கடி வஞ்சி யிடைதெரியாமையு முணர்க.[1] (87)

சிவலிங்கனார்

தூக்கியல் .... மொழிப.

(இ-ள்) மேலே சொல்லப்பட்ட அகவல், செப்பல், துள்ளல், தூங்கல் என்னும் பாக்களின் ஓசைவகை அந் நான்கே; பிறவில்லை என்பர், எ-று.

இக்காலத்து வரும் புதுக்கவிதைகளும் நான்கில் பெரும்பாலும் ஆசிரியத்து அடங்கும் என்க. சில உரைச்செய்யுளுமாம். எதிலும் அடங்காத புதுக்கவிதைகளைப் புதுக்கவிதையென்றே ஒழிக.

9. தொடை

அடிதோறும் வருமவகை

**393. மோனை எதுகை முரணே இயைபென
நால்நெறி மரபின தொடைவகை என்ப. (84)**

இலக்குவனார்

400. The kinds of rhymes are said to be the four which are *mōṉai, ethukai, muraṇ* and *iyaipu*.

---

1. பேராசிரியர் உரையில் 4-ன் அடிக்குறிப்புக் காண்க.

பி.இ.நூ.

யா.வி. 33, 34

தொடையே அடியிரண்டு இயையத் தோன்றும்
மோனை எதுகை முரண்இயைபு அளபெடை.

இ.வி. 722

மோனை எதுகை முரண்இயைபு அளபெடை
ஆனஅவ் வைந்தும் .... தொடை.

இளம்பூரணர்

393. மோனை எதுகை .... என்ப.

என்-னின், தொடைப் பாகுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மோனை எனவும் எதுகை யெனவும் முரணெனவும் இயைபெனவும் நான்கு நெறிப்பட்ட மரபினையுடைய தொடையினது பாகுபாடு என்றவாறு.

உதாரணந் தத்தம் சிறப்புச் சூத்திரங்களுட் காட்டுதும். (84)

பேராசிரியர்

400. மோனை யெதுகை .... யென்ப.

இது,

"மரபே தூக்கே தொடைவகை யெனாஅ" (313)

என நிறுத்த முறையானே, தூக்குணர்த்தித் தொடைவகை உணர்த்துவா னெழுந்தான், அவைதாம் இவையெனப் பெயரும் முறையுந் தொகையு முணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மோனைத்தொடையும், எதுகைத்தொடையும், முரண்தொடையும், இயைபுதொடையுமென நான்கு வகைப்படும் தொடை என்றவாறு.

'நெறிமரபு' என்பது, நெறிப்பட்ட தொடையிலக்கணம் இது வென்றவாறு; எனவே,

"அளபெடை தலைப்பெய வைந்து மாகும்" **(401)**

என்றவழி, இதுபோலச் சிறந்ததன்று அளபெடைத் தொடை யென்பதாம்; என்னை? அதுவும் வழுவமைத்துக் கொண்ட எழுத்தாகலா னென்பது. 'தொடைவகை' என்பது தொடைப் பகுதி பலவுமென்றவாறு. அவை மேற்கூறுமாற்றான் மோனை நான்கும், எதுகை பதினைந்தும், முரண் ஐந்தும், இயைபு இரண்டுமென்று இவ்வகைப்படுதலும், இனி ஈண்டு

எண்ணப்பட்ட தொடைப் பகுதிகளும் அறுநூற்றிருபத்தைந்தடியினையும் ஓரோவொன்றாகத் தம்மொடு தம்மைத் தொடுப்பனவும், அவை தம்மொடு பிறவந்தது தொடுப்பனவும், ஓரடிக்கண்ணே தொடுப்பனவும், அவற்றைக் கட்டளையடியல்லனவற்றும் ஈறாய் விராய்த் தொடுப்பனவும், கட்டளை யடியல்லனவற்றைத் தம்மொடு தம்மைத் தொடுப்பனவும், தம்மொடு பிற வந்தது தொடுப்பனவுமென இன்னோரன்ன பலவுமுள. அப் பகுதியெல்லாம் அறிவித்தற்குத் 'தொடைவகை' என்றானென்பது. (88)

நச்சினார்க்கினியர்

88. மோனை எதுகை .... யென்ப.

இது, நிறுத்த முறையானே தொடை கூறுகின்றார்; அவற்றது பெயரும் முறையும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தொடை மோனையும், எதுகையும், முரணும், இயைபும் என நான்கு வழியாகிய முறைமையினையுடைய எ-று.

நெறிமரபின எனவே அளபெடை வழுவமைத்துக் கொண்ட எழுத்தாகலின் அவ்வாறு சிறந்ததன்றாம்.

தொடைவகை யென்றதனான் அசையந்தாதியுஞ் சீரந்தாதியும் கொள்க.

இவைதாம் அறுநூற் றிருபத்தைந் தடிக்கண்ணும் வந்தவடியே வரவும் பிறவடி வரவும் தொடுப்பனவும், ஓரடிக்கண்ணே தொடுப்பனவும், கட்டளையடியொடு தொடுப்பனவும், சீர்வகையடி தம்மொடு தாமுந் தம்மொடு பிறவும் வந்து தொடுப்பனவும் எனப் பலவாயிற்று. (88)

சிவலிங்கனார்

மோனை .... யென்ப.

(இ-ள்) தொடைவகை மோனை, எதுகை, முரண், இயைபு எனும் நான்கு மரபினையுடைய, எ-று.

அளபெடைத் தொடையும் உண்டு, அது சிறப்புடைத்தன்று என்பார் எடுத்துக் கூறினார்.

இவை யாவும் செய்யுளின் அடிகளில் வருவன.

மேல்வரும் மோனை முதலியன ஓரடிக்கண் சீர்களில் வருவன.

394. அளபெடை தலைப்பெய ஐந்தும் ஆகும். (85)

இலக்குவனார்

401. The total of rhymes comes to five if *aḷapedai* is included.

பி.இ.நூ.

முன்சூத்திரத்துக் காண்க.

இளம்பூரணர்

394. அளபெடை .... ஆகும்.

என்-னின், இதுவுமது.

(இ-ள்) அளபெடைத் தொடையோடே கூட ஐந்தென்று சொல்லவும் பெறும் என்றவாறு. (85)

பேராசிரியர்

401. அளபெடை .... மாகும்.

இஃது, எய்தியதன்மேற் சிறப்புவிதி.

(இ-ள்) அந் நான்கே யன்றித் தொடைவகை ஐந்தெனவும்படும், அளபெடைத் தொடையோடு தலைப்பெய்ய என்றவாறு.

அளபெடை, எழுத்தோத்தினுள் வேறு எழுத்தெனப்படாமைச் சிறப்பின்மை நோக்கி, ஈண்டுமதனை வேறுபோதந்து கூறினானென்பது; என்றார்க்கு மேலைச் சூத்திரத்து நானெறி மரபினவெனத் தொகை கூறின மையின், ஈண்டு அளபெடையுந் தொடையாமென அமையும். நான்கின் மேல் ஒன்றேறியக்கால் ஐந்தாமென்பது ஈண்டுச் சொல்ல வேண்டுவதன்று பிறவெனின், அற்றன்று; நான்கினோடு ஒன்றினையே சொல்லுகின்றா னாயின் அது கடாவாவது; ஐந்தெனவும் ஆறெனவும் படுமென்றற்கு இது கூறினான்; எனவே, உயிரளபெடையும் ஒற்றளபெடையுமென அளபெடை இரண்டாதலி னென்பது. அஃதே கருத்தாயின், ஆறுமாகு மென்னுமெனின், அங்ஙனங் கூறின் உயிரளபெடையோடு ஒத்த சிறப்பிற் றாவான் செல்லும் ஒற்றளபெடையென மறுக்க. உயிரின் பின்னது ஒற்றாகலான் எடுத்தோத்துப் பெறுவது உயிரளபெடையெனவும்,[1] உம்மை யாற் பெறுவது ஒற்றளபெடையெனவுங் கொள்க. உம்மை, எச்சவும்மை.[2] ஒற்றளபெடை மூன்று பாவினுஞ் செல்லாது, கலிப்பாவினுள் துள்ள லோசையான் நில்லாமையினென்பது. (89)

நச்சினார்க்கினியர்

89. அளபெடை .... மாகும்.

இஃது, எய்தியதன் மேற் சிறப்புவிதி.

---

1. எடுத்து மொழியும் இலக்கணம் பெறுவது உயிரளபெடை.

2. ஐந்தும் என்பதன் உம்மை மேற்கூறிய நான்கைத் தழுவ இறந்தது தழீஇயது. ஒற்றளபெடையைத் தழுவ உயிரளபெடையன்றி ஆறாவதாக ஒற்றளபெடையைத் தழுவுதலின் முற்றும்மையின் நீங்கிய எச்சவும்மையாம்.

(இ-ள்) அந் நான்குடனே உயிரளபெடையைக் கூட்டத் தொடையைந்துமாம் எ-று.

உம்மை எச்சவும்மையாகலின் ஒற்றளபெடை கூட்ட ஆறுமாம் என்றவாறு. உயிரின் பின்னது ஒற்றாகலின் உயிரளபெடையை யெடுத்தோதி ஒற்றளபெடையை உம்மையாற் கொண்டார். கலிக்கு ஒற்றளபெடை துள்ளலோசையை நிகழ்த்தாதவாறு மேற்காண்க. (89)

சிவலிங்கனார்

அளபெடை .... ஐந்து மாகும்.

(இ-ள்) அளபெடை என்பதொன்று கூட்டத் தொடை ஐந்தாகவும் கூறப்படும், எ-று.

அடிச்சீர்களில் வரும் தொடைகள் (விகற்பம்)

395. பொழிப்பும் ஒரூஉஞ் செந்தொடை மரபும்
அமைந்தவை[1] தெரியின் அவையுமா ருளவே. (86)

இலக்குவனார்

402. There are *poḻippu, orūu* and *senthodai*, if the forms of composition are examined.

இளம்பூரணர்

395. பொழிப்பும் ஒரூஉஞ் .... ருளவே.

என்-னின், இதுவுமது

(இ-ள்) பொழிப்பெனவும் ஒரூஉ வெனவும் செந்தொடையாம் எனவும் அமைந்தன ஆராயின் அவையுந் தொடைப் பாகுபாடாம் என்றவாறு. (86)

பேராசிரியர்

402. பொழிப்பு .... குளவே.

இதுவும் அது.

(இ-ள்) மேற்கூறிய ஐந்துமேயன்றிப் பொழிப்புத் தொடையும், ஒரூஉத்தொடையும், செந்தொடையுமென இவையுமுள என்றவாறு.

செந்தொடை மரபென்பது செந்தொடை யிலக்கண மென்றவாறு.

---

1. அமைத்தனர் - பேரா. நச். பாடம்

'அமைத்தனர் தெரியின்' என்றதனான், அமையுமாற்றான் அமைத்துக்கொள்ளப்படும்; யாங்ஙனம்? பொழிப்பும் ஒரூஉவும் ஓரடி யுள்ளே வருமெனவும், செந்தொடை ஓரடியுள் வரினும் இரண்டடி யானன்றி வாராதெனவுங் கொள்க. இக் கருத்து நோக்கி இவை ஈண்டுப் போதந்து கூறினானென்பது.

'அவையுமா ருளவே' என்ற உம்மையான் இவைபோல ஓரடிக் கண்ணே வரும் முற்றெதுகையும், கிளைமுற்றெதுகையும் இரண்டந் தாதியும், இருவகை விட்டிசைத் தொடையுங் கொள்ளப்படும். (90)

நச்சினார்க்கினியர்

90. பொழிப்பும் .... ருளவே.

இதுவுமது.

(இ-ள்) பொழிப்பும் ஒரூஉவும் செந்தொடை மரபும் அமைத்தனர்- பொழிப்புத் தொடையும் ஒரூஉத்தொடையும் செந்தொடையிலக்கணமும் ஓரடிக்கண்ணே வருமென்று அமைத்தனர் ஆசிரியர்; தெரியின் அவையுமாருளவே - ஆராயின் அவையும் தொடையாதற்கு உள எ-று.

'தெரியின்' என்றதனாற் செந்தொடை ஓரடிக்கண் வரினும் ஈரடியானன்றி வாரா எனக் கொள்க. இக் கருத்தா ன் ஈண்டும் போதந்துவைத்தார்.

'அவையும்' என்ற உம்மையை எச்சப்படுத்திப் பிறவும் ஓரடிக் கண்ணே வருவனவும் உளவெனக் கொள்க. அவை முற்றெதுகையும், கிளைமுற்றெதுகையும், இரண்டந்தாதியும், இருவகை நிரனிறுத் தமைத்தவும் விட்டிசையுமாம். (90)

சிவலிங்கனார்

பொழிப்பும் .... உளவே.

(இ-ள்) செய்யுளின் ஓரடியில் பொழிப்புத்தொடை, ஒரூஉத் தொடை, செந்தொடை, மரபுதொடை ஆகியவையும் வரும் என அமைத்தனர்; தெரியுங்கால் அவையும் தொடைகளாதற் குரியனவாம், எ-று.

396. நிரனிறுத் தமைத்தலும் இரட்டை யாப்பும்
மொழிந்தவற் றியலான் முற்றும் என்ப. (87)

இலக்குவனார்

403. The forms of *nirai* and *irattai yappu* will complete the list of rhymes as formulated above.

மோனைத்தொடை

397. அடிதொறும் தலையெழுத் தொப்பது மோனை.(88)

இலக்குவனார்

404. *Mōnai* is to have the same letter at the beginning of each line.

பி.இ.நா.

யா.வி. 35

ஆதியெழுத்தே அடிதோறும் வரின்அடி
மோனைத் தொடையென மொழிமனார் புலவர்.

யா.கா. 16

எழுவாய் எழுத்தொன்றின் மோனை.

வீர. 110

முன்னிரண் டாவியும் ஈறும் ஐயும்மோனை.

இ.வி. 723

முதல்எழுத் தொன்றின் மோனை.

தொன். 212

அடைமுதல் மோனை.

மு.வீ.யா. 24

அடிதோறும் முதல்எழுத்து அணைந்துவரல் அடிமோனை.

இளம்பூரணர்

396. நிரனிறுத் .... என்ப.

என்-னின், இதுவுமது.

(இ-ள்) நிரலே நிறுத்தியமைத்துக் கோடலும் இரட்டைத் தொடையும் மேற்சொன்னவற்றான் முடியவும் பெறும் என்றவாறு.

நிரனிறைத் தொடையாவது பொருளைச் சேர நிறுத்திப் பயனையுஞ் சேரநிறுத்தல்.

இரட்டைத் தொடையாவது ஓரடி முழுவதும் ஒரு சொல்லே வருதல்.

இத்தனையுங் கூறப்பட்டது அடிதொறும் வருவன ஐந்து தொடை எனவும் அடிக்கண் வருவன ஐந்துதொடை எனவும் அவ் வைந்தும் மூன்றாகி அடங்குமெனவும் கூறியவாறாம். (87)

397. அடிதொறுந் .... மோனை.

என்-னின், மோனை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அடிதோறும் தலையெழுத்து ஒப்பது மோனைத் தொடையாம் என்றவாறு.

அஃதேல் 'அடியுள் ளனவே தளையொடு தொடையே' (செய்யுளியல், 32) எனவோதி ஈண்டும் அவற்றை யடியினும் வருமென்றல் பொருந்தாதெனின், ஆண்டு மற்றையடியில் வாராதென்றா ரல்லர்; அடியில்லாத உரைமுதலாயினவற்றில் தளையொடு தொடையில்லை என்பார் 'அடியுள் ளனவே தளையொடு தொடையே' என்றார்.

"மாவும் புள்ளும் வதிவயின் படர
மாநீர் விரிந்த பூவுங் கூம்ப
மாலை தொடுத்த கோதையுங் கமழ
மாலை வந்த வாடையும்
மாயோய் நின்வயின் புறத்திறுத் தற்றே" (யா.வி.ப.130)

என வரும். (88)

பேராசிரியர்

403. நிரனிறுத் .... மென்ப.

இது, நிரனிறைத் தொடையும் இரட்டைத் தொடையுமென இரண்டு தொடை கூறி, அவை முற்கூறிய தொடைப்பாற் படுமென்று அடங்கக் கூறுகின்றது.

(இ-ள்) நிரனிறைப் பொருள்வகையால் தொடுக்குந் தொடையும், வந்த சீரே நாற்கால் தொடுக்குந் தொடையும் முன்னைத் தொடைப்பாற் பட்டு அடங்கும் என்றவாறு.

யாத்தவெனினுந் தொடுத்தவெனினும் ஒன்று.

"அடல்வே லமர்நோக்கி நின்முகங் கண்டே
யுடலு மிரிந்தோடு மூழ்மலரும் பார்க்குங்
கடலுங் கனையிருளு மாம்பலும் பாம்புந்
தடமதிய மாமென்று தாம்."[1]

என்றவழி, உடலுங் கடலுமென நிரனிறைத் தொடைமேற் கூறுமாற்றான் எதுகைத் தொடையாய் அடங்கும்.

1. உடலும் - கடல், ஓடும் - இருள், மலரும் - ஆம்பல், பார்க்கும் - பாம்பு.

"பரவை மாக்கடற் றொகுதிரை வரவும்
பண்டைச் செய்தி யின்றிவள் வரவும்" (ப. 1094)

என இவ்வாறு நிரனிறுத்தலும் ஒன்று; அஃது இயைபின்பாற்படுமென்ப. ஒழிந்தனவும் அன்ன.

இரட்டைத் தொடை யென்பது, ஒரு சொல்லே நான்கு சீருமாகி வருமென்பது; அது,

"ஒக்குமே யொக்குமே யொக்குமே யொக்கும்." (யா.வி.ப.180)

என வரும். இது குறையீற்றிரட்டை; இயைபு தொடையாய் அடங்கும்.

"பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ
பாவீற் றிருந்த புலவிர்காள் பாடுகோ" (யா.வி.ப.18)

என்பது, நிரையீற்றிரட்டை. இதுவும் இயைபாய் அடங்கிற்று.

செந்தொடையாய் அடங்குவன உளவேற் கண்டுகொள்க.

(மற்றிவை) இவ்வாறு அடங்குவனவற்றை விதந்தோதுவது என்னையெனின், இவையுந் தொடைப்பாடு கண்டு ஐயுற்றானை ஐயமறுத்தானென்பது; எனவே, ஒழிந்த பொருள்கோள் தாமே நின்று தொடைப்பாடு காட்டி ஐயஞ்செய்யாமையின் அவை கூறானாயினா னென்பது. நிரனிறையாயின் இனைத்தென் றெண்ணி நிறுத்த பொருட்கேற்ப எதிர்பொருளும் எண்ணி நிறுத்துச் செய்யப்படுதலின் அது வேறு தொடையாங்கொலென்று ஐயஞ் செல்லுமென்பது.

'மொழிந்தவற் றியலான்' எனவே, தனக்கு வேறியல்பில்லாத செந்தொடை நீக்கப்பட்டது. பொழிப்பும் ஒரூஉவும் போல ஓரடியுள் நின்றுந் தொடைமை செய்யினும் அவை முற்றாய் அடங்கும். ஈரடிக் கூட்டத்துத் தத்தம் வகையால் தொடைமை செய்யாவென்பது. (91)

404. அடிதொறுந் .... மோனை.

இது, நிறுத்தமுறையானே மோனைத் தொடையாமா றுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அடிதொறும் முதற்கண் ஓரெழுத்தே வரத் தொடுப்பது மோனைத் தொடையாம் என்றவாறு.

"கண்டற் கானற் குருகின மொலிப்பத்
திரைப்பா டவியத் திமிறொழின் மறப்பக்
கரையா டலவ னளைவயிற் செறிய" (அகம். 260)

என்பது, அடிதொறும் முதலெழுத்தொன்றி மோனைத்தொடை வந்தவாறு.[1]

---

1. இதில் இரண்டாமடி முதலில் 'க' இல்லை - உதாரணம் தவறு.

"கோதை மார்பிற் கோதை யானுங்
கோதையைப் புணர்ந்தோர் கோதை யானும்" (புறம். 48)

என்பதும் அது.

இனிவருந் தொடையும் இதுவுமெல்லாம் அறுநூற்றிருபத்தைந் தடிக்கு உரியவாகியும், பிறவடிக்கு உரியவாகியும், வஞ்சியடிக்குரிய வாகியும், குறளடி, சிந்தடி, நெடிலடி, கழிநெடிலடியென்னும் நால்வகை யடிக்கு உரியவாகியும் வருமெனக் கொள்க. அற்றன்று, அறுநூற்றிருபத் தைந்தடிக்கும் மோனைத்தொடை ஒன்றொன்றாகச் சென்று பெருகி அறுநூற்றிருபத்தைந்து தொடையாமென்பது. மற்று அடியிரண்டியைந்த வழியன்றே தொடையாவது? இவை அறுநூற்றிருபத்தைந்து தொடையாங்கால் இஃது ஓரடிக்கண்ணே வரல் வேண்டும்; வேண்டவே, 'அடிதொறுந் தலையெழுத் தொப்பது மோனை' என்றதனோடு மாறுகொள்ளும் பிறவெனின், இது நோக்கியன்றே,

"அடியுள் ளனவே தளையொடு தொடையே" (345)

எனக் கூறி,

"அடியிறந்து வருதலில்" (346)

என்பானாயிற்று; எனவே, அறுநூற்றிருபத்தைந்தடியுள் ஒன்றனையே இரட்டித்துத் தொடை கொள்கவென்பது பெற்றாமன்றே; ஈண்டு அடிதொறுமெனப் பன்மை கூறவே அவற்றையே இரட்டித்தலும் பிற அடிவந்து தொடுத்தலும் எல்லாம் அடங்கக் கூறினான் ஈண்டென்பது.

"மெய்பெறு மரபிற் றொடைவகை" (413)

என மேல் வரையறுக்கப்படுந் தொகை பதின்மூவாயிரத்தெழு நூற்றெட்டனுள்ளும், மோனைத் தொடை வருங்கால் மூன்று பாவிற்கும் ஓதிய எழுபத்தெட்டுச் சீரினும் வரப்பெறும், அவ்வாறு வருங்கால்,

"அடியுள் ளனவே தளையொடு தொடையே" (345)

என்ற தளையிலக்கணமும்,

"அடியிறந்து வருதலில்" (346)

எனப்படுமாகலான், அவ்வடி இரண்டன் கூட்டத்துத் தளைவழுக் களையல் வேண்டும்; களையுங்கால் ஆசிரியத்து நாற்பத்தொன்றும், வெள்ளையடியுட் பதினெட்டும் ஆக ஐம்பத்தொன்பது நிலங் களையப்படும். கலிப்பாவிற்கு அவ்வாறு களையவேண்டுவதில்லை யென்பது.

ஆசிரியத்து நாற்பத்தொரு நிலமாவன: தனக்கு ஓதிய இருபத்தேழு சீரும் பதினான்கு நேராதியும், பதின்மூன்று நிரையாதியுமாதலான், அவற்றுள் நேராதி பதினான்கும் ஒரோவொன்று பன்னிரண்டடி

உறழுங்காற் பெருகிய நிலத்தின் இவ்விரண் டடியாக இருபத்தெட்டடியும், இனி நிரையாதி பதின்மூன்றற்குஞ் சுருங்கிய நிலத்தின் ஒரோவொன்றாகப் பதின்மூன்றடியுமென நாற்பத்தோரடியுந் தம்மொடு தாம் வந்திரட்டிச் குங்கால் தளைவழுப்படுதலின், அவை தொடுக்கப்படா வென்பது.

இனி, வெண்பாவடி உறழுஞ்சீர் இருபத்தேழனுள்ளும் நேராதிச்சீர் பதினான்குஞ் சுருங்கிய நிலத்துள் ஓரொன்றாகப் பதினான்கடியும், நிரையாதிச்சீர் பதின்மூன்றனுள் ஒன்பதொழித்து ஒழிந்த நான்கு சீரும் நின்றுறழ்ந்த அடியுட் பதினான்கெழுத்தடி நான்குமாகப் பதினெட்டடியுந் தம்மொடு தம்மை இரட்டித்துத் தொடுப்பத் தளைவழுவுமாகலிற் களையப்படுமென்பது.

நிரையாதிச்சீர் நான்குமாவன:

வரகு வலியது கடியாறு விறகுதீ

என்பன.

ஒழிந்த நிரையாதி ஒன்பது சீரும் நின்று உறழ்ந்த அடி எஞ் ஞான்றுங் களையப்படாது தொடைப்படு மென்பது; அவை ஒன்பதுமாவன:

அரவு புளிமா கணவிரி பெருநாணு உருமுத்தீ
மழகளிறு நரையுருமு புலிசெல்வாய் குளிறுபுலி

எனவிவை.

வரகு நரையுருமு காருருமு பாதிரி

எனவும்,

வலியது கடியாறு காருருமு பாதிரி

எனவும்,

கடியாறு தேமா நரையுருமு காருருமு

எனவும்,

விறகுதீ தேமா புலிவருவாய் காருருமு

எனவும் இப் பதினான்கெழுத்தடி நான்குந் தொடுக்குமாறில்லை. ஒழிந்த நேராதியும் இவ்வாறே சுருங்கின நிலத்து உறழ்ந்தவடி தொடுக்குமாறில்லை யென்பதூஉங் கண்டுகொள்க.

இனி, களையப்படாத நிரைமுதற்சீர் ஒன்பானுள்ளுஞ் சுருங்கிய எழுத்துச்சீர் ஒன்பது. பெருகிய எழுத்துச்சீர்:

நரையுருமு புலிவருவாய் என்பன.

அரவு வரகு வரகு வரகு

எனவும்,

அரவு புலிவருவாய் காருருமு தேமா

எனவும் இவை முதலும் முடிவுங்காட்டிய அடிக்கண் அவை தம்மொடு தம்மைத் தொடுக்கப்படுதலிற் களையுநில மிலவாயின.

நரையுருமு வண்டு வரகு வரகு

எனவும்,

நரையுருமு காருருமு பாதிரி தேமா

எனவும் ஐயெழுத்துச்சீர் முதலும் முடிவுங்காட்டிய அடி களையப்படாது தொடைப்படுமென்பது; புலிவருவாய்க்கும் இஃதொக்கும், ஒழிந்தனவும் இவ்வாறே ஒட்டிக்கொள்க.

இவ்வாற்றான் அறுநூற்றிருபத்தைந்தடியுள் ஐம்பத்தொன்பது நிலங்களைந்து ஒழிந்தவடி ஐஞ்ஞூற் றறுபத்தாறானும் பெற்ற மோனைத் தொடை ஐஞ்ஞூற் றறுபத்தா றெனப்படும்.

இவ்வாறே தலையாகெதுகை, அடியெதுகை, எழுத்தடியியைபு, சொல்லடியியைபு என்னும் நான்கு தொடைக்குங் களைவன களைந்து தொகை கூட்டிக்கொள்க.

இவற்றுள், ஆசிரியப்பாவினுள் வரும் அடிமோனைத் தொடை இருநூற்றெண்பத்து மூன்றும், வெண்டொடை நூற்றறுபத்து மூன்றும், கலிப்பாவிற்குரிய தொடை நூற்றிருபதுமாகி மூன்று பாவிற்குந் தொகுப்பத் தொடை ஐஞ்ஞூற் றறுபத்தாறாம். ஒழிந்த நான்கற்கும் இவ்வாறே கொள்க; கொள்ளவே, இத் தொடை ஐந்தனானும் பெற்ற தொடை இரண்டாயிரத்தெண்ணூற்று முப்பஃதாம் (2830). இவற்றுள் அகவற்றொடை ஆயிரத்து நானூற்றொருபத்தைந்து (1415); வெண் டொடை எண்ணூற்றொருபத்தைந்து (815); கலித்தொடை அறுநூறெனக் (600) கொள்க.

"அடியெதுகை மோனை தலையா கெதுகை
யடியியைபு தாமிரண்டென் றைந்துங் - கடியப்
படுநில மைம்பது மொன்பது மென்ப
வெழுபத்தெண் சீரடிக்கு மேற்று"

எனவும்,

"ஒழிந்த நிலத்து நிரைபதின்மூன் றொல்லா
தொழிந்த வுயர்ந்துழி யொன்றாக் - கழிந்த
நிரையொன்றாய் நேரிரண்டாய் நாற்பத்தொன் றாகு
மவையகவற் காகா தன"

எனவும்,

"வரகு வலியது வான்கடி யாறு
விறகுதீ வெள்ளைக்கு மேனிலத்து ளொன்றா

வழிவழி நேர்முதற்சீ ரேழிரண்டு மாக
வவையைம்பத் தொன்பா னகற்று"

எனவும்,

"ஐம்பத்தொன் பானன்றி யைஞ்ஞூற் றறுபத்தா
றொன்றற் குரியவா றொட்டு"

எனவும்,

"ஐந்து தொடையா னகவற் றொடையிருநூற்
றெண்பத்து மூன்றா மெனமொழிப - வொன்றொன்றா
வெள்ளைத் தொடைநூற் றறுபத்து மூன்றாகுந்
துள்ளற்கு நூற்றிருப தாம்"

எனவும்,

"சொல்லி னவைதன் றொடையிரண் டாயிரத்
தெண்ணூற்று முப்பஃ தெனல்"

எனவும் இவ்வாறே விரித்துரைத்துக் கொள்க. (92)

நச்சினார்க்கினியர்

91. நிரனிறுத் .... தென்ப.[1]

92. அடிதொறுந் .... மோனை.

இது, மோனையிலக்கணங் கூறுகின்றது.

(இ-ள்) அடிதொறும் முதற்கண் ஓரெழுத்துவரத் தொடுப்பது மோனைத் தொடையாம் எ-று.

முன்னர் 'அடியுள் ளனவே தளையொடு தொடையே' (செய். 33) என்பதனான் ஓரடிக்கண்ணே தளையுந் தொடையும் வருமென்பது பெறுதலானும், ஈண்டு அடிதொறும் எனப் பன்மை கூறுதலானும், ஈரடிக் கூட்டத்துந் தளையுந் தொடையும் வருமென்பது பெறுதலானும் ஓரடிக் கண்ணும் ஈரடிக்கண்ணும் தளையுந் தொடையுங் கோடல் வேண்டுமென்றுணர்க.

'தலையெழுத் தொப்பது' என்றற்கு, அடிகளின் முதலெழுத்தும் சீர்களின் முதலெழுத்தும் என்பது பொருளாம்.

'அடிதொறு'மென்பது ஈரடியையும் ஓரடியையும் உணர்த்தலின், அடிமோனையும், இணைமோனையும், பொழிப்புமோனையும், ஒரூஉ மோனையும், கூழைமோனையும், மேற்கதுவாய்மோனையும், கீழ்க்கதுவாய் மோனையும், முற்றுமோனையுமென மோனை எண்வகைப்படுமாயிற்று.

---

1. இச் சூத்திரத்துக்கு நச்சினார்க்கினியர் உரை கிடைக்கப்பெறவில்லை முன்னையோர் உரையே கொள்க.

'பொழிப்பு மொரூஉவும்' (செய்.90) என்னுஞ் சூத்திரத்தான் இவ் வாசிரியர் கொண்ட பொழிப்பும் ஒரூஉவுங் கோடற்கு அஃது இணை கொள்ளுமா றென்னையெனின், அச் சூத்திரத்து 'அவையுமா ருளவே' எனச் சூத்திரஞ் செய்தமையான் அவையும் முன்பிறவும் ஓரடித் தொடையுமுள என்று பொருள் தருதலில் தொடைக்குச் சிறந்து தோன்றும் வினை முதலியனவுங் கோடும்.

(எ-டு) "கான மஞ்ஞை யீன்ற முட்டை
காத லின்றி வீசு மந்தி."

இஃது ஈரடியும் எழுத்தொத்தலிற் றன்னொடுதான் வந்து தொடுத்த கட்டளையடி மோனை.

"கோதை மார்பிற் கோதை யானுங்
கோதையைப் புணர்ந்தோர் கோதை யானும்"

இஃது எழுத்தொவ்வாமையிற் பிறவடி தொடுத்த கட்டளையடி மோனை.

"யாண்டுங் காணேன் மாண்டக் கோனை
யானுமோர் ஆடுகள மகளே" (குறுந். 31)

இஃது இருவகையுந் தொடுத்தது.

"கண்டற் கானற் குருகின மொலிப்பக்
கரையா டலவன் வளைவயிற் செறிய"

இது சீர்வகையடி தொடுத்தது.

"உவவுமதி யுருவி னோங்கல் வெண்குடை" (புறம். 3)

"ஒடுங்கா வொலிகடற் சேர்ப்ப னெடுந்தேர்"

இவை கட்டளை யிணைமோனை.

"உலக முவப்ப வலனேர்பு திரிதரு" (முருகு.)

இது சீர்வகை யிணைமோனை.

"செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை"

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு" (குறள்.393)

இவை கட்டளைப் பொழிப்புமோனை.

"வெயிலுருப் புற்ற வெம்பரல் கிழிப்ப"

இது சீர்வகைப் பொழிப்புமோனை.

"வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்"

"வானிடு வில்லின் வரவறியா வாய்மையால்"
(நாலடி. கடவுள் வாழ்த்து)

இவை கட்டளை யொரூஉமோனை.

"கல்லா தவரு நனிநல்லர் கற்றார்முன்" (குறள். 403)

இது சீர்வகை யொரூஉ மோனை.

"வானம் வாய்த்த வாங்குகதிர் வரகின்"

"அம்பு மழலு மவிர்கதிர் ஞாயிறு" (நாலடி. பிறனில்விழையாமை)

இவை கட்டளைக் கூழைமோனை.

"கந்திற் பிணிப்பர் களிற்றைக் கதந்தவிர" (நான்மணி. 12)

"பயவார்கட் செல்வம் பறப்பப் பயின்கொல்"
(நாலடி. நன்றியில் செல்வம், 7)

இவை மேற்கதுவாய்மோனை.

"எல்லை யெம்மொடு கழிப்பி யெல்லுற"

"நல்லா ரிருவ ருவப்ப நயமிலார்" (நாலடி)

இவை கீழ்க்கதுவாய்மோனை.

"ஒல்லா தொல்வ தென்றலு மொல்லுவது" (புறம். 196)

இது சீர்வகைக் கீழ்க்கதுவாய்மோனை.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்" (குறள். 391)

இது முற்றுமோனை. இது சீர்வகை முற்றுமோனை.

இனிக் கலிக்கு :

"இணையிரண் டியைந்தொத்த முகைநாப்பட் பிறிதுயாதும்"
(மருதக்கலி. 12)

இஃது இணைமோனை.

"அரிமதர் மழைக்கண்ணீர் அலர்முலைமேற் றெறிப்பபோல்"

இது பொழிப்புமோனை.

"பெண்டெனப் பிறர்கூறும் பழிமாறப் பெறுகற்பின்"
(மருதக்கலி. 12)

இஃது ஒரூஉமோனை.

"கழிபட்டார் கமழ்கோதை கயம்பட்ட வுருவின்மேல்"

இது கூழைமோனை.

"அளியென வுடையேன்யா னவலங்கொண் டழிவலோ"
(பாலைக்கலி. 19)

இது மேற்கதுவாய்மோனை.

"முளிகழை யுயர்மலை முற்றிய முழங்கழல்" (பாலைக்கலி. 19)

இது சீர்வகை மேற்கதுவாய்மோனை.

"மணிநிற மலர்ப்பொய்கை வளர்ந்தருளு மயிலோனை"

இது கீழ்க்கதுவாய்மோனை.

"அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்"(பாலைக்கலி. 10)

இது முற்றுமோனை.

இவற்றுக்குச் சீர்வகை பலவும் வருமாறுணர்க.

இச் சூத்திரமுதலாகக் கூறுங் கட்டளையடிக்குத் தொடை கொள்ளுங்கால் தளைவழுக் கழித்துத் தொடைகொள்ளுமாறு 'மெய்பெறு மரபின்' (செய்.101) என்பதனுட் காட்டுதும். (92)

சிவலிங்கனார்

நிரனிறுத் .... என்ப.

அடிதொறும் .... மோனை.

(இ-ள்) நிரல்நிறைத் தொடையும் இரட்டைத் தொடையும் ஆகிய இரண்டும் மேற்சொல்லப்பட்டவற்றோடும் சேரும் என்பர், எ-று.

நிரல்நிறைத் தொடையாவது ஒரு செய்யுளில் இரண்டும் பலவுமான எழுவாய்களை - பொருள்களை வரிசையாக வைத்து அவற்றின் செயல்களை - பயன்களை அவற்றின் வரிசைக்கேற்ப வரிசைப்படுத்தி வைத்தல்.

இரட்டைத்தொடை என்பது ஓரடி முழுதும் வந்த மொழியே வருமாறு தொடுப்பது.

(உ-ம்)"அடல்வேல் அமர்நோக்கி நின்முகம் கண்டே
உடலும் இரிந்தோடும் ஊழ்மலரும் பார்க்கும்
கடலும் கனையிருளும் ஆம்பலும் பாம்பும்
தடமதி யாம்என்று தாம்."

இதில் கடல் உடலும், இருள் ஓடும், ஆம்பல் மலரும், பாம்பு பார்க்கும் என நிரல்படுத்தப்பட்டமை காண்க.

"ஒக்குமே ஒக்குமே ஒக்குமே ஒக்கும்
விளக்கினிற் சீரெரி ஒக்குமே ஒக்கும்
குளக்கொட்டிப் பூவின் நிறம்."

இதில் இரட்டைத் தொடை வந்தமை காண்க.

அடிதொறும் .... மோனை.

செய்யுளின் அடிதொறும் முதற்சீரின் முதல்எழுத்து ஒன்றாகப் பொருந்திவரத் தொடுப்பது அடிமோனைத் தொடை எனப்படும், எ-று.

(உ-ம்)" மாவும் புள்ளும் வதிவயிற் படர
மாநீர் விரிந்த பூவும் கூம்ப
மாலை தொடுத்த கோதையும் கமழ
மாலை வந்த வாடையும்
மாயோய் நின்வயின் புறத்திறுத் தன்றே."

எதுகைத்தொடை

398. அஃதொழித் தொன்றின் எதுகை ஆகும். (89)

இலக்குவனார்

405. *Ethukai* is to have the same except the first of the each line.

பி.இ.நூ.

யா.வி. 36

இரண்டாம் எழுத்தொன்று இயைவதே எதுகை.

யா.கா. 16

இரண்டாம் எழுத்தொன்றின் மாதே எதுகை.

இ.வி. 723

ஏனை, இரண்டாம் எழுத்தொடு இயைபின் எதுகை.

வீர. 110

ஒன்றா முதலளவொத்து இரண்டாம் எழுத்து ஒன்றிவரின்
சான்றோர் அதனை எதுகையென் றோதுவர்.

தொன். 213

எதுகை என்பது இயைவன மொழிக்கண்
முதலெழுத் தளவொத்து முதல்ஒழித்து ஒன்றுதல்.

மு.வீ. யா. 27

இரண்டாம் எழுத்து ஒன்றுவது எதுகையே.

இளம்பூரணர்

398. அஃதொழித் .... ஆகும்.

என்-னின், எதுகை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அடிதோறும் முதலெழுத்தொன்றாமல் இரண்டாமெழுத்து ஒன்றின் எதுகை யாகும் என்றவாறு.

அஃதேல் முதலெழுத்தும் ஒன்றி இரண்டாமெழுத்தும் ஒன்றில் யாதாகு மெனின், முந்துற்ற மோனையாற் பெயரிட்டு வழங்கப்படும் என்க.

(உ-ம்) "அடிதாங்கும் அளவின்றி அழலன்ன வெம்மையாற்
கடியவே கனங்குழாஅய் காடென்றார் அக்காட்டுள்
துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவும் உரைத்தனரே"
(கலி. 11)

என வரும். (89)

பேராசிரியர்

405. அஃதொழித் .... யாகும்.

இஃது, இரண்டாம் எண்ணுமுறைமைக்கணின்ற எதுகைத்தொடை யுணர்த்துதல் நுதலிற்று

(இ-ள்) இரண்டடியினும் முதனின்ற சீர் முதலெழுத்திரண்டும் ஒழிய அல்லனவெல்லாம் ஒன்றி வருதலும் ஒரோவெழுத்தே ஒன்றிவருதலுமென இங்ஙனங் கூறியவற்றுள் அஃதொழித்துச் சீர் முழுதொன்றில் தலையாகெதுகை யென்றும், இரண்டாமெழுத்தொன்றில் அடியாகெதுகை யென்றும் வழங்கப்படும். அயலெழுத்தொன்றி னென்னாது முதலெழுத் தினைச் சுட்டிக்கூறுத லென்னையெனின், இவ்வாறு எதுகையாங்கான் முதலெழுத்துகளின் மாத்திரை தம்மின் ஒத்துவரல் வேண்டுமென்றற்குக் கூறினானென்பது.

(உ-ம்) "மாயோன் மேய காடுறை யுலகமுஞ்
சேயோன் மேய மைவரை யுலகமும்" **(5)**

என்பது, தலையாகெதுகை.

"அகலிரு விசும்பிற் பாயிருள் பருகிப்
பகல்கான் றெழுதரு பல்கதிர்ப் பருதி" (பெரும்பாண். 1-2)

என்பது, அடியெதுகை; இதனை இடையாகெதுகையெனவும் அமையும்; ஒழிந்தன கடையாகெதுகையெனப்படும். பிறவும் அன்ன.

அஃதேல், தலையாகெதுகை யென்றதுபோலத் தலையாகு மோனையுங் கொள்ளாமோவெனின், அற்றன்று; ஆசிரியர்,

"அடிதொறும் தலையெழுத் தொப்பது மோனை" (404)

என்றானாகலின், அடிமோனையே கொண்டாமென்பது என்றார்க்கு,

"வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்" (நாலடி. 39)

என்றவழி, அடிதோறும் ஒருசொல்லே வந்து தொடையாயிற்றன்றோ வெனின், அஃது இரண்டடிக்கண்ணே வந்ததன்று; செய்யுண் முழுவதும் பயின்று வந்து சுவைமைப்படாதாகலின் வழிமோனைப்பாற் பட்டடங்கு மென்க. இச் சூத்திரத்துக் காட்டப்பட்ட தொடையிரண்டும், மூன்று பாவிற்கும் ஓதிய அறுநூற்றிருபத்தைந்து அடியோடுங் கூட்டித் தொகை சொல்லுமாறு மேலைச் சூத்திரத் துரைக்கப்பட்டது. (93)

நச்சினார்க்கினியர்

93. அஃதொழித் .... யாகும்.

இஃது, எதுகை கூறுகின்றது.

(இ-ள்) முற்கூறிய முதலெழுத்தினை யொழித்து இரண்டடியினும், சீர்முழுதும் ஒன்றினும், இரண்டாமெழுத்தே ஒன்றினும், ஓரடிக்கண் முதலிரு சீர்க்கண் இரண்டாமெழுத்து ஒன்றினும், முதற்சீரினும் மூன்றாஞ் சீரினும் இரண்டாமெழுத்து ஒன்றினும், முதற்சீரினும் நான்காஞ்சீரினும் இரண்டாமெழுத்து ஒன்றினும்,. முதற்சீரொழித்து ஏனைய ஒன்றினும், முதலயற்சீரொழித்து ஏனைய ஒன்றினும், ஈற்றயற் சீரொழித்து ஏனைய ஒன்றினும், நாற்சீரும் ஒன்றினும் தலையாகெதுகை, அடியெதுகை, இணை யெதுகை, பொழிப்பெதுகை, ஒரூஉவெதுகை, கூழையெதுகை, மேற்கதுவா யெதுகை, கீழ்க்கதுவாயெதுகை, முற்றெதுகை எனக் கூறப்படும் எ-று.

அயலெழுத்தொன்றின் என்னாது முதலெழுத்தைச் சுட்டிய வதனான் முதலெழுத்தின் மாத்திரை தம்முள் ஒத்தல் வேண்டுமென்று கொள்க.

(எ-டு) "மாயோன் மார்பி னாரம் போலுஞ்
சேயோன் சேர்ந்த வெற்பிற் றீநீர்"

இது தம்மொடு தாம் வந்த கட்டளைத் தலையாகெதுகை.

"வானிடு வில்லின் வரவறியா வாய்மையாற்
கானிலந் தோயாக் கடவுளை யாநிலம்"
(நாலடி-கடவுள் வாழ்த்து)

இது தம்மொடு தாம்வந்த கட்டளை அடியெதுகை.

" சிலைவிலங்கு நீள்புருவஞ் சென்றொசிய நோக்கி
முலைவிலங்கிற் றென்று முனிவாள்"

இது சீர்வகையடிக் கட்டளையொடு தொடுத்த தலையாகெதுகை.

"அகலிரு விசும்பிற் பாயிருள் பருகிப்
பகல்கான் றெழுதரு பல்கதிர்ப் பரிதி" (பெரும்பாண்)

இது கட்டளையடிச் சீர்வகையடியொடு தொடுத்த அடியெதுகை.

'தலையெழுத் தொப்பது மோனை' (செய்.92)

என்றலின் தலையாகுமோனை இவ் வாசிரியர் கொள்ளார்.

"வைகலும் வைகல்" (நாலடி. அறன்வலியுறுத்தல்)

என்னும் வெண்பாவிற் சீர்முழுவதும் வருதலின் வழிமோனைப் பாற்படும்.

"புன்கா லுன்னத்துப் பகைவ னெங்கோ" (பதிற். 7-1)

"மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்" (குறள். 204)

இவை இணையெதுகை.

"பொன்னேர் மேனி நன்னிறஞ் சிதைத்தோர்"

"உருவக் கடுந்தேர் முருக்கிமற் றத்தேர்"

இவை பொழிப்பெதுகை.

"உள்ளார் கொல்லோ தோழி முள்ளுடை"

"பறம்பிற் கோமான் பாரியும் பிறங்குமிசை" (சிறுபாண்)

"வாண்மாய் குருதி களிறுழக்கத் தாண்மாய்ந்து" (களவழி.1)

இவை ஒரூஉவெதுகை.

"இன்ன ரென்னா தின்பம் வெஃகி"

"குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து"

இவை கூழையெதுகை.

"பொன்னேர் மேனி துன்னினர்"

"கொண்டுபா ராட்டுவார் கண்டிலர்கொன் மண்டி"
(நாலடி.தூஉய்தன்மை)

இவை மேற்கதுவாயெதுகை.

"உள்ளி னுள்ளம் வேமே யுள்ளாது" (குறுந். 102)

"படியை மடியகத் திட்டா னடியினான்"(நான்மணி.கடவுள் வாழ்த்து)

இவை கீழ்க்கதுவாயெதுகை.

"கன்னிப் புன்னை யன்னந் துன்னும்"

"இன்றுகொ லன்றுகொ லென்றுகொ லென்னாது"
(நாலடி. அறன்வலியுறுத்தல்)

இவை முற்றெதுகை.

இனிக் கலிக்கு :

"அடங்காதார் மிடல்சாய மார்வந் திறத்தலின்"

"எறிதிரை செறிகையான் மிகவாங்கி மீதோங்கி"

இவை இணையெதுகை.

"பெருவரை யுறழ்மார்பின் திருவோங்கு கரியோனை"

இது பொழிப்பெதுகை.

"அணிவேங்கை செறிநீழற் கிளியோப்பு மணிநிறத்தாள்"

இது ஒரூஉவெதுகை.

"மணிவரை யணிமார்பிற் பணிமேவும் பெரியோனை"

இது கூழையெதுகை.

"அலைகடற் றுயிலுணரா மலையெடுத்த நிலையோனை"

இது மேற்கதுவாயெதுகை.

"கதிபல விதியாற்சென் றழுந்தாமல் துதித்தேத்தி"

இது கீழ்க்கதுவாயெதுகை.

"திரிபுர மெரிசூழ வரிவாங்கும் பெரியோனை"

இது முற்றெதுகை. (93)

சிவலிங்கனார்

அஃதொழித் .... தாகும்.

(இ-ள்) அடிதோறும் முதல் எழுத்து ஒன்றாமல் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத் தொடையாகும், எ-று.

(உ-ம்) "அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு" (குறள். 1)

மேலதற்குச் சிறப்பு

399. ஆயிரு தொடைக்குங் கிளையெழுத் துரிய. (90)

இலக்குவனார்

406. The kindred letters occur in these two rhymes.

இளம்பூரணர்

399. ஆயிரு தொடைக்குங் .... துரிய.

என்-னின், எய்தியதன்மேற் சிறப்புவிதி உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மோனைத் தொடைக்கும் எதுகைத் தொடைக்கும் எடுத்த வெழுத்தே வருதலன்றி வருக்க வெழுத்தும் உரிய என்றவாறு.

"பகலே, பல்பூங் கானற் கிள்ளை ஒப்பியும்
பாசிலைக் குளவியொடு கூதளம் விரைஇய
பின்னுப்பிணி அவிழ்ந்த நன்னெடுங் கூந்தல்
பீர்ங்கப் பெய்து தேம்படக் கருதி" (யா. வி)

என்பது வருக்கமோனை.[1]

ஆறறி அந்தணர்க் கருமறை பலபகர்ந்து
தேறுநீர் சடைக்கரந்து திரிபுரம் தீமடுத்துக்
கூறாமற் குறித்ததன்மேற் செல்லுங் கடுங்கூளி
மாறாப்போர் மணிமிடற் றெண்கையாய் கேள்இனி"
(கலி.கடவுள் வாழ்த்து)

என்பது வருக்கவெதுகை.[2] பிறவுமன்ன. (90)

பேராசிரியர்

406. ஆயிரு தொடைக்குங் .... துரிய.

இது, மேற்கூறிய தொடைப்பாற்பட்டு வருவன வேறு பல தொடை கண்டு அவை கூறுகின்றது.

(இ-ள்) ஆயிரு தொடையென்பன மோனையும் எதுகையும்; இவை இரண்டற்குங் கிளையெழுத்துகளும் ஒன்றி வரப்பெறும் என்றவாறு.

இதன் கருத்து : அங்ஙனம் கிளையாகி வந்த வேறுபாட்டான் எல்லாத் தொடையும் வேறு பலவாமென்றவாறு. கிளையெழுத்தென்பன: வருக்கமும் நெடிலும் அனுவும் வல்லினமும் மெல்லினமும் இடையினமும் உயிருமெனவிவை. இவையெல்லாம் ஒரோகிளைமையுடைமையிற் கிளையெனப்பட்டன.

1. பகரவருக்க மோனை; 2. நகரவருக்க எதுகை

இனி, ஆசெதுகையும் மூன்றாமெழுத்தொன்றெதுகையும் அடியெதுகைக் குரித்தாகிய இரண்டாமெழுத்தின் முன்னும் பின்னுந் தொடர்ந்து நிற்றலின் அவையுங் கிளையெனினும் அமையும்; அற்றன்று; அடிமோனையும் தலையாகெதுகையும் அடியெதுகையும் 'வந்து, நுந்தை' என்னுஞ் சீர்க்கண் மூன்றாமெழுத் தொன்றிவருதல்,

"மெய்பெறு மரபிற் றொடை" (413)

எனப்பட்டமையின். ஆண்டு அது கிளையாகாது : 'மெய்த்தல், ஒத்தல்' என்ற வழி யன்றி, 'ஈதல் காய்தல்' என்றவழி, நெடின் மோனையாய்த் திரிபுபடுதலின் ஆசிடையெதுகையுங் கிளையாகாது. 'உரிய' என்றதனானே இவை அத்துணை யுரியவன்றாமெனக் கொள்க. மற்று 'நுந்தை தந்தை' என்றவழி, ஆண்டு முதனின்றவழி மோனை சிறந்ததென்னாமோவெனின் என்னாமன்றே, இரண்டாயவழி ஈரெழுத்துத் தேமாவாகலே பெரும்பான்மையாகலின். இதனானே, இது தலையாகு மோனையெனத் தலைமை கூறப்படாததூஉமாயிற்று; என்னை? தொடை யென்பன, 'பூத்தொடை' போலச் செய்யுட்குப் பொலிவு செய்ய வேண்டு மாகலின். இக் கருத்தினானன்றே சொல்லடியியைபினைத் தலையா கியைபெனத் தலைமை கூறாராயிற்றென்பது. அடியெதுகை யாயின் தலையாகெதுகை போலச் சிறந்து காட்டுமென்பது. செந்தொடையுஞ் செய்யுட்பொலிவு செய்யுங்காற் கொன்றையுங் கடம்பும் போல நின்ற வாறே நின்று தொடைப்பொலிவு செய்யுமென்பதாம். அதுவுங் கிளை யெனப்படுமோவெனின், அதுவுங் கிளைமை பற்றியல்லாது அனுவாகா தென்றற்கு இவற்றொடுங் கூறினானென்பது.

ஈண்டு ஓதிய கிளை உயிரும் ஒற்றுமென இரண்டாகலின் அவ் விருவாற்றானுங் கிளைமைபற்றி அனுக்கொள்ளப்படும்; என்னை?

"அஆ வாயிரண் டங்காந் தியலும்" (தொல். எழுத்து. 85)

என அகர ஆகாரங் கிளையாயின. ஐகார ஔகாரம் போலிவகையான் அவையெனப்படும். இஈ எஏ என்பனவும் உஊ ஒஓ என்பனவும் உடன் பிறப்பினவாகலான் அவையுங் கிளையெனப்படும். ஒற்றுக்கிளையென்பன தம்முன்னர்த் தாம்வருதலும் பிறவருதலுமென இரண்டு. அவற்றுள் தம்முன்னர்த் தாம்வருங்கால் வந்த உயிரே வாரா. அவ் வனுவிற்கு ஓதிய உயிரே வேறுபட வருமென்பது. இனி, ஓரடிக்கண்ணாயின் ஐஞ்சீரானும் அறுசீரானும் வந்தவழியினும் அனுவெனப்படுமென்பது. இனித் தம் முன்னாகப் பிற வருங்கால் வந்த உயிரே வரவும் பெறுமெனக் கொள்க. பிறவருங்கால் ஞகரநகரங்களும் . மகரவகரங்களுஞ் சகரதகரங்களும் இனம்பற்றிக் கிளையாமென்பது. அவற்றுள், மகரவகரங்கள் இதழ்பற்றிப் பிறத்தலிற் கிளையாயின. இவ்வாறே இஈ எஏ என்பனவும் யகரமும் மிடற்றுவளியாற் பிறத்தலானும் இயல்புகொ ளொப்புமையானுங் கிளையாமென்பது.

ஒற்றும், உயிரும், உயிர்மெய்யும் என மூன்றுவகையாற் கிளைமை கூறி மெய்ம்மோனை உயிர்மோனை உயிர்மெய்மோனையெனவுங் கொள்ளாமோவெனின், அவை,

"மெய்பெறு மரபிற் றொடைவகை" (413)

அன்மையிற் கொள்ளாமென்பது; அல்லதூஉம், அவை யெல்லாங் கொள்ளிற் செந்தொடை இழிவுபடுமென மறுக்க. எதுகைக்கும் இஃதொக்குமாறு கண்டுகொள்க.

இங்ஙனம் ஈண்டுக் கிளையெனக் கூறியவற்றுள், "ஏற்புழிக் கோடல்" (665) என்பதனான் வருக்கமென்பது மோனைக்கும் எதுகைக் கும் உரிமையான், வருக்கமோனை வருக்கவெதுகை யென்று இருவகைப் படும். நெடிலும் அனுவும் மோனைக்குரிய; உயிரும் வல்லினமும் மெல் லினமும் இடையினமும் ஆசிடையிடுதலும் மூன்றாமெழுத்தொன்று தலுமென்ற ஆறும் எதுகைக்கே உரியவாம். இவை பத்துத் தொடையுள்ளும் மோனை மூன்றும் வருமாறு:

"வயங்குகதிர் காத்த வாடை வைகறை
விசும்புரி வதுபோல் வியலிடத் தொழுகி" (அகம்.24)

என்பது வகரவருக்கம் முதற்கண் வந்தமையின் வருக்கமோனை யாயிற்று.

"கலக்கொண்டன கள்ளென்கோ
காழ்கோத்தன சூட்டென்கோ" (யா.வி.ப.349)

என்பதும் அது. இவை ஒருமெய்யின் வருக்கமாகலான் வருக்கமெனப் பட்டன.

அஃதேல், உயிர்வருக்கமும் வருக்கமெனப் படாதோவெனின், அங்ஙனங் கொள்ளின் நெடிலும் அனுவும் விரவும் வருக்கமும் வருக்க மெனப்படுமென மறுக்க; அல்லதூஉம், நெடிலுங் குறிலும் ஊர்ந்த மெய்யிரண்டு இயைந்தவழித் தொடையாகல் வேண்டுமன்றோவென்பது; என்றார்க்கு, முதற்கண் உயிர்வந்ததனையே இன்ன தொடை என்னுமோவெனின், அவை அனுவாகி வருவன வழிமோனையெனவும் அல்லாக்காற் செந்தொடையெனவுங் கூறுபவென்பது. இஃது, ஓர் அடிக்கண் வரினும் ஒக்குமென்ப துய்த்துணர்க.

"மடவரன் மகளிர் பிடகைப் பெய்த
செவ்வி யரும்பின் பைங்காற் பித்திகத்து" (நெடுநல். 39-40)

என்றவழிச் செந்தொடையாவதன்றி மோனைத் தொடைப்பாடின் றென்பது. இவ்வாறே குறிலும் நெடிலும் எதுகையாகாமையின் அவையும் வேண்டியதிலரென்பது.

"வெள்ளி வள்ளி விளங்கிறைப் பணைத்தோண்
மெத்தென் சாயன் முத்துறழ் முறுவல்" (நெடுநல். 36-7)

என்பது வழிமோனை.

"ஓங்குதிரை வியன்பரப்பி
னொலிமுந்நீர் வரம்பாக" (மதுரைக் 1-2)

என்பதும் அது; இவற்றை அனுமோனையெனினும் அமையும். அவை விகற்பங் கொள்ளாமோவெனிற் கொள்ளாம்.

"முன்னைத்தஞ் சிற்றின் முழங்கு கடலோத மூழ்கிப் பேர
வன்னைக் குரைப்ப னறிவாய் கடலேயென் றலறிப் பேரும்"

என்னும் அறுசீரடியினும் எழுசீரடியினும் எண்சீரடியினும் (நாற்சீரடி யினும்) ஒப்பவருதலானும், எண்சீரடியுள் ஒருநான்கு சீர் அற்றவழி ஒழிந்த நான்கனுண் முதற்கண்ணும் இடைக்கண்ணும் இனம் வந்தால் அவை வந்தவழியெல்லாந் தொடையாகாமையானுமென்பது. பிறவும் அன்ன. எதுகைக்குப் போல இனமோனை கொள்ளா தனிமெய் மொழிக்கு முதலாகாமையினென்பது.

"கேடில் விழுப்பொரு டருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே" (குறுந். 216)

என்பது, வருக்கவெதுகை.

"அத்தக் கள்வ ராதொழு வறுத்தெனப்
பிற்படு பூசலின் வழிவழி யோடி (அகம். 7)

என்பது, வல்லினவெதுகை.

"நும்மில் புலம்பினு முள்ளுதொறு நலியுஞ்
தண்வர லசைஇய பண்பில் வாடை". (அகம். 58)

என்பது, மெல்லினவெதுகை.

"மள்ளர் மள்ள மறவர் மறவ
செல்வர் செல்வ செருமேம் படுந" (பெரும்பாண்.455-6)

என்பது, இடையின வெதுகை.

"புள்ளி யிறுதியு முயிரிறு கிளவியுஞ்
சொல்லிய வல்ல வேனைய வெல்லாம்" (தொல்.எழுத்து.202)

என்பதும் அது.

"இமிழ்கண் முழவி வின்சீர் வாமனைப்
பயிரவன் போலவந் திசைப்பவுந் தவிரான்"

என்பது, உயிரெதுகை, இஃது ஒற்றூர்ந்த உயிர் ஒன்றினமையின் உயிரெதுகையாயிற்று.

"நெய்த்தோர் மீமிசை நிணத்திற் பரிக்கு
மத்த நண்ணிய வங்குடிச் சீறூர்" (அகம். 9)

என்பது யகரவொற் றிடையிட்டுவந்த ஆசிடையெதுகை. பிற ஒற்றிடையிடினும்,

"மெய்பெறு மரபிற் றொடை" (413)

யாவன கொள்க.

"உவவுமதி யுருவி னோங்கல் வெண்குடை
நிலவுக்கடல் வரைப்பின் மண்ணக நிழற்ற" (புறம். 3)

என்பது மூன்றாமெழுத்தொன்றெதுகை.

இவையும் மேற்கூறப்பட்டனவும் இனிக் கூறுவனவுமெல்லாம் நான்குபாவினும் வருமாறு கண்டுகொள்க.

இனி, மூன்று பாவினும் அறுநூற்றிருபத்தைந் தடியோடும் இவற்றைப் பெருக்கி உணருங்கால் இவை பத்துத் தொடையானும் பெற்ற தொடை மூவாயிரத்தெண்ணூற் றறுபத்தேழு (3867); இவற்றுள், வருக்கமோனையும், வழிமோனையும், உயிரெதுகையுமென இவை மூன்றும், நுந்தையென்னுஞ் சீர்க்கு ஏலாமையின் அச் சீர் முதற்பா இரண்டினும் உறழ்ந்த அடி இருபதும் ஒழித்து, ஒழிந்த சீர் எல்லாவற்றானு முறழ்ந்த அடி அறுநூற்றைந்தனுள் ஐம்பத்தாறு நிலங்களைய ஒரோவொன்றற்குப் பெற்ற தொடை ஐஞ்ஞூற்று நாற்பத்தொன்பதாம் (549).

இவ் விலக்கணமெல்லாம் இனிக் கூறும் முரணைந்தற்கும் ஒக்கும்.

அவற்றை அகவற்றொடை இருநூற்றெழுபத்து மூன்றெனவும், வெண்டொடை நூற்றைம்பத்தாறெனவும், கலியிற் களைவன இன்மையின் அவை நூற்றிருபஃதெனவும் பகுத்துக் காணப்படும். இம் மூன்று தொடையும், முரண் ஐந்துந் தொகுப்பப் பெற்ற தொடை நாலாயிரத்து முந்நூற்றுத் தொண்ணூற்றிரண்டு (4392). இவை பிற அடிக்கண் வருங்கால் அவ் வரையறையாற் பயிலாவென உணர்க. பிறவும் அன்ன.

"வழிவருக்க மோனை யுயிர்முரணைந் தெட்டு
மொழிகின்ற நுந்தை யொழிய - வழுநில
மைம்பதின்மே லாறகற்ற வைஞ்ஞூற்று நாற்பதின்மே
லொன்பதென் றோதப் படும்"

எனவும்,

"இருநூற் றெழுபத்து மூன்றகவல் வெள்ளைக்
கொருநூற்றைம் பத்தா றுரிய - வொருநூற்
றிருபதாந் துள்ளற் கெனல்"

எனவும்,

"நாலா யிரத்துமுந் நூற்றுத்தொண் ணூற்றிரண்டி
னாலீ ரிடத்து நவிற்று"

எனவும்,

"பதின்மூன்று பாற்றொடை யேழா யிரத்தோ
டிருநூற் றிருபத் திரண்டு"

எனவும் இவற்றை விரித்துரைத்துக் கொள்க.

இனி, மூன்றாமெழுத்தொன்றெதுகைக்கு,

வண்டு மின்னு நுந்தை சேற்றுக்கால் நீடுகொடி

என்னும் ஐந்து சீரானும் உறழ்ந்த அடி அறுபஃதொழித்து, ஒழிந்த சீர் இருபத்திரண்டானும் பெற்ற அடி இருநூற்றறுபத்து நான்கனுள்ளும், ஒன்பது நேர்முதற் சீராற் பதினெட்டும், பதின்மூன்று நிரைமுதற்சீராற் பதின்மூன்றுமாக முப்பத்தொரு நிலங் களைந்து கொள்ளப் பெற்ற ஆசிரியத் தொடை இருநூற்றுமுப்பத்து மூன்று (233).

இனி, வெண்பாவினுள் நீடுகொடி வாராமையின்,

வண்டு மின்னு நுந்தை சேற்றுக்கால்

என்னும் நான்கு சீரும் உறழ்ந்த அடி முப்பத்தொன்றொழித்து, ஒழிந்த சீர் இருபத்துமூன்றானும் பெற்ற அடி நூற்றைம்பதாகலின், அவற்றுள்ளும் நேர்முதற்சீர் பத்தும், வரகு, வலியது, கடியாறு, விறகுதீ என்னும் நான்கும் ஆகப் பதினான்கு சீரானும், பதினாலு நிலங் களைந்து பெற்ற வெண்டொடை நூற்றுமுப்பத்தாறாம் (136). இவ்வாற்றான் இரண்டு பாவிற்குங் களையு நிலம் நாற்பத்தைந்து (45).

கலிப்பாவினுள்ளுஞ் சேற்றுக்கால் நீடுகொடி என்னும் இரண்டும், மூன்றாமெழுத்தொன்றெதுகைக்கு ஏலாமையின், ஒழிந்த சீர் இருபத் திரண்டனானும் பெற்ற தொடை நூற்றொருபதாம். (110)

இவ்வாற்றான் இவை மூன்று பாவின் தொடையுந் தொகுப்ப நானூற்றெழுபத் தொன்பதாம் (479). இம் மூன்றாமெழுத்து ஒன்றுங்கால் இரண்டாமெழுத்து ஒன்றாது வரல் வேண்டும்; அல்லாக்கால் தலையா கெதுகையா மாகலினென்பது.

"வண்டுமின்னி ரண்டுநுந்தை சேற்றுக்கா னீடுகொடி
யென்றிரண்டு மூன்றா மெழுத்தியையா - நின்ற
வறுபத்தேழ் சீரா னடித்தொடை நானூற்
றெழுபத்தொன் பானு மியற்று"

எனவும்,

"வந்த பதினான்கு மேழா யிரத்தெழுநூற்
றொன்றென் றுரைக்கப் படும்"

எனவும்,

"நேர்முத லொன்பா னிரட்டி நிரைபதின்மூன்
றாசிரியப் பாமுப்பத் தொன்றகற்றி - நேர்முதற்சீர்
பத்தொடு நான்குவெண் பாவகற்ற வாங்கதற்
கற்றன நாற்பத்தைந் தாம்"

எனவும்,

"இருநூற்று முப்பத்து மூன்றகவல் வெள்ளைக்
கொருநூற்று முப்பத்தா றாகு - மொருநூற்
றொருபதாந் துள்ள லொருங்கிவை மூன்றா
மெதுகையாற் பெற்றனவா மீண்டு"

எனவும் இவற்றை விரித்துரைத்துக் கொள்க.

இனி, வருக்கவெதுகை ஆசிரியத்துள் எழுசீர்க்கும், வெண்பாவினுள் ஐந்து சீர்க்கும், கலிப்பாவினுள் நான்கு சீர்க்கும் ஏலாது. அவை,

"வண்டு மின்னு போதுபூ மேவுசீர்
நீடுகொடி நாணுத்தளை நுந்தை"

என இவை யேழும் ஆசிரியத்துள் ஆகாதன. இவற்றுள் நீடுகொடி நாணுத்தளை இரண்டும் ஒழித்து, ஒழிந்த சீர் ஐந்தும் வெண்பாவிற் கேலா. அவற்றுள்ளும் வண்டு, மின்னு, நுந்தை ஒழித்து, ஒழிந்த நான்குங் கலிப்பாவிற் காகாவென வுணர்க. இனி, ஆசிரியத்துள் நேர்முதற்சீர் ஏழும், பதின்மூன்று நிரைமுதற்சீரும் உறழ்ந்த அடி இருநூற்று நாற்பதாம் (240). இவற்றுட் களையும் நிலம் இருபத்தேழாம் (27). ஆகவே அகவற்றொடை இருநூற்றொருபத்து மூன்று (213) ஆயின. வெண்பாவினுள் ஐந்து சீரானும் முப்பத்தெட்டடியொழித்து, ஒழிந்த அடி நூற்றுநாற்பத்து மூன்றானும் நேர்முதற்சீரொன்பதும், நிரைமுதற்சீர் நான்குமெனப் பதின்மூன்றானுங் களையும் நிலம் பதின்மூன்றகற்றிப் பெற்ற வெண்டொடை நூற்றுமுப்பதாம் (130). கலிப்பாவிற் களைந்த சீர் நான்கொழித்து, ஒழிந்த சீரான் அடி நூறு(100) எனப்படும். இம் மூன்றுந் தொகுப்ப வருக்கவெதுகை நானூற்று நாற்பத்து மூன்றாயின (443).

"நேர்பிரண்டு நேர்பு முதனான்கு நுந்தையுமென்
றாகாச்சீ ரேழைந்து நான்காக வாகாத
நாற்பதும்போய் நானூற்று நாற்பத்து மூன்றாகித்
தோற்றும் வருக்கத் தொடை"

எனவும்,

"முறையா னிருநூற் றொருபத்து மூன்றோ
டொருநூற்று முப்பதுநா றொட்டு"

எனவும், இவற்றை விரித்துரைத்துக் கொள்க.

இனி, நெடின்மோனையும், மெல்லினவெதுகையும், இடையின வெதுகையும், ஆசிடையெதுகையுமென நான்கற்கும் நிரைமுதற்சீரும் நுந்தையுமெனப் பதினாற்சீர் ஏலாமையின், ஒழிந்த நேராதிச் சீர் பதின்மூன்றான் ஆசிரியத்து ஒரோசீர்க்கு இரண்டு நிலங் களைந்து பெற்ற தொடை நூற்றுமுப்பதாம் (130).

வெண்பாவினுள் நேர்முதற்சீர் பதின்மூன்றும் உறழ்ந்த அடி தொண்ணூற்று மூன்றனுள் ஒரு சீர்க்கு ஒரு நிலமாகப் பதின்மூன்று நிலங் களைந்து பெற்ற வெண்டொடை எண்பஃதாம்.

கலிப்பாவிற்கு நேர்முதற்சீர் பன்னிரண்டனாற் பெற்ற தொடை அறுபஃதாம். ஆக மூன்று பாவிற்குந் தொடை ஒரோவொன்றற்கு இருநூற் றெழுபதாக நான்கனானும் பெற்ற தொடை ஆயிரத்தெண்பதாம் (1080).

"இடையின மெல்லின மாசெதுகை யேனை
நெடின்மோனை நான்காகி நின்ற தொடைதா
மிருநூற் றெழுபஃ தொரொவொன்றற் கெய்து
நிரைமுதலு நுந்தையு நீத்து"

எனவும்,

"பதின்மூன் றிரட்டித் தகவலினே ராதி
பதின்மூன்றே வெண்பாவிற் பாற்றி யவைதொகுப்ப
மூவகை மூன்று தலையிட்ட முப்பஃது
நால்வகையா னிற்க நவிற்று"

எனவும்,

"மூவகைப் பாவின் மொழிந்த தொடைத்தொகை
யாயிரத்து மேலெண்ப தாகுமாம் பாவின
முந்நூற்று முப்பதா மெண்பதாம் வெண்பாக்
கடைய கலிக்கறுபஃ தாம்"

எனவும் இவற்றை விரித்துரைத்துக் கொள்க.

இனி, வல்லின வெதுகைக்கு நிரைமுதற்சீர் பதின்மூன்றும்,

மின்னு நுந்தை மேவுசீர் நாணுத்தளை

என நான்குமாகப் பதினேழு சீர் தொடை கொள்ளாமையின், ஒழிந்த நேராதிச்சீர் பத்தனானுங் களைவன களைந்து பெற்ற அகவற்றொடை நூறாகவும், வெண்பாவிற்கு நாணுத்தளை வாராமையின் அஃதொழிக்கல் வேண்டுவதன்றாயிற்றாகவே,

மின்னு நுந்தை மேவுசீர்

என்னும் மூன்றொழித்து, ஒழிந்த நேராதிச்சீர் பதின்மூன்றனானுங் களைவன களைந்து கொண்ட வெண்டொடை அறுபத்தெட்டாகவும், கலிப்பாவின் நேர்முதற்சீர் பன்னிரண்டனுள் மேவுசீர் நாணுத்தளை ஒழித்து ஒழிந்த பத்தனானும் கலித்தொடை யைம்பதாகவும் மூன்று பாவினானும் வல்லினவெதுகை இருநூற்றொருபத்தெட்டு (218) ஆயினவென்பது.

"முற்றுகர நேர்புநேர் முன்னாகுஞ் சீரிரண்டுங்
குற்றுகரத் தேமாவுங் கொள்ளாது - மற்றை
நிரைமுதலுங் கூட்டாது நேர்முதலான் வல்லொற்
றெதுகையிரு நூற்றொருபத் தெட்டு"

எனவும்,

"இருப தகவல்பதி னொன்றுவெள்ளைக் காகா
நிலமுப்பத் தொன்றாக நீக்கி - வலியெதுகைக்

கீரைம்ப தாமகவல் வெள்ளைக் கறுபத்தெட்
டோரைம் பதுதுள்ளற் கொட்டு"

எனவும் இவற்றை விரித்துரைக்க.

இவையெல்லாங் கிழமைபற்றி வந்தமையின்,

"ஆயிரு தொடைக்குங் கிளையெழுத் துரிய"

என்றானென்பது. இப் பத்துத் தொடையானும் முரணைந்தானும் பெற்ற தொடை ஆறாயிரத்தறுநூற் றொருபத்திரண்டு (6612) எனப்படும். ஆறாயிரத்தறுநூற் றொருபத்திரண்டும் பெறும் கிளையும் முரண் ஐந்தும் மேற்கூறிய மோனை எதுகை யிரண்டனோடும் இனிக் கூறும் முரணைந்தும் இயைபிரண்டும் உடன் கூட்டித் தொடை கூறினாம், இவற்றொடு இயைந் தமையினென்பது. இத் தொடை யெல்லாந் தொகுப்ப ஒன்பதினாயிரத்து நானூற்று நாற்பத்திரண்டு (9442) ஆயினவாறு கண்டுகொள்க.

"மோனை யெதுகை முரணியைபு நான்கற்கு
மானவை யொன்பதி னாயிரத்து நானூற்று
நாற்பத் திரண்டாகு மோரடியே யாயினுங்
கூட்டத்துக் கொண்ட குழாம்" (94)

நச்சினார்க்கினியர்

94. ஆயிரு தொடைக்கும் .... துரிய.

இது, முற்கூறியவற்றோடு ஒப்பன சில தொடை கூறுகின்றது.

(இ-ள்) முற்கூறிய மோனைக்கும், எதுகைக்கும் கிளையெழுத்து களும் ஒன்றிவரப் பெறும் எ-று.

கிளையெழுத்தாவன: வருக்கமோனையும், வருக்கவெதுகையும், வல்லினவெதுகையும், மெல்லினவெதுகையும், இடையின வெதுகையும் என ஐந்தாம்.

(எ-டு) "வயங்குகதிர் காய்ந்த வாடை வைகறை
விசும்புரி வதுபோல் வியலிடத் தொழுகி"

இது கட்டளையடிச் சீர்வகையடியொடு தொடுத்த வருக்கமோனை.

"கல்லாதா னொட்பங் கழியநன் றாயினுங்
கொள்ளா ரறிவுடை யார்" **(குறள். 104)**

இது கட்டளை வருக்கமோனை.

"கேளிர் போலக் கேளல வேண்டி
வேளாண் வாயில் வேட்பக் கூறிய"

இது கட்டளை வருக்கவெதுகை.

"வாரியும் வடித்து முந்தியு முறழ்ந்துஞ்
சீருடை நன்மொழி நீரொடு சிதறி"

இஃது இரண்டுந் தொடுத்தது.

"வானுயர் வெற்ப விரவின் வரல்வேண்டா
யானை யுடைய சுரம்"

இது கட்டளை வருக்கவெதுகை.

"தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும்". (குறள். 114)

இது கட்டளை வல்லினவெதுகை.

"அத்தக் கள்வ ராதொழு வறுத்தெனப்
பிற்படு பூசலின் வழிவழி யோடி"

இஃதிரண்டுந் தொடுத்தது.

"அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல்". (குறள். 543)

இது கட்டளை மெல்லினவெதுகை.

"நும்மில் புலம்பினு முள்ளுதொறு நலியுந்
தண்வர லசைஇய பண்பில் வாடை"

இது சீர்வகை மெல்லினவெதுகை.

"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு". (குறள். 299)

இஃதிடையினவெதுகை.

"மள்ளர் மள்ள மறவர் மறவ
செல்வர் செல்வ செருமேம் படுந" (பெரும்பாண்.)

இது சீர்வகை இடையினவெதுகை.

சிவலிங்கனார்

ஆயிரு .... துரிய.

(இ-ள்) மோனை எதுகையாகிய இரண்டு தொடைகளுக்கும் அவ்வவ் வெழுத்தேயன்றி அவற்றின் இன எழுத்துகளும் வருதற்குரியன. எ-று.

(உ-ம்) "யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

இதில் நெடில்இன மோனை வந்தது.

"அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்"

இதில் நகரத்துக்கு னகரம் இனவெழுத்தாக வந்து இன எதுகையாயிற்று.

இனவெழுத்தாவன : குறில், நெடில், வலி, மெலி, இடை எழுத்து களும் அகரத்துக்கு ஆகாரமும் ஐகாரமும், சகரத்துக்குத் தகரமும், ஞகரத் துக்கு நகரமும், மகரத்துக்கு வகரமும் ஆம்.

முரண்தொடை

400. மொழியினும் பொருளினும் முரணுதல் முரணே.(91)

இலக்குவனார்

407. The *muraṇ* is that which differs in words and meanings.

பி.இ.நா.

யா.வி. 38

மேற்சூத்திரமே.

யா.கா. 16

மறுதலைத்த மொழியான் வரினும் முரண்.

இ.வி. 723

மொழியினும் பொருளினும் முரணின் முரண்.

தொன். 212

எதிர்மொழி முரண்.

மு.வீ.யா. 27

முரணத் தொடுப்பது முரண்தொடை யாகும்.

இளம்பூரணர்

400. மொழியினும் பொருளினும் .... முரணே.

என்-னின், முரணாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அடிதொறும் வந்த சொல்லினானாதல் பொருளினானாதல் மாறுபடத் தொடுப்பது அடிமுரண்தொடையாம் என்றவாறு.

சொல்முரணாவது சொல்லானன்றிப் பொருளான் மாறுபடாமை. பொருள்முரணாவது மாறுபாடுடைய பொருளைச் சொல்வது.

"இரும்பின் அன்ன கருங்கோட்டுப் புன்னை
பொன்னின் அன்ன நுண்தா துறைக்கும் **(யா.வி.ப.146)**

என்பது இரும்பும் பொன்னும் மாறுபாடுடைத்தாதலிற் பொருள்முரண் ஆயிற்று.

"சிறுகுடிப் பரதவர் மடமகள்
பெருமதர் மழைக்கணும் உடையவால் அணங்கே" **(யா.வி.ப.146)**

என்றவழிக் குடியுங் கண்ணு மாகாது சிறுமை பெருமை என்னும் சொல்லே மாறுகோடலிற் சொன்முரணாயிற்று. (91)

பேராசிரியர்

407. மொழியினும் பொருளினு .... முரனே.

இது, முறையானே முரண்தொடை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) சொல்லும் பொருளும் பகைத்தல் காரணமாக முரண் டொடை வரும் என்றவாறு.

அவை ஐவகைப்படும்:

சொல்லுஞ் சொல்லும் முரணுதலும்,
பொருளும் பொருளும் முரணுதலும்,
சொல்லும் பொருளுஞ் சொல்லொடு முரணுதலும்,
சொல்லும் பொருளும் பொருளொடு முரணுதலும்,
சொல்லும் பொருளுஞ் சொல்லொடும் பொருளொடும் முரணுதலும்

என.

"**செவ்வி** வாய்த்த செம்பாட் டீரத்து
வெள்ளை வெண்மறி மேய்புலத் தொழிய"

என்புழி, செவ்வி வெள்ளையென்பன பொருளின்றிச் சொல்லுஞ் சொல்லும் முரணியன. வெள்ளையென்பது சாதிப்பெயர்.[1]

"செந்தொடைப் பகழி வாங்கிச் சினஞ்சிறந்து
கருங்கைக் கானவன் களிற்றுநிறத் தழுத்தலின்" (யா.வி.ப.145)

என்பதும் அது.[2]

"**நீரோ** ரன்ன சாயற்
றீயோ ரன்னவென் னுரனவித் தன்றே" (குறுந். 95)

என்பது, பொருளும் பொருளும் முரணியது.

"**தண்ணிய** லற்ற தயங்கறற் கானத்து
வெந்நீர்ப் பொருணசைஇ முன்னிச் சென்றோர்"

என்பது, சொல்லும் பொருளுஞ் சொல்லொடு முரணியது.[3]

---

1. வெள்ளை - வெள்ளாட்டுச் சாதி. செவ்வி என்பதும் வெள்ளை என்பதும் நிறங்களை யுணர்த்தாமல் - அதாவது பொருள்களால் முரணாமல் - சொல்லளவால் முரணின.
2. செம்மையும் கருமையும் நிறங்களை யுணர்த்தாமல் வேறு பொருளுணர்த்தினமையின் பொருள்முரண் இன்றிச் சொல்லளவில் முரணின.
3. தண், வெந் என்பன தமக்குரிய சொல்நிலையிலும் பொருள்நிலையிலும் முரணின என்றாலும் வெந்நீர்ப் பொருள் என்றபோது விரும்பும் நீர்மையுடைய பொருள் எனப்படலின் பொருள்முரண் இல்லை. அதனால் சொல்லும் பொருளும் சொல்லொடு முரணின.

"தீநீர் நஞ்சந் திருமிடற் றொடுக்கிய
வுவரி யன்ன வுடைப்பெருஞ் செல்வர்"

என்பது, சொல்லும் பொருளும் பொருளொடு முரணியது.[1] இதனைச் சொல்லும் பொருளுஞ் சொல்லொடு முரணியதுபோலப் பொய்ப் பொருளோடு முரணுதல் வேண்டுமென்று கொள்ளற்க.

"செவ்வேற் சேஎய் திருமண மறுத்த
கருவிற் கானவன் வரிலவ ரிலரே (யதுபோல)"

என்புழி, சொல்லும் பொருளுஞ் சொல்லொடும் பொருளொடும் முரணியது.[2] பிறவும் அன்ன.

இவை ஐந்து தொடையுந் தளைவகை யடிக்கண் வருங்கால் இன்னவாறு விரியுமென்பது மேற்கூறியவாற்றானே கொள்ளப்படும். இவை விரித்துநோக்கப் பலவாமாறும் (விரித்துறழ்ந்து) கண்டுகொள்க. (95)

நச்சினார்க்கினியர்

95. மொழியினும் .... முரணே.

இது, முறையானே முரண் கூறுகின்றது.

(இ-ள்) சொல்லாலும் பொருளாலும் பகைத்தல் முரண்தொடை எ-று.

அவை ஐவகைய: சொல்லும் சொல்லும் முரணுதலும், பொருளும் பொருளும் முரணுதலும், சொல்லும் பொருளும் சொல்லொடு முரணுதலும், சொல்லும் பொருளும் பொருளொடு முரணுதலும், சொல்லும் பொருளும் சொல்லொடும் பொருளொடும் முரணுதலும் என.

(எ-டு) "செவ்வரை நிவந்த சேணிடை யருவி
வெண்மறி கறித்த முல்லை."

இது கட்டளை ஈரடியும் சொல்லும் சொல்லும் முரணிற்று.

"செந்தொடைப் பகழி வாங்கிச் சினஞ்சிறந்து
கருங்கைக் கானவன் களிற்றுநிறத் தழுத்தலின்."

இஃதிருவகை யடியும்[3] அங்ஙனம் முரணிற்று.

---

1 தீ, நீர், உவரி என்பன சொல்லாலும் பொருளாலும் முரணுவன. என்றாலும் இங்கு அந் நோக்கம் இல்லாமல் தீயநீர்மை என்றும் உவர்க்கடல் என்றும் பொருள்படலின் சொல்லும் பொருளும் பொருளொடு முரணின.

2. செவ், கரு என்பன சொல்லாலும் பொருளாலும் முரணுவன. செவ் என்பது செந் நிறத்தையும் கரு என்பது வலிமையையும் உணர்த்தலின் பொருள் முரண்உடையவாயின.

3. இருவகையடி - கட்டளையடி, சீர்வகையடி

"நெருப்பி னன்ன சூட்டுச் சேவல்
நீர்சேர் கானத்து நெடுமணற் கிளைப்ப."

இது கட்டளை யீரடியும் பொருளும் பொருளும் முரணிற்று.

"நீரோ ரன்ன சாயற்
றீயோ ரன்னவென் னுரனவித் தன்றே."

இஃதிருவகை அடியும் அங்ஙனம் முரணிற்று.

"தண்சே றாடிய தயங்கிணர்க் கடத்து
வெம்பொருட் பிரிவை வேண்டிச் சென்றார்."

இது கட்டளை யீரடியுஞ் சொல்லும் பொருளுஞ் சொல்லொடு முரணிற்று.

"சிறுநல் கூர்ந்த செல்சுடர் மாலை
நெடுநீர்ப் பொய்கைக் குறுநர் தந்த"

இஃதிருவகை யடியும் அங்ஙனம் முரணிற்று. சிறுநல் கூர்ந்ததுக்குச் சிறிய பொருளின்று.

"செந்தீக் கானஞ் சென்ற மாதர்
நீரின் மையி னெஞ்சழிந்து வருந்த"

இது கட்டளை யீரடியுஞ் சொல்லும் பொருளும் பொருளொடு முரணிற்று. செந்தீக்கு நிறமும் சொல்லுமுண்டு, நீர்க்குச் சொல்லின்று.

"செந்தீ யன்ன சினத்த யானை
நீர்நசை பெறாஅக் கற்பிற் றேர்நசைஇ"

இஃதிருவகை யடியும் அங்ஙனம் முரணிற்று.

"செங்குரற் பைந்தினை விளைபுன மேவிப்
பைங்கிளி கடியும் பான்மொழி மகளிர்"

இது கட்டளை யீரடியும் சொல்லும் பொருளும் சொல்லொடும் பொருளொடும் முரணிற்று.

"செவ்வேற் சேஎய் திருமண மறுத்த
கருவிற் கானவன் வரில்"

இது சீர்வகையடி அங்ஙனம் முரணிற்று.

"பன்மை சின்மை பற்று விடுதலென் றென்பன"

இது கட்டளை இணைமுரண்.

"நிலவு மிருளும் போல்வ நீர்வரை"

இது சீர்வகை.

"கார்பெயல் பெய்தபிற் செங்குளக் கோட்டுக்கீழ்"

"எழுநூறு நன்றிசெய் தொன்றுதீ தாயின்" (நாலடி- கயமை)

இவை கட்டளைப் பொழிப்புமுரண்.

"வருது மெனமொழிந்தார் வாரார்கொல் வானங்
கருவிருந்தா லிக்கும் பொழுது." (கார்நாற்பது. 1)

இது சீர்வகை.

"பின்னாவ தென்று பிடித்திரா முன்னே"
(நாலடி..செல்வ நிலையாமை

"இன்சொற் குழியு ளினிதெழூஉம் வன்சொல்" (நான்மணி. 16)

இவை கட்டளை ஒரூஉமுரண்.

"வரினு நோய் மருந்தல்லர் வாராது."

இது சீர்வகை.

"நிறுத்தலி னளவி னெண்ணி னென்றா" (தொல்.சொல். 72)

"தேரும் யானையுங் குதிரையும் பிறவும்" (தொல்.பொருள். 209)

இவை கட்டளைக் கூழைமுரண்.

"கண்ணுந் தோளுந் தண்ணறுங் கதுப்பும்" (நற். 84)

இது கட்டளைக் கீழ்க்கதுவாய் முரண்.

"அறுத்தலின் தொகுத்தலிற் பிரித்தலின்"
(தொல்.சொல்.வேற்றுமையியல். 11)

"நிற்ற லிருத்தல் கிடத்த லியங்குதல்"

இவை கட்டளை முற்றுமுரண்.

"நீரும் நிலனுந் தீயும் வளியு
மாக விசும்போ டைந்து மாகும்."

இது சீர்வகை.

இவற்றை ஐவகையாக முற்கூறியாங்கு விரிப்பிற் பெருகுமாகலின் அவற்றுள் ஏற்றன கொள்க. (95)

சிவலிங்கனார்

மொழியி .... முரண்.

(இ-ள்) சொல்லாலும் பொருளாலும் மாறுபடத் தொடுப்பது முரண்தொடை. எ-று.

(உ-ம்) "சிறுகுடிப் பரதவர் மடமகள்
பெருமதர் மழைக்கணும் உடையவால் அணங்கே."

இதில் சிறு எனும் சொல்லுக்குப் பெரு என்பது முரண்.

"இரும்பின் அன்ன கருங்கோட்டுப் புன்னை
பொன்னின் அன்ன நுண்தா துறைக்கும்."

இதில் இரும்புக்குப் பொன் பொருளால் முரணாயிற்று.

இயைபுதொடை

401. இறுவாய்[1] ஒப்பினஃ தியைபென மொழிப. (92)

இலக்குவனார்

408. The (*iyaipu* is that which has the same (letter or syllable or word) at the end of each line

பி.இ.நூ.

யா.வி. 40

மேற்சூத்திரம்

யா.கா. 16

இறுதி (எழுத்து ஒன்றின்) இயைபு.

இ.வி. 723

இறுவாய் ஒப்பின் இயைபுதொடை

தொன். 212

அந்தம் இயைபே.

மு.வீ.யா. 25

இறுதி அசையெழுத் தேனும் ஒன்றுவது அடியியைபாம்.

இளம்பூரணர்

401. இறுவாய் ஒப்பினஃ .... மொழிப.

என்-னின், இயைபுதொடை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அடிதோறும் ஈற்றெழுத்து ஒன்றிவரின் அஃது இயைபு தொடை என்று சொல்வர் என்றவாறு.

"இன்னகைத் துவர்வாய்க் கிளவியும் அணங்கே
நன்மா மேனிச் சுணங்குமார் அணங்கே
ஆடமைத் தோளி கூடலும் அணங்கே
அரிமதர் மழைக்கணும் அணங்கே
திருநுதற் பொறித்த திலதமும் அணங்கே" (யா.வி.ப. 153)

என வரும்.

அசை சீரென வரையாது கூறினமையின் ஓரெழுத்து இறுதிக்கண் ஒப்பினும் இயைபாம் என்று கொள்க. (92)

1. ஒன்றல் இயைபின் யாப்பே - பேரா. நச். பாடம்

பேராசிரியர்

408. இறுவா யொன்ற லியைபின் .... யாப்பே.

இது, முறையானே இயைபிரண்டும் உணர்த்துகின்றது.

(இ-ள்) இரண்டடியும் ஈறொத்தல் இயைபுதொடைக் கிலக்கணம் என்றவாறு.

வாளாதே 'இறுவா யொன்றல்' என்றானாயினும் ஆண்டு ஒன்றுவது பொருளியைபின்றி எழுத்துஞ் சொல்லும் ஒன்றி யடையின் இயைபாமென்பது. எனவே, எழுத்தடியியைபும் சொல்லடியியைபும் எனத் தொடை இரண்டாயின.

"அவரோ வாரார் கார்வந் **தன்றே**
கொடிதரு முல்லையுங் கடிதரும் **பீன்றே**" **(குறுந். 221)**

என்பது, எழுத்தடியியைபு.

"பரவை மாக்கடற் றொகுதிரை **வரவும்**
பண்டைச் செய்தி யின்றிவள் **வரவும்**" **(யா.வி. 155)**

என்பது, சொல்லடியியைபு.

இவையும் அடிமோனை போல எல்லா அடியோடுந் தொடுக்கப் படுமென்பதூஉம் அவற்றது விரியும் எல்லாம்.

"அடிதொறும் தலையெழுத் தொப்பது மோனை" **(404)**

என்புழிச் சொல்லிய வாற்றானே கொள்ளப்படும். (96)

நச்சினார்க்கினியர்

96. இறுவாய் ஒன்றல் இயைபின் .... யாப்பே.

இது, முறையே இயைபு கூறுகின்றது.

(இ-ள்) இரண்டடியினும் பொருளியைபின்றி எழுத்தாதல் சொல்லாதல் ஈற்றிலே பொருந்தத் தொடுப்பது இயைபுதொடைக் கிலக்கணம் எ-று.

(எ-டு) "அவரோ வாரார் கார்வந் தன்றே
கொடிக்கு முல்லையுங் கடிதரும் பின்றே"

இது கட்டளை எழுத்தடி யியைபு.

"பரவை மாக்கடற் றொகுதிரை **வரவும்**
பண்டைச் செய்தி யின்றிவள் **வரவும்**"

இது கட்டளைச் சொல்லடி யியைபு. சீர்வகை யடிக்கு வந்துழிக் காண்க.

"ஓங்கிய சுரத்தை நீங்கி யேகி"

இஃதிணை யியைபு.[1]

"விரிந்தானா மலராயின் விளித்தாலுங் குயிலாயின்"

இது பொழிப்பியைபு.[2]

"சுரவெழூஉங் கண்ணில் குழியுளிர வெழூஉம்"(நான்மணி.14)

இஃது ஒரூஉவியைபு.[3]

"பொருசமத் தெழுவனர் பொருவினர் விரைவனர்"

இஃது கூழையியைபு.[4]

"நீருந் தீயு மாகிய விறைவனும்"

இது மேற்கதுவாயியைபு.[5]

"பொருவனர் விடுகணை தகைவன ரெதிர்வனர்"

இஃது கீழ்க்கதுவாயியைபு.[6]

"இயற்கையி னுடைமையின் முறைமையிற் கிழமையின்".
(தொல். சொல். வேற்றுமையியல்.19)

இது முற்றியைபு.[7]

"காம்பிவர் தோளுங் கருமதர் மழைக்கணும்"

இது சீர்வகைப் பொழிப்பு.[8]

"பகலுங் கங்குலு மகலா தொழுகும்"

இது சீர்வகை மேற்கதுவாய்.[9]

ஏனையவற்றிற்குச் சீர்வகை வந்துழிக் காண்க.

---

1. இஃது இயைபு முரண். நீங்கி, ஏகி என்பன முரண். இறுதியிரு சீர்க்கண் வருவது இணை. அதனால் இணையியைபு ஆயிற்று.
2. சீரிடையிட்டு வருவது பொழிப்பு. குயில் மலர் என்பன இங்கு முரணின.
3. இருசீர் இடையிட்டது ஒரூஉ. இறுதிச் சீரும் முதற்சீரும் எழூஉம் என வருவது காண்க.
4. இறுதிச் சீரில் மோனை முதலியன இல்லாதது கூழை. முதற்சீர் தவிர மற்றை முச்சீரிலும் வனர் வினர் வனர் என வருதல் காண்க.
5. இரண்டாம் சீர் தவிர மற்றையவற்றில் மோனை முதலாயின லருவது மேற்கதுவாய். இறுதியிலிருந்து பார்க்கின் ஈற்றயற் சீர் தவிர மற்றையன உம் இடைச்சொல் வந்தமை காணலாம்.
6. மூன்றாம் சீர் தவிர மற்றையவற்றில் மோனை முதலாயின வரின் கீழ்க்கதுவாயாம். இறுதியிலிருந்து பார்க்கின் மூன்றாம் சீர் தவிர மற்றையவற்றில் வனர் வருதல் காண்க.
7. நாற்சீரிலும் மோனை முதலியன வரின் முற்றாம். நாற்சீரினும் இன் வந்தமை காண்க.
8. கண்ணும் தோளும் பொழிப்புக்குரிய இயைபு
9. ஈற்றயற்சீர் தவிர மற்றையவற்றில் உம் உள்ளன.

இவற்றிற்கு எழுத்தியைபினும் சொல்லியைபினும் ஏற்றன கொள்க. வெவ்வேறாகக் கோடல் அரிதென்றுணர்க. (96)

சிவலிங்கனார்

இறுவாய் .... மொழிப.

(இ-ள்) அடிதோறும் இறுதி எழுத்து ஒன்றிவரின் அஃது இயைபு தொடை என்பர். எ-று.

(உ-ம்) "சூரல் பம்பிய சிறுகான் யாறே
சூரர மகளிர் ஆரணங் கினரே
வாரல் எனினே யானஞ் சுவலே
சாரல் நாட நீவர லாறே"

இதில் அடிதோறும் இறுதிச்சீர் ஏகார இறுதிபெற்று அடிமோனை யாயிற்று.

"இன்னகைத் துவர்வாய்க் கிளவியும் அணங்கே
நன்மா மேனிச் சுணங்குமார் அணங்கே
ஆடமைத் தோளி கூடலும் அணங்கே
அரிமதர் மழைக்கணும் அணங்கே
திருநுதற் பொறித்த திலதமும் அணங்கே."

இதில் அடிதோறும் இறுதிச் சீரே ஒன்றிவந்துள்ளது.

எதுகை முதலியவற்றுக்கும் உதாரணம் காண்க.

அளபெடைத்தொடை

402. அளபெழின் அவையே அளபெடைத் தொடையே. (93)

இலக்குவனார்

409. *Aḷapedai* rhyme is that which has the prolongation of the sound (aḷapedai).

பி.இ.நா.

யா.வி.41

அளபெடை ஒன்றுவது அளபெடைத் தொடையே.

யா.கா.16

அழியாது அளபெடுத் தொன்றுவ தாகும் அளபெடையே.

இ.வி.723

அளபெடுத் தொன்றின் அடிஅள பெடையும்

தொன்.212

அளபெடையே அளபாம்.

மு.வீ.யா.28

அளபெடுத் தொன்றுவது அளபெடைத் தொடையே.

இளம்பூரணர்

402. அளபெழின் அவையே .... தொடையே.

என்-னின், அளபெடைத் தொடையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அடிதொறும் அளபெழத் தொடுப்பின் அஃது அளபெடைத் தொடையாம் என்றவாறு.

"ஓஒ இனிதே எமக்கிந்நோய் செய்தகண்
தாஅம் இதற்பட் டது" (குறள். 1176)

என வரும். (93)

பேராசிரியர்

409. அளபெழி னவையே .... தொடையே.

இது, முறையே அளபெடைத் தொடை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அடிமுதற்கண் எழுத்துகள் அளபெழுந்தனவாயின், அவை அளபெடைத் தொடை எனப்படும் என்றவாறு.

'அவை' என்றது உயிரளபெடையும் ஒற்றளபெடையுமென் றிரண்டென்பது கோடற்கு.

"பாஅ லஞ்செவிப் பணைத்தாண் மாநிரை
மாஅல் யானையொடு மறவர் மயங்கி" (கலி. 5)

என்பது, உயிரளபெடை.

"கஃஃஃ றென்னுங் கல்லதர்க் கானிடைச்
சுஃஃஃ றென்னுந் தண்டோட்டுப் பெண்ணை" (பக்.948, 966)

என்பது ஒற்றளபெடை.

இவை கட்டளையடியொடு தொடுக்குங்கால் உயிரளபெடை முந்நூற்று முப்பத்து மூன்றாம் (333). அவை மூன்று பாவினும் வருங்கால் உரியசைச்சீர் நான்கும், உரிமுதற்சீர் எட்டும், நேரசையுமெனப் பதின் மூன்றும் ஒழித்து, ஒழிந்தவற்றுள் வரும்.

அவை ஆசிரியத்துள் நேர்முதற்சீ ரேழும், நிரைமுதற்சீ ரேழும், வெண்பாவினுள் நேர்முதற்சீ ரொன்பதும், நிரைமுதற்சீ ரொன்பதும்,

கலிப்பாவினுள்ளும் உரிமுதற்சீ ரெட்டொழித்து, நேர்முதற்சீ ரெட்டும், நிரைமுதற்சீ ரெட்டும் எனப் பதினாறுமாக, நாற்பத்தெட்டுச் சீர்க்கண்ணும் வருமென்பது. அங்ஙனம் வருங்கால் ஆசிரியத்து நூற்று நாற்பத்தேழும், வெண்பாவினுள் நூற்றாறும், கலிப்பாவினுள் எண்பதுமாகி முந்நூற்று முப்பத்துமூன்றாம். அவை ஆசிரியத்துள் இருபத்தொன்றும், வெண்பா வினுட் பதினொன்றுமாக முப்பத்திரண்டு நிலங் களைந்து பெறப்பட்டன.

"உரியசைச்சீர் நான்கு முரிமுதற்சீ ரெட்டு
மளபெடைக்கு நுந்தையோ டாக - வொருநாற்பத்
தெண்சீரான் முந்நூற்று முப்பத்து மூன்றென்ப
ரொண்சீர் பெருமுறையா னுய்த்து"

எனவும்,

"நேரேழ் நிரையேழ் முதற்சீர் முதற்பாவிற்
கோரேழான் மூவேழ் நிலமிலவா - னேராதி
யொன்ப திரண்டு நிரையாதி வெண்பாவிற்
கென்றிவை முப்பத் திரண்டு"

எனவும்,

"நூறொடு நாற்பத்தே ழாமகவ னூற்றின்மே
லாறு தொடைவெள்ளைக் காகுமா - லேறுதுள்ளற்
கெண்பதா மீரேழீ ரொன்பஃ தெண்ணிரண்
டென்றுமாம் பாமூன் றிடத்து"

எனவும் இவற்றை விரித்துக்கொள்க.

ஈரொற்றளபெடை கலிப்பாவினுள் வாராது; என்னை? அது துள்ள லோசை தள்ளிநிற்றலின். அங்ஙனமாதல்,

"அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி" (323)

அறிக.

இனி, ஆசிரியத்துள் தேமா, புளிமா வென்னும் இரண்டும், வெண்பாவினுள் தேமா, புளிமா, மாசெல்வாய், புலிசெல்வாய் என்னும் நான்குமாகச் சீராறன்கண்ணும் பெற்ற தொடை நாற்பத்தைந்து. இவை ஆசிரியத் திருபத்தொன்றும், வெண்பாவினு ளிருபத்துநான்குமெனப்படும். இவை ஆசிரியத்துண் மூன்றும் வெண்பாவினுள் இரண்டுமாக ஐந்து நிலங் களைந்து பெறப்பட்டன. களையுநிலம் அதனிற் சுருங்குவதில்லை.

"தேமா புளிமாவே மாபுலிசெல் வாயென்றா
நானாற்பத் தைந்தொற் றளபாம் - வேறு
தனித்தொலி யொன்றா களையுநில மூன்றா
முதற்பாவின் வெள்ளைக் கிரண்டு"

எனவும்,

"எழுமூன்றா மாசிரியத் தெண்மூன்றாம் வெள்ளைக்
கழியாத வீரொற் றளபு"

எனவும் இவற்றை விரித்துரைத்துக் கொள்க. ஆக அளபெடைத் தொடை இரண்டுங் கூட்டிப் பெற்ற தொடை முந்நூற்றெழுபத்தெட்டு (378). ஆக முதற்றொடை இருபத்திரண்டனானும் பெற்ற தொடை ஒன்பதினாயிரத் தெண்ணூற்றிருபஃது (9820).

"ஒன்பதி னாயிரத் தெண்ணூற் றிருபஃதா
மந்தமில் காட்சி யளபெடைத்தே
வந்த விருபத்தி ரண்டு" (97)

நச்சினார்க்கினியர்

97. அளபெழின் .... தொடையே.

இது, முறையே அளபெடைத் தொடை கூறுகின்றது.

(இ-ள்) அடிமுதற்கண்ணே எழுத்துகள் அளபெழுந்தனவாயின் அவை அளபெடைத் தொடை எனப்படும் எ-று.

அவை யென்றார், உயிரளபெடையும் ஒற்றளபெடையுங் கோடற்கு.

(எ-டு) "உறாஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்
செறாஅஅய் வாழியென் னெஞ்சு" (குறள். 1200)

இது கட்டளை உயிரளபெடை.

"பாஅ லஞ்செவிப் பணைத்தாள் மாநிரை
மாஅல் யானையொடு மறவர் மயங்க" (கலி. 5)

இதுவும் இருவகை யடியும்[1] வந்த உயிரளபெடை.

"எஃஃ கிலங்கிய கையரா யின்னுயிர்
வெஃஃகு வார்க்கில்லை வீடு."

இது கட்டளை யொற்றளபெடை.

"கஃஃ றென்னுங் கல்லதர்க் கானிடைச்
சுஃஃ றென்னுந் தண்டோட்டுப் பெண்ணை."

இது சீர்வகை யொற்றளபெடை.

இவ் வொற்றளபெடை கட்டளைக்குக் கொள்ளாம்; ஒழிந்தன வற்றிற்கும் வந்துழிக் காண்க. இவற்றிற்கு இணை முதலியன கொள்ளாம், சிறப்பின்மையின். (97)

சிவலிங்கனார்

அளபெழின் .... தொடையே.

1. கட்டளையடியும், சீர்வகையடியும்

(இ-ள்) அடிதோறும் அளபெடை வரத் தொடுப்பது அளபெடைத் தொடையாம், எ-று.

"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை."

பொழிப்புத் தொடை

403. ஒருசீ ரிடையிட் டெதுகை யாயின்
பொழிப்பென மொழிதல் புலவர் ஆறே. (94)

இலக்குவனார்

410. If *ethukai* occurs alternatively it is called *polippu* by poets.

பி.இ.நா.

யா.வி. 43

முதலொடு மூன்றாம் சீர்த்தொடை பொழிப்பே.

யா.கா. 19

பொழிப்பு இடையிட்டு.

இ.வி. 723

முதலொடு மூன்றாம் சீர்த்தொடை பொழிப்பு.

தொன். 216

இடைவிடல் பொழிப்பே.

மு.வீ.யா. 33

பொழிப்பு இடையிட்டுப் போதுவ தாகும்.

இளம்பூரணர்

403. ஒருசீ ரிடையிட் .... ஆறே.

என்-னின், பொழிப்புத்தொடையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஒருசீ ரிடையிட்டு எதுகையாயிற் பொழிப்புத்தொடையாம் என்றவாறு.

எதுகையென ஓதினார் ஆயினும், 'வந்தது கொண்டு வாராதது முடித்தல்' என்பதனான் மோனை இயைபுமுரண் அளபெடை என்பனவும் பொழிப்புத் தொடையாம் என்று கொள்ளப்படும்.

(உ-ம்) "அரிக்குரற் கிண்கிணி யரற்றுஞ் சீறடி" (யா.வி.ப. 130)

இது பொழிப்புமோனை.

"பன்னருங் கோங்கின் நன்னலங் கவற்றி" (யா.வி.ப. 134)

என்பது பொழிப்பெதுகை.

"சுருங்கிய நுசுப்பிற் பெருகுவடந் தாங்கி" (யா.வி.ப.147)

என்பது பொழிப்பு முரண்.

"கடலே, கானலங் கழியே கைதையந் துறையே"

என்பது பொழிப்பியைபு.[1]

"பூஉங் குவளைப் போஒ தருந்தி" (யா.வி.ப. 158)

என்பது பொழிப்பளபெடை. (94)

பேராசிரியர்

410. ஒருசீ ரிடையிட் .... ராறே.

இது, பொழிப்பெதுகையாமா றுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஒருசீ ரிடையிட்டு எதுகையாயிற் பொழிப்பாம் என்றவாறு.

இடையிடினெனவே முதற்சீர் நிற்பதாயிற்று. 'எதுகையாயின்' எனவே, மூன்றாஞ் சீரோடு தொடுப்பதாயிற்று. இவற்றுள் ஆசிரியம் களைவன களையப்பெற்ற தொடை நூற்றுநாற்பது (140) எனவும், வெண்பா களைவன களையப் பெற்ற தொடை நூற்றுமூன்று (103) எனவுங் கொள்க.

"நிரைமுதற்சீர் பன்னிரண்டுங் கீழ்நிலத்து ளொன்ற
வருகலி முந்நூற்றெட் டாம்"

எனவும்,

"மேவுசீர் வெள்ளைக்கொன் றேற்கிளை முற்றே
லோரிரு நூற்றுமுப்பத் தெட்டாகு மாக
விருநூற்று நானூற்றொ டெழுபத்தைந் தாக
வருமுற்று மொன்றாம் வகை"

எனவும் இவை முற்றெதுகைக்கு உரைச்சூத்திரம்

இன்னும், 'புலவ ராறே' என்று மிகுத்துச் சொல்லியதனானே அமைவன வேறுளவெனத் தழீஇப் புகுந்தவற்றுள் ஈண்டுக் கூறாத அந்தாதித் தொடையுமாமாறு சொல்லிக் கொள்க; அவற்றை விகற்பத்தோடேயாகிய ஒரூஉத்தொடையுங் கூறுவது. (98)

1. துறையே கழியே என்பனவற்றின் ஏகாரங்கள் பொழிப்பு இயைபாம்.

நச்சினார்க்கினியர்

98. ஒருசீர் இடையிட்டு .... ராறே.

இது, நிறுத்த முறையானே பொழிப்பிற்கெல்லாம் இலக்கணங் கூறுகின்றது.

(இ-ள்) ஒருசீர் இடையிட்டு எதுகையாயின் மொழிப்பென மொழிதல் - பொழிப்பு ஒரு சீரை நடுவே யிட்டு வைத்து எதுகையாயிற் பொழிப்பெதுகையென்று பெயர் கூறுக; அன்றிப் பொழிப்பு ஒருசீர் இடையிட்டு மோனை முரணியையாய் வந்தனவாயிற் பொழிப்பு மோனை, பொழிப்புமுரண், பொழிப்பியைபு எனப் பெயர் கூறுக; புலவராறே - இங்ஙனம் பெயர் கூறுதல் ஆசிரியர் கொண்ட நெறி எ-று.

இங்ஙனம் எதுகையைப் புலப்பட வைத்து ஏனைய அருத்தா பத்தியாற் கூறியது, எல்லாவற்றினும் எதுகை சிறந்து தோன்றுதல் கருதி. இவற்றிற்கு உதாரணம் முன்னர்க் காட்டினாம். (98)

சிவலிங்கனார்

ஒருசீரிடை .... ராறே.

(இ-ள்) ஓரடியில் உள்ள நாற்சீரில் ஒருசீர் இடையிட்டு எதுகை வரத் தொடுப்பது பொழிப்பு எதுகைத்தொடை எனப்படும், எ-று.

எதுகைக்கு கூறினாராயினும் மோனை முதலியவற்றிற்கும் கொள்க.

(உ-ம்) "அரிக்குரற் கிண்கிணி அரற்றும் சீறடி"

இது பொழிப்புமோனை.

"பன்னருங் கோங்கின் நன்னலம் கவற்ற"

இது பொழிப்புஎதுகை.

"சுருங்கிய நுசுப்பில் பெருகுவடம் தாங்கி"

இது பொழிப்புமுரண்.

"கானலங் கழியே கைதையந் துறையே"

இஃது இறுதிச் சீரிலிருந்து நோக்கப் பொழிப்பு இயைபாம்.

"பூஉங் குவளைப் போஒ தருந்தி"

இது பொழிப்பளபெடை.

ஒரூஉத்தொடை

404. இருசீர் இடையிடின் ஒரூஉவென மொழிப. (95)

இலக்குவனார்

411. If two feet intervene it is called *oruu*.

பி.இ.நூ.

யா.வி. 44

சீர்இரண்டு இடைவிடத் தொடுப்பது ஒரூஉத் தொடை.

யா.கா. 19

ஒருவாம் இருசீர் இடையிட்டது.

தொன். 216

இறுவது ஒரூஉ (விளக்கம் இல்லை)

மு.வீ.யா. 34

இருசீர் இடையிட்டு ஆதியும் அந்தமும்
ஒன்றல் ஒரூஉஎன்று உணர்த்திசி னோரே.

இ.வி. 273

சீர்இரண்டு இடைவிடத் தொடுப்பின் ஒரூஉ.

இளம்பூரணர்

404. இருசீர் இடையிடின் .... மொழிப.

என்-னின், ஒரூஉத்தொடை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இரண்டு சீர் இடையிட்டு மோனை முதலாயின வரத் தொடுப்பது ஒரூஉத் தொடையாம் என்றவாறு.

"அம்பொற் கொடிஞ்சி நெடுந்தேர்-அகற்றி" (யா.வி.ப. 130)

என்பது ஒரூஉமோனை.

"மின்னிவர் ஒளிவடந் தாங்கி மன்னிய" (யா.வி.ப. 134)

என்பது ஒரூஉ வெதுகை.

"குவிந்துசுணங் கரும்பிய கொங்கை விரிந்து" (யா.வி.ப. 147)

என்பது ஒரூஉ முரண்.

"நிழலே இனியதன் அயலது கடலே" (யாப்..ப. 153)

என்பது ஒரூஉ வியைபு.

"காஅய்ச் செந்நேற் கறித்துப் போஒய்" (யா.வி.ப. 158)

என்பது ஒரூஉ அளபெடை. (95)

பேராசிரியர்

411. இருசீ ரிடையிடி .... மொழிப.

இது, நிறுத்தமுறையானே ஒரூஉத்தொடை உணர்த்துகின்றது.

(இ-ள்) நாற்சீருள்ளும் இடை யிருசீரொழித்து, ஒழிந்த முதற்சீரும் நான்காஞ்சீரும் இரண்டாமெழுத் தொன்றிவரத் தொடுப்பின் அதனை ஒரூஉவென்ப என்றவாறு.

அதிகாரத்தான் ஒரூஉவெதுகை யெனப்பட்டது. அதுவும் பொழிப்புப் போல வந்த எழுத்தே வருதலும், கிளையெழுத்து வந்து கிளையொரூஉ எனப்பட்டு இரண்டாதலுமுடைத்து.

"உள்ளார் கொல்லோ தோழி முள்ளுடை" (ஐங்குறு.)

என்பது, ஒரூஉவெதுகைத்தொடை.

"சூரலங் கடுவளி யெடுப்ப வாருற்று" (அகம். 1)

என்பது கிளையொரூஉ வெதுகை.

இவை இரண்டு தொடையுங் கட்டளையடிக்கண் வருங்கால் ஒரூஉவெதுகை ஐஞ்ஞூற்றிருபத்தெட்டாம் (528).

அவை ஆசிரியத்திற்கு உரியசீர் இருபத்தேழனுள்ளும் நேர்முதற் சீர் பதினான்கும் ஒரோவொன்று உறழ்ந்த அடி பன்னிரண்டனுள், சுருங்கிய நிலந்தோறும் ஒன்பதொன்பதாக நூற்றிருபத்தாறும், நிரைமுதற்சீர் பதின்மூன்றும் பெருகிய நிலத்து ஒரோவொன்று பத்தாக நூற்று முப்பஃதுமாக அகவற்றொடை இருநூற்றைம்பத்தாறு (256); அவற்றுண் மின்னு, மேவுசீர், நாணுத்தளை என்னும் மூன்று சீரானும் மூன்று நிலம் முதனிலத்தகற்றிப் பெற்ற தொடை இருநூற்றைம்பத்து மூன்று (253). வெண்டொடை இருபத்தேழு சீருறழ்ந்த அடி அனைத்தினும் பெற்ற தொடைநிலை நூற்றெண்பத்தொன்று (181); இவற்றுள் மின்னு, மேவுசீர் என்னும் இரண்டனானும் முதனிலத்து இரண்டு நிலங் களைந்து பெற்ற தொடை நூற்றெழுபத்தொன்பதாம் (179).

இனி, கலிப்பாவினுள் நேர்முதற்சீர் பன்னிரண்டாகப் பெருகிய நிலத்து ஒரோவொன்று களையப் பெற்ற தொடை நாற்பத்தெட்டும், நிரை முதற்சீர் பன்னிரண்டும், சுருங்கிய நிலத்து ஒரோவொன்று களையப் பெற்ற தொடை நாற்பத்தெட்டுமாகக் கலிப்பாவிற்குரிய தொடை தொண்ணூற் றாறுமாக மூன்று பாவினும் பெற்ற ஒரூஉத்தொடை ஐந்நூற்றிருபத் தெட்டாம் (528).

கிளையொரூஉவும் இவ்வாறே ஐந்நூற்றிருபத்தெட்டாகவும், அவற்றுமேல் மின்னு, மேவுசீ ரென்னும் இரண்டும் வெண்பாவினுள் உறழ்ந்த முதனிலையிரண்டுங் களையாது கொள்ளக் கிளையொரூஉத்

தொடை ஐஞ்ஞூற்றுமுப்பதாம் (530). ஆக வொரூஉத்தொடை இரண்டனானும் பெற்ற தொடை ஆயிரத்தைம்பத்தெட்டாம் (1058).

"நேராதி யாதி நிலத்தொன்ப தொன்பதா
மீரைந்தா மாசிரியத் தீற்று - நிரையாதி
யாக விருநூற்றைம் பத்துமூன் றாமாதி
நேர்புகா மூன்றனையு நீத்து"

எனவும்,

"மேவுசீர் மின்னுக்குண் முன்னைநிலத் தொரோவொன்
றாகா வொரூஉவெள்ளைக் காதலா - னாவன
நூற்றெழுபத் தொன்பதா நோக்கு"

எனவும்,

"முன்பினே ராதி நிரையாதி துள்ளற்கோ
ரொன்றொழியத் தொண்ணூற்றா றாகுங் கிளைவெள்ளைக்
கொன்றா யிரண்டா னொரூஉவிரண்டு மாயிரத்
தைம்பான்மே லெட்டா மவை"

எனவும். இவற்றை விரித்துரைத்துக் கொள்க.

மேலைப் பொழிப்பிரண்டும் முற்றிரண்டும் இவையிரண்டுமென விகற்பத் தொடை ஆறனாலும் பெற்ற தொடை இரண்டாயிரத்தைஞ் ஞூற்றிருபத்தொன்று (2521). இவை ஆறுதொடையும் ஓரடிக்கண்ணே வருதலின் தளை வழுப்பட்டனவென்று களையும் நில மிலவென்பது.

இன்னும் புலவராறென்றதனால், தொடையந்தாதியும் விட்டிசையும் ஒரோவொன்று இரண்டாகி அசையந்தாதியுஞ் சீரந்தாதியும் விட்டிசைத் தொடையுங் குறிப்புவிட்டிசையுமென நான்காம்.

ஓரடியுள் இறுதிச் சீருள் ஈற்றசையும் மற்றையடியின் முதற்சீரின் முதலசையும் ஒன்றத் தொடுப்பது அசையந்தாதி. அவை தொடுக்குங்காற் கட்டளையடிக்கண் உரியசைச் சீரினை அசையெனக் கொள்ளற்க; இவை பிற சீர்ப்பாற்படுத்துத் தளை கோடலின். அடியிறுதிக்கட் கடியாறு மழகளிறென வந்தவழி. யாறு, களிறு என்னும் இரண்டு உரியசையும் நிரையசையாக இயற்றப்பட்டன. ஆயினும் இயற்கை நிரையசையோடு தொடுக்கப்படா; இரண்டசையும் ஒரு சொல்லாயினன்றி அந்தாதி யாகாமையி னென்பது.

இனி, இறுதிச்சீர் முதற்சீரொடு சேரிற் சீரந்தாதியாம்.

(உ-ம்) "குன்றகச் சாரற் குதித்தன கோண்மா
மாவென மதர்த்தன கொடிச்சி வான்கண்"

என்பது, அசையந்தாதி.

"தழைபூஞ் சாரற் பூத்த முல்லை
முல்லை சான்ற கற்பி னல்லோள்"

என்பது, சீரந்தாதி.

இது கட்டளையடிக்கண் வருங்கால் அசையந்தாதி முந்நூற்றிருபத் தைந்தாம் (325).

அவை ஆசிரியத்துள் இரண்டு நேர்பசைச் சீர்க்கும் ஒரெழுத்துத் தேமாவிற்கும் ஏலாமையின் ஒழிந்த நேர்முதற்சீர் பதினொன்றும் உறழ்ந்த அடி நூற்றுமுப்பத்திரண்டனுள் ஒரு சீர்க்கு (முதனிலத் தொன்றும் இறுதி நிலத்தொன்றுமென இவ் விரண்டானும்) முதனில மிரண்டும் இறுதிநில மொன்றுமென மும்மூன்றாக முப்பத்து மூன்றகற்றி ஒரோசீர்க்கு ஒன்பதொன்பதாகப் பெற்ற தொடை தொண்ணூற்றொன்பது (99). இனி, நிரைமுதற் சீருள் நிரைபசைச் சீரிரண்டு ஒழித்து ஒழிந்த பதினொன்றும் உறழ்ந்த அடி நூற்றுமுப்பத்திரண்டனுள் முதனிலத் தொன்றுவன இவ்விரண்டாக இருபத்திரண்டு நிலங் களைய ஒவ்வொன்று பத்தாகப் பெற்ற நூற்றொருபதாக ஆசிரியத்துள் அசையந்தாதி இருநூற் றொன்ப(209) தாயின.

வெண்பாவினுள் அசையந்தாதி வருங்கால் நேர்பசைச் சீரிரண்டும், ஓரெழுத்துத் தேமாவும், நிரைமுதற்சீர் பதின்மூன்றுமெனப் பதினாறொ ழித்து ஒழிந்த நேர்முதற்சீர் பதினொன்றும் உறழ்ந்த அடி எழுபத்தெட்ட னுள் ஒரொவொரு சீர்க்கு இரண்டாக முதனிலந்தோறுங் களைந்தவழி இருபத்திரண் டொழித்துப் பெற்ற வெண்டொடை ஐம்பத்தாறாம்.

கலிப்பாவினுள் நிரைமுதற்சீர் ஒழித்து ஒழிந்த நேர்முதற்சீர் பன்னிரண்டனானுந் தொடை அறுபதாம். ஆக மூன்று பாவிற்கும் அசையந்தாதி முந்நூற்றிருபத்தைந்து (325) ஆயினவாறு கண்டு கொள்க.

"நேர்பசைச்சீர் நுந்தையொழித் தேனைப் பதினொரு
நேராதி முன்பினிரண் டொன்றகற்றிச் - சீராக
நீங்கியவா ற்க நிரைமுதல் பத்தாக
வீங்கிரு நூற்றொன்ப தென்"

எனவும்,

"நேர்முத லொன்ப தியற்சீ ரூரிவெண்சீ
ராகியினி யிவ்விரண் டாங்கொழிப்ப - நேர்பொடு
வெண்பாநேர் நுந்தை நிரைமுதல் வீழ்த்தசை
யந்தாதி யையம்பத்தா றாம்."

எனவும்,

"நேரசை யந்தாதி யன்றிக் கலிக்கியையா
வாகலி னாங்கறுப தாம்"

எனவும்,

"அவ்வகை யந்தாதி முந்நூற் றிருபத்தைந்
திவ்வகை முப்பாக் கியற்று"

எனவும் இவ் வுரைச்சூத்திரங்களான் அசையந்தாதி முந்நூற்றிருபத்தைந் தும் (325) ஆயினவாறு அறிந்துகொள்க.

இனி, சீரந்தாதி நூற்றறுபத்து நான்கு (164). அவை ஆசிரியத்து வருங்கால் நேர்பசைச் சீரிரண்டுந் தேமா விரண்டுமென நான்கனானுந் தத்தம் முதனிலந் தொடங்கி ஒரோவொன்று அவ்வாறாக நாலாறிருபத்து நான்காம். இனி, நிரைமுதற் சீருள் நிரைபசைச்சீ ரிரண்டும் புளிமாவுமென மூன்றொழித்து ஒழிந்த பத்துச் சீரானும் வருங்கால் அவை உறழ்ந்த அடி பன்னிரண்டனுண் முதனிலம் மூன்றும் பெருகிய நிலத் திரண்டுமாக வைந்து ஒழித்து ஒரோவொன்று எவ்வேழாக எழுபதாம். ஆக, அகவற்றொடை தொண்ணூற்று நான்காம் (94).

இனி, வெண்பாவினுள் வருங்கால் நேர்பசைச்சீ ரிரண்டுந் தேமா விரண்டும் நிரைமுதல் வெண்சீ ரிரண்டும் நிரைமுதல் நிரையீறாகலிற் கணவிரி எட்டுமாகச் சீர் பதினான்கும் ஒழித்து ஒழிந்த சீர் பதின்மூன்றனானும் பெற்ற அடி தொண்ணூறாம்; அவற்றுள், வரகும் அரவும் புளிமாவும் என்னும் மூன்றும் பெற்ற அடி பத்தொன்பதாகலின், அவற்றுள் வரகிற்குப் பெருகிய நிலத்து மூன்றும், அரவும் புளிமாவுஞ் சுருங்கிய நிலத்தும் பெருகிய நிலத்தும் ஒரோவொன்றாக நான்குமாக ஏழுமொழித்து ஒரோவொன்று நான்காகப் பெற்ற அடி பன்னிரண்டாம். காருருமு, மாவருவாய் என்னும் இரண்டனானும் பெற்ற அடி பன்னிரண்டனுள் முதனிலத்து மும்மூன்றாக ஆறொழித்துப் பெற்ற தொடை இருமூன்றாம். பாதிரியேழும் மாசெல்வாயுமென எட்டனானும் பெற்ற அடி ஐம்பத்தொன்பதாகலின் அவற்றுள் ஈரெழுத்துப் பாதிரி மூன்றுஞ் சுருங்கிய நிலத்து ஒரோவொன்று பெருகிய நிலத்து இவ்விரண்டுமாக மும்மூன்றொன்பதும், ஒழிந்த மூவெழுத்துப் பாதிரி நான்கும், மாசெல்வாயுமென ஐந்துஞ் சுருங்கிய நிலத்து இவ்விரண்டாகப் பத்துமெனப் பத்தொன்பதுங் களைந்து பெற்ற தொடை நாற்பதாமெனக் கொள்க. ஆகக் களையும் நிலம் முப்பத்திரண்டு ஒழித்து ஒழிந்த தொடை வெண்பாவிற்கு ஐம்பத்தெட்டாயின (58).

இனி, கலிப்பாவினுள் வெண்சீர் நான்கனானும் பெற்ற அடி இருபஃதாகலின், அவற்றுண் மாசெல்வாய் உறழ்ந்த அடி ஐந்தினும் ஏறிய நிலத்திரண்டும், புலிவருவாய் உறழ்ந்த அடி ஐந்தினுஞ் சுருங்கிய நிலத்திரண்டும், ஒழிந்த மாவருவாய் புலிசெல்வாய்கள் இரண்டும் முன்னும் பின்னும் ஒரோவொன்றாக நான்காகும்; ஆக எட்டுங் களைய ஒரோவொன்று மும்மூன்றாகப் பெற்ற தொடை பன்னிரண்டாம். ஆக மூன்று பாவிற்குஞ் சீரந்தாதி நூற்றறுபத்து நான்காம் (164).

"வண்டொன்று தேமா விரண்டு வலியதுபன்
னொன்றொடச்சீ ரந்தாதிக் கீரேழாம் நேராதி
பத்தும் புளிமா வரகிரண்டும் வெள்ளைக்கா
மொத்த கலிக்குரிச்சீர் நான்கு"

எனவும்,

"நிரைநிரைபத் தெவ்வேழா மூன்று மிரண்டு
முதனில னீக்கிமூன் றாக வகவலி
னேராதி நான்கு மெழுவாய் நிலந்தொடங்கி
யாறாகு மந்தாதிச் சீர்"

எனவும்,

"ஆக வகவற்சீ ரந்தாதி (தொண்ணூற்று)
நால்வகை யாக நவிற்று"

எனவும்,

"வரகு பெருநிலத்து மூன்றகற்றி மற்றை
யரவு புளிமா வரகிரண்டு மாற்றி
முதனிலத்துக் காருரும மாவருவாய் மும்மூன்
றெனவுரை யந்தாதிக் கீண்டு"

எனவும்,

"ஈரெழுத்துப் பாதிரிமூன் றீரருகு மோரிரண்டாய்
மூவெழுத்துப் பாதிரிக்கு முன்னிரண்டாய் மாசெல்வ
யொன்றற்கு மவ்வா றொழித்துரைப்ப நாற்பஃதாம்
வெண்டொடைச்சீ ரந்தாதி வேறு"

எனவும்,

"விரித்தசீ ரந்தாதி வெண்டொடை யைம்ப
தெனப்படு மெட்டுமே லிட்டு"

எனவும்,

"மாசெல்வா யீற்றும் புலிவருவாய் மற்றிடத்து
மேனை யிரண்டு மிரண்டிடத்து மாக
விரண்டிரண்டு நீக்கிச்சீ ரந்தாதி துள்ளற்
கமைந்த தொடைநான்மூன் றாம்"

எனவும்,

"பாத்தோறும் வந்தசீ ரந்தாதி பாற்படுப்ப
நூற்றோ டறுபத்து நான்கு"

எனவும் இவ்வாற்றானே சீரந்தாதியாமா றுரைத்துக் கொள்க.

"அந்தாதி யோரிரண்டு மாகத் தொடைநானூற்
றெண்பான்மே லொன்பா னெனல்."

இனி, விட்டிசைத்தொடை கூறுங்கால் எழுத்தினானும் எழுத்தல் ஓசையானும் விட்டிசைத்தல் இருவகைப்படும்.

"அஉ வறியா வறிவி லிடைமகனே
நொஅலைய னின்னாட்டை நீ" (இடைக்காடனார்)

என்பது, எழுத்தினானாகியது.

விட்டிசையின் இறுதியடி வல்லொற்றடுப்பின் விட்டிசை வல்லொற் றெதுகை யென்பாரும் உளர். ஆண்டு வல்லொற்றெதுகை யா(மாறா) காமையின் அது வேண்டுவதன்று; வேண்டினும் விட்டிசையெனவே அடங்குமென்பது.

"தளன்று தாமிசைப்ப தாகியே தண்ணுமைகேட்
டௌன் றெழுந்தார் பலர்"

என்பது குறிப்புவிட்டிசை.

இவை கட்டளையடிக்கண் வருங்கால் ஒரோவொன்று நூற் றறுபத்துநான்காகி முந்நூற்றிருபத்தெட்டாம் (328).

அவை வருங்கால் நேர்பசைச் சீரிரண்டும் ஓரெழுத்துத் தேமாவும் போதுபூவிரண்டும் ஒழித்தொழிந்த தேமாவும் பாதிரியிரண்டும் ஒன்றிக் கலிப்பாவிற்குத் தொடை நாற்பஃதாகவும், இரண்டு விட்டிசையுந் தொகுப்பப் பூமருதிரண்டும் நேர்முதல் வெண்சீரிரண்டுமாக ஒன்பது சீரும் பற்றி விட்டிசைக்குமெனவுங் கொள்க. அவற்றை அகவற்றொடை ஒரோவொன் றெழுபதாகவும், வெண்டொடை ஒரோவொன் றைம்பத்து நான்காகவும், கலிப்பாவிற்குத் தொடை நாற்பஃதாகவும் இரண்டு விட்டிசையுந் தொகுப்பத் தொடை முந்நூற்றிருபத் தெட்டாயினவாறு கண்டுகொள்க.

இவை ஆசிரியத்துப் பதினான்கும் வெண்பாவினு ளொன்பது மாக இருபத்துமூன்று நிலங் களைந்து பெற்றன.

"நேர்பிரண்டு நேர்பு முதலிய சீர்நான்கு
மோரெழுத்துத் தேமாவும் விட்டிசைக் கொன்றாவா
மேனை நிரைமுதற் சீர்களு மிவ்வாறே
யாகா தனவென் றறி"

எனவும்,

"அகவற்கேழ் நேராதி யொன்பதும் வெண்பாவிற்
குளவென் றுரைக்கப் படும்"

எனவும்,

"வெள்ளையு ளொன்ப தகவலி னீரேழாய்க்
கொள்ளா விருபத்து மூன்றாகுந் - துள்ளலுட்
போரேறு பாதிரி பூமருது மாசெல்வாய்
மாவருவா யெட்டும் வரும்"

எனவும்,

"அகவற் கெழுபதா மைம்பத்து நான்கா
நிகரற்ற வெள்ளைக்குந் துள்ளல் - புகரற்ற
நாற்பதாய் விட்டிசை நூற்றறு பத்துநான்
கேற்பதா மோரொன் றெனல்"

எனவும்,

"இருவிட் டிசைமுந்நூற் றீரொருபத் தெட்டா
வருவித்துக் கோடல் வழக்கு"

எனவும் இவற்றைப் பதநெகிழ்த்துரைக்க.

"விகற்பமா றந்தாதி விட்டிசைநான் கேற்றி
யிசைத்தவீ ரைந்து தொடையாற் றொடைத்தொகை
மூவா யிரத்தொடு முந்நூற்று முப்பத்தா
றாமா றறிந்து கொளல்"

"இருபத் திரண்டு மிவைபத்து மாக
வருவித்த முப்பத் திரண்டா - னொருபத்தின்

மூவா யிரத்தொரு நூற்றைம்பத் தாறைந்நூற்
றோடோரைம் பத்திரண் டேற்று"

என விவை உரைச்சூத்திரம். ஆகத் தொடை முப்பத்திரண்டனாற் பெற்ற தொடை பதின்மூவாயிரத்தெழுநூற்றெட்டு (13708). (99)

நச்சினார்க்கினியர்

99. இருசீர் .... மொழிப.

இது, நிறுத்த முறையானே ஒரூஉவிற் கெல்லாம் இலக்கணங் கூறுகின்றது.

(இ-ள்) இரண்டு சீரை நடுவே யிட்டுவைத்து முதற்சீரும் நாலாஞ் சீரும் ஒன்றிவரின் ஒரூஉமோனை, ஒரூஉவெதுகை, ஒரூஉமுரண், ஒரூஉவியைபு எனப்படும். எ-று.

ஒரூஉவை விதந்தோதினார், வெண்பாவிற்குச் சிறந்துவருதலானும், ஆசிரியத்திற்கு ஏனையவற்றிற் சிறந்து தோன்றுதலானும். உதாரணம் முன்னர்க் காட்டினாம். (99)

சிவலிங்கனார்

இருசீர்இடை .... மொழிப.

(இ-ள்) நாற்சீரடியுள் இருசீர் இடையிட்டு வருவது ஒரூஉத் தொடை என்று கூறுவர், எ-று.

(உ-ம்) "அம்பொற் கொடிஞ்சி நெடுந்தேர் அகற்றி"

இது ஒரூஉமோனை.

"மின்னிவர் ஒளிவடம் தாங்கி மன்னிய"

இது ஒரூஉஎதுகை.

"குவிந்துசுணங் கரும்பிய கொங்கை விரிந்து"

இது ஒரூஉமுரண்.

"நிழலே இனியதன் அயலது கடலே."

இது ஒரூஉ இயைபு.

"காஅய்ச் செந்நெல் கறித்துப் போஒய்"

இது ஒரூஉ அளபெடை.

செந்தொடை

405. சொல்லிய தொடையொடு வேறுபட் டியலின்
சொல்லியற் புலவர்அது செந்தொடை என்ப. (96)

இலக்குவனார்

412. The poets well versed in the study of words call those which are different from the said rhymes as *senthodai* (perfect rhyme).

பி.இ.நூ.

யா.வி. 50

செந்தொடை ஒவ்வாத் திறந்தன வாகும்.

யா.கா.17

முந்தியமோனை முதலா முழுதும்ஒவ் வாதுவிட்டால்
செந்தொடை நாமம் பெறும்.

தொன்.217

செந்தொடை தொடையொன்றும் சேரா வடியே.

மு.வீ.யா.31

செந்தொடை ஒவ்வாத் திறத்தன வாகும்.

இ.வி.723

சொல்லிய தொடையொடு வேறுபட் டியலின்
சொல்லி நிறுத்த செந்தொடை.

இளம்பூரணர்

405. சொல்லிய ------------- என்ப.

என்-னின், செந்தொடை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட தொடையும் தொடை விகற்பமும் போலாது வேறுபடத் தொடுப்பது செந்தொடையாம் என்றவாறு.

"பூத்த வேங்கை வியன்சினை ஏறி
மயிலினம் அகவும் நாடன்
நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே" **(யா.வி.ப.179)**

என வரும்.

இனி நிரனிறுத்தியற்றலும் இரட்டையாப்பும் மொழிந்தவற்றியலான் (செய்யுளியல், 87) வருமாறு.

"அடல்வேல் அமர்நோக்கி நின்முகங் கண்டே
உடலும் இரிந்தோடும் ஊழலரும் பார்க்குங்
கடலுங் கனையிருளும் ஆம்பலும் பாம்புந்
தடமதி யாமென்று தாம்." (யா.வி.ப.182)

இது பொருளான் வேறுபட்ட துணையல்லது எழுத்தான் வேறு படாமையின் எதுகைத்தொடையாயிற்று. இனி, இரட்டைத் தொடை வருமாறு:

"ஒக்குமே ஒக்குமே ஒக்குமே யொக்கும்
விளக்கினிற் சீறெரி ஒக்குமே ஒக்கும்
குளக்கொட்டிப் பூவின் நிறம்." (யா.வி.ப.180)

இதுவுஞ் சொல்லிய தொடைப்பாற்பட்டவாறு காண்க.

இணைமோனை, கூழைமோனை, மேற்கதுவாய்மோனை, கீழ்க்கது வாய்மோனை, முற்றுமோனை முதலாயினவும் அந்தாதித் தொடையுங் கூறாத தென்னையெனின், 'தெரிந்தனர் விரிப்பில் வரம்பில வாகும்' என வருகின்ற சூத்திரங் கூறுகின்றாராதலின் அச் சூத்திரத்தின்காறும் பாட்டிற்கின்றியமையாத தொடையுணர்த்தினாரென்று கொள்க. (96)

பேராசிரியர்

412. சொல்லிய தொடையொடு .... யென்ப.

இது, மேற் செந்தொடையாமெனக் கூறியதுணர்த்துகின்றது; எய்தாத தெய்துவித்ததூஉமாம்.

(இ-ள்) மேற்கூறப்பட்ட தொடை எல்லாவற்றொடும் ஒவ்வாதுவரின் அதனை இயற்கைச் சொல்லாற் செய்யுள் செய்யும் புலவரது செந்தொடை யென்று சொல்லுப ஆசிரியர் என்றவாறு.

எனவே, விகாரப்படச் செய்யுள் செய்யுஞ் செந்தொடை மின்னா தென்றானாம்; அது,

"இருங்கழி முலர்ந்த வள்ளிதழ் நீலம்
புலாஅன் மறுகிற் சிறுகுடிப் பாக்கத்
தினமீன் வேட்டுவர் ஞாழலொடு மிலையு
மெல்லம் புலம்ப நெகிழ்ந்தன தோளே" (அகம். 270)

எனவும்,

"சேயிறா முகந்த நுரைபிதிர்ப் படுதிரை
பராரைப் புன்னை வாங்குசினை தோயும்" (அகம். 270)

எனவம் வரும்.

"பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலின மகவு நாட
னன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே" (யா.வி.ப.179)

என்பதும் அது.

'இயலின்' என்றதனான், இரண்டடியால் தொடைபெற்று நின்று இரண்டடி யெதுகையாகியவை தம்முள் தொடுக்குங்காற் செவ்வன் தொடுப்பினும் அதனைச் செந்தொடை யென்னாது இரண்டடி யெதுகை யென்றும், இனி ஓரடி இடையிட்டுத் தொடுத்தவழியுந் தொடர்ந்த அடி இரண்டுஞ் செந்தொடையாமாயினும் மூன்றாமடி எதுகைபடத்தொடுத்தன் மாத்திரையானே அதனை இடையிட்டெதுகை யென்றுங் கொள்ளப் படும். என்னை? அவ் வெதுகை ஆண்டுச் சிறந்தமையினென்பது; அவை முன்னர்க் காட்டுதும்.

"முன்பொழுது முன்சொல்லுந் தூரியமா மந்நிலையே
பின்பொழுது பின்செல்லு நெய்தலா - னன்பிலவே
கொல்யானை வேகப்போர்க் கோக்கோதை மாறேற்ற
பல்யானை மன்னர் பறை"

என வரும். இஃது இவ்விரண்டடிகளது கூட்டத்துக்கண் ணன்றி வாராவா யினுங் கட்டளையடிக்கு அகப்பட்ட தொடையொடுங் கூறினார். கட்டளை யடிக்கண் வருந்தொடையே சிறந்தனவென்று கொள்ளினுங் கொள்ளற்க வென்பான், ஒழிந்த தொடையுள்ளுமென்று கூட்டித் தொடை கூறினானென்பது.

இனி, செந்தொடை கட்டளையடிக்கண் தொடையாங்கால் ஓரெழுத்துத் தேமா ஒழித்து ஒழிந்த சீரெல்லாவற்றினும் வருமென்பது. இம் மூவகை அடியினானும் பெற்ற தொடையெல்லாந் தொகுப்பத் தொடை ஐஞ்ஞூற்று நாற்பத்தொன்பதாம் (549); அவற்றொடும் இரண்டடி யெதுகை இரண்டும் இடையீடுங் கூட்டத் தொடை ஐஞ்ஞூற்றைம்பத் திரண்டாம் (552). (நுந்தை என்பது கேட்டார்க்குத் தொடைப்பாடு வெளிப் படு விலக்கணத்தவாகிய தொடைக் கூறுபாடெனப் பிரித்துக் கூறியவாறு.)

"நுந்தையில் செந்தொடை யைஞ்ஞூற்று நாற்பான்மே
லொன்பானை யோரிடையிட் டோரிரட்டி
வந்த வெதுகை யிரண்டென வைத்தைஞ்ஞூற்
றைம்பத் திரண்டென் றறி"

என்பது, உரைச்சூத்திரம். ஆக முப்பத்துமூன்று தொடையும் அறுநூற் றிருபத்தைந்து அடியும் களைவன களைந்து பெற்ற தொடை விரி யெல்லாந் தொகுப்பப் பெற்ற தொடை பதின்மூவாயிரத்தெழு-நூற்றைந் துடன் (13705) இரண்டடி யெதுகையிரண்டும், இடையீடொன்றுங் கூட்டத் தொடை பதின்மூவாயிரத் தெழுநூற்றெட்டாயினவாறு (13708) கண்டு கொள்க.

"தொடையின் பகுதி முழுவதூஉஞ் சொன்மற்
றடியி னறுநூற் றிருபத்தைந் தாயி
னடிய திலக்கண மாமதுவென் றஞ்சிப்
பிறதொடைமூன் றேற்றினார் பின்."

இவ்வாறு தொடை கூறப்பட்ட தொடைப்பகுதியெல்லாம் அவ்வச் சூத்திரங்கடோறும் எடுத்தோதாது கட்டளையடிக்கும் அல்லாவடிக்கும் பொதுவகையாற் கூறி வந்தானாசிரியனாயினும்,

"மெய்பெறு மரபிற் றொடைவகை" (413)

என்னுந் தொடைச் சூத்திரத்திற்கு ஏற்பதாம். அவற்றை அவ்வச் சூத்திரங்களுட் போலக் கூறி வந்ததாமென்றது. முற்கூறிய முப்பத்துமூன்று தொடையினையும் அறுநூற்றிருபத்தைந்தடியோடு மாறியக்கால் இருபதினாயிரத் தறுநூற்றிருபத்தைந்து தொடையாகற்பாலனவாம் (20625); அன்னவை தொடைக்குந் தளைக்கு மாகாதன களைந்து கொள்ளப் பதின்மூவாயிரத் தெழுநூற்றைந்து (13705) ஆயினவென்பது. ஆறாயிரத்துத் தொள்ளாயிரத் திருபது (6920) நிலங்களையப்பட்டன. இங்ஙனம் இவை களைந்து பெற்ற தொடையோடும் இரண்டடியெதுகை இரண்டும் இடையீடொன்றுங் கூட்டத் தொடை பதின்மூவாயிரத் தெழுநூற்றெட்டாயின (13708). (100)

நச்சினார்க்கினியர்

100. சொல்லிய .... யென்ப.

இது, செந்தொடை கூறுகின்றது.

(இ-ள்) சொல்லிய தொடையொடு வேறுபட்டு இயலின்-முற்கூறிய தொடைகள் எல்லாவற்றோடும் ஒவ்வாது வரின் அதனை, சொல்லியல் புலவர் அது செந்தொடை என்ப - இயற்சொல்லால் செய்யுள் செய்யும் புலவர் செந்தொடை என்று கூறுவராசிரியர் எ-று.

எனவே, விகாரப்படச் செய்யுஞ் செய்யுட்குச் செந்தொடை யின்னா தாயிற்று.

(எ-டு) "நெடுவேண் மார்பி னாரம் போலச்
செவ்வாய் வானந் தீண்டிமீ னருந்து". (அகம். 120)

"விருந்தினர் மூத்தார் பசுசிறை பிள்ளை"

இவை கட்டளைச் செந்தொடை.

"பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலினம் அகவு நாடன்
நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே."

இது சீர்வகைச் செந்தொடை. (100)

சிவலிங்கனார்

சொல்லிய .... என்ப.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட அடிவகைத் தொடையும் சீர்வகைத் தொடையும் ஆகியவற்றில் ஒன்றினொடும் ஒவ்வாது வரின் அது செந்தொடை என்பர் புலவர், எ-று.

(உ-ம்) "பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலின மகவு நாடன்
நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே."

தொடைவிரி

406. மெய்பெறு மரபின் தொடைவகை தாமே
ஐயீ ராயிரத் தாறைஞ் ஞூற்றொடு
தொண்டுதலை யிட்ட பத்துக்குறை யெழுநூற்
றொன்பஃ[1] தென்ப உணர்ந்திசி னோரே. (97)

இலக்குவனார்

413. The well versed scholars say that there are thirteen thousand seven hundred and eight rhymes in accordance with the traditional grammar.

இளம்பூரணர்

406. மெய்பெறு மரபின் .... னோரே.

என்-னின், மேற்சொல்லப்பட்ட தொடையெல்லாம் விரிவகையான் உணர்த்துதல் நுதலிற்று

(இ-ள்) வடிவுபெற்ற மரபினையுடைய தொடையினது பாகுபாடு பதின்மூவாயிரத் தறுநூற்றுத் தொண்ணூற்றொன்பது என்றவாறு.

அவையாமாறு : மொழிமுதலாகிய எழுத்து உயிர் பன்னிரண்டு. இதன் கிளையெழுத்து ஒரோவொன்றிற்குப் பதினொன்றுளவாகலின் அவற்றை உறழ, நூற்றுமுப்பத்திரண்டாம். ‘கதநபம’ என்பவற்றை உயிர் பன்னிரண்டோடுறழ அறுபதாம்; அவ்வறுபதையும் முதற்றொடையாக்கிக் கிளையெழுத்தோ டுறழ அறுநூற்றறுபதாம்; சகரத்தின் முதலாகெழுத்து ஒன்பது; அவற்றைக் கிளையெழுத்தோ டுறழ எழுபத்திரண்டாம்; வகரத்தின் முதலாகெழுத்து எட்டு; அவற்றைக் கிளையெழுத்தோ டுறழ ஐம்பத்தாறாம். யகரத்தின் முதலாகெழுத்து ஒன்று; கிளையெழுத்தில்லை. ஞகரத்தின் முதலாகெழுத்து மூன்று; அவற்றைக் கிளையெழுத்தோடுறழ ஆறாம். இவ்வகையினான் முதலெழுத்துத் தொண்ணூற்று மூன்றுங் கிளை யெழுத்துத் தொள்ளாயிரத்திருபத்தாறும் ஆக மோனைத்தொடை ஆயிரத்தொருபத் தொன்பதாம்.

எதுகையாமாறு: உயிரெழுத்து மொழியிடையில் வாராது. உயிர் மெய்யெழுத்து இருநூற்றொருபத்தாறில் ஙவ்வருக்கம் ஒழிந்த எழுத்து இருநூற்று நாலினையுங் கிளையெழுத்தினொடு உறழ இரண்டாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டாம். இதனொடு ஒற்றுப் பத்தொன்பதுங் குற்றுகரம் ஆறுங் கூட்ட எதுகைத்தொடை இரண்டாயிரத்து நானூற்று எழுபத்துமூன்று பாகுபாடாம்.

---

1. ஒன்றுமென்ப - பேரா. பாடம்

முரண்தொடை சொன்முரண், பொருண்முரண் என இரண்டாம்.

இயைபுதொடையாமாறு : உயிரெழுத்து மொழியீற்றின்கண் உயிர்மெய்யாக வருதலின் அவையாகா. உயிர்மெய் இருநூற்றொரு பத்தாறில் இறுதிக்கண் வாராத ஙகரவுயிர்மெய் பன்னிரண்டும் அகரம் பதினேழும் இகரம் பதினாலும் உகரம் இரண்டும் எகரம் ஒன்றும் ஒகரம் ஒன்றும் இவை ஒழிந்து நின்ற எழுத்து நூற்றறுபத்தைந்தும் ஞணநமன யரலவழள என்னும் புள்ளியிறுதி பதினொன்றும் குற்றுகரவீறு ஆறும் ஆக இயைபுதொடை நூற்றெண்பத்திரண்டு பாகுபாடாம்.

அளபெடைத்தொடையாமாறு : மொழிமுதலாகு முயிரளபெடை ஏழு, கதநபம என்னும் உயிர்மெய்யளபெடை முப்பத்தைந்து, சகர அளபெடை ஐந்து, வகர அளபெடை ஐந்து, யகர அளபெடை இரண்டு, இவை ஐம்பத்துநான்கில் உயிரளபெடை தனி நிலையாம். ஏனையவற்றை முதனிலை, இடைநிலை, இறுதிநிலை என வுறழ நூற்றுநாற்பத் தொன்றாம். ஒற்றுகளுள் வல்லெழுத்தாறும் ரகரமும் ழகரமும் ஒழித்து ஏனைய பத்தும் ஆய்தம் ஒன்றும் அளபெடுக்க ஒற்றளபெடை பதினொன்றாம். இவ்வகையினான் அளபெடைத்தொடை நூற்றைம்பத் தொன்பது வகையாம்.

இவ்வகையினோடு இத் தொடை மூவாயிரத் தெண்ணூற்று முப்பத்தைந்து வகையாம்.

பொழிப்புத் தொடையிற் கிளையெழுத்து வாராது.

மோனைப் பொழிப்புத் தொண்ணூற்றுமூன்று, எதுகைப்பொழிப்பு இருநூற்றிருபத்தொன்பது, முரண்பொழிப்பு இரண்டு, இயைபுபொழிப்பு நூற்றெண்பத்திரண்டு; அளபெடையுள் ஒற்றளபெடை பொழிப்பாகி வாராமையின் உயிரளபெடைப் பொழிப்பு நூற்று நாற்பத்தெட்டு. இவை யெல்லாங் கூட்டப் பொழிப்புத்தொடை அறுநூற்றைம்பத்து நாலுவகையாம்.

ஒரூஉத்தொடையும் இவ்வகையினால் அறுநூற்றைம்பத்துநாலாம்.

இனிச் செந்தொடையாமாறு மொழிமுதலாகும் எழுத்துத் தொண்ணூற்று மூன்று. மற்றையடியினு மொத்து வருங்கால் அவை மோனையுள் அடங்குதலின் அவற்றை ஒழித்து ஏனையெழுத்துத் தொண்ணூற்றிரண்டோடும் உறழ எண்ணாயிரத்தைந்நூற்றைம்பத்தாறு வகையாம்.

இவ்வகையினால் தொடைவிகற்பம் பதின்மூவாயிரத் தறுநூற்றுத் தொண்ணூற்றொன்பதாம். (97)

பேராசிரியர்

413. மெய்பெறு மரபிற் .... னோரே.

இது, மேற்கூறிய தொடையுள் ஒருசீரான் வரையறையுடைமையின் அவற்றை அடிக்கட் போலத் தொகுத்தோதுகின்றது; விரித்ததூஉந்

தொகுத்ததூஉமாம்; என்னை? கட்டளையடியொடு பட்ட தொடை விகற்பம் முற்கூறிய சூத்திரங்களுட் பெற்றமையானும் அவற்றையும் ஈண்டுத் தொகுத்துக் கூறினமையானுமென்பது.

(இ-ள்) மெய்பெறு மரபில் தொடைவகை கேட்டார்க்குத் தொடைப்பாடு வெளிப்படும் இலக்கணத்தவாகிய தொடைக்கூறுபாடு; 'தாமே' என்பது பிரித்துக் கூறியவாறு; ஐயீராயிரத்து ஆறு ஐஞ்ஞூற் றொடு - பதின்மூவாயிரத்தோடு; தொண்டு தலையிட்ட பத்துக்குறை எழுநூற்றொன்பஃது - எழுநூற்றெட்டு என்றவாறு.

தொடைப்பகுதி பதின்மூவாயிரத்தெழுநூற்றெட்டு (13708) என்று சொல்லுப ஆசிரியரென்பது இதன் பொழிப்பு.

'மெய்பெறு மரபின்' இவை யெனவே விளங்கத் தோன்றாதனவுந் தொடையுளவென்பதாம்; அவை,

இணை கூழை மேற்கதுவாய் கீழ்க்கதுவாய்
கடையிணை கடைக்கூழை இடைப்புணர்பின்

எனச் சொல்லுப. பிறவும் வேறுபடுத்துக் கூறுவார் கூறுவனவெல்லாம் இதனானே தழீஇக் கொள்ளப்படுமென்பது.

'தொடைவகை' என்பது கட்டளையடியொடு வருமெனப்பட்ட முப்பத்துமூன்று தொடையும் பிறவாற்றான் வருமெனப்பட்ட இரண்டடி யெதுகையென இருகூற்றனவு மென்றவாறு.

'ஐயீ ராயிரத் தாறைஞ் ஞூற்றொடு' என்பது, உம்மைத்தொகை. 'தொண்டு தலையிட்ட' என்ப்து, ஒன்பானையகப்படும் மொழியாகவுடைய வென்றவாறு. அது செய்தவென்னும் பெயரெச்சமாகலின் எழுநூற்றொன்ப தென்னும் பெயர் கொண்டு முடியும் எனவே எழுநூற் றொருபத்தெட்டா மென்றஞ்சிப் பத்துக்குறை எழுநூற்றொன்பது என்றானென்பது; எனவே, ஆண்டு நின்ற ஒன்பானொடுந் தொண்டு தலையிட்ட எனப்பட்ட ஒன்பானையுங் கூட்ட எழுநூற்றெட்டாயின வென்றவாறு; அஃதே கருத்தெனின்,

"பதின்மூ வாயிரத் தெழுநூற் றெட்டென
மொழியப் பட்டன தொடைதெரி வகையே"

என அமையும்; இவ்வாறு அரிதும் பெரிதுமாகச் சூத்திரஞ்செய்த தென்னையெனின், அங்ஙனமே அதனை ஞாபகப்படச் செய்தான் ஆசிரியன் (665) ஒரு காரணம் நோக்கி. என்னை? இத் தொடைகளை அடியொடு மாறுங்காற் குறைக்கப்படுவன உளவென்பதூஉம், அவை தொண்டு தலையிட்ட ஐந்துபத் தளவும் ஆறுமுதலாகக் களையப்படு மென்பதூஉங் கோடற்கென்பது. 'ஒன்பது' என்று இருகாற் சொல்லிய வதனான் அங்ஙனங் குறைக்கப்படு நிலங்கள் ஒன்பது பகுதியவாமெனக் கொள்க. அவையாவன:

ஐம்பத்தொன்பது ஐம்பத்தாறு நாற்பத்தைந்து
நாற்பது முப்பத்தொன்பது முப்பத்திரண்டு
முப்பத்தொன்று இருபத்துமூன்று ஆறு

என ஒன்பது பகுதியாற் குறைவனவாயின. இங்ஙனம் ஐம்பத்தொன்பது நிலத்தினவாகலால் 'தொண்டுதலை யிட்ட பத்து' என்றானெனவும், ஒன்பதுந் தொண்டுமென இருகாற் கூறியவதனான் அங்ஙனங் களையுநிலம் ஒன்பஃதெனவுங் கொள்ளப்பட்டது.

"பாய பதினா யிரமென் றிலனையீ
ராயிர மென்றா னதனானுந் - தூயதன்றிப்
பத்துங் குறைத்த பயத்தானு மொன்பதென்
றுய்த்துக் கொளற்பாற் றொருங்கு"

எனவும்,

"ஓரொன்ப தேற்றியு மோரென்ப திட்டுரைத்து
மீரொன் பதுமிகுத்தா னீங்கிவற்று - ளோரொன்ப
தைம்பான்மே லேறவு மைந்தந்த மாய்க்குறைத
லொன்பான் வகைத்தென்று மோர்ந்து"

எனவும்,

"ஆறென்றான் மூவா யிரமென்னா தாங்கதனா
லாறந்த மாங்குறையு மாறு"

எனவும்,

"ஐம்பத்தொன் பானேழெட் டையொன் பதுநாற்பஃ
தொன்பா னுடைமுப்பத் தெண்ணான்கு முப்பத்தொன்
றென்பா லிருபத்து மூன்றா றெனக்குறைப்ப
வொன்பான் பகுதி யுள"

எனவும் இவ் வுரைச்சூத்திரங்களான் அவை குறைக்கப்படுமாறறிந்து குறைக்க. இவற்றுள் ஒன்பது நிலங் களையப்படும். மோனை முதலாயின தொடை ஐந்தற்கும் ஓரெழுத்துத் தேமா உரித்தென்றிராயின், அதனை நுந்தை நுந்தையென்று இருகால் தொடுக்க வேண்டும்; தொடுத்தவழி, அடிமோனையுந் தலையாகெதுகையும் அடியெதுகையும் மூன்றாமெழுத் தொன்றெதுகையுமென நான்குதொடை பெறப்படுமாகலின், அவற்றுள் அதனை என்ன தொடையென்றுமோவெனின், செய்யுள் செய்த ஆசிரியன் பலதொடைப் படச்செய்து வைத்தவழி, அவற்றுட் சில களைந்து ஒன்று கோடற்குக் காரணமின்மையினான் அவையனைத்துங் கோடுமென்பது; அல்லாதார் முதனின்ற தொடையே கொண்டொழிக வென்ப; அது குற்றம்; என்னை?

"செங்காற் பைந்தினை யிதண மேறிப்
பைங்காற் சிறுகிளி கடிவோ டந்தை"

என்றவழி, எதுகையும் முரணும் வந்தவழி இவற்றுண் முதற்கண் இன்ன தொடையென்று துணியலாகாமையின் அது நிரம்பாதாகலான் அது வந்த தொடையெல்லாவற்றானும் விரித்துத் தொடை கூறுதல் அமையுமென்பது;

என்போலவோவெனின் எழுத்தும் அசையுஞ் சீரும் அடியும் அங்ஙனம் முதல் வந்ததனான் எண்ணுந் தொகையும் பெயருங் கொடுத்து வழங்காதவாறு போலவென்பது; அல்லதூஉம், தொடைகளெல்லாந் தம்மை யுணரும் மாத்திரையானே தனித்தனி வருதல் இலக்கணமென்பதூஉம் இல்லையென உணர்க; என்னை? பல உறுப்புக் கொண்டது ஓர் செய்யு ளென்றமையின்.

இனி, ஓரெழுத்துத் தேமா முதற்கணிற்ப அடியிறுதிக்கண்ணும் இயைபு வருதலின் அச் சீர் நின்றுறழ்ந்த அடிக்கண் இயைபு வருதற்கு ஆராய்ச்சியின்றென்பது. ஒழிந்த தொடைக்குரிய வல்லவெனப்பட்ட சீருள் அவை வாராமையும், உரியவெனப்பட்டவற்றுள் அவை வருமாறும் முறையிற்கொண்டு உதாரணங் கண்டுகொள்க.

இனி, இக்காலத்துள்ள ஆசிரியருள் ஒரு சாரார்,

"தொண்டுதலை யிட்ட பத்துக்குறை யெழுநூற் றொன்றும்"

எனப் பாடந்திரிப்பாரும், இன்னொரு சாரார்,

"எழுநூற்றொன்றும்" எனப் பாடந்திரிப்பாரும் உளர்.

ஒருபகுதியார்: 'ஒன்றும்' என்பது முற்றுவினை யென்ப:

"மெய்பெறு மரபிற் றொடைவகை ....
பத்துக்குறை யெழுநூறு"

என்னும் 'எண்ணினோடு ஒன்றும்' எனக் கூட்டுப. பதின்மூவாயிரத் தறுநூற்றுத் தொண்ணூற்றொன்பது (13699) என்பது அவர் கருத்து. ஒன்று மென்பதனை எண்ணுப்பெயர் முற்றும்மை யடுத்த தென்பாரும் அதுவே கூறுப; அவரறியார்; அவ்வாறு சூத்திரஞ் செய்வது ஆசிரியர் கருத்தன்று; அல்லதூஉம்,

"ஒன்பஃ தென்ப வுணர்ந்திசி னோரே"

என்பது பழம்பாடமாகலானும் அஃதமையாதென்பது; அவ்வாறு கொள்வார்க்குத் தொடை பதின்மூவாயிரத்தறுநூற்றுத் தொண்ணூற் றொன்ப(13699)தாகலும் பிழைக்குமென மறுக்க; என்னை? அறுநூற் றிருபத்தைந் தடியினையுந் தமக்குப் பொருந்துமாற்றான் இருபத்திரண்டு தொடையொடும் பெருக்குங்கால் அவர்க்கும் ஓரடிக்கண்ணே தொடை கோடல் வேண்டுமாகலானும், அங்ஙனங் கொள்ள இரட்டைத்தொடை முதலாயின அறுநூற்றிருபத்தைந்து ஆகாமையானு மென்பது. (101)

நச்சினார்க்கினியர்

101. மெய்பெறு மரபின் .... னோரே.

இது, வரையறைப்படுங் கட்டளையடிக்குத் தொடைத்தொகை கூறுகின்றது; எனவே சீர்வகைக்குத் தொடை வரையறையின்று எ-று.

(இ-ள்) மெய்பெறு மரபின் தொடைவகை தாமே - கேட்டார்க்குத் தொடைப்பாடு வெளிப்படுக்கும் இலக்கணத்தவாகிய தொடைக் கூறு பாடுதாம்; ஐயீராயிரத்து ஆறைஞ் ஞூற்றொடு - பதின்மூவாயிரததோடே தொண்டு தலையிட்ட பத்துக் குறை எழுநூற்று ஒன்பஃதென்ப - ஒன்பது தலையிலே வைத்த பத்துக் குறைந்த எழுநூற்றொன்பது என்று கூறுவர்; என்பது ஆறாயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்றொன்று என்று கூறுவர்; உணர்ந்திசினோரே - கட்டளையின் தொடைப்பகுதி அறிந்தோர் எ-று.

பதின்மூவாயிரத்தோடே ஆறாயிரத்திருநூற்றுத் தொண்ணூற் றொன்றெனவே, தொகை பத்தொன்பதினாயிரத் திருநூற்றுத் தொண்ணூற் றொன்றாயிற்று. ஆக, 19291.

பத்துக்குறை யெழுநூற்றொன்பதாவது அறுநூற்றுத் தொண்ணூற் றொன்பது. இதனை ஒன்பதனோடு பெருக்க ஆறாயிரத் திருநூற்றுத் தொண்ணூற்றொன்றாயிற்று.

இதனை ஆறாயிரத் திருநூற்றுத் தொண்ணூற்றொன்று என்று விளங்கக் கூறாது ஒருகாற் குறைத்து அதன்மே லொருகா லேற்றி ஞாபகப்படச் சூத்திரஞ் செய்தது ஒரு பயனோக்கி; அது கட்டளையடி அறுநூற்றிருபத்தைந்துந் தொடைகொள்ளுங்கால் ஐம்பத்தொன்பது வழுவுள அவை களையப்படுமென்றற்கு. அவற்றுள் அடிமோனைத் தொடை மூன்று பாவினும் எழுபத்தெட்டுச் சீரானும் வருங்கால் ஈரடிக் கூட்டத்துத் தளைவழுக் களைய வேண்டும்; அவ்வழி அகவற்கு நாற்பத்தொன்றும் வெள்ளைக்குப் பதினெட்டுமாக ஐம்பத்தொன்பது களையப்படும்.

அவை களையுமாறு:

> நுந்தை வண்டு தேமா மின்னு ஞாயிறு போதுபூ போரேறு பாதிரி
> மேவுசீர் நன்னாணு பூமருது நீடுகொடி காருருமு நாணுத்தளை

என இந் நேராதி பதினான்கும் அகவற்குப் பெருகிய நிலத்திவ் விரண்டடி தளை வழுப்படும்.

> வரகு புளிமா அரவு வலியது கடியாறு விறகுதீ கணவிரி
> உரறுபுலி பெருநாணு உருமுத்தீ மழகளிறு விரவுகொடி நரையுருமு

என இந் நிரையாதி பதின்மூன்றுஞ் சுருங்கிய நிலத்து ஒரோவோரடி தளை வழுப்படும்.

ஆக அகவற்கு நாற்பத்தொரு தளை வழுவாயின.

இனி வெள்ளைக்கு முற்கூறிய சீர்களுள் ஆசிரியவுரிச்சீர் நான்கு நீக்கி வெண்சீர் நான்குங் கூட்ட இருபத்தேழாம். இதில் நேராதி பதினான்குஞ் சுருங்கிய நிலத்து ஒரோவொன்று தளை வழுப்படும். நிரையாதியில் வரகு, கடியாறு, விறகுதீ, வலியது என்னு நான்கும் பெருகிய நிலத்து ஒரோவொன்று தளை வழுப்படும்.

ஆக வெள்ளைக்குப் பதினெட்டு வழுவாயிற்று. ஆகத் தளைவழு ஐம்பத்தொன்பதாயிற்று.

அவை வருமாறு: வண்டு காருருமு நளிமுழவு நளிமுழவு என நிற்பக் கண்டு எனத் தொடைவருங்கால் வெண்டளையாய் வழுவாம். பதினான்கெழுத்திற்கும் இவ்வாறே கூறிக்கொள்க.

வரகு நாகு காம்பு வண்டு என நிற்பக் குரவு எனத் தொடை வருங்கால் வெண்டளையாய் வழுவாம்.

இனி வண்டு வரகு வரகு வரகு என நிற்பக் கண்டு எனத் தொடை வருங்கால் ஆசிரியத்தளையாய் வழுவாம். வரகு நளிமுழவு காருருமுப் பாதிரி என நிற்பக் குரவு எனத் தொடை வருங்கால் ஆசிரியத் தளையாய் வழுவாம். இவ்வாறே எல்லாவற்றோடும் ஒட்டி வழுக்காண்க.

கலிக்குத் தளைவழுவின்று.

நுந்தை மொழிமுதற் குற்றுகரமாதலின் இதற்கொத்த மொழிமுதற் குற்றுகரமின்மையிற் கட்டளைக்குத் தொடைகோடல் சிறப்பின்று. இச் சிறப்பின்மை கருதாது தொடைகோடலும் ஒன்று.

நுந்தைக்கு இருபதடி கழித்து அறுநூற்றைந்தடியுள் ஐம்பத்தாறு தளைவழுக் களைந்து ஒழிந்தவடி ஐந்நூற்று நாற்பத்தொன்பதனாற் பெற்ற அடிமோனைத்தொடை ஐந்நூற்று நாற்பத்தொன்பது(549). நுந்தையொழிந்த நேர் பதின்மூன்றுங் குற்றெழுத்து ஒற்றடுத்த நேரசையும் நெட்டெழுத்துத் தனியே வந்த நேரசையுமாக உதாரணங் காட்டிற்றேனும் அவற்றிற்குரிய மூவகை யசையானும் வரும் உதாரணங்களையும் கூறிக் கொண்டு தொடைகொள்க.

ஒழிந்தனவற்றிற்கும் இவ்வாறே வேறுபடுமாறு அறிந்து சொற்களை வருவித்துத் தொடைகொள்க.

"ஒன்றுதலை யிட்ட வையைந்து சீரும்
வழுவா யகவல் தொடைகொளல் கூறி
னேரா திச்சீர் பதின்மூன் றற்குத்
தத்தமக் குரிய பன்னீ ரடிக்குண்
முடிவில் வருமீ ரடிக ளெல்லாம்
பின்வரு மடியின் முதற்சீ ரொடு
வெண்டளை யாகித் தளைவழூஉப் படுதலு
நிரையா திச்சீர் பதின்மூன் றற்குந்
தத்தமக் குரிய பன்னீ ரடிகளுண்
முதல்வரு மொரோவோ ரடிக ளெல்லாம்
பின்வரு மடியின் முதற்சீ ரோடு
வெண்டளை யாகி முற்கூறி யாங்குத்
தளைவழூஉப் படுதலு
முடையவிவ் வடித்தொகை முப்பத் தொன்பதுந்
தொடைகோ ளின்றெனத் துணிந்தனர் புலவர்."

"ஒன்றுதலை யிட்ட வையைந்து சீரும்
வழுவா வெள்ளைத் தொடைகொளல் கூறி
னேரா திச்சீர் பதின்மூன் றானு
முறழு நிலங்களுட் பெற்ற வடிகளுண்
முதல்வரு மொரோவோ ரடிக ளெல்லாம்
பின்வரு மடியின் முதற்சீர் தம்மோ
டாசிரி யத்தளை தட்டுவழுப் படுதலும்
வரகு கடியாறு விறகுதீ வலியதெனு
நிரையாதி யாகிய சீர்கள் நான்கா
னுறழ மடிகளு ளிறுதி யடிகளு
மங்ஙனந் தளைவழுப் படுதலு முடைமையி
னிவற்றான் வந்த வடிபதி னேழுந்
தொடைக்கியை பின்றெனத் துணிந்தனர் புலவர்."

"வழூஉக் களைந்த முதற்பா விரண்டிற்குங்
கலிக்கும் வரூஉ மடிமோ னைத்தொடை
யைஞ்ஞூற்று நாற்பத் தொன்ப தாகும்."

"அவை பகுக்குங்கால்
அகவற் கிருநூற் றெழுபத்து மூன்றும்
வெள்ளைக் கொருநூற் றைம்பத் தாறும்
கலிக்கு நூற்றிரு பஃது மாகும்."

"வண்டு தேமா மின்னு ஞாயிறு
போதுபூ போரேறு பாதிரி மேவுசீர்
நன்னாணுப் பூமருது நீடுகொடி காருருமு
நாணுத் தளையிவை யொரோவொன்று பத்தாக
வகவல் பெற்ற விணைமோ னைத்தொடை
யீரைம் பஃதொடு முப்ப தாகும்."

நேராதி பதின்மூன்றுக்குத் தொடை 130.

"வரகு புளிமா வரவு வலியது
கடியாறு விறகுதீக் கணவிரி யுரறுபுலி
பெருவேணு உருமுத்தீ மழகளிறு விரவுகொடி
நரையுருமு ஒரோவொன்று பதினொன் றாக
வகவல் பெற்ற விணைமோ னைத்தொடை
நூற்று நாற்பத்து மூன்றென நுவல்வர்."

நிரையாதி பதின்மூன்றற்குத் தொடை 143.

ஆக அகவற்கு இணைமோனைத் தொடை 273.

"வண்டு ஞாயிறு போதுபூப் போரே
றென்றிவை யொரோவொன் றெவ்வே ழாகத்
தேமா மின்னுப் பாதிரி மேவுசீர்
நன்னாணுப் பூமருது மாசெல் வாயிவை
யொரோவொன் றாகக் காருருமு மாவருவா

யொரோவொன் றைந்தாக வெள்ளைக் கிணைமோனை
யெண்ப தாக வியலு மென்ப"

நேராதி பதின்மூன்றுக்குத் தொடை 80.

"வரகு வலியது கடியாறு விறகுதீக்
கணவிரி பெருவேணுப் புலிசெல்வாய் மழகளிறு
உருமுத்தீப் புளிமா விவையவ் வாறு
நரையுருமுப் புலிவருவா
யொரோவொன் றைந்தாக வெள்ளை பெற்ற
விணைமோ னைத்தொடை யெழுபத் தாறாம்."

நிரையாதிச்சீர் பதின்மூன்றற்குத் தொடை 76.

ஆக வெள்ளைக்கு இணைமோனைத் தொடை 156.

"நேராதிச் சீரானு நிரையாதிச் சீரானு
மொரோவொன் றைந்தாகக் கலிக்குவரு மிணைமோனை
நூற்றிரு பஃதா நுவன்றனர் புலவர்."

ஆகக் கலிக்கு இணைமோனைத் தொடை 120.

"மூவகைப் பாவிற்கு மொழிந்த விணைமோனை
ஐஞ்ஞூற்று நாற்பத் தொன்ப தாகும்".

ஆகத் தொடை 549.

"நேராதி யாகிய சீர்பதின் மூன்றா
னொரோவொன்று பத்தாக வகவல் பெற்ற
பொழிப்புமோ னைத்தொடை நூற்றுமுப் பஃதே."

நேராதி பதின்மூன்றுக்குத் தொடை 130.

"நிரையாதி யாகிய சீர்பதின் மூன்றா
னொரோவொன்று பத்து மொன்று மாக
வகவல் பெற்ற பொழிப்புமோ னைத்தொடை
நூற்று நாற்பத்து மூன்றென நுவல்ப."

நிரையாதி பதின்மூன்றுக்குத் தொடை 143.

ஆக அகவற்குப் பொழிப்புமோனைத் தொடை 273.

"வண்டு ஞாயிறு போதுபூப் போரே
றென்றிவை யொரோவொன் றெவ்வே ழாகத்
தேமா மின்னுப் பாதிரி மேவுசீர்
நன்னாணுப் பூமருது மாசெல் வாயிவை
யொரோவொன் றிருமூன் றாகக் காருருமு
மாவரு வாயிவை யொரோவொன் றைந்தாக
வெள்ளை பெற்ற பொழிப்புமோ னைத்தொடை
யெண்ப தாக வியம்பினர் புலவர்."

நேராதி பதின்மூன்றற்குத் தொடை 80.

"வரகு வலியது கடியாறு விறகுதீக்
கணவிரி பெருவேணுப் புலிசெல்வாய் மழகளிறு
உருமுத் தீப்புளி மாவிவை யொரோவொன்
றிருமூன் றாக வியைந்த பின்னர்
நரையுருமுப் புலிவருவா யொரோவொன் றைந்தாக
வெள்ளை பெற்ற பொழிப்புமோ னைத்தொடை
யெழுபத் தாறென வியம்பினர் புலவர்."

நிரையாதி பதின்மூன்றற்குத் தொடை 76.

ஆக வெள்ளைக்குப் பொழிப்புமோனைத் தொடை 156.

"நேரு நிரையு மாகிய சீர்க
ளிருபத்து நான்கா னொரோவொன் றைந்தாகத்
துள்ளல் பெற்ற பொழிப்புமோ னைத்தொடை
யீரைம் பஃது மிருபது மாகும்."

ஆகக் கலிக்குப் பொழிப்புமோனை 120.

"மூவகைப் பாவின் பொழிப்புமோ னைத்தொடை
ஐந்நூற்று நாற்பத் தொன்ப தாகும்."

ஆகத் தொடை 549.

"நேராதி யாகிய சீர்பதின் மூன்றா
னொரோஒ வொன்றுபத் தாக வகவல்
பெற்றவொரூஉ மோனைத்தொடை நூற்றுமுப் பஃதே."

நேராதி பதின்மூன்றுக்குத் தொடை 130.

"நிரையாதி யாகிய சீர்பதின் மூன்றா
னொரோவொன் றுபத்து மொன்று மாக
வகவல் பெற்ற வொரூஉமோ னைத்தொடை
நூற்று நாற்பத்து மூன்றென நுவல்வர்."

நிரையாதி பதின்மூன்றுக்குத் தொடை 143.

ஆக அகவற்கு ஒரூஉமோனைத் தொடை 273.

"வண்டு ஞாயிறு போதுபூப் போரே
றென்றிவை யொவ்வொன் றெவ்வே ழாகத்
தேமா மின்னுப் பாதிரி மேவுசீர்
நன்னாணுப் பூமருது மாசெல் வாயிவை
யொரோவொன் றிருமூன் றாகக் காருருமு
மாவரு வாயிவை யொரோவொன் றைந்தாக
வெள்ளை பெற்ற வொரூஉமோ னைத்தொடை
யெண்ணொரு பஃது மெய்து மென்ப."

நேராதி பதின்மூன்றுக்குத் தொடை 80.

"வரகு வலியது கடியாறு விறகுதீக்
கணவிரி பெருவேணுப் புலிசெல்வாய் மழகளிறு
உருமுத் தீப்புளி மாவிவை யொரோவொன்
றிருமூன் றாக வியன்ற பின்னர்

நரையுருமுப் புலிவருவா யிவையொரொவொன் றைந்தாக
வெள்ளை பெற்ற வொரூஉமோ னைத்தொடை.
யேழொரு பஃது மாறு மாகும்."

நிரையாதி பதின்மூன்றுக்குத் தொடை 76.

ஆக வெள்ளைக்கு ஒரூஉமோனைத் தொடை 156.

"கலிக்கு வருஞ்சீர் பத்து நான்கு
மொரோவொன் றைந்தாகப் பெற்ற வொரூஉ மோனை
யீரைம் பஃது மிருபது மாகும்."

ஆகக் கலிக்கு 120.

"மூவகைப் பாவிற்கு மொழிந்த வொரூஉ மோனை
ஐந்நூற்று நாற்பத் தொன்ப தாகும்."

ஆகத் தொடை 549.

"நேர்பதின் மூன்றான் ஒரோவொன்று பத்தாக
வகவல் பெற்ற கூழைமோ னைத்தொடை
நூற்றுமுப் பஃதென நுவன்றனர் புலவர்." **(130)**

"நிரையாதி யாகிய சீர்பதின் மூன்றா
னொரோவொன்று பத்து மொன்று மாக
வகவல் பெற்ற கூழைமோ னைத்தொடை
நூற்று நாற்பத்து மூன்றென நுவல்வர்." **(143)**

ஆக அகவற்குக் கூழைமோனைத் தொடை 273.

"வண்டு ஞாயிறு போதுபூப் போரேறு
எனவிவை ஒரோவொன் றெவ்வே ழாகத்
தேமா மின்னுப் பாதிரி மேவுசீர்
நன்னாணுப் பூமருது மாசெல் வாயிவை
யொரோவொன் றாகக் காருருமு மாவருவா
யொரோவொன் றைந்தாக வெள்ளை பெற்ற
கூழைமோ னைத்தொடை யெண்பஃ தாகும்." **(80)**

"வரகு வலியது கடியாறு விறகுதீக்
கணவிரி பெருவேணுப் புலிசெல்வாய் மழகளிறு
உருமுத்தீப் புளிமா விவையொ ரோவொன்
றீரா றாக வியன்ற பின்னர்
நரையுருமுப் புலிவருவா யொரோவொன் றைந்தாக
வெள்ளை பெற்ற கூழைமோ னைத்தொடை
யெழுபத் தாறா வியலு மென்ப." **(76)**

ஆக வெள்ளைக்குக் கூழைமோனை 156.

"நேரு நிரையு மாகிய சீர்க
ளிருபத்து நான்கா னொரோவொன் றைந்தாகத்
துள்ளல் பெற்ற கூழைமோ னைத்தொடை
யீரைம் பஃதும் இருபது மாகும்." **(120)**

"மூவகைப் பாவிற்கு கூழைமோ னைத்தொடை
ஐஞ்ஞூற்று நாற்பத் தொன்ப தாகும் (549)

"நேர்பதின் மூன்றா னொரோவொன்று பத்தாக
வகவற் குவரு மேற்கதுவாய் மோனை
நூற்று முப்பஃ தெனநுவன் றனரே." (130)

"நிரையா கியசீர் பதின்மூன் றான்ஒரோ
வொன்று பத்து மொன்று மாக
வகவல் பெற்ற மேற்கதுவாய் மோனை
நூற்று நாற்பத்து மூன்றென நுவல்வர்." (143)

ஆக அகவற்கு மேற்கதுவாய் மோனை 273.

"வண்டு ஞாயிறு போதுபூப் போரேறு
என்றிவை யொரோவொன் றெவ்வே ழாகத்
தேமா மின்னுப் பாதிரி மேவுசேர்
யொரோவொன் றாறாகக் காருருமு மாவருவா
யொரோவொன் றைந்தாக வெள்ளைக்கு மேற்கதுவாய்
மோனை யெண்பஃ தாகு மென்ப." (80)

"வரகு வலியது கடியாறு விறகுதீக்
கணவிரி பெருவேணுப் புலிசெல்வாய் மழகளிறு
உருமுத்தீப் புளிமா விவையொ ரோவொன்
றீரா றாக வியன்ற பின்னர்
நரையுருமுப் புலிவருவா யொரோவொன் றைந்தாக
வெள்ளை பெற்ற மேற்கதுவாய் மோனை
யேழொரு பஃதும் ஆறு மாகும்." (76)

ஆக வெள்ளைக்கு மேற்கதுவாய் மோனை 156.

"நேரு நிரையு மாகிய சீர்க
ளிருபத்து நான்கா னொரோவொன் றைந்தாகத்
துள்ளல் பெற்ற மேற்கதுவாய் மோனை
யீரைம் பஃதும் இருபது மாகும்." (120)

"மூவகைப் பாவிற்கு முற்றுமோ னைத்தொடை,
ஐஞ்ஞூற்று நாற்பத் தொன்ப தாகும்." (549)

"எண்வகை மோனைக்கு மியன்ற பெருந்தொகை
முந்நூற்றுத் தொண்ணூற் றிரண்டு தலையிட்ட,
நாலா யிரமா நவின்றனர் புலவர்."

ஆக மோனைத்தொடை 4392.

இனி எதுகை வருமாறு:

"அகவற் கிருநூற் றெழுபத்து மூன்றும்
வெள்ளைக் கொருநூற் றைம்பத் தாறுங்
கலிக்கு நூற்றிரு பஃது மாக

"மூவகைப் பாவிற்குந் தலையா கெதுகை
ஐஞ்ஞூற்று நாற்பத் தொன்ப தாகும்." (549)

"அடியெது கைத்தொடை கொள்ளுங் காலு
மிம்மூ வகையா னதுபெ றுந்தொகை
யைஞ்ஞூற்று நாற்பத் தொன்ப தாகும்." (549)

"வண்டு தேமா மின்னிவை யொரோவொன்
றீரைந் தெய்திய வினையெது கைதா
முப்ப தாக மொழிந்தன ரகவற்கு." (30)

"வலியது கடியாறு விறகுதீக் கணவிரி
யுரறுபுலி பெருநாணு வுருமுத்தீ மழகளிறு
விரவுகொடி நரையுருமு விவையொரோ வொன்றற்
கொன்றுட னீரைந்தா வியன்றஇணை யெதுகை
நூற்றொரு பஃதாக நுவன்றன ரகவற்கு." (110)

ஆக அகவற்கு இணையெதுகை 140.

"ஞாயிறு போதுபூ வெட்டுமுத லேழும்
போரேறு நன்னாணுப் பாதிரி பூமருது
மாசெல்வா யொன்பான் முதலா மாறு
மேவுசீர் காருருமு மாவரு வாயிவை
யீரைந்து தொட்டே யீரே ழெய்த
வெள்ளை பெற்ற இணையெது கைத்தொகை
யைம்பத் தொன்ப தாகு மென்ப." (59)

"வரகிரு நான்கு புளிமா வொன்பான்
முதலா வொரோவொன் றிருமூன் றாக
வெள்ளைக் கிணையெதுகை மூவா றாகும்." (18)

ஆக வெள்ளைக்கு இணையெதுகை 77.

"நேர்நிரை யீற்றாற் கலிக்கிணை யெதுகை
யிருமுப் பஃதாக வியலு மென்ப." (60)

"மூவகைப் பாவிற்கு மொழிந்தஇணை யெதுகை
யிருநூற் றெழுபத் தேழா கும்மே." (277)

"வண்டு நான்கு மின்னுத் தேமா
வைந்து ஞாயிறு போதுபூப் போரே
றாறு பாதிரி மேவுசீர் நன்னாணுப்
பூமருது நீடுகொடி யேழு காருருமு
நாணுத்தளை யெட்டு முதலா வந்தவவை
யொரோவொன் றெவ்வேழ் நிலம்பெற வகவற்குத்
தொக்க பொழிப்பெதுகை தொண்ணூற் றொன்றே." (91)

"வரகிரு நான்கு புளிமாவர வொன்பான்
வலியது விறகுதீக் கடியாறு பத்துக்
கணவிரி யுருமுத்தீப் பெருநாணு வுரறுபுலி
மழகளிறு பதினொன்று நரையுருமு விரவுகொடி

யீராறு முதலா வந்தவை யொரோவொன்
றொன்பது நிலம்பெற வகவற்குப் பொழிப்பெதுகை
நூற்றோ டொருபத் தேழென நுவல்ப." (117)

ஆக அகவற்குப் பொழிப்பெதுகை 208.

"வண்டு ஞாயிறு போதுபூப் போரே
றெட்டு முதலா வேழுந் தேமா
மின்னுப் பாதிரி மேவுசீர் நன்னாணுப்
பூமருது மாசெல்வா யொன்பான்முத லாறும்
காருருமு மாவருவாய் பத்துமுத லைந்து
மாக வெள்ளைக்கு வந்தபொழிப் பெதுகை
யெண்ணொரு பஃதே யெய்து மென்ப." (80)

"வரகு வலியது கடியாறு விறகுதீ
யெட்டுக் கணவிரி பெருநாணுப் புலிசெல்வாய்
மழகளி றுருமுத்தீப் புளிமா விவையொன்பது
நரையுருமுப் புலிவருவாய் பத்து முதலா
வந்த வவையொரோ வொன்றைந் தாக
வெள்ளை பெற்ற பொழிப்பெது கைத்தொடை
யாறொரு பஃது மைந்து மாகும்." (65)

ஆக வெள்ளைக்குப் பொழிப்பெதுகை 65.

"வலியது விறகுதீக் கடியா றெனுமிவை
யீரேழ் தொட்டுப் பதினெட் டளவுங்
கணவிரி பெருநாணு வுருமுத்தீ மழகளிறு
புலிசெல்வா யுரறுபுலிப் பதினைந்து முதலாப்
பத்தொன் பானள வுயரவு நரையுருமு
விரவுகொடிப் புலிவருவாய் பதினாறு முதலா
விருபதின் காறு முயரவும் வருதலில்
துள்ளல் பெற்ற பொழிப்பெது கைதாம்
அறுபஃ தாக வரைந்தனர் புலவர்." (60)

"மூவகைப் பாவிற்கு மொழிந்த பொழிப்பெதுகை
நானூற் றொருபத்து மூன்றென நவில்ப." (413)

"நேர்பதின் மூன்றா னகவற் கொரூஉவெதுகை
வண்டு நான்கு மின்னுத் தேமா
வைந்து ஞாயிறு போதுபூப் போரே
றாறு பாதிரி மேவுசீர் நன்னாணுப்
பூமருது நீடுகொடி யேழு காருருமு
நாணுத்தளை யெட்டு முதலா வொரோவொன்
றெவ்வே றாக வியன்ற தொகைதா
மேழொரு பஃதோ டிருபத் தொன்றே." (91)

"நிரைபதின் மூன்றா னகவற்கொரூஉ வெதுகை
வரகிரு நான்கு புளிமா வரவொன்பான்
வலியது கடியாறு விறகுதீப் பத்துக்
கணவிரி யுரறுபுலி பெருநாணு வுருமுத்தீ
மழகளிறு பதினொன்று விரவுகொடி நரையுருமு
வீராறு முதலா வொரோவொன் றொன்பா
னாகத் தொகைநூற் றொருபத் தேழே." (117)

ஆக அகவற் கொரூஉவெதுகை 208.

"நேர்பதின் மூன்றான் வெள்ளைக்கொரூஉ வெதுகை
வண்டு ஞாயிறு போதுபூப் போரே
றெட்டு முதலா வேழுந் தேமா
மின்னுப் பாதிரி மேவுசீர் நன்னாணுப்
பூமருது மாசெல் வாயிவை யொன்பான்
முதலா வொரோவொன் றாறுங் காருருமு
மாவரு வாய்பத்து முதலாக வொரோவொன்
றைந்து மாக வறைந்த தொகைதா
மெண்ணொரு பஃதே யெய்து மென்ப." (80)

"நிரைபதின் மூன்றான் வெள்ளைக்கொரூஉ வெதுகை
வரகு வலியது கடியாறு விறகுதீ
யெட்டுக் கணவிரி பெருநாணு வுருமுத்தீப்
புலிசெல்வாய் மழகளிறு புளிமாவிவை யொன்பது
நரையுருமுப் புலிவருவாய் பத்துமுத லாக
வொரோவொன் றைந்து நிலம்பெற்
றாறொரு பஃது மைந்து மாகும்." (65)

ஆக வெள்ளைக்கு ஒரூஉவெதுகை 145.

"நேரீ ராறாற் கலிக்கொரூஉ வெதுகை
பெருகிய நிலத்தி லொரோவொன்று களையப்
பெறுந்தொகை நாற்பத் தெட்டுப் பின்னர்
நிரையீ ராறாற் சுருங்கிய நிலத்திற்
கொரோவொன்று களையப் பெறுந்தொகை யஃதா
மிருவகைத் தொகையுந் தொண்ணூற் றாறே." (96)

"மூவகைப் பாவிற்கு மொழிந்தவொரூஉ வெதுகை
நானூற்று நாற்பத் தொன்ப தாகும்." (449)

"வண்டு தேமா மின்னிவை மூன்று
மொரோவொன்று சுருங்கி நிலத்த தந்நான்
ககவல் பெற்ற கூழை யெதுகை
யீரா றாக வியலு மென்ப." (12)

"வலியது கடியாறு விறகுதீப் பத்துக்
கணவிரி யுரறுபுலி பெருநாணு வுருமுத்தீ
மழகளிறு பதினொன்று விரவுகொடி நரையுருமு
வீராறு முதலாக வொரோவொன் றொன்பா

னாக வகவற்குக் கூழை யெதுகை
தொண்ணூ றாகத் தொகுத்தனர் புலவர்." (90)

ஆக அகவற்குக் கூழையெதுகை 102.

"ஞாயிறு போதுபூப் போரே றேழாப்
பாதிரி மேவுசீர் நன்னாணுப் பூமருது
மாசெல் வாயிவை யொரோவொன் றாகக்
காருருமு மாவருவா யொரோவொன் றைந்தாக
வெள்ளை பெற்ற கூழை யெதுகை
யாறொரு பஃது மொன்று மாகும்." (61)

"வரகிரு நான்கு புளிமா வரவொன்பான்
முதலா வொரோவொன்று நந்நான் காக
வெள்ளை பெற்ற கூழை யெதுகை
யீரா றாக வியலு மென்ப." (12)

ஆக வெள்ளைக்குக் கூழையெதுகை 73.

"நிரையீ ராறாற் கூழை யெதுகை
யிருமுப் பஃதா வியலுங் கலிக்கே." (60)

"மூவகைப் பாவிற்குக் கூழை யெதுகை
யிருநூற்று முப்பத் தைந்தா கும்மே." (235)

"நேராதி யாகிய சீர்பதின் மூன்றாற்
சுருங்கிய நிலத்தில் ஒரோவொன்று நான்காக
வகவல் பெற்ற மேற்கதுவா யெதுகை
யையொரு பஃது மிரண்டு மாகும்."
(52)

"வரகீ ரைந்து புளிமா வரவு
பதினொன்று வலியது கடியாறு விறகுதீ
யீராறு கணவிரி யுறுபுலி பெருநாணு
வுருமுத்தீ மழகளி நிவைபதின் மூன்று
விரவுகொடி நரையுருமு வீரேழ் முதலா
வொரோவொன் றேழாக வகவல் பெற்ற
மேற்கதுவா யெதுகை தொண்ணூற் றொன்றே." (91)

ஆக அகவற்கு மேற்கதுவா யெதுகை 143.

"வண்டு ஞாயிறு போதுபூப் போரே
றெட்டு முதலா வொரோவொன் றேழுந்
தேமா மின்னுப் பாதிரி மேவுசீர்
நன்னாணுப் பூமருது மாசெல் வாயிவை
யொன்பான் முதலா வொரோவொன் றாறுங்
காருருமு மாவருவா யீரைந்து முதலா
வொரோவொன் றைந்து மாகவெள் ளைக்கு
மேற்கதுவா யெதுகை யெண்பஃ தாகும்." (80)

"வரகு வலியது கடியாறு விறகுதீ
யெட்டு முதலா வொரோவொன்று நான்குங்
கணவிரி பெருவேணுப் புலிசெல்வாய் மழகளி
றுருமுத் தீப்புளி மாவிவை யொன்பா
னரையுருமுப் புலிவருவா யீரைந்து முதலா
வொரோவொன் றொருநான் காகவெள் ளைக்கு
மேற்கதுவா யெதுகை யைம்பத் திரண்டே." (52)

ஆக வெள்ளைக்கு மேற்கதுவா யெதுகை 132.

"நிரையீ ராறாற் கலிக்கு மேற்கதுவா
யெதுகை நாற்பத் தெட்டா வெய்தும்." (48)

"மூவகைப் பாவிற்கு மொழிந்தமேற் கதுவா
யெதுகை முந்நூற் றிருபத்து மூன்றே." (323)

"வண்டு நான்கு தேமா மின்னிவை
யைந்து முதலா வொரோவொன் றேழாக
வகவல் பெற்ற கீழ்க்கதுவா யெதுகை
யொன்றுதலை யிட்ட நாலைந் தாகும்." (21)

"வலியது கடியாறு விறகுதீப் பத்துக்
கணவிரி யுரறுபுலி பெருநாணு வுருமுத்தீ
மழகளிறு பதினொன்று விரவுகொடி நரையுருமு
வீராறு முதலா வொரோவொன் றொன்பா
னாக வகவற்குக் கீழ்க்கதுவா யெதுகை
தொண்ணூ றாகத் தொகுத்தனர் புலவர்." (90)

ஆக அகவற்குக் கீழ்க்கதுவா யெதுகை 111.

"ஞாயிறு போதுபூப் போரே றென்றிவை
யெட்டு முதலா வொரோவொன் றேழும்
பாதிரி மேவுசீர் நன்னாணுப் பூமருது
மாசெல்வா யொன்பான் முதலா வாறுங்
காருருமு மாவருவா யீரைந்து முதலா
வொரோவொன் றைந்து மாகக்கீழ்க் கதுவா
யெதுகை வெள்ளைக் கறுபத் தொன்றே." (61)

"வரகிரு நான்கு புளிமா வொன்பான்
முதலா வொரேவொன் றொருநான் காக
வெள்ளை பெற்ற கீழ்க்கதுவா யெதுகை
யீரா றாக வியலு மென்ப." (12)

ஆக வெள்ளைக்குக் கீழ்க்கதுவா யெதுகை 73.

"நிரையீ ராறாற் கலிக்குக் கீழ்க் கதுவா
யெதுகை நாற்பத் தெட்டே யாகும்." (48)

"மூவ்கைப் பாவிற்கு மொழிந்த கீழ்க்கதுவா
யெதுகை யிருநூற்று முப்பத் திரண்டே" (232)

"வண்டு தேமா மின்னிவை மூன்றுஞ்
சுருங்கிய நிலத்தி லொரோவொன்று நந்நான்
காக வகவல் பெற்றமுற் றெதுகை
யீரா றாக வியலு மென்ப." (12)

"வலியது கடியாறு விறகுதீ யீராறு
கணவிரி யுரறுபுலி பெருநாணு வுருமுத்தீ
மழகளிறு பதின்மூன்று விரவுகொடி நரையுருமு
வீரேழ் முதலா வொரோவொன் றேழாக
வகவல் பெற்ற முற்றெ துகைதா
மேழொரு பஃதா வியலு மென்ப." (70)

ஆக அகவற்கு முற்றெதுகை 82.

"ஞாயிறு போதுபூப் போரே றென்றிவை
யெட்டு முதலா வொரோவொன் றேழும்
பாதிரி மேவுசீர் நன்னாணுப் பூமருது
மாசெல்வா யொன்பான் முதலாக வாறு
காருருமு மாவருவா யீரைந்து முதலா
வொரோவொன் றைந்தா முற்றெதுகை வெள்ளைக்
காறொரு பஃது மொன்று மாகும்." (61)

"வரகிரு நான்கும் புளிமா வொன்பான்
முதலா வொரோவொன் றொருநான் காக
வெள்ளை பெற்ற முற்றெது கைதா
மீரா றாக வியலு மென்ப." (12)

ஆக வெள்ளைக்கு முற்றெதுகை 73.

"நிரையீ ராறாற் கலிக்குமுற் றெதுகை
நாலொரு பஃது மெட்டு மாகும்." (48)

"மூவகைப் பாவிற்கு மொழிந்தமுற் றெதுகை
மூன்றுதலை யிட்ட விருநூ றாகும்." (203)

"எதுகையென் பதனா னியன்ற பெருந்தொகை
மூவா யிரத்தோ டிருநூற்று முப்பது."

ஆக வெதுகைத் தொடை 3230.

"மோனைக்கு மெதுகைக்கு மொழிந்த தொடைத்தொகை
யிருபத் திரண்டு முடியி னிட்ட
வறுநூற் றுடனே ழாயிர மாகும்."

ஆக மோனைக்கு மெதுகைக்கும் 7622.

இனி முரண் வருமாறு:

"அகவற் கிருநூற் றெழுபத்து மூன்றும்
வெள்ளைக் கொருநூற் றைம்பத் தாறுங்
கலிக்கு நூற்றிரு பஃது மாகும்."

"மூவகைப் பாவிற்கு மொழிந்த வடிமுரண்
ஐஞ்ஞூற்று நாற்பத் தொன்ப தாகும்." (549)

"நேரா திச்சீர் பதின்மூன் றானும்
ஒரோவொன்று பத்தாக வகவற் கிணைமுர
ணீரைம் பஃது முப்பது மாகும்." (130)

"நிரையா திச்சீர் பதின்மூன் றானு
மொரோவொன்று பத்து மொன்று மாக
வகவல் பெற்ற விணைமுரண் டொடைதா
மீரைம் பஃதொடு நாற்பத்து மூன்றே." (143)

ஆக வகவற்கு 273.

"வண்டு ஞாயிறு போதுபூப் போரே
றெட்டு முதலா வொரோவொன் றேழுந்
தேமா மின்னுப் பாதிரி மேவுசீர்
நன்னாணுப் பூமருது மாசெல் வாயிவை
யொன்பான் முதலா வொரோவொன் றானுங்
காருருமு மாவருவா யீரைந்து முதலா
வொரோவொன் றைந்து மாக வெள்ளைக்
கிணைமுர ணெண்பஃ தாகு மென்ப." (80)

"வ்ரகு வலியது கடியாறு விறகுதீ
யெட்டுக் கணவிரி பெருநாணுப் புலிசெல்வாய்
மழகளி றுருமுத்தீப் புளிமா வரவொன்பான்
முதலா வொரொவொன் றிருமூன் றாக
நரையுருமுப் புலிவருவா யீரைந்து முதலா
வொரோவொன் றைந்தாக வெள்ளைக் கிணைமுர
ணேழொரு பஃது மாறு மாகும்." (76)

ஆக வெள்ளைக்கு 156.

"நேரு நிரையு மாகிய சீர்க
ளிருபத்து நான்கால் கலிக்கிணை முரண்டொடை
யீரைம் பஃது மிருபது மாகும்." (120)

"மூவகைப் பாவிற்கு மொழிந்த இணைமுரண்
ஐஞ்ஞூற்று நாற்பத் தொன்பது மாகும்." (549)

ஈண் டிணைமுரணிற்குக் கூறிய சூத்திரங்களைப் பொழிப்பு முரணுக்கும் ஒரூஉமுரணுக்குங் கூழைமுரணுக்கும் மேற்கதுவாய் முரணுக்குங் கீழ்க்கதுவாய் முரணுக்கும் முற்றுமுரணுக்குங் கூறி இணை முரணுக்குத் தொடைகொண் டிவ்வாறே கொள்ள ஒரோவொன்று ஐஞ்ஞூற்று நாற்பத்தொன்பதாம் (549).

"இணைமுரண் டொடையோ டேனைய கொள்ள
வொரோவொன் றைஞ்ஞூற்று நாற்பத் தொன்பதே."

"எண்வகை முரணா னியன்ற தொடைத்தொகை
முந்நூற்றுத் தொண்ணூற் றிரண்டுமுடி விட்ட
நாலா யிரமா நவின்றனர் புலவர்."

ஆக 4392.

இனி **யியைபு** வருமாறு:

"**அகவற்** கிருநூற் றெழுபத்து மூன்றும்
வெள்ளைக் கிருநூற் றைம்பத் தாறுங்
கலிக்கு நூற்றிரு பஃது மாக
மூவகைப் பாவிற்கு மெழுத்தடி யியைபே
ஐஞ்ஞூற்று நாற்பத் தொன்ப தாகும்." (549)

"சொல்லடி யியைபு கொள்ளுங் காலு
மூவகை யானும் வந்த பெருந்தொகை
ஐஞ்ஞூற்று நாற்பத் தொன்ப தாகும்." (549)

"நேரா திச்சீர் பதின்மூன் றானு
மொரோவொன்று பத்தாக வகவற் கிணையியை
பீரைம் பஃது முப்பஃது மாகும்." (130)

இவ் வைந்திணையு மூன்று பாவிற்கும் பகுக்குமாறு:

"ஐந்து தொடையா னகவற்கு வருந்தொகை
யொரோவொன் றிருநூற் றெண்பத்து மூன்றா
வாயிரத்து நானூற் றொருபத் தைந்தே." (1415)

"ஐந்து தொடையான் **வெள்ளைக்கு** வருந்தொகை
யொரோவொன் றொருநூற்றுப் பத்து மூன்றா
வெண்ணூற் றொருபத் தைந்தென மொழிப." 815)

"ஐந்து தொடையாற் **கலிக்கு** வருந்தொகை
யொரோவொன் றொருநூற் றிருபஃ தாக
நூறுதலை யிட்ட ஐஞ்ஞூ றாகும்." (600)

"கூறிய மூன்றின் றொடைத்தொகை கூறினா
லைஞ்ஞூற் றுடனெண் ணூற்று முப்பது."

ஆக வைந்து தொடையானும் பெற்ற தொகை 2830.

இனி,

"ஐவகை முரணும் வருக்க மோனையும்
வருக்க வெதுகையும் வழிமோ னையும்
உயிரெது கையு முரைத்தசெந் தொடையு
மறுநூற் றிருபத் தைந்தடி யோடுந்
தொடைகொளும் வகையைத் தோன்றக் கூறி
னுந்தை யெனுஞ்சீர் முதற்பா விரண்டிற்கு

முறழ்ந்த வடிக ளிருபது நீக்கி
யேனைச் சீரா லுறழ்ந்த வடித்தொகை
யறுநூற் றைந்தே யாகு மவற்றுள்
வழுநில மைம்பத் தாறுங் களைய
வொரோவொன் றெய்திய தொடைத்தொகை கூறின்
ஐஞ்ஞூற்று நாற்பத் தொன்ப தாகப்
பத்துத் தொடையும் பெற்ற தொகைதா
மையா யிரத்தொடு நானூற்றுத் தொண்ணூறு." (5490)

ஆகப் பத்துத் தொடைக்கும் ஒரோவொன் றைஞ்ஞூற்று நாற்பத்தொன்பஃதாகப் பெற்ற தொகை 5490. நுந்தைக் கிரண்டு மரபிற்கு மூன்றும் வழுப்போய் ஐம்பத்தாறு வழுவாயிற்று.

இனி இத் தொகையை மூன்று பாவிற்கும் பகுக்குமாறு:

"ஒரோவொன் றிருநூற் றெழுபத்து மூன்றாப்
பத்தி னானு மகவல் பெறுந்தொகை
யீரா யிரத்தோ டெழுநூற்று முப்பது." (2730)

"ஒரோவொன் றொருநூற் றைம்பத் தாறாப்
பத்தி னானும் வெள்ளை பெறுந்தொகை
யாயிரத் தைஞ்ஞூ றறுபஃ தாகும்." (1560)

"ஒரோவொன் றொருநூற் றிருபஃ தாகப்
பத்தி னானுந் துள்ளல் பெறுந்தொகை
யாயிரத் திருநூ றாகு மென்ப." (1200)

"தொடைமூ வைந்தா னியன்ற தொகைதா
மெண்ணா யிரத்தொடு முந்நூற் றிருபது." (8320)

முற்கூறிய வைந்தும் இதனாற் கூறிய பத்துமாகப் பதினைந்தானும் பெற்ற தொகை 8320.

இனி மூன்றாமெழுத்தொன் றெதுகை:

எழுத்தெண்ணப்படு மெழுத்துகளிலும் எழுத்தாக வெண்ணாத வொற்றுக் குற்றுகரங்களிலுந் தொடை கொள்ளுமாறு:

"வண்டு மின்னு நுந்தைசேற் றுக்கா
னீடுகொடி யிவ்வாற்றா னறுபது நீக்கி
யேனைச் சீரா னுறழ்ந்த வடிக
ளிருநூற் றறுபத்து நான்கா மவற்றுள்
முப்பத் தொருவழுக் களைந்து கொள்ளப்
பெற்ற வகவற் றொடைத்தொகை கூறின்
இருநூற்று முப்பத்து மூன்றா கும்மே." (233)

இதனுட் களைந்த சீரைந்து நீக்கி யேனை நேராதி யொன்பதிற்குப் பதினெட்டும் நிரையாதி பதின்மூன்றற்குப் பதின்மூன்றுமாக வழு முப்பத்தொன்றாயிற்று.

"வண்டு மின்னு நுந்தைசேற் றுக்கா
லிவற்றான் முப்பத் தொன்று நீக்கி
யேனைச் சீரா னுறழ்ந்த வடிக
ணூற்றோ டைம்ப தாகு மவற்றுள்
வழுப்பதி னான்குங் களைய வெள்ளை
பெறுந்தொடை நூற்று முப்பத் தாறே." (136)

இதனுட் களைந்த சீர் நான்கு நீக்கி யேனை நேராதி பத்திற்குப் பத்தும் நிரையாதியுள் வரகு, வலியது, கடியாறு, விறகுதீ யென்னும் நான்கற்கு நான்குமாக வழுப் பதினான்காயிற்று. ஆக இரண்டற்கும் வழு நாற்பத்தைந்து.

"சேற்றுக்கா னீடுகொடிச் சீரைந்து நீக்கி
யேனைச் சீராற் றுள்ளல் பெறுந்தொடை
யொருநூற் றொருபஃ தாகு மென்ப." (110)

"மூவகைப் பாவின் மூன்றா மெழுத்தொன்
றெதுகை நானூற் றெழுபத் தொன்பது." (479)

அகவற் கைந்தும் வெள்ளைக்கு நான்குங் கலிக்கிரண்டுமாக இவ்வகையாற் களைந்த சீர்க ளைந்து மிரண்டா மெழுத்தும் மூன்றா மெழுத்துஞ் சேரவொன்றிற் றலையாகெதுகைப்பாற் படுதலானும் பிறசீர் குறைந்து வேறுபடுத்திற் பிறதொடை சிறந்து இத் தொடை சிறந்து காட்டாமையானும் அங்ஙனங் களைய வேண்டிற்றென வுணர்க.

இனி மெல்லின எதுகை முதலியன:

"மெல்லின வெதுகையு மிடையின வெதுகையு
மாசிடை யெதுகையு நெடின்மோ னையு
நிரைமுதற் சீரு நுந்தையு நீக்கி
நேர்முதற் சீர்கள் பதின்மூன் றானும்
ஒரோவொன் றுறழு மடித்தொகை கூறி
னூற்றோ டைம்பத் தாறா மவற்றுள்
வழுநில மிருபத் தாறுங் களைய
வொரோவொன் றெய்துந் தொடைநூற்று முப்பஃது."

"அந்நாற் றொடையா னகவல் பெறுந்தொகை
யைஞ்ஞூற் றிருபஃ தாகு மென்ப." (520)

"நேர்பதின் மூன்றான் முன்னர்க் கூறிய
நால்வகைத் தொடைக்கு மொரோவொன் றுறழ்ந்த
வடித்தொகை தொண்ணூற்று மூன்ற னுள்ளும்
வழுப்பதின் மூன்று களைய வொரோவொன்
றெய்திய தொடைதா மென்ப தென்ப
தாக நாற்றொடை பெற்றவெண் டொடைதான்
எழுநூற் றிருபஃ தெனமொழிந் தனரே." (720)

அவற்றுள்,

"நுந்தை வந்த மெல்லின வெதுகை
முதற்பா விரண்டற்குந் தளைவழுக் களைந்து
கொள்ளப் பெறுந்தொடை பதினே ழாகும்."

"நுந்தை தேமாக் களைந்துநேர் முதற்சீர்
பன்னிரண் டானு முன்னர்க் கூறிய
நாற்றொடை யொரோவொன் றெய்துந் தொடைதா
மறுபஃ தாகக் கலிக்கு வருந்தொடை
யிருநூற்று நாற்பஃ தென்றனர் புலவர்."

"நாற்றொடை யானும் பெற்ற தொடைதா
மாயிரத் தோடு தொண்ணூற் றேழே."

ஆக விந் நான்கு தொடைக்கும் பெற்ற தொகை 1097.

இனி **வல்லின வெதுகை** வருமாறு :

"வல்லின வெதுகை வகுக்குங் காலை
நிரைபதின் மூன்று மின்னு நுந்தையு
மேவு சீரு நாணுத் தளையுங்
களையநே ராதி பத்தா மவற்றிற்
கிருபது வழுவுங் களைந்த பின்னர்
அகவல் பெற்ற தொடைநூ றாகும்."

"நிரைபதின் மூன்று மேவு சீரு
மின்னு நுந்தையுங் களைந்துநே ராதி
பதினொன் றற்கும் பதினொரு வழுவுங்
களைந்தபின் **வெள்ளைக்** கறுபத் தெட்டே
நிரையீ ராறு நாணுத் தளையு
மேவு சீருங் களையநே ராதி
பத்தாற் **கலித்**தொடை யைம்பஃ தாகும்."

"மூவகைப் பாவிற்கும் வல்லின வெதுகை
யிருநூற் றொருபத் தெட்டென மொழிப." **(218)**

இனி உயிரளபெடை வருமாறு:

"அசைச்சீர் நான்குரி முதற்சீ ரெட்டு
நுந்தை யெனப்பதின் மூன்று மொழிந்தது
நேரேழ் நிரையே ழாகிய சீராற்
பெற்ற வடிநூற் றறுபத் தெட்டனுள்
மூவேழ் வழுவு நீக்கிய பின்ன
ரகவல் பெற்ற வளபெடைத் தொடைதா
நூற்றோடு நாற்பத் தேழென நுவல்ப." **(147)**

"கூறிய பதின்மூன் றொழித்த பின்னர்
நேரொன் பானு நிரையொன் பானு
மாகிய சீராற் பெற்ற வடிதா
நூற்றோ டொருபத் தேழா மவற்றுள்
வழுப்பதி னொன்று நீக்கி வெள்ளைக்
களபெடை நூற்றா றாகு மென்ப." .(106)

"உரிமுதற் சீரெட் டொழிந்த பின்னர்
நேர்நிரை யீரெண் சீரால் துள்ளற்
களபெடை யெண்பஃ தாகு மென்ப." (80)

"மூவகை யாற்பெறு முயிரள பெடைதா
முந்நூற்று முப்பத்து மூன்றென மொழிப." (333)

இனி யொற்றளபெடை வருமாறு:

"தேமாப் புளிமா வெனுமிரண் டற்கும்
வழுநில மூன்று களைய வகவற்
கொற்றள பெடைதா மிருபத் தொன்றே." (21)

"மாசெல்வாய் தேமா வழுவிரண்டு களைந்து
புளிமாப் புலிசெல்வாய் கூட்டநான் கானும்
வெள்ளைக் கொற்றள பிருபத்து நான்கே." (24)

"முதற்பா விரண்டிற் கொற்றள பெடைதா
மைந்துதலை யிட்டநா லொருபஃ தாகும்." (45)

ஆக விரண்டு அளபெடையுங் கூட்ட 378.

இனி, ஒற்றளபெடை துள்ளலோசையைத் தள்ளி நிற்றலாற் கலிக்கு வாராதென் றுணர்க.

"எட்டுத் தொடையா னியன்ற தொகைதா
மொருநூற் றெழுபத் திரண்டுதலை யிட்ட
வீரா யிரமே யாகு மென்ப." (2172)

இனி யசையந்தாதி வருமாறு:

தேமா முதனின்றுறழ்ந்த வடிக்கு, நான்காஞ் சீருந் தேமாவென நின்று மேல்வரு மடியோ டந்தாதிக்க வேண்டுமென் றுணர்க.

அது,

தேமா வண்டு வண்டு காமர்

என நின்று மாவென மதித்தென வருமென்று கொள்க.

இஃது, ஒழிந்த வடிகட்கும் மேல்வருஞ் சீரந்தாதிக்கு மென்று கொள்க.

இது, முதற்பா விரண்டற்குமே கொள்க. அங்ஙனம் கொள்ளுங்காற் போதுபூவுக்குப் போதுகளெனவும் விறகுதீக்கு விரிகாரெனவுங் கொள்க. ஒழிந்தனவற்றிற்கு மிவ்வாறே கூற வேண்டுவன கூறிக்கொள்க.

"தேமா வாறு ஞாயிறு புளிமாப்
போதுபூ வேழு பாதிரி பூமருது
நீடு கொடியெட் டுக்கா ருருமு
நாணுத்தளை யொன்பது முதலா வந்த
வசையந் தாதி யொரோவொன் றொன்ப
தொன்ப தாக வகவல் பெருந்தொகை
நாலொரு பஃது மெட்டு மாகும்." (48)

இதற்கு மேல்வருவனவற்றிற்கு 'முதலா' வென்பதனை எண்களோடு கூட்டிப் பொருளுரைக்க.

"புளிமா வொன்பான் வலியது விறகுதீப்
பத்துக் கணவிரி யுரறுபுலி மழகளி
றீரா றுநரை யுருமு விரவுகொடி
யீரேழ் முதலா வந்தா தியொரோ
வொன்றே ழாக வகவல் பெருந்தொகை
யையொரு பஃது மாறு மாகும்." (56)

ஆக 104.

"போதுபூப் போரே றிருநான்கு மேவுசீர்
நன்னாணு மாசெல்வா யீரைந்து முதலா
வொரோவொன் றைந்து மாவரு வாய்பன்
னிரண்டுமுத லாக மூன்றுநில மாக
வெள்ளை பெற்ற வசையந் தாதி
நாலைந் ததனோ டெட்டு மாகும்." (28)

"விறகுதீக் கடியா றொன்பான் பெருநா
ணுருமுத்தீப் புலிசெல்வாய் பதினொன்று முதலா
வொரோவொன்று நான்காக வெள்ளை பெற்ற
வசையந் தாதி நாலைந் தாகும்." (20)

ஆக 48.

இனி, கலிக்கசையந்தாதி வருங்கால் தனக்குரிய இருபத்து நான்கு சீரு முறழ்ந்த வடிகளுக்கு வெண்சீர் நான்கு மீற்றின்கண் வருவதல்லது ஒழிந்த வியற்சீர் பதினாறு முரிச்சீர் நான்கு மீற்றின்கண் வந்த அந்தாதித் தொடை கொள்ளாவென்றுணர்க.

"நேரீ ராறு நிரையீ ராறு
மாகிய சீர்கட் கொரோவொன் றைந்தாத்
துள்ளல் பெற்ற வசையந் தாதி
நூற்றோ டிருபஃ தாகு மென்ப." (120)

"மூவகைப் பாவிற்கு மசையந் தாதி
யிருநூற் றெழுபத் திரண்டா கும்மே." (272)

இனிச் சீரந்தாதி வருமாறு :

“வண்டு நுந்தை நான்கு தேமா
மின்னிரு மூன்றாறு முதலா வொரோவொன்
றவ்வா றாக வகவல் பெற்ற
சீரந் தாதி யிருபத்து நான்கே.” (24)

“வலியது விறகுதீக் கடியா றீரைந்து
கணவிரி யுரறுபுலி பெருநாணு வுருமுத்தீ
மழகளி றீராறும் விரவுகொடி நரையுருமு
வீரேழ் முதலா வொரோவொன் றேழாக
வகவல் வெற்ற சீரந் தாதி
யேழொரு பஃதே யாகு மென்ப.” (70)

ஆக 94.

“ஞாயிறு போதுபூப் போரே றெட்டுப்
பாதிரி மேவுசீர் நன்னாணுப் பூமருது
பத்துமுத லாக வொரோவொன் றையைந்
தாகியுங் காருருமு வீராறு முதலா
மூன்று மரவு புளிமாப் பத்து
முதனான்கும் வரக்கெட்டு முதலா நான்கு
மாகியும் வெள்ளை பெற்றசீ ரந்தாதி
யையொரு பஃது மெட்டு மாகும்.” (58)

“மாசெல் வாயீ ரேழ்புலி செல்வாய்
மாவரு வாயீ ரெட்டுப் புலிவரு
வாயீ ரொன்பது முதல வந்து
மும்மூன் றாகுஞ் சீரந் தாதி
துள்ளற் சீரா றாகு மென்ப.”

இதற்கு வந்த சீர் வருதல் கொள்க. (12)

“மூவகைப் பாவிற்குஞ் சீரந் தாதி
நூற்றோ டறுபத்து நான்கென நுவல்ப
நானூற்று முப்பத் தாறீ ரந்தாதி.”

ஆக விரண்டந்தாதியும் 436.

இனி யெழுத்துவிட்டிசையும் குறிப்புவிட்டிசையும் வருமாறு:

“தேமா வைந்து ஞாயிறு போரேறு
நன்னாணுப் பாதிரி பூமரு தேழுகா
ருருமெட்டு முதலா வந்தவை யொரோவொன்
றைந்தா வகவல் பெற்றவிட் டிசைதா
மேழொரு பஃதே யாகு மென்ப.” (70)

"ஞாயிறு போரே றிருநான்கு முதலேழ்
பாதிரி தேமா நன்னாணுப் பூமருது
மாசெல்வா யொன்பான் முதலா வாறு
காருருமு மாவருவாய் பத்துமுத லைந்தா
வெள்ளைக்கு வந்த விட்டிசை தாமே
யையொரு பஃது நான்கு மாகும்." (54)

"ஞாயிறு போரேறு பதின்மூன்று நன்னாணுப்
பாதிரி பூமருது மாசெல்வா யீரேழ்
காருருமு மாவருவாய் மூவைந்து முதலா
வந்தவை யொரோவொன் றையைந் தாகத்
துள்ளல் பெற்ற விட்டிசை தாமே
நாலொரு பஃதே யாகு மென்ப." (40)

"மூவகைப் பாவிற்கு மெழுத்து விட்டிசை
நூற்றோ டறுபத்து நான்கே பின்னர்க்
குறிப்புவிட் டிசையு மவ்வா றாகு
மிருதொகை முந்நூற் றிருபத் தெட்டே." (164)

ஆக விருவகை விட்டிசையும் 328.

"மோனை முதலா விட்டிசை யீறா
வீரடித் தொடைகொளு மிருபத் தைந்தின்
தொகைநிலை பதினோ ராயிரத் திருநூற்
றைம்பத் தாறென வறைந்தனர் புலவர்."

ஆக வீரடித்தொகை யிருபத்தைந்தனாலும் பெற்ற தொகை 11256.

இனி, யோரடித்தொடை கொள்ளுங்கால் அவையும் பின்வரு மடியொடு தளைவழுப்படாமற் கோடும்.

அவற்றுட் பொழிப்பெதுகை வருமாறு:

"வண்டு நான்கு மின்னுத் தேமா
வைந்து ஞாயிறு போதுபூப் போரே
றாறு பாதிரி மேவுசீர் நன்னாணுப்
பூமருது நீடுகொடி யேழுகா ருருமு
நாணுத்தளை யெட்டு முதலா வந்தவை
யொரோவொன் றெவ்வேழ் நிலம்பெற வகவற்குத்
தொக்கபொழிப் பெதுகை தொண்ணூற் றொன்றே
வரகிரு நான்கரவு புளிமா வொன்பான்
வலியது விறகுதீக் கடியாறு பத்துக்
கணவிரி யுருமுத்தீப் பெருநாணு வுரறுபுலி
மழகளிறு பதினொன்று நரையுருமு விரவுகொடி
யீராறு முதலா வந்தவை யொரோவொன்
றொன்பது நிலம்பெற வகவற்பொழிப் பெதுகை
நூற்றோ டொருபத் தேழென நுவல்ப." (117)

இனி, **வருக்கப் பொழிப்பெதுகை** வருமாறு:

"வண்டைந்து மின்னுத் தேமா வாறு
ஞாயிறு போதுபூப் போரே றேழு
பாதிரி நன்னாணுப் பூமருது நீடுகொடி
மேவுசீ ரெட்டுக் காருருமு நாணுத்
தளையொன்பான் முதலா வொரோவொன் றாறா
வகவல் பெற்ற பொழிப்பெது கைத்தொடை
யெழுபத் தெட்டே யாகு மென்ப." **(78)**

இனி, நிரையாதி வருக்கப் பொழிப்பெதுகைக்கு முன்னர் நிரையாதிப் பொழிப்பெதுகைக்குக் கூறின வுரைச்சூத்திரத்தைக் கூறிக் கொண்டு அதன்றொகையே இதற்குங் கொள்க.

நேராதி வல்லினப் பொழிப்பெதுகை வருமாறு:

"வண்டு நான்கு தேமா வைந்து
ஞாயிறு போதுபூப் போரே றாறு
நன்னாணுப் பாதிரி பூமருது நீடுகொடி
யேழு காருருமு வெட்டு முதலா
வந்தவை யொரோவொன் றெவ்வேழ் நிலம்பெற
வகவல் பெறும்வல் லினப்பொழிப் பெதுகை
யேழொரு பஃதே யெய்து மென்ப." **(710)**

இனி, நேராதி மெல்லினப் பொழிப்பெதுகைக்கு முன்னர் நேராதிப் பொழிப்பெதுகைக்குக் கூறிய உரைச்சூத்திரத்தைக் கூறிக்கொண்டு அதன்றொகையே யிதற்குங் கொள்க.

" நால்வகை யகவற் பொழிப்புத் தொகைதாம்
ஐஞ்ஞூற் றெழுபத் தெட்டா கும்மே."

ஆக 578.

இனி, **வருக்கப்பொழிப்பு** வருமாறு:

"வண்டு ஞாயிறு போதுபூப் போரேறு
பாதிரி மாசெல்வா யொன்பான்முத லாறு
மின்னு நன்னாணுத் தேமா மேவுசீர்
பூமருது பத்து முதலா வைந்து
மாவருவாய் காருருமுப் பதினொன்று முதலா
நான்கு மாக வந்த வாற்றான்
வெள்ளை பெற்ற வருக்கப்பொழிப் பெதுகை
யாறொரு பஃது மொன்பது மாகும்."

இனி, நிரையாதி வருக்கப் பொழிப்பிற்கு முன்னர் நிரையாதிப் பொழிப்பெதுகைக்குக் கூறிய வுரைச்சூத்திரத்தைக் கூறியதன் தொகையே இதற்குங் கொள்க.

இனி, வல்லினப் பொழிப்பெதுகை வருமாறு:

"வண்டு ஞாயிறு போதுபூப் போரே
றெட்டு முதலா வொரோவொன் றேழு
மாசெல் வாய்பூ மருது தேமாப்
பாதிரி நன்னாணு வொன்பான்முத லாறுங்
காருருமு மாவருவாய் பத்துமுத லைந்து
மாக வந்த வாற்றான் வெள்ளை
பெற்ற வல்லினப் பொழிப்பெது கைதா
மாறொரு பஃதோ டெட்டு மாகும்."

இனி, மெல்லினப் பொழிப்பெதுகைக்கு முன்னர் நேராதிப் பொழிப் பெதுகைக்குக் கூறிய வுரைச்சூத்திரத்தையே கூறி அதன் தொகையே இதற்குங் கொள்க.

"நால்வகை வெள்ளைப் பொழிப்பெது கைதா
நானூற்று நாற்பத் தொன்றென மொழிப."

ஆக 441.

இனிக் கலிக்குப் பொழிப்பெதுகையும் வருக்கப்பொழிப் பெதுகையும் வருமாறு :

"வலியது விறகுதீ கடியா றெனுமிவை
யீரேழ் தொட்டுப் பதினெட் டளவுங்
கணவிரி பெருநாணு வுருமுத்தீ மழகளிறு
புலிசெல்வா யுரறுபுலி பதினைந்து முதலாப்
பத்தொன் பானள வுயரவு நரையுருமு
விரவுகொடி புலிவருவாய் பதினாறு முதலா
விருபதின் காறு முயரவும் வருதலிற்
றுள்ள லோசை பெற்றபொழிப் பெதுகை
யறுபஃ தாக வறைந்தனர் புலவர்." (60)

"மூவகைப் பாவிற்கு மொழிந்தபொழிப் பெதுகை
நானூற் றொருபத்து மூன்றென நவில்ப." (413)

முற்றெதுகையும் வருக்கமுற்றெதுகையும் வருமாறு :

"நுந்தை வண்டு நான்கு தேமா
வைந்து முதலா வொரோவொன்று நான்கு
மின்னிரு நான்கா வொருநிலத்து வருதலு
மாக வகவல் பெற்றமுற் றெதுகை
யீராறு மொன்று மாகு மென்ப." (13)

இவற்றை ஒரோவொன்றாகக் கொள்ளின் மற்றை யடியொடு தளை வழுப்படும்.

அது,

"மந்தி தந்த பைந்தாட் செந்தினை"

என நிற்ப மெல்லடி வந்தெனத் தொடை வந்தால் தளை வழுவாமாறு காண்க.

"வலியது விறகுதீக் கடியாறீ ராறுங்
கணவிரி பெருநாணு மழகளி றுருமுத்தீ
யுரறு புலிபதின் மூன்று நரையுருமு
விரவு கொடிபதி னான்கு முதலா
வொரோவொன் றேழாய் முற்றெது கைபெறும்."

"வருக்கமுற் றெதுகையு மவ்வா றேபெற்
றொருநாற் பஃது மகவற் கெய்தும்." **(140)**

ஆக இருவகை முற்று 153.

"ஞாயிறு போதுபூப் போரே றென்றிவை
யெட்டு முதலா வொரோவொன் றேழும்
பாதிரி நன்னாணுப் பூமருது மாசெல்வாய்
மேவுசீ ரொன்பது முதலா வாறுங்
காருருமு மாவருவாய் பத்து முதலைந்
துயரவும் புளிமா வொன்பதுமுத னான்கும்
வரகெட்டு முதலா நான்கு மாகி
வந்த விவற்றான் வெள்ளை பெறுமுற்
றெழுபத்து மூன்றே யாகு மிங்ஙனம்
வருக்க முற்றும் வந்தவெண் ணாக
விரண்டன் றொகைநூற்று நாற்பத் தாறே
நிரையீ ராறுறழ்ந்த வடியறு பஃதிற்
சுருங்கிய நிலத்தி லொரோவொன்று களையத்
துள்ள லோசை பெற்றமுற்றுத் தொடைதா
நாற்பத் தெட்டே யாகும் வருக்க
முற்றுத் தொடையு மவ்வா றாக
விரண்டன் றொகையுந் தொண்ணூற் றாறே." **(96)**

"மூவகைப் பாவிற்கு மிருவகை முற்று
முந்நூற்றுத் தொண்ணூற் றைந்தென மொழிப." **(395)**

ஆக 1534.

இனி ஒரூஉவெதுகை வருமாறு:

"நேர்பதின் மூன்றா னகவற்கொரூஉ வெதுகை
வண்டு நான்கு மின்னுத் தேமா
வைந்து ஞாயிறு போதுபூப் போரே
றாறு பாதிரி மேவுசீர் நன்னாணுப்
பூமருது நீடுகொடி யேழுகா ருருமு
நாணுத்தளை யெட்டு முதலா வொரோவொன்
றெவ்வே ழாக வியன்ற தொகைதா
மேழொரு பஃதோ டிருபத் தொன்றே." **(91)**

"நிரைபதின் மூன்றா னகவற்கொரூஉ வெதுகை
வரகிரு நான்கு புளிமா வொன்பான்
வலியது கடியாறு விறகுதீப் பத்துக்
கணவிரி யுரறுபுலி பெருநாணு வுருமுத்தீ
மழகளிறு பதினொன்று விரவுகொடி நரையுருமு
வீராறு முதலா வொரோவொன் றொன்பா
னாகத் தொகைநூற் றொருபத் தேழே." (117)

ஆக 208.

"நேர்பதின் மூன்றான் வெள்ளைக்கொரூஉ வெதுகை
வண்டு ஞாயிறு போதுபூப் போரே
றெட்டு முதலா வேழுந் தேமா
மின்னுப் பாதிரி மேவுசீர் நன்னாணுப்
பூமருது மாசெல் வாயிவை யொன்பான்
முதலா வொரோவொன் றானுங்கா ருருமு
மாவருவாய் பத்து முதலா வொரோவொன்
றைந்து மாக வறைந்த தொகைதா
மெண்ணொரு பஃதே யெய்து மென்ப." (80)

"நிரைபதின் மூன்றான் வெள்ளைக்கொரூஉ வெதுகை
வரகு வலியது கடியாறு விறகுதீ
யெட்டுக் கணவிரி பெருநாணு வுருமுத்தீப்
புலிசெல்வாய் மழகளிறு புளிமா வரவிவை
யொன்பது நரையுருமுப் புலிவருவாய் பத்து
முதலா வொரோவொன் றைந்து நிலம்பெற்
றாறொரு பஃது மைந்து மாகும்." (65)

"நேரீ றானாற் கலிக்கொரூஉ வெதுகை
பெருகிய நிலத்தி லொரோவொன்று களையப்
பெறுந்தொடை நாற்பத் தெட்டுப் பின்னர்
நிறையீ றாறிற் சுருங்கிய நிலத்தி
லொரோவொன்று களையப் பெறுந்தொடை யஃதா
மிருவகைத் தொடையுந் தொண்ணூற் றாறே." (96)

"மூவகைப் பாவிற்கு மொழிந்தவொரூஉ வெதுகை
நானூற்று நாற்பத் தொன்ப தாகும்." (449)

இனி, வருக்கவொரூஉ வருமாறு.

"வண்டைந்து மின்னுத் தேமா வாறு
ஞாயிறு போதுபூப் போரே றேழு
மேவுசீர் பூமருது நன்னாணு நீடுகொடி
யெட்டுக் காருருமு நாணுத்தளை யொன்பான்
முதலா வந்தவை யொரோவொன் றானும்
பாதிரி யேழு முதலா வேழு
மாக வகவற்கு வருக்க வொரூஉத்தொகை
யேழொரு பஃது மொன்பது மாகும்." (79)

இனி, நிரையாதி வருக்கவொரூஉவிற்கு முன்னர் நிரையாதி யொரூஉவிற்குக் கூறிய உரைச்சூத்திரத்தையே யிதற்குங் கொள்க.

ஆக 196.

இனி, வெள்ளைக்கு நேராதி வருக்கவொரூஉ நுந்தையொழிய முன்னர் நேராதி யொரூஉவிற்குக் கூறிய உரைச்சூத்திரத்தைக் கூறியதன் றொகையி லிதற்கேழு குறைத்துக் கொள்க. (80)

இனி, வெள்ளைக்கு நிரையாதி வருக்க வொரூஉவிற்கு முன்னர் நிரையாதி யொரூஉவிற்குக் கூறிய வுரைச்சூத்திரத்தைக் கூறியதன் றொகையை யிதற்குங் கொள்க. (66)

ஆக 145.

இனி, கலிக்கு வருக்கவொரூஉவிற்கு முன்ன ரொரூஉவிற்குக் கூறிய வுரைச்சூத்திரத்தையே கூறி யதன்றொகையே யிதற்குங் கொள்க. (96)

ஆக 437.

"மூவகைப் பாவிற்கு மிருவகை யொரூஉத்தொகை
தொள்ளா யிரமே யாகு மென்ப."

ஆக 900.

"அளவடிக் களவரும் விகற்பத் தொடைதா
நானூற்று முப்பத்து நான்குதலை யிட்ட
வீரா யிரமே யாகு மென்ப."

ஆக ஓரடித்தொடை 2434.

"இருவகைத் தொடையா னியன்ற தொகைதாம்
பதின்மூ வாயிரத் தறுநூற்றுத் தொண்ணூ
றீரடித் தொடையு மோரடித் தொடையும்." (13690)

இனி, இச் சூத்திரத்திற்குத் 'தொண்டுதலை யிட்ட பத்துக் குறை யெழுநூற் றொன்று மென்ப' வென்று பாடமோதிப் பதின் மூவாயிரத் தறுநூற்றுத் தொண்ணூறென்பாரும், இனி, 'பத்துக்குறை யெழுநூற் றொன்றுமென்ப' வென்று பாடமோதித் 'தொண்டுதலையிட்ட பத்துப் பத்தொன்ப தென்பாரும், இனி, 'தொண்டுதலை'யிட்ட பத்துக் குறை யெழுநூற் றொன்று மென்ப' என்று பாடமோதிப் பதின்மூவாயிரத் தறுநூற்றுத் தொண்ணூற்றொன்ப தென்பாரும், இனிப் 'பத்துக் குறைய வெழுநூற்றொன்பஃ தென்ப' என்று பாடமோதி யிதனை மிகவு நலிந்து பொருள்கொண்டு பதின்மூவாயிரத் தெழுநூற்றெட் டென்பாரும் எனப் பல பகுதியாசிரியர். இவற்றுள் நல்லது உய்த்துணர்ந்து கொள்க.

இனி, 'மெய்பெறு மரபிற் றொடை' எனவே விளங்கத் தோன்றா தனவுஞ் சில தொடை யுளவாயிற்று. அவை ஆசிடையெதுகை வேறுபாடும், இரண்டடி யெதுகையும், செந்தொடை வேறுபாடும், இரட்டையும், அந்தாதி வேறுபாடும், இணை கூழை மேற்கதுவாய் கீழ்க்கதுவாய் முற்றுக் கடையிணை கடைக்கூழை யிடைப்புணர்பின் என்பனவும், பிறவும் வேறுபாடாகக் கூறுவார் கூறுந் தொடைகளுமெல்லா மிதனானே தழீஇக் கொள்க.

அவை மேற்கூறுதும்.

இனி,

"அடிதொடை மிசைபல விரவின வரினு
முதல்வரு மதனது பெயர்கொளன் முறையே"

எனச் சூத்திரஞ்செய்து பலரும் முதல் வந்த தொடையே தளையே முதலியனவே கொள்வர் பின்னுள்ளோர், அவரறியார். என்னை?

"செங்காற் பைந்தினை யிதண மேறிப்
பைங்காற் சிறுகிளி கடிவோள் தந்தை"

என்புழி எதுகையு முரணும் வந்துழி முதற்கண்ணது இன்னது இறுதிக் கண்ணது இன்னதென்று துணியலாகாமை கொள்க. இன்னஞ் செய்யுட் செய்த சான்றோர் பலதொடையும் பலவித கணமும் படவேண்டுமெனக் கருதிச் செய்தவற்றுட் சில களைந்து ஒன்று கோடற்குக் காரணமின்மை-யுமுணர்க. (101)

சிவலிங்கனார்

மெய்பெறு .... னோரே.

(இ-ள்) தெற்றென விளங்கிற்றில்லை.

இளம்பூரணர் கூறுமாறு:

ஐயீராயிரத் தாறைஞ்ஞூறு	13,000
தொண்டு தலையிட்ட பத்துக்குறை எழுநூற்றொன்பது	699
(ஒன்பதைக் கூட்டிய பத்துக்குறைந்த எழுநூற்றொன்பது)	13,699

பேராசிரியர் கூறுமாறு :

ஐயீராயிரத் தாறைஞ்ஞூறு	13,000
தொண்டு தலையிட்ட பத்துக்குறை எழுநூற்றொன்பஃது	608
(தொண்டு தலையிடல் - ஒன்று குறைதல்?)	13,608

நச்சினார்க்கினியர் கூறுமாறு :

ஐயீராயிரத் தாறைஞ்ஞூறு	13,000
தொண்டு தலையிட்ட பத்துக்குறை எழுநூற்றொன்பது	6,291
(தொண்டு தலையிடல் - ஒன்பதால் உறழ்தல்)	19,291

பிறர் கூறுவது :

ஐயீராயிரத் தாறைஞ்ஞூறு	13,000
தொண்டு தலையிட்ட பத்துக்குறை எழுநூறு ஒன்றும்	690
(தொண்டு தலையிடல் - விளக்கமில்லை)	13,690

விளக்கங்கள் அவரவர் உரையிற் காண்க.

407. தெரிந்தனர் விரிப்பின் வரம்பில[1] ஆகும். (98)

இலக்குவனார்

414. If multiplied by scholars, there will be no limit.

இளம்பூரணர்

407. தெரிந்தனர் விரிப்பின்..................ஆகும்.

என்-னின், எய்தியதன்மேற் சிறப்புவிதி உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட தொடையினை ஆராய்ந்து விரிப்பின் வரம்பிலவாகி விரியும் என்றவாறு.

அவையாவன மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை என்பனவற்றின்கண் இணை, கூழை, முற்று, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், கடை, கடையிணை, கடைக்கூழை, இடைப்புணரென வேறுபடுத் துறழ்ந்தும், எழுத்தந்தாதி. அசையந்தாதி, சீரந்தாதி, அடியந்தாதி எனவும், உயிர்மோனை, உயிரெதுகை, நெடில்மோனை, நெடிலெதுகை, வருக்க மோனை, வருக்கவெதுகை, இனமோனை, இனவெதுகை, ஆசெதுகை எனவும், மூன்றாமெழுத்தொன்றெதுகை, இடையிட்டெதுகை எனவும், இவ்வாறு வருவனவற்றை மேற்கூறிய வகையினான் எழுத்து வேறுபாட்டி னான் உறழவும், நிரனிறையாகிய பொருள்கோள் வகையானும் ஏகபாதம், எழுகூற்றிருக்கை முதலாகிய சித்திரப்பாக்களானும் உறழவும், வரம்பிலவாகி விரியும்.

அவற்றுட் சிலவருமாறு: இணையாவது முதலிருசீர்க்கண்ணும் மோனை முதலாயினவரத் தொடுப்பது. கூழையாவது முந்துற்ற மூன்று சீரினும் வந்து இறுதிச்சீரின் வாராதது.

1. பல்கும் - பேரா. நச். பாடம்

"அணிமலர் அசோகின் தளிர்நலங் கவற்றி."

இஃது இணைமோனை. (யா.வி.ப.130)

"பொன்னின் அன்ன பொறிசுணங் கேந்தி."

இஃது இணையெதுகை. (யா.வி.ப.134)

"சீறடிப் பேரகல் அல்குல் ஒல்குபு."

இஃது இணைமுரண்: (யா.வி.ப.147)

"மொய்த்துடன் தவழு முகிலே பொழிலே."

இஃது இணையியைபு. (யா.வி.ப.153)

"தாஅட் டாஅ மரைமல ருழக்கி." (யா.வி.ப.158)

இஃது இணையளபெடை: என வரும்.

இனிக் கூழை வருமாறு:

"அகன்ற அல்குல் அந்நுண் மருங்குல்"

இது கூழைமோனை. (யா.வி.ப.130)

"நன்னிற மென்முலை மின்னிடை வருந்த"

இது கூழையெதுகை. (யா.வி.ப.134)

"சிறிய பெரிய நிகர்மலர்க் கோதைதன்"

இது கூழைமுரண். (யா.வி.ப.147)

"மாதர் நகிலே வல்லே இயலே"

இது கூழையியைபு. (யா.வி.ப.153)

"மாஅத் தாஅண் மோஒட் டெருமை"

இது கூழையளபெடை. என வரும். (யா.வி.ப.158)

முற்றாவது நான்கு சீரும் ஒத்துவருவது.

"அயில்வேல் அனுக்கி அம்பலைத் தமர்த்த"

இது முற்றுமோனை; பிறவுமன்ன. (யா.வி.ப.130)

இனி, மேற்கதுவாயாவது நான்கு சீரினும் இரண்டாஞ் சீரொழிய ஏனைய வருவது.

"அரும்பிய கொங்கை அவ்வளை அமைத்தோள்"
பிறவுமன்ன. (யா.வி.ப.131)

கீழ்க்கதுவாயாவது மூன்றாஞ் சீரொழிய ஏனைய வருவது.

"அவிர்மதி அனைய திருநுதல் அரிவை" (யா.வி.ப.131)

பிறவுமன்ன.

அந்தாதித் தொடைக்கு உதாரணம்:

"உலகுடன் விளங்கும் ஒளிதிகழ் அவிர்மதி
மதிநலன் அழிக்கும் வளங்கெழு முக்குடை
முக்குடை நீழல் பொற்புடை ஆசனம்
ஆசனத் திருந்த திருந்தொளி அறிவன்
ஆசனத் திருந்த திருந்தொளி அறிவனை
அறிவுசேர் உள்ளமொ டருந்தவம் புரிந்து
துன்னிய மாந்தர் அஃதென்ப
பன்னருஞ் சிறப்பின் விண்மிசை உலகே." (யா.வி.ப.185)

இவ்வகையினான் ஒரு பாட்டிறுதி மற்றப்பாட்டி னாதிச்சீராகி வருதல் கொள்க.

இத்துணையுங் கூறப்பட்டன சிறப்புடையவென ஒருநிகராகக் கூறுப.

இனி,

"மீன்தேர்ந் தருந்திய கருங்கால் வெண்குருகு" (யா.வி.ப.148)

இது கடையிணைமுரண்.

பின்முரணாவது நாலாஞ்சீரும் இரண்டாஞ்சீரு மொன்றத் தொடுப்பது: அது,

"கொய்ம்மலர் குவிந்து தண்ணிழல் விரிந்து" (யா.வி.ப.148)

என வரும்.

கடைக்கூழை முரணாவது முதற்சீ ரொழித்து மூன்று சீரும் ஒத்துவருவது.

உதாரணம் வந்தவழிக் காண்க.

இடைப்புணர் முரணாவது இடை யிருசீரும் ஒன்றத் தொடுப்பது.

அது,

"போதுவிடு குறிஞ்சி நெடுந்தண் மால்வரைக்
கோதையில் தாழ்ந்த ஓங்குவெள் அருவிக்
காந்தளஞ் செங்குலைப் பசுங்கூ தாளி
வேரல் விரிமலர் முகையொடு விரைஇப்
பெருமலைச் சீறூர் இழிதரு நலங்கவர்ந்
தின்னா வாயின இனியோர் மாட்டே" (யா.வி.ப.149)

என வரும்.

மோனை, எதுகை, இயைபு, அளபெடையினும் இவ்வாற்றான் வருவன வந்தவழிக் காண்க.

இனி, உயிர்மோனையாவது முதலெழுத்தாகி வந்த உயிரெழுத்து மற்றை யடியினும் வருவது. அது;

"கயலேர் உண்கண் கலுழ நாளுஞ்
சுடர்புரை திருநுதல் பசலை பாய" (யா.வி.ப.136)

என வரும்.

எதுகைக்கும் இதுதானேயாம்.

நெடின்மோனையாவது நெட்டெழுத் தொத்துவருவது:

"தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்" (குறள்.399)

என வரும்.

நெடிலெதுகையாவது:

''ஆவா என்றே அஞ்சினர் ஆழ்ந்தார் ஒருசாரார்
கூகூ என்றே கூவிளி கொண்டார் ஒருசாரார்'' (யா.வி.ப.136)

என வரும்.

இனவெதுகை மூன்றுவகை:

"தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்." (குறள்.114)

இது வல்லின வெதுகை.

"அன்பீனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு." (குறள்.74)

இது மெல்லின வெதுகை.

"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு." (குறள்.299)

இஃது இடையின வெதுகை.

மோனையும் இவ்வாறு வருவன பாகுபடுத்துக் கொள்க.

ஆசெதுகையாவது இடையினவொற்று இடைவரத் தொடுப்பது.

"காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகின் எற்றி
பூமாண்ட தீந்தேன் தொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங் கதமென் றிசையால்திசை போய துண்டே." (சிந்தா.31)

என வரும். இதன்கண் யகரம் ஆசாகி வந்தது. பிறவுமன்ன.

இனி இரண்டடியெதுகை யாவது முதலிரண்டடியு மோரடியாய்ப் பின்னிரண்டும் ஓரெதுகையாகி வருவது.

"உலக மூன்றும் ஒருங்குட னேத்துமாண்
திலக மாய திறலறி வன்னடி
வழுவில் நெஞ்சொடு வாலிதின் ஆற்றவுந்
தொழுவல் தொல்வினை நீங்குக என்றியான்" (யா.வி.ப.139)

என வரும்.

இடையிட் டெதுகையாவது ஓரடி யிடையிட்டுத் தொடுப்பது.

"தோடார் எல்வளை நெகிழ நாளும்
நெய்தல் உண்கண் பைதல் உழப்ப
வாடா வவ்வரி புதைஇப் பசலையும்
வைகல் தோறும் பைப்பயப் பெருகின
நீடார் அவரென நீமனங் கொண்டார்
கேளார் கொல்லோ காதலர் தோழீஇ
வாடாப் பவ்வ மறமுகந் தெழிலி
பருவஞ் செய்யாது வலனேர்பு வளைஇ
ஓடா மலையன் வேலிற்
கடிது மின்னுமிக் கார்மழைக் குரலே." (யா.வி.ப.143)

என வரும்.

இவ்வகையினான் மோனை வருவனவுங் கொள்க. பிறதொடையும் இவ்வகையினான் வருவனவும் கொள்க.

மூன்றா மெழுத்தொன் றெதுகையாவது இரண்டா மெழுத்து ஒன்றாது மூன்றாம் எழுத்து ஒன்றுவது. இதுவும் அவ்வாறே உதாரணம் வந்தவழிக் காண்க.

இவையெல்லாம் மேலெடுத்தோதப்பட்ட தொடைக்கட்படும். நாற்சீரடியொழிந்த அடிக்கண்ணும் இப் பாகுபாடெல்லாம் விரிப்பின் வரம்பிலவாகும். (98)

பேராசிரியர்

414. தெரிந்தனர்............................பல்கும்.

இது, மேற்கூறிய தொடைக்காவதோர் புறனடை.

(இ-ள்) அறுநூற்றிருபத்தைந்து அடியோடு மாறிப்பெற்ற தொடை பதின்மூவாயிரத் தெழுநூற்றெட்டெனப்பட்டன. மேல் இனி, அவ்வடி ஒன்றன்கண்ணேயன்றி ஒன்று நிற்ப நின்றவடி அறுநூற்றிருபத்து நான்கனையுந் தந்து தந்து தடுமாற வந்து தோன்றுந் தொடை விகற்பமும் இருசீரடி முதலாக எண்சீரடி யீறாகக் கிடந்த அடி வேறுபாட்டின் கண்ணெல்லாம் இத் தொடைகளைக் கூட்டவும் பிற விகற்பத் தொடை களைக் கூட்டவும் வருந் தொடைப் பகுதி வரையறையின்றிப் பலவாம் என்றவாறு.

வரையறை உடையனவற்றுக்கன்றி வரையறை கூறுதல் பயமின்றாகலின் ஒழிந்த விகற்பமெல்லாங் கூறிய நிலங் கூறிற் றில மென்பதூஉம்,

"மெய்பெறு மரபிற் றொடைவகை" (413)

எனப்பட்டன வரையறை யுடைமையின் அது கூறினா னென்பதூஉஞ் சொல்லினான் இச் சூத்திரத்தா னென்பது.

இனி ஐந்து தொடை, விகற்பத்தொடை பலவற்றோடுங் கூட்டவும் பிறவாற்றான் விரிப்பவும் வரம்பிலவா மென்றாருமுளர்: அவை எவ்வாறு விரிப்பினும் வரம்பில வல்லனவென மறுக்க. வரம்பிலவென்பது வரையறை கூறப்படாவென மேலுரைத்ததே உரை. (102)

நச்சினார்க்கினியர்

102. தெரிந்தனர்..............பல்கும்.

இது, கட்டளையடிக்கோர் புறனடை.

(இ-ள்) அறுநூற் றிருபத்தைந்துள் ஒன்றை நிறுத்தியதனோடு அறுநூற்று நான்கனையுங் கூட்டியும் அதனோடு சீர்வகையடிகளையும் விகற்பத்தொடைகளையுங் கூட்டியுந் தொடுக்குந் தொடைப் பகுதிகளை விரிப்பின் எண்ணிறந்து பலவாம் எ-று.

எனவே, இங்ஙனம் கூறாமல் வரையறைப்படுத்தி யிலக்கணங் கூறினார் என்றார். (102)

சிவலிங்கனார்

தெரிந்தனர்.....................வாகும்.

(இ-ள்) தொடைவகைகளை ஆராய்ந்து விரித்துரைப்பின் எல்லை கடந்தனவாகும், எ-று.

408. தொடைநிலை[1] வகையே யாங்கென மொழிப. (99)

இலக்குவனார்

415. The nature of the kinds of rhymes is said to be such.

இளம்பூரணர்

408. தொடைநிலை................மொழிப.

என்-னின், இதுவுந் தொடைக்குரியதோர் மரபுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தொடைநிலைவகை மேற்சொல்லப்பட்ட பாகுபாட்டின என்றவாறு.

எனவே, வகுத்துணர்த்துவார்க் கெல்லாம் இடனுடைத்து என்ற வாறாம்.

அஃதாவது எழுத்தான் வேறுபடுதலும் சொல்லான் வேறுபடுதலும் பொருளான் வேறுபடுதலுமாம்.

இத்துணையுந் தொடை கூறப்பட்டது. (99)

செய்யுளியல் பகுதி - 2 இளம்பூரணர் உரை முற்றிற்று.

பேராசிரியர்

415. தொடைவகை............மொழிப.

இதுவுமது. மேல் ஒருசாரன வரையறை யுடைமையிற் கூறப்பட்டன வென்புழி, ஒழிந்தன வரையறை யின்மையிற் கூறப்படாவெனவுங் கூறினானைக் கண்ட மாணாக்கன், வரம்பில்லன தொடுக்கப்படா கொல்லென ஐயுற்றானை அவையுந் தொடுக்கப்படுங் கண்டாயெனக் கூறினமையின் ஐயம் அறுத்ததெனவும் அமையும்.

(இ-ள்) தொடையது பகுதி வழக்கே அவ் விரண்டு மென்ப என்றவாறு.

எனவே, அப் பகுதியுளொன்று தெரித்தில மென்பது இதன் கருத்து. 'ஆங்கு' என்றதனான் மேற்பகுத்த இரண்டிடமுங் கொள்க. (103)

செய்யுளியல் பகுதி - 2 பேராசிரியர் உரை முற்றிற்று.

நச்சினார்க்கினியர்

103. தொடைவகை..............மொழிப.

இது ஐயமறுக்கின்றது.

(இ-ள்) சீர்வகையடியின் தொடைப்பகுதி வரையறைப்படாவேனும் அவை செய்யுட்கணிற்கும் நிலைமை முற்கூறிய கட்டளை போனின்று தொடைகொள்ளப் பெறுமென்று கூறுவர் புலவர் எ-று.

என்றது வரையறையின்றேனுந் தொடைச் சுவடுபடு மென்றவாறு. (103)

செய்யுளியல் பகுதி - 2 நச்சினார்க்கினியர் உரை முற்றிற்று.

சிவலிங்கனார்

தொடைநிலை..............மொழிப.

(இ-ள்) தொடைகளின் வகைகள் மேற்சொல்லப்பட்டவாறே அமையும் என்பர், எ-று.

செய்யுளியல் பகுதி - 2 சிவலிங்கனார் உரை முற்றிற்று.

தொல்காப்பியம் உரைவளம்

பொருளதிகாரம் செய்யுளியல் பகுதி - 2 முற்றிற்று.

சூத்திர முதற்குறிப்பு அகராதி

(எண்-பக்க-எண்)

அஃதன் றென்ப 113
அஃதொழித் தொன்றின் 140
அகவ லென்ப 111
அடிதோறும் தலையெழுத் 130
அவ்வியல் பல்லது 119
அறுசீர் அடியே 65
அளபெடை தலைப்பெய 126
அளபெழின் அவையே 163
அளவடி மிகுதி 50
அளவுஞ் சிந்தும் 46
ஆங்ஙனம் விரிப்பின் 18
ஆசிரிய மருங்கினும் 72
ஆயிரு தொடைக்குங் 145
இடையும் வரையார் 76
இயற்சீர் வெள்ளடி 57
இருசீர் இடையிடின் 169
இறுவாய் ஒப்பினஃ 160
ஈற்றயல் அடியே 76
எழுசீர் இறுதி 95
எழுசீ ரடியே 69
எழுத்து முதலா 98
ஐவகை அடியும் ஆசிரியக் 20
ஐவகை அடியும் விரிக்குங் 1
ஒருசீ ரடையிட் 167
குறளடி முதலா 36
சீரியன் மருங்கின் 33
சொல்லிய தொடையொடு 178
தன்சீர் வகையினுந் 26
துள்ளல் ஓசை 114
தூக்கியல் வகையே 121
தூங்கல் ஓசை 116
தெரிந்தனர் விரிப்பின் 215
தொடைநிலை வகையே 220
நிரனிறுத் தமைத்தலும் 129
நிரைமுதல் வெண்சீர் 53
நிரையவண் நிற்பின் 92
நேரீற் றியற்சீர் 89
பாட்டுரை நூலே 101
பொழிப்பும் ஒரூஉஞ் 128
மரபே தானும் 104
மருட்பா ஏனை 117
முச்சீர் முரற்கையுள் 80
முடுகியல் வரையார் 71
மெய்பெறு மரபின் 182
மொழியினும் பொருளினும் 155
மோனை எதுகை 124
வஞ்சித் தூக்கே 82
விராஅய்· வரினும் 24
விராஅய தளையு 56
வெண்டளை விரவியும் 61
வெண்பா இயலினும் 95
வெண்பா ஈற்றடி 88

சொல்லகராதி

அ

அகத்தவர் - 384
அகவல் - 386
அங்கதம் - 384
அசைச்சீர் - 378
அவ்வழி - 378
அவ்வியல் - 391
அளபெடை - 394, 402
அளவடி - 363, 365
அளவு - 364
அறுசீர் - 370
அறுநூற்றிருபது - 357

ஆ

ஆங்ஙனம் - 358
ஆசிரிய - 359
ஆசிரியம் - 369
ஆசிரியத்தளை - 362

இ

இடை - 375
இயற்கை - 379
இயற்சீர் - 368
இரட்டை யாப்பு - 396
இருசார் - 390
இருசீர் - 404
இருநெடில் - 365
இறுதி - 381
இறுவாய் - 401
இன்சீர் - 361

ஈ

ஈற்றடி - 378
ஈற்றயன் - 374

உ

உணர்ந்தோர் - 358
உரை - 384
உறழ்நிலை - 363

எ

எதுகை - 393, 398
எழுசீர் - 371, 381
எழுத்து - 383
எழுபது - 351

ஐ

ஐஞ்சீர் - 369
ஐந்தடி - 361
ஐந்து - 394
ஐவகை - 357, 359

ஒ

ஒப்பது - 397
ஒரூஉநிலை - 360, 367
ஒரூஉஞ் - 395
ஒன்றாத்தன்மை - 364

ஓ

ஓசை - 389

க

கலி - 388
கிளவார் - 391
குறளடி - 363

ச

சிந்து - 364
சீரியல் - 362
செந்தூக்கு - 377
செந்தொடை - 395, 405

த

தண்பொழில் - 384
தட்டல் - 366
தலையெழுத்து - 397
தளைநிலை - 361
தளைவகை - 361
தன்மை - 390

தண்பொழில் - 384
தளைவகை - 361
தன்மை - 390
துள்ளல் - 388
தூக்கு - 377
தூங்கல் - 389
தூங்கல் - 389
தூங்கல் ஓசை - 387
தொண்டுதலை - 406
தூக்கு - 377
தூங்கல் - 389
தூங்கல் ஓசை - 387
தொண்டுதலை - 406
தொடை - 393
தொடைநிலை - 408
தொடைவகை - 406

நா

நாட்டல் - 383
நால்நெறி - 393
நாற்சொல் - 385
நிரை - 379
நிரைபு - 378
நிரைமுதல் - 366
நிரையவண் - 380
நூல் - 384
நேரடி - 370

ப

பண்புற - 382
பத்து - 406
பதினேழு - 357
பன்னுங் காலை - 358
பாங்கு - 358
பாட்டாங்கு - 391
பாட்டு - 384
பிசி - 384
புலவர் - 380
பொழிப்பு - 403

ம

மரபு - 385
மருங்கில் - 374
மருங்கின் - 362
மருட்பா - 390
மிகுதி - 365
முச்சீர் - 376, 378
முடுகியல் - 371, 372
முதலிரண்டடி - 372
முதுசொல் - 384
முரண் - 393, 400
முரற்கையுள் - 376
முற்றும் - 396
முன்னுதல் - 373
மூவகை - 373
மூவர் - 384
மெய்பெறு - 407
மெய்வகை - 357
மொழிதல் - 403
மோனை - 393

ய

யாப்பு - 383
யாப்புவழி - 385

வ

வஞ்சி - 363, 389
வண்புகழ் - 384
வசம்பு - 407
வரைநிலை - 366
வரையார் - 375
வாய்மொழி - 380, 384
விராஅய் - 360
விராஅய - 367
வெண்சீர் - 366
வெண்டளை - 369
வெண்பா - 373, 382
வெள்ளடி - 368
வெள்ளை - 364

பயன்படுத்தப்பெற்ற நூல்கள்

1. தொல்காப்பியம் - பொருளதிகாரம் - இளம்பூரணம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1953

2. தொல்காப்பியம் - பொருளதிகாரம் - இரண்டாம் பாகம் பேராசிரியம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1935

3. தொல் - பொருள் - செய்யுளியல், நச்சினார்க்கினியம், மேற்படி கழகப் பதிப்பு, 1965

4. தொல்காப்பியம் - பொருளதிகாரம் (இரண்டாம் பாகம்) பின்னான் கியல்களும் பேராசிரியரும், பிரமஸ்ரீ சி. கணேசையர் பதிப்பு, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1943

5. இறையனாரகப்பொருள் - மேற்படி கழக வெளியீடு, 1953

6. நம்பி அகப்பொருள் - மேற்படி கழக வெளியீடு, 1966

7. இலக்கண விளக்கம் - மேற்படி கழக வெளியீடு, 1973

8. முத்துவீரியம் - மேற்படி கழக வெளியீடு, 1972

9. தொன்னூல் விளக்கம் - தமிழ்ப் பதிப்பகம், அடையாறு, சென்னை, 1978

10. Tolkappiyam with Critical Studies - Prof . Ilakkuvanar, Kural Neri Publishing House, Madurai 6, 1963

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை – 600 113

அண்மை வெளியீடுகள்

	ரூ.காசு
யாப்பருங்கல விருத்தி	170.00
இராசேந்திரன் (நாடகம்)	55.00
முல்லை	25.00
திராவிட மொழியின் முவிடப்பெயர்	40.00
தமிழ்நாட்டு வரலாற்றின் இலக்கிய ஆதாரங்கள் கி.மு. 200 - கி.பி. 1300	100.00
வெள்ளுடை வேந்தர் தியாகராயரின் வாழ்வும் பணியும்	65.00
தமிழ் நாடகமேடை முன்னோடிகள்	40.00
தமிழ்வள்ளல் பாண்டித்துரையார்	25.00
தேவநேயப் பாவாணரின் மொழியியல் - வரலாற்றுக் கொள்கை	35.00
தமிழ்விடு தூது	20.00
கபிலர்	70.00
கன்னடத்தில் காரைக்காலம்மையார் வரலாறு	20.00
நாட்டிய நன்னூல்	25.00
சங்க இலக்கியத்தில் கலையும் கலைக்கோட்பாடும்	65.00
கதிர்வேற் பிள்ளை - தமிழ்ச் சொல்லகராதி. மூன்று பாகங்கள்	600.00
எண்பத்து மூன்றில் தமிழ். பகுதி -3	30.00
காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவில் - ஓர் ஆய்வு	60.00
திருக்குற்றாலநாத சுவாமி கோவில் வரலாறும் பண்பாடும்	60.00
உத்தர ராம சரிதம்	30.00
பம்மல் சம்பந்த முதலியாரின் உரைநடை நூல்கள் தொகுதி -1	50.00
பம்மல் சம்பந்த முதலியாரின் உரைநடை நூல்கள் தொகுதி -2	40.00
சதாசிவப் பண்டாரத்தார் ஆய்வுக் கட்டுரைகள்	40.00
சங்கத் தமிழர் வாழ்வியல்	75.00
வேதகிரியார் சூடாமணி நிகண்டு	65.00
தமிழக மேடைநாடகப் பெண்கலைஞர்கள் குறிப்பேடு	25.00
A Grammar of Contemporary Literary Tamil	80.00
Cilappatikaram	100.00
காதம்பரி மூலமும் வசனமும்	125.00
Tamil Culture and Civilization	60.00
Tolkappiyam and Astadhyayi	110.00
தமிழக மகளிர் தொடக்ககாலம் முதல் ஆறாம் நூற்றாண்டு வரை	50.00
தொல்காப்பியம் உரைவளம் - பொருள் - செய்யுளியல் பகுதி -1	50.00
தடிவீர சுவாமி கதை. வன்னியராயன் கதை	55.00
சடத்தலம்	40.00
காத்தவராய நாடகம்	30.00
மதங்க சூளாமணி	40.00
பண்டைத் தமிழ் எழுத்துக்கள்	32.00
தமிழில் நவீன நாடகம்	70.00
இலக்கியத்தில் சோதிடம்	65.00
சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும்	80.00